# இருளில் தொலைந்த உண்மை

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : : சென்னை-600 004

முதற் பதிப்பு : டிசம்பர், 1985
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1986
மூன்றாம் பதிப்பு : அக்டோபர், 1994

உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

விலை. ரூ. 29-00

19125
3468355

அச்சிட்டோர் :
சப்தஸ்வரம் பிரிண்டர்ஸ்
சென்னை-600 005

## உள்ளே

இருளில் தொலைந்த உண்மை
விடிவெள்ளி

## 'லக்ஷ்மி'யின் 'பூங்கொடி' வெளியீடுகளில் சில...


| | |
|---|---|
| ஒரு காவிரியைப் போல... (சாகித்ய அகடமி பரிசு பெற்ற நூல்) | 56 00 |
| பெண் மனம் (சென்னை அரசாங்கப் பரிசு பெற்ற நூல்) | 30 00 |
| கங்கையும் வந்தாள் | 50 00 |
| தியாகங்கள் மாறும்போது | 48 00 |
| மறுபடியுமா? | 38 00 |
| இன்னும் நாளையும் | 40 00 |
| பவள மல்லி | 30 00 |
| உறவின் குரல் | 25 00 |
| வனிதா | 27 00 |
| ரோஜா வைரம் | 17 00 |
| நல்லதோர் வீணை | 33 00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 26 00 |
| புதைந்த மணல் | 25 00 |
| அத்தை | 22 00 |
| கனல் நுகோல் | 25 00 |
| மரகதம் | 16 00 |
| நாயக்கர் மக்கள் | 60 00 |
| அவனுக்கென்று ஒரு இடம் | 35 00 |
| நிகழ்ந்த கதைகள் | 42 00 |
| வடக்கே ஒரு சந்திப்பு | 15 00 |
| இரண்டாவது தேனிலவு | 16 00 |
| கதவு திறந்தால் | 36 00 |
| கழுத்தில் விழுந்த மாலை | 25 00 |
| கணவன் அமைவதெல்லாம் | 35 00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 18 00 |
| சசியின் கடிதங்கள் | 12 00 |
| ஒரு சிவப்பு பச்சையாகிறது | 34 00 |
| பவானி | 24 00 |
| பெயர் சொல்ல மாட்டேன் | 23 00 |


19125 346839

# இருளில் தொலைந்த உண்மை

அது என்ன சத்தம்...? படுக்கையறைக்குள் புகுந்து தலையை விலக்கி ஜன்னல் வழியே வெளியே கவிந்து நின்ற இருளில் கண்களை கவன்றிப் பார்த்தான் சாரதி. ஒரு பறவையின் கழுத்தை யாரோ முறிப்பது போன்ற ஈரச் சென்ற அலறல்...தொடர்ந்து கேட்டபோது அவன் மேனி பயத்தில் நடுங்கியது...நெஞ்சு படபடத்தது. அவர்கள் வசித்த குடியிருப்புப் பகுதிக்குப் பின்னால் புதிதாக உருவாகிக் கொண்டு பாதி கட்டிய நிலையில் கையை விரித்துக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்தபடி நின்ற அசுரன் போன்ற அந்த கட்டிடத்தின் வழிப் பகுதியிலிருந்து தான் சத்தம் வந்து கொண்டிருந்தது. கட்டிட வேலையாட்கள் எல்லோரும் பொழுது அமரும் முன்னரே புறப்பட்டுப் போய்விட்டனர். கட்டிடத்தை காவல் பார்த்துக்கொண்டிருந்த மேஸ்திரியின் அறையில் வெளிச்சத்தைக் காணவில்லை. அடிக்கடி அவன் அந்த வேளையில் வெளியே போய்விடுவதை அவன் கவனித்திருக்கிறான். பல லட்சங்களைப் போட்டு சிமெண்டையும் செங்கற்களையும் வாங்கிக் குவித்துவிட்டு...காவலுக்கு ஆள் இருக்கிறான் என்ற தெம்பில் கட்டிட வேலையை மேற்கொண்ட காண்டிராக்டர் ஆட்களை அனுப்பியதும் தனது அம்பாசிடர் காரில் புறப்பட்டுப் போனதை அவன் மாலை ஜன்னல் அருகே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோதே கவனித்து விட்டிருந்தான்.

யாரும்...காவல் காக்காது...தன்னந் தனியே...இருளில் மூழ்கிக் கிடந்த அந்தக் கட்டிடத்தின் மேற்பகுதியிலிருந்து தான் அந்த அலறல் சத்தம்...காவலாளி இரவு சாப்பாடுக்

குக் கோழியின் கழுத்தை ஓசைப்படாது இருளில் திருகுகிறானோ?...

இல்லை... இல்லை மனிதக் குரல் போல... முக்கலும் முனகலும்...கேட்கிறதே...அவளுக்கு மட்டுமேதான் கேட்கிறதா?...அந்தக் குடியிருப்புப் பகுதியில் மற்ற பிளாட்டுகளில் வசிப்பவர்கள் காதுகளில் சத்தம் ஏதும் கேட்கவில்லையே?...

எப்படிக் கேட்கும்?—கலர் டெலிவிஷன் வாங்கி விட்டிருப்பவர்கள் வீட்டிலிருந்து ஏகப்பட்ட சத்தம்...

ஸ்ரீலங்காவைப் போட்டுப் பாரு... என்ற கூச்சல்—போதாததிற்கு அன்று ஞாயிற்றுக்கிழமை...

கலர் டி. வி. இருந்தவர்கள் இந்திப் படத்தை வண்ணத்திலும் மற்றவர்கள் கருப்பு வெள்ளையிலும் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த சமயம். அப்படி ஒன்றும் நேரம் அதிகமாகிவிடவில்லை... ஜன்னல் திரையை மீண்டும் மூடிவிட்டுப் பெருமூச்செறிந்தபடி... படுக்கையறை விளக்கைப் போட்டாள். கடிகாரத்தைப் பார்த்தாள். ஏழு பதினைந்து தான் ஆகிக் கொண்டிருந்தது. பக்கத்திலே கொலையே நடந்தால் கூட காதில் போட்டுக் கொள்ளாது அவரவர் பிளாட்டுக்குள்ளே அடங்கிப் போகும் சுயநலத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அந்தக் குடியிருப்பின் கேர் டேக்கர் சந்தானத்திடம் கூட அவள் ஒரு நாள் சொல்லியிருந்தாள்.

"பின் பக்கம் உருவாகிக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய கட்டிடம் முடியும்வரை... அந்தப் பகுதியில் ஒரே இருட்டு... ஊரில் திருட்டு அதிகமாகிக் கொண்டு வருவதால் அவர்களது பிளாட்டின் பின்னால் ஒரு குழல் விளக்கைப் பொருத்தி இரவு முழுவதும் எரியச் செய்தால் நன்மையாக இருக்கும்."



"மத்தவங்க ஒத்துக்கணுமே—கரண்ட் கட் சமயத்திலே இதெல்லாம் நடக்கிற சங்கதியா?" கையைவிரித்து விட்டான் சந்தானம்.

நகரத்திலே இப்போது புதிதாக ஆரம்பித்திருக்கும் கட்டிடக் காய்ச்சல் அந்த பகுதியையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

ஸர் சதாசிவத்தின் பெயரைத் தாங்கிக் கொண்டு ஓடிய சாலையில் திருப்பத்திலேயே— முன்பு ஒரு பள்ளமும் - சில ஓட்டுக் கட்டிடமும் இருந்த இடத்தில்— இப்போது திடீரென்று காளான்கள் போல ஒரு பெரிய குடியிருப்புப் பகுதி கிளம்பி விட்டிருந்தது. வெற்று பூமியையும் பழைய பங்களாக்களையும் வாங்கி இடித்துநிரவி ஏழடுக்கு—பத்தடுக்கு என்று ஃபிளாட்டுகளும் நெருப்புப் பெட்டிகளை அடுக்கினாற்போல சிறு தனி வீடுகளும் கட்டி கொள்ளை லாபம் கொழித்துக் கொண்டிருந்த ஏகநாதன் அண்ட் பிரதர்ஸ்... நிறுவனம் கட்டிய குடியிருப்பு பகுதிதான் அது காவேரி - நர்மதா மான்ஷன் என்ற அந்த கட்டிடத்தின் மூன்றாவது தளத்தில் - பின் பக்கம் பார்த்தபடி காலியாக இருந்த அந்த இரண்டு படுக்கையறை கொண்ட சிறிய ஃபிளாட்டை இரண்டரை லட்சம் கொடுத்து வாங்கிவிட்டிருந்தாள். அவளும் அவள் கணவரும், வேலைக்குப் போய் வந்த - பிள்ளை வேறு இல்லாத தம்பதிகள்.

வெகு காலம் பம்பாயிலேயே வசித்தவர்கள். அவர் ஒரு பெரிய நிறுவனத்தில் உயர்மட்டத்து அதிகாரியாக இருந்தார்.

அவள் ஒரு அலுவலகத்தில் கணக்கராக வேலை பார்த்து வந்தாள். ஒரே படுக்கையறை கொண்டதொரு ஃபிளாட்டில்தான் நீண்ட காலம் வசித்து வந்தனர்.

பம்பாய் வாசத்தின் நெருக்கம்— அவசர வாழ்க்கை எல்லாம் அலுத்துப் போய்விட்டிருந்தது. கணவர் மறை

வுக்குப் பின் அவளும் வேலையிலிருந்து ஓய்வடைந்ததும் சென்னைக்கு வந்து குடியேறிவிட்டாள்.

என் வீட்டில் வந்து எங்களுடன் தங்கிவிடு என்று தம்பி பல முறை அழைத்ததை மறுத்துவிட்டாள்

''கூடப் பிறந்த அக்கா இனி தனிமையில் என்ன செய்யப் போறே? வேலையும் இல்லை...ஓய்வா—ஒருபிடி சாப்பிட்டுவிட்டு மீதிக்காலத்தை எங்களுடன் ஓட்டிவிடு'' தங்கை எத்தனையோ சொல்லிப் பார்த்தாள். உறவினர்களுடன் அதிகம் நெருக்கம் வைத்துக் கொள்ளக்கூடாது... சௌக்கியமா...என்று கேட்குமளவுக்கு விலகியே இருப்பது நலம் என்பது அவள் கொள்கை. மேலும் இத்தனை ஆண்டுகள் அவள் வீட்டுக்கு அவளே ராணியாக வாழ்ந்துவிட்டு இப்போது பிறர் தயவில் வாழ அவளுக்கு விருப்பமே இல்லை.

''நீங்கள் எல்லாம் சென்னையில் இருக்கும்போது நான் எப்படி தனியாகி விடுறேன்—அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். கவலை வேண்டாம்—ஒண்டியாக வசித்து எனக்கு பழக்கமாகிவிட்டது'' ரொம்பப் பிடிவாதமாக உறவினர்களின் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டு... அந்தப் ஃப்ளாட்டில் குடியேறி விட்டிருந்தாள்.

காலை ஒரு வேளை மட்டும் பால் பொட்டலங்களை வாங்கித் தந்து வீட்டை சுத்தம் செய்துவிட்டு-பாத்திரம் துலக்கி, துணி துவைத்து காயப் போட்டுவிட்டு அந்தப் பக்கமிருந்த மற்ற ஃப்ளாட்டுகளுக்கு வேலைசெய்ய ஓடி விடுவாள் வேலைக்காரி மருதாயி.

அதைப் பற்றி அவள் கவலைப்பட்டதில்லை அதற்கு மேல் அவளுக்கு வேலைக்காரியின் துணையும் தேவையாக இருக்கவில்லை.

காலை பத்து மணிக்குள் சமையலை முடித்துக் கொண்டு முன் அறையில் பத்திரிகைகளுடன் உட்கார்ந்து விடுவாள்.



அருகிலிருந்த நூல நிலையத்திலிருந்து வாரம் ஒரு முறை அள்ளிக் கொண்டுவரும் வார-மாத இதழ்கள், நாவல்கள் முதலியவற்றைப் படித்து முடிக்கப் பொழுது இருக்காது சாப்பிட்ட பின்னர் ஒரு சிறு குட்டித் தூக்கம்-பின்னர் தேநீர் அருந்திவிட்டு முகம் கழுவி-வேறு உடை மாற்றிக்கொண்டு கையில் பிளாஸ்டிக் கூடையுடன் காய்கறிக் கடைக்குப் புறப்பட்டு விடுவாள். அப்படியே சாலையின் கோடியிலிருந்த சர்வ சக்தி விநாயகர் கோவிலுக்குப் போய்விட்டு விளக்கு வைக்கும் வேளைக்குத் திரும்புவது வழக்கம். சிறிது நேரம் டெலிவிஷன் பார்ப்பாள்-கொஞ்சம் டேப் ரிக்கார்டரில் பஜனை சங்கீதம் கேட்பாள். கொஞ்ச நேரம் ரேடியோவுடன் உட்கார்ந்துவிட்டு, இரவு ஒன்பது மணியளவில் சாப்பிடுவாள். பின்னர்- ஆங்கிலச் செய்தியை டெலிவிஷனில் பார்த்துவிட்டுப் படுக்கச் செல்வாள்.

தூக்கம் வராவிடில்-நூல் நிலையத்திலிருந்துகொண்டு வந்த புத்தகங்களுடன் உட்கார்ந்து விடுவாள்.

வார நாட்களில் அவளைத் தேடிக்கொண்டு யாரும் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை.

தன் பேச்சைக் கேட்காது தனியே வாழத் தொடங்கி விட்டிருந்த தமக்கை மீது தம்பிக்குக் கொஞ்சம் கோபம்.

அதனால் எப்பொழுதாவது தொலைபேசியில் கூப்பிட்டு ஷேமம் விசாரிப்பதுடன் அதிகம் நெருக்கம் வைத்துக் கொள்ளவில்லை.

சாரதாவுக்கு தம்பி-தங்கை இருவரைத் தவிர தூர பந்துக்கள் மிகவும் அதிகம் இருந்தனர். ஆனால் அவள் கணவனது கடுமையான முகத்தைக் கண்டு யாரும் அதிகம் நெருங்கி உறவாடியதில்லை. கடுவன் பூனை போன்ற அக்காவின் கணவர் போய்விட்டதால் சாரதாவின் தங்கை சாவித்திரி கொஞ்சம் துணிவுடன் நெருங்கி உறவாட முயன்றாள்.

அக்கா மிகவும் விறைப்பாய்—பட்டும் படாமலும் நடந்து கொண்டது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''நீ ஏன் அடிக்கடி அக்கா அக்கா என்று அவள் வீட்டுக்கு ஓடிப்போய் நிக்கறே. வயது காலத்தில் நாலுபேர் தயவு வேண்டுமென்று அந்தக் கிழத்துக்கு புத்தியில்லாட்டி தானே சங்கடத்தை அனுபவிக்கட்டும்'' சாவித்திரியின் கணவர் கடுமையாகப் பேசினார். அதனால் அவன் தன் அக்காவைப் பார்க்க வருவதை மிகவும் அபூர்வமாக்கிக்கொண்டு விட்டான்.

எப்பொழுதாவது ஞாயிற்றுக் கிழமையன்று கணவன் இஷ்டப்பட்டால், முன்கூட்டியே தொலைபேசியில் தெரிவித்து விட்டு அவர்கள் வீட்டு பழைய அம்பாஸிடரில்-பேரன் பேத்திகளை அள்ளிப்போட்டுக்கொண்டு கும்பலாக வந்து குதிப்பான்.

சாரதா அத்தனை பேருக்கும் சமைத்துத் தயாராகத் தான் வைத்திருப்பாள். சாப்பிட்ட பின் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு உடனடியாகக் குடும்பத்தைக் கிளப்பிக் கொண்டு போய்விடுவார் சாவித்திரியின் கணவர்.

தன் மைத்துனி-தன் பேரக் குழந்தைகளை அதட்டுவதைக் காண அவனுக்குப் பொறுக்காது.

''அவர்கள் குழந்தைகளா-அசுர ஜன்மங்கள்'' என்பது சாரதாவின் அழுத்தமான அபிப்ராயம்.

''குழந்தை... டெலிவிஷனைத் திருகாதே - கெட்டு விடும்-தூர உட்கார்ந்து பார்.''

''சாவித்திரி! அந்தச் சின்னப் பொண்ணு கையிலே ஏன் கண்ணாடி டம்ளரைக் கொடுத்தே-போட்டு உடைச்சுடுமே. ஸ்டீல் டம்ளரில் தண்ணீர் குடிக்கக் கொடுக்கலாமே?''

''டேய் சின்ன பையா!-சோபா மேலே தொம் தொம்னு குதிக்காதே. ஸ்பிரிங் உடைஞ்சுடும்'' தன்



பேரன் பேத்திகளை அதட்டிக் கொண்டே வளைய வரும் அக்காவின் போக்கு சாவித்திரிக்கு ரொம்ப எரிச்சலாகத் தானிருக்கும்.

குழந்தை குட்டி ஏதுமின்றி தனிக்கட்டையாக வாழ்ந்ததின் பாதிப்பு போலும். குழந்தைகளைக் கண்டாலே ஆக மாட்டேன்கிறதே... உடும் அடிக்கடி அக்கா வீட்டுக்கு பேரன் பேத்திகளை அழைத்துக்கொண்டு வந்து ஏன் அவமானப்படணும்... அக்காவுக்கு வீட்டை வீடாக மதிக்கத் தெரியவில்லை...ஒரு மியூசியம்போல வச்சுக்க விரும்பறா... கடல்போல வீடு நமக்கு இருக்கு—குழந்தைகள் காலார ஓடி விளையாட பெரிய தோட்டம் இருக்கு - என்னவோ கூடப் பிறந்த பாசம் கண்ணை மறைக்க இவனைப் பார்க்கணும்னு ஆசையிலே குழந்தைகளை ஒரு சின்ன பிளாட்டுக்குள்ளே அடைச்சு வச்சு சிரமப்படுத்துவானேன்—

மனத்தால் சலனமடைந்துவிட்டிருந்த சகோதரி முன் போல் அடிக்கடி வந்து உறவு கொண்டாடுவதை நிறுத்தி விட்டுக்கொண்டு விட்டிருந்தாள். பட்டணத்தில் அவனுக்கிருந்த ஒரு தம்பியும் - தங்கையும் மெள்ள தூரவிலகியே இருக்கத் தலைப்பட்டு விட்டனர்.

சாரதாவும் பிடிவாதக்காரி - யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று எதுக்காகச் சொன்னார்கள்.

எங்கே வசித்தாலும் அதை நம் ஊராக பாவித்து வசிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அக்கம் பக்கத்தாரே உறவினர் என்று தோழமை கொண்டு பழகத் தெரிந்து கொள்ள வேண்டும் - அதற்குப் பின்னர் உறவினர் தயவு எதற்கு.

பட்டணத்து மனிதர்கள் வேறு தினுசானவர்கள். அக்கம் பக்கத்தாருடன் தாயாய் பிள்ளையாக பழகுவார்கள் என்ற எதிர்பார்புடன்தான் வந்தாள்.

இங்கேயும் வாழ்க்கை நிலை ஒரு அவசர கதியுடன் தான் நகர்ந்து கொண்டிருந்தது. டனா வடிவில் அமைந்திருந்த ஃபிளாட்டுகள் இருந்தன எதிர் எதிராக அமைந்திருந்த ஃபிளாட்டிற்கு இடையே ஒரு சிறு மாடிப்படி— ஒரு நடை கதவைத் திறந்தால் எதிர் ஃப்ளாட்டுக்காரர் முகத்தில்தான் முழிக்க வேண்டும். அத்தனை நெருக்கடி ஆனாலும் ஹலோ! என்பதற்கு மேல் யாரும் யாருடனும் நெருங்கிப் பழக முன் வரவில்லை. அவரவர்கள் வீடு— அவரவர்கள் குழந்தைகள் - அவரவர்களின் நண்பர்கள் என்று ஒரு தனி அமைப்புக்குள் சுருங்கி அடைந்து கிடந்தது- அப்படி ஒரு பயங்கர சுயநல வாழ்க்கை. எல்லோருக்கும் பொதுவாக கார்- மோட்டார் சைக்கிள் வைக்க ஒரு பொது திறந்தவெளி இருந்தது. அலுவலகம் கிளம்பும் போது மட்டும் ஆண்கள் ஒருவரையொருவர் பார்த்து தலையசைத்து வணக்கம் சொல்லிக் கொள்வார்கள். பெண்கள் காய்கறிக்காரரிடம் வேண்டியதை வாங்கும் போது ஒருவரையொருவர் பார்த்து முறுவலிப்பார்கள். அதற்கு மேல் அதிகம் வைத்துக கொள்வது கௌரவக் குறைச்சல் என்ற நினைப்பு.

பம்பாயில் வசித்ததினாலேயே சாரதா பல பொது ஜன சேவை சங்கங்களில் உறுப்பினராக இருந்து பங்கு கொண்டாள். தாங்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதியை சுத்தமாக குப்பைக் கூளமின்றி வைத்துக் கொள்ள வேண்டும். பெண் உரிமையைப் பற்றிப் போராட ஒரு சங்கம் அமைத்து அதில் ங்குள்ள பெண்களை சேர்த்து மாதம் ஒரு முறை கூட்டம் போட்டு சில திட்டங்களைத்திட்டவும் வேண்டும் என்று எத்தனையோ அவா இருந்தது ஆரம்பத்தில்.

''எங்க வீட்டுக் குப்பையை நாங்க எங்க வேணுமானாலும் போடுவோம், அதைக் கேட்க நீங்க யார்? -'' ஒரு இளம் பெண் கல்லூரி மாணவிபோல தெரிந்தவள் நகத்தைக் கடித்தபடி சீறினாள். அவள் முன் தன் போக்கை



நிரூபிக்கிறவள் போல - ஒரு பிளாஸ்டிக் வாளியிலிருந்து குப்பையை அப்படியே சிட்அவுட்டிலிருந்து கீழே கவிழ்த்தாள்.

சாரதா அதிர்ந்து போனாள். குப்பை விஷயத்திலேயே இருந்த முடியாத இவர்கள் -

பெண் உரிமையைப் பற்றியா கவலைப்படப் போகிறார்கள்? - அவளுக்கு ஆரம்பத்திலிருந்த அந்த உற்சாகம் சட்டென்று விரைவில் அடங்கிப் போயிற்று.

மூன்றாவது ஃப்ளாட்டில் வசித்த கிழவர் ஒரு நாள் அவளைப் பார்த்து வணக்கம் தெரிவித்துவிட்டு, பின்னர் சொன்னார். ''நானும் உங்களைப்போல ஒரு வெளியூர் வாசி. சென்னையில் வாழ்க்கை ரொம்ப அமைதியாச இருக்கும்னு நினைச்சு என் மனைவியுடன் இந்த வயதுக் காலத்தில் வந்து குடியேறி விட்டேன். நான் அனுபவப் பட்டவன் சொல்றேன் கேட்பீங்களா?''

சாரதா அவரை வியப்புடன் பார்த்தாள்.

''குப்பையை யார் வேண்டுமானாலும் எங்கேவேண்டுமானாலும் கொட்டிக்கட்டும் நீங்க கண்டுக்காதீங்க- வீண் கெட்ட பெயர் வாங்கிப்பீங்க யார் வீட்டுப் பெண்ணோ .. எந்த வாலிபரோடயாவது பேசிக் கொண்டு நின்றால் அதைப் பற்றிக் கவலைப்படாதீங்க - நமக்கென்ன யார் வேண்டுமானாலும் எக்கேடு கெட்டா வது போகட்டும்னு, பேசாம உங்க வழியில் போயிண்டு இருங்க. இல்லாட்டா வெகு சீக்கிரம் நீங்க இந்த குடியிருப்பு பகுதியில் ரொம்ப அன்பாப்புலர் ஆகிவிடுவீங்க...'' எச்சரித்து வைத்தார்.

அன்றிலிருந்து சாரதா எதற்காகவும் கவலைப்படவுமில்லை. யாரிடமும் பேச்சு வைத்துக் கொள்ளவுமில்லை தானுண்டு தன் வாழ்வு உண்டு என்றுதான் இருக்க முயன்றாள்.

ஆனால் சில அநியாயங்களைக் கண்டு எதிரே பார்த்து விட்டு நமக்கேன் பாடு என்று அவளால் சும்மா இருக்கவும் முடியவில்லை.

இதென்ன அவள்...எட்டாம் நம்பர் ஃபிளாட்டில் வசிக்கிறவர் பெண்போல இருக்கே - தினமும் மாலை வேளையில் இந்த சந்து பக்கத்தில் இந்தக் கருப்பு பைய னோட பேசி சிரித்துக் கொண்டு நிற்கிறாளே? இவளது பெற்றோருக்கு விஷயம் தெரியுமோ? காதல் - கத்திரிக் காய் என்று ஆரம்பத்திலே கதை விடுவான்கள். காரியம் கை கூடியதும் ஓட்டம் பிடிப்பார்கள். குத்துவிளக்குப் போல் பெண் பார்க்க நன்றாக இருக்கிறாள். சைக்கிளில் தினமும் கட்டுப் புத்தகத்தோடு போகிறாளே - ப்ளஸ் டூ படிக்கிறாள் போலிருக்கு. அவ அம்மாக்கிட்ட இதைப் பற்றி எச்சரித்தால்...

தாங்க முடியாத சேவை மனப்பான்மையில் ஒரு நாள் எட்டாம் நம்பர் வீட்டுத் தலைவியிடம் அதைப்பற்றிச் சொல்லப் போக அவள் அடிக்காத குறையாக சண் டைக்கே வந்துவிட்டாள்.

''என் பெண் அப்படிப்பட்டவள் இல்லை. குனிந்த தலை நிமிராது பள்ளிக்கூடம் போய்வரும் பழக்கம் உடை யவள். வேணும்னே பச்சைக் குழந்தை மேல் பழி போடா தீங்க. என் வீட்டுக்காரர் ரொம்பப் பொல்லாதவர்...'' சீறினாள்

ஆயிரம் மன்னிப்புக்கள் வாங்கிக்கொண்டு அவமானத் தில் அமுங்கிப்போய் வீடு வந்து சேர்ந்தாள்.

சில தினங்களுக்குப் பின் அவள் காதில்...அந்தச் செய்தி முருகாயி மூலம் வந்து சேர்ந்தது என்னவோ உண்மை.

''எட்டாம் நம்பர் வீட்டுக்காரியின் மகள்...அதான் அந்த அம்புஜம் யாரோ பாங்கிலே வேலை செய்கிற பைய னாம்-அவனோட ஓடிப் போயிடுச்சு-சங்கதிய அப்பனும்



ஆத்தாளும் அமுக்கப் பார்க்கிறாங்க. பையன் எங்க குப்பத் தைச் சேர்ந்தவன். அதனாலே குப்பமே கொல்லுனு போயிடுச்சு.'

சாரதாவின் நெஞ்சு படபடத்தது. அந்த சிறுமி வய தில் சின்னவள். பதினெட்டு வயது பூர்த்தியாகாத மைனர் இப்போது அவளைப் பெற்றவர்கள் என்ன செய்யப் போகி றார்கள்?...

விஷயம் அம்பலத்துக்கு வந்ததும் எட்டாம் நம்பர் பிளாட்டுக்காரி சாரதாவை விரோதிபோல வெறுத்தாள். தன் மகள் செய்த தப்பிற்கு சாரதா காரணம்போல முகத் தைக் கடுமையாக வைத்துக் கொண்டாள். அந்தப் பக் கமாக சாரதா போகும்போதெல்லாம் அடிக்குரலில் அவளைத் திட்டித் தீர்த்துக் கொட்டினாள்...

இரண்டு நாள்வரை அந்தச் செய்தி ஒவ்வொரு பிளாட்டிலும் கிசுகிசுக்கப்பட்டது. அந்தப் பெண்ணின் தந்தைக்கு செல்வாக்கு அதிகமிருந்தது. ஓடிப்போன பெண்ணை நன்றாக உதைத்து அழைத்து வீட்டிற்குள் சேர்த்துக் கொண்டார். அதிசயத்திலும் அதிசயமாக சில நாட்களில் அந்தப் பெண்ணுக்கு கல்யாணம் வேறு கூடி விட்டது. வரதட்சிணை-சீர் என்றவைகளை போட்டு மேடு பள்ளங்களை நிரப்பி...கல்கத்தாவிலிருந்து வந்த ஒரு வரனுக்குப் பெண்ணைக் கட்டிக் கொடுத்து புக்ககம் அனுப்பிவிட்டார் சாமர்த்தியக்காரர். சிலரால் தப்புக் களை வெகு திறமையாக மறைக்க முடிகின்றது ஆனால எல்லாப் பெண்களின் வாழ்க்கையும் அப்படிச் சுலபமாக முடிவதில்லையே.

பெண் சிரித்தால் போச்சு-புகையிலை விரித்தால் போச்சு என்று நம்புகிறவர்கள் இன்னும் இருப்பதால்... வீண் அபவாதத்தில்கூட எத்தனையோ பெண்களின் வாழ்க்கை வீணாகி விட்டிருக்கிறதே.

சமையலறைக்குள் சென்று பகல் தயாரித்த வத்தல் குழம்பை சூடு பண்ண காஸ் அடுப்பை மூட்டினாள்.

பாத்திரத்தை தூக்கி அடுப்பின் மேல் வைத்தவள் காதில் காற்றின் ஊடே சன்னல் வழியே மீண்டும் அந்த பயங்கர அலறல் கேட்டது. ஒரு பெண்ணின் கழுத்தை நசுக்கி யாரோ கொல்லும்போது...சிக்குண்டவரின் மரணாவஸ்தைக் குரல் போல...காப்பாற்ற யாருமில்லையா என்று கூவியழைத்துப் புலம்பும் பயங்கர தொனி...

அடுப்பை பட்டென்று அணைத்து காஸ் ஸிலிண்டரை மூடினாள். பக்கத்துப் பிளாட்டுக்காரரை துணைக்கு அழைத்தால் என்ன என்று ஒரு கணம் எண்ணித் தாமதித்தாள்.

மீண்டும் அந்த அலறல் அவளது உடம்பின் ஒவ்வொரு அணுவையும் ஆட்டிப்படைக்கவே நரம்பு பொடியாகி விட்டதொரு வேதனையில்...உதவிக்கழைக்கும் உயிருக்கு ஓடிச்சென்று துணைபுரிய வேண்டுமென்ற ஆவல் ஒரு ஆவேசமாக எழ, படுக்கையறையிலிருந்து தனது பெரிய டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு வாசல் கதவை இழுத்து வெளியே பூட்டிக்கொண்டு சாவிக் கொத்தை இடையில் செருகிக் கொண்டு-தலைமுடி அவிழ்ந்து முதுகில் புரளுவதைக்கூட சட்டை செய்யாது மாடிப்படிகள் வழியே விளக்கொளியை பாய்ச்சிக் கொண்டு வேகமாக இறங்கிக் கீழே வந்தாள்.

## 2

கட்டிடத்தைச் சுற்றிலும் யாரையும் காணவில்லை அவரவர்கள் மின்விசை துண்டிப்பை நிவர்த்திக்க மிகச் சிக்கனமாக இருந்ததன் காரணமாக அவர்கள் வசித்த குடியிருப்பு வாசலிலேயே கும்மிருட்டு.

கைகால் கழுத்து எதிலுமே அவள் சமீபகாலமாக எந்த நகையையும் போட்டுக்கொள்வதை நிறுத்தி விட்டாள்.



இளமை என்னும் ஆபத்தும் கூட இல்லாததால் மிகவும் துணிச்சலாக டார்ச் ஒளியை வீசி, அந்தக் குடியிருப்புப் பகுதியின் வெளிப்புறத்தைக் கடந்து வேகமாக பின்னால் நடந்தாள். செங்கற்கள் குவியலில் இடறிக்கொண்டு அவசரத்தில் செருப்பு அணியாத காரணத்தால் சரளைகற்கள் பாதங்களைக் குத்த...அவள் சப்தம் இன்னும் லேசாக முனகலாக வந்த திக்கை நோக்கி விரைந்தாள்.

''யாரது!'' என்று மிகவும் துணிச்சலுடன் அதட்டியபடி...டார்ச் விளக்கொளியை...மிகவும் இருளாகத் தென்பட்ட அந்தப் பகுதியில் வீசினாள்.

அதற்குள் ஒரு மோட்டார்சைக்கிள் வேகமாக வெளியிலிருந்து சாலைக்குள் விரையும் சப்தம் கேட்டது.

சிவப்புக்கரை போட்ட பச்சை கைத்தறிப்புடவையும் பாதங்களும் மட்டும்தான் ஒரு சந்திலே சிறிது தெரிந்தது.

''யார்... நில்லு...'' என்று அவள் அதட்டியதைக் கேளாது அந்தப் பாதங்கள்...புடவை ஓரத்தை மட்டும் காட்டியபடி குறுக்காகத் தெரு இருட்டிய சந்திற்குள் எம்பியபடி மறைந்து ஓடிவிட்டன

சாரதாவுக்கு வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு வெடித்து விடும்போல அடித்துக் கொண்டது.

அங்கு சற்றுமுன் நடந்தது என்ன என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. என்ன அநியாயம்?

பன்னிரண்டு குடித்தனக்காரர்கள் பக்கத்திலே கும்பலாக வசிக்கும் ஒரு குடியிருப்பின் வெகு அருகில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டிருக்கிறாள்.

காப்பாற்றச் சொல்லி அவள் போட்ட கூச்சலும் அவளது கதறலும் சாரதாவைத் தவிர மற்ற யாருக்கும் கேட்க வில்லையோ?

மூச்சை அடக்கிக்கொண்டு காதுகளைத் தீட்டிய வண்ணம் அந்த இருளில் அசைவற்று நின்றாள்.

ஒரு சமயம் அந்தக் கயவனுடைய கூட்டாளிகள் யாரேனும் அங்கே ஒளிந்து கொண்டிருந்தால்?

மார்பு வெடித்துவிடும்போல் மூச்சடைத்தது. மெல்ல சுவாசித்தபடி அவன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு உற்றுக் கேட்டான்.

சற்றுமுன் போட்ட அலறல்... அந்த மோட்டார் சைக்கிள் எழுப்பிய ஒலி—அந்தப் பெண்ணின் அலறல் ஓசை எல்லாம் அடங்கிப்போனதும் இலை அசையும் சத்தம்கூட கேட்காது ஒரு மயானத்தின் பயங்கர அமைதி நிலவியிருந்தது. துணிவைத் திரட்டிக்கொண்டு டார்ச் விளக்கொளியை நாலாபுறமும் சுற்றிச் சுழலவிட்டான். யாரையும் காணவில்லை. தரையில் படிந்திருந்த தூசியில் ஒரு போராட்டம் நடந்ததின் அறிகுறிகள் தென்பட்டன. இங்குமங்கும் கைகால்கள் வைத்த அடையாளம் துடைப்பத்தினால் ஒதுக்கித் தள்ளியதுபோல், அந்தப் பெண் புரண்டு போராடியதினால் கலைந்து தள்ளப்பட்டிருந்த தூசியின் அடையாளம் எல்லாம் தெரிந்தன.

ஆமாம்! அது என்ன! ஆவலுடன் சற்றுத் தொலைவில் விசிறி எறியப்பட்டிருந்த ஒரு பொருளின் மீது டார்ச்சின் ஒளியைப் பாய்ச்சினான். சிறகை விரித்துக் கொண்டு கிடக்கும் ஒரு குருவியைப்போல ஒரு புத்தகம் பிரித்த நிலையில் குப்புற மண்ணின் மேல் கிடந்தது.

அருகில் சென்று குனிந்து எடுத்தான். கரகரவென்று மணல் கையை உறுத்த, புத்தகத்தை உதறித் தட்டிக் கையில் எடுத்துக் கொண்டான். இன்னும் ஏதாவது கிடைக்குமா என்றதொரு ஆவலில் டார்ச்சின் வெளிச்சத்தை அந்தப் பகுதி முழுவதும் வீசிப் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனான். சிறிது தொலைவில் செங்கல் குவியல்கள் அருகே பந்து போன்றதொரு மஞ்சள் துணி கிடந்தது. கையில் எடுத்தான். சுருளாகப் பந்துபோல் இருந்த அந்தப் பொருள் விரிந்துகொண்டு அவன் கையில்



இளைஞர்கள் அணியும் ஒரு பாலியஸ்டர் ஸ்போர்ட்ஸ் ஷர்ட்டாக மாறியது.

கட்டாயம் ஷர்ட் அந்த வாலிபனோ...வயதானவனோ, அவனுடையதாக இருக்க வேண்டும். அதைச் சுருட்டி அவள் வாயில் அடைத்து கூச்சலைத் தவிர்க்க முயன்றிருக்க வேண்டும். அவள் மிகவும் போராடியிருக்க வேண்டும். பொறுமையற்று அவள் வாயை அவன் தன் முரட்டுக் கரங்களால் மூடிய சமயம் அது தவறி அப்பால் விழுந்திருக்க வேண்டும். யாரது என்று அதட்டிக் கொண்டு அவன் வந்த சமயம் அதை எடுத்துச்செல்ல அவனுக்கு நேரம் இருக்கவில்லை. உள்ளே அணிந்து கொண்டிருந்த பனியனுடன் மோட்டார். சைக்கிளில் விரைந்திருக்கிறான் அயோக்கியன். புத்தகம் யாருடையதாக இருக்கும்? அவன் மேலே சிந்தித்துக்கொண்டு நின்ற போது, சற்று தூரத்தில் சரசரவென்று காலடி ஓசை கேட்டது.

தொடர்ந்து உரத்த குரலில் பாட்டு சளீரென்று அவன் காதில் கேட்டது.

'சாலையோரம் ரெண்டு மரம், சர்க்காரு வச்ச மரம் ஓங்கி வளர்ந்த மரம் உனக்கேத்த தூக்குமரம்' என்று பாடியபடி வந்த மனிதன் பக்கவாட்டிலிருந்த அந்த சிறு கட்டிடத்தின் முன்னால் நின்றது மெலிதாக அங்கே வீசிய தெரு விளக்கொளியில் தெரிந்தது. உருவாகிக் கொண்டிருந்த அந்தக் கட்டிடத்தை மேற்பார்வையிடவும் காவலாக இருக்கவும் அமர்த்தப்பட்டிருந்த மேஸ்திரி. அவன் பிள்ளை குட்டியற்ற தனிக்கட்டை. அதனால்தான் கண்டிராக்ட அவனையே காவலுக்குப் போட்டு அதற்குக் கொஞ்ச கூடுதலாக சம்பளமும் தந்து வந்தார். அந்தச் சம்பள முழுவதையும் ஆசாமி மதுவுக்குச் செலவழித்தான் போலு அன்றாடம் அந்தி வேளைகளில் கதவைப் பூட்டிவிட் அவன் கிளம்பிவிடுவதை கவனித்துக் கொண்டிருந்தான். அவன் பாட்டு, நடை, ஆட்டம் எல்லாம் அவன் நல் போதையிலிருந்தான் என்பதை உணர்த்தின. இதற்மே அங்கே நிற்க சாரதாவுக்குப் பயமாக இருந்தது.

கதவைத் திறந்து கொண்டு அவன் உள்ளே போகும் வரை காத்திருந்து சட்டென்று ஒரே பாய்ச்சலாக வந்த வழியே திரும்பி மங்கலான விளக்கு வெளிச்சத்தில் தெரிந்த தங்கள் கட்டிடத்தின் மாடிப் படிகள் வழியே தனது ஃபிளாட் முன்னால் வந்து நின்று இடுப்பிலிருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறந்தாள். சொல்லி வைத்தாற் போன்று எதிர் பக்கத்து ஃபிளாட் கதவு திறந்து அந்த வீட்டின் தலைவர் இரட்டை நாடி நடுத்தர வயது மனிதன் என்ன ஏது என்று கேட்கும் பாவனையில் அவளை உறுத்துப் பார்க்க அவள் அசட்டையாகக் கதவை மூடிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

அதற்குள் டெலிவிஷனில் தமிழ்ச் செய்தி வந்து விட்டிருந்தது. அந்த சமயம் சாப்பாட்டுக்கு உட்கார்ந்து விட்ட எதிர்வீட்டுக் குழந்தைகள் போட்ட சத்தம் சாத்தியிருந்த கதவை மீறி பக்கவாட்டு ஜன்னல் வழியே காதைப் பிய்த்தது. கையுடன் கொண்டு வந்த பொருள்களை முன்னறை முக்காலி மீது வைத்து விட்டு அவள் குளியலறைக்குள் சென்றாள்.

காலாகாலமாகப் பால் உணர்வு என்றதுமே அது ஒரு தீட்டுப் போன்ற எண்ணம் மனதிலே ஊறி விட்டிருந்ததால் அந்த அவலம் நடந்த இடத்தை மிதித்து விட்டு வந்ததினால் கால்கள் தீட்டாகி விட்டது போன்று குளியலறைக் குழாயைத் திருப்பிக் கால்களை அலம்பிக் கொண்டாள்; சோப்பு போட்டு கைகளையும், முகத்தையும் அலம்பிக் கொண்டு சமையலறைக்குள் புகுந்தாள். மேடையில் அவள் தயாராக எடுத்து வைத்திருந்த சாதம்-ரசம் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் கூட்டு. டம்ளரில் மோர் முதலியன அவளுக்காகக் காத்திருந்தன.

பசி அடிவயிற்றைச் சுரண்டியது. ஆனாலும் சாப்பிட முடியாது போன்ற வேதனை இனம் விளங்காத ஒரு துக்கம் யாரோ ஒரு அபலைப் பெண்ணுக்கிழைக்கப்பட்ட அநீதி அவளுக்கே இழைக்கப்பட்டது போன்றதொரு துயரம்.



மனது பாறாங்கல்லாக இருக்க அவள் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் அவைகளை வெறித்தபடி நின்றாள்.

திடீரென்று அவைகள் அனைத்தையும் எடுத்து ஃப்ரிட்ஜுக்குள் வைத்து விட்டு மோரை மட்டும் பருகி டம்ளரைக் கழுவி மேடைமீது கவிழ்த்தாள். சமயலறையை மூடிவிட்டு படுக்கையறையில் தன் கட்டிலின்மீது கிடந்த விரிப்பை சரி செய்து தலையணையைத் தட்டி ஒழுங்குபடுத்தி விட்டு ஜீரோவாட் பல்பை எரிய விட்டு விட்டு முன்னறைக்குள் வந்தாள்.

முக்காலிமீது கிடந்த அந்தப் புத்தகத்தை எடுத்து முன் ஹாலில் பளிச்சென்றிருந்த குழல் விளக்கில் வெறித்துப் பார்த்தாள். ''போர்த்தப்பட்ட வலை'' என்ற தலைப்பில் ஒரு காதல் நவீனம், பட்டையாக பைண்ட் செய்யப்பட்டிருந்த முதல் அட்டையைத் திருப்பி உள்ளே பார்த்த போது அவளுள் ஒரு திகைப்பு. அந்த புத்தகம் அவள் அடிக்கடி சென்று புத்தகமெடுக்கும் அதே நூலகத்தைச் சேர்ந்தது என்பதின் அடையாளமாக நூலகத்தின் பெயர் நீல எழுத்தில் முத்திரையாகக் குத்தப்பட்டிருந்தது.

ஏதோ ஒரு பெரிய துப்பைக் கண்டுபிடித்து விட்டது போல அவள் ஒரு கணம் பரபரப்படைந்து போனாள். உள்ளே ஏதேனும் கடிதத்துண்டு உள்ளதா என்ற ஆராய்ச்சியுடன் புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பிப் பார்த்தாள். ஏதும் காணப்படவில்லை. இந்த புத்தகம கட்டாயம் அந்தப் பெண்ணுடையதாகத் தான் இருக்க வேண்டும்! நூல் நிலையத்திலிருந்து அவள் அந்த வழியே ஏதோ காரணமாகக் கொண்டு வந்திருக்கிறாள். இது மாதிரியான புத்தகங்கள் வாசிப்பவர்கள் பள்ளிச் சிறுமிகள், கல்லூரிச் சிட்டுக்கள், வீட்டுத் தலைவிகள் என்ற வாசகர்களாகத்தான் இருக்க வேண்டும். ஆண்கள் அத்தனை பரபரப்புடன் காதல் நவீனங்களை நாடுவதில்லை. அவர்கள் படிக்கவென்ற

எழுத தனிப்பட்ட நூலாசிரியர்கள் இருக்கிறார்களே. அதனால் கட்டாயம் இந்தப் புத்தகம் அந்தப் பெண்ணுடையது புடவை ஓரமும் பாதங்களும் மட்டும் தெரிந்த அந்த பெண்ணுடையதுதான் என்று தனக்குள் தீர்மானித்தாள். அடுத்தபடியாக அவளுக்கு இந்த ஸ்போர்ட்ஸ் ஷர்ட்டை கையில் எடுக்கக்கூட அசிங்கமானதொரு உணர்வு ஏற்பட்டது. லேசான வியர்வை நாற்றமும் செண்ட்டின் வாசனையும் இணைந்ததொரு கலவை நாற்றத்திலே வாய் எச்சிலில் சில இடங்களில் நனைந்து விட்டிருந்த அந்தச் சட்டையை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள் ''ஐ லவ் மை ஸ்வீட்டி!'' என்று நடுவிலே கருப்பு எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்ட மஞ்சள் வண்ணத்திலானதொரு சட்டை. வெளிநாட்டுச் சரக்கு போலத் தென்பட்டது.

அப்படியென்றால் இதை வாங்கி உபயோகித்தவனுக்கு அதிக விலை கொடுத்து வாங்கும் வசதி இருந்திருக்க வேண்டும் வெளிநாடுகளுக்குப் பயணப்படும் யோக்கியதாம்சங்கள் உள்ள வகை பிரபல நிறுவனம் எதிலாவது உயர்மட்டத்து அதிகாரியாக இருக்க வேண்டும். சட்டை அளவு மீடியம் என்று கழுத்துப்பட்டை பின்னால் 'எம்' என்ற எழுத்து ஒரு சிறு பட்டையில் தெரிந்ததைக் கொண்டு அவன் ரொம்ப பருமன் இல்லாது சற்று உயரமானவனாக கச்சிதமான தோற்றத்தில் இருப்பவனாக இருக்க வேண்டும். மோட்டார் சைக்கிளில் விரைந்த வேகத்தைப் பார்த்தால் அவன் கட்டாயம் இருபத்தைந்து முப்பதுக்குள்ளிருக்கும் இளைஞனாகத் தானிருப்பான் கல்யாணமாகாத கட்டைப் பிரும்மச்சாரியாக இருக்கலாம் அல்லது காமவெறி பிடித்த கயவனாக இரண்டு குழந்தைக்கு தகப்பனாக குடும்பஸ்தனாக இருக்கலாம். திடீரென்று அவள் துயரத்தையும் கவலையையும் உதறிவிட்டு அடக்கமாட்டாது தானே குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

அவளது ஆராய்ச்சி எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?—



அரபு நாட்டுக் கதையில் வரும் காணாமற்போன ஒட்டகத்தைப் பற்றிக் குருடன் விவரித்தது போல்—வெறும் ஊகத்தினால் அவள் இப்போது குற்றவாளியை ஓரளவு தனக்குள் உருவகம் செய்து கொண்டுவிட்டாளே...

என் ஒட்டகத்தை நீதான் திருடியிருக்கிறாய் என்று ஒட்டகத்தைப் பறிகொடுத்தவன் குருடனை - நீதி மன்றத்துக்கு இழுக்க...பின்னர்தான் அவனது ஊகத்தால் ஒட்டகத்திற்குப் பின் பக்கத்து இடது கண் சிறிது ஊனம். இடது பக்கம் கண் பார்வை குறைவு... முதலியவற்றை அவன் காணாமற் போனவரிடமே சில தகவல்களைத் தெரிந்து கொண்டு சொன்னான் என்பதை அரசன் அறிந்து அவனை மெச்சிக் கொண்டாராம்.

அவளை இப்போது யார் மெச்சப் போகிறார்கள்?

வேலையற்ற கிழவி - சோற்றைத் தின்றுவிட்டு அக்கடா என்று தன் வீட்டுக்குள் கிடக்காமல்... யாரோ ஒரு பெண்ணுக்கு நேர்ந்துவிட்ட அவலத்தைப் பற்றித் துப்பு துலக்கி... குற்றவாளியைக் கொண்டு வந்து நீதிக்கு முன் நிறுத்தப் போகிறாளோ? கேட்டவர்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள்.

பிறர் அபிப்ராயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு அவள் நமக்கென்ன என்று அந்த சங்கதியை அப்படியே மறந்து விடுவது முறையா?

எந்தப் பெண்ணுக்கும் இழைக்கப்பட்ட கொடுமை—பெண்கள் அனைவருக்கும் இழைக்கப்பட்டதொரு தீங்குக்குச் சமமாயிற்றே

இன்றைய தினம் அந்தப் பெண்ணின் கூக்குரலைக் காதுகளில் போட்டுக் கொள்ளாது அவரவர்கள் பாட்டில் டெலிவிஷனில் படம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த அந்த ஃபிளாட்டிலிருக்கும் ஒரு குடித்தனக்காரரின் மகளுக்கு இந்த கதி நேர்ந்தால்...

தமக்கு என்று ஏற்படும்போது ஒரு நியாயம்... மற்றவருக்கு கஷ்டங்கள் ஏற்படும்போது அசட்டை...

சீ! சுயநலமாகப் பறவைகள் கூட வாழ்வதில்லை...

கேவலம் ஒரு காக்காய் இறந்து போனால்... அந்தத் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு பெருங்கூட்டமே திரண்டு விடுகிறதே...

கையிலிருந்த அந்தச் சட்டையை ஒரு பிளாஸ்டிக் பைக்குள் போட்டு புத்தகத்தின் மீது வைத்துவிட்டு அதனால் மனதிற்கு ஏற்பட்ட அருவருப்பைக் களைந்து எறிகிறவன் போல மீண்டும் தன் கைகளை நன்றாக சோப்பு போட்டுக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தான்.

அப்பொழுதுதான் அந்த யோசனை மூளையில் பளிச்சிட்டது. சில தினங்களுக்கு முன்னர்தான் அவன் அந்த உண்மையைக் கண்டு பிடித்தாள். ஒருநாள் மாலை நடைபாதையில் காய்கறிக்கூடையுடன் அவன் நடந்து கொண்டு வந்தபோது எதிரே மோதிக் கொள்ள இருந்ததொருகாவல் துறை இளைஞனை நிமிர்ந்து கோபத்துடன் பார்த்தவன் முகமெல்லாம் சிரிப்பாக மலர்ந்து போனது.

''அட நம்ப ரங்கன்...சொல்லாமல் கொள்ளாமல் இப்படி வளர்ந்துட்டே. காக்கிச் சட்டையும் தொப்பியுமா -பெரிய போலீஸ்காரனாகி விட்டிருக்கியே? ஒரு நிமிஷம் பயந்து போயிட்டேன்.''

''போலீஸ்காரன் கிட்டே பிடிச்சுத் தந்துடுவேன்— சீக்கிரம் சாப்பிடாட்டா தெரியுமா சேதின்னு? பயமுறுத்த நீங்க என்ன பச்சைக் குழந்தையா மாமி!'' பரிகாசமாகச் சிரித்தபடி தன் தலையிலிருந்த தொப்பியைக் கழற்றி கை மடக்கில் இடுக்கிக் கொண்டு பற்கள் வரிசையாக மின்ன மெல்லச் சிரித்தான்.

பம்பாயில்தான் அவனது பெற்றோர்களும் ஒரு காலத்தில் வசித்தனர். அருகிலே வசித்த நம்மூர்க்காரர் என்ற நெருக்கத்திலே மிகவும் தோழமை பூண்டு பழகியவர்கள். அவன் தாய் சில ஆண்டுகளில் பம்பாயிலேயே காலமாகிப்



போனாள். தமது ஒரே மகனை அவன் தந்தை சென்னையிலிருந்த தமது உறவினர் வீட்டில் தங்க வைத்துப் படிக்க வைத்துக் கொண்டிருந்தார். கல்லூரிப் படிப்புக் காலத்தில் விடுமுறைக்கு பம்பாய்க்கு வரும் போதெல்லாம் அவன் அவளை வந்து பார்த்து நலம் விசாரிப்பது வழக்கம். அதற்குப் பின்னர் அவனது தந்தை வேலையில் ஓய்வடைந்ததும் சென்னைக்கே புறப்பட்டுப் போய்விட்டார்— கொஞ்ச காலம் கடிதத் தொடர்பு இருந்தது. அவள் கணவன் இறந்த பின்னர் அதுவும் நின்று போனது. அவர்கள் வசித்த முகவரியைக் கூட அவள் தவறவிட்டு விட்டதால்... சென்னையில் வந்து குடியேறிய பின்னர் அவர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அப்போது அதிசயமாக ரங்கநாதன் அவள் முன் ஒரு காவல் துறை அதிகாரியாக காக்கிச் சட்டையில் கன கம்பீரமாக நின்றான்.

இந்த எதிர்பாராத சந்திப்பிலே... இருவருமே மிக மகிழ்ந்து போனார்கள்.

''மாமி! எங்க இந்த ஊரில்'' என்று கேட்டதும்தான் ஏன் சென்னைக்கு வந்தாள் என்ற விவரத்தைக் கூறி முகவரி தொலைபேசி எண் எல்லாம் தந்தாள்.

அவனும் தன் தொலைபேசி எண் - முகவரி எல்லாம் கொடுத்துவிட்டு... ''பயப்படாதீங்கோ மாமி நீங்க வசிக்கிற இந்த குடியிருப்புப் பகுதி என் ஜூரிஸ்டிக்ஷன். அதாவது என் காவல் பாதுகாப்பில் இருக்கு. போலீஸ் நிலையம் கூப்பிடு தூரத்தில் இருக்கு. அதோ தெரிகிறதே அந்த நிலையத்தில் நான் சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கிறேன். ஏதாவது திருட்டு... அல்லது சண்டை சச்சரவு உங்களைப் பாதித்தால்... போலீஸ் நிலையத்துக்கு உடனே போன் செய்து என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்-அந்த நிமிஷத்திலே பறந்து வந்து உதவுவேன்.''

''நீ உதவணும் என்பதற்காக நான் வம்பு வழக்கில் மாட்டிக்கணும் - அல்லது என் வீட்டுக்குள் திருடன் குதிக்கணுமா'' அவள் வேடிக்கையாகச் சிரித்தாள்.

''வீட்டுக்கு வாங்க மாமி. அம்மா போன பிறகு அப்பா ரொம்பவே மாறிப் போய்விட்டார். கோவில் குளம்னு...சுத்திக் கொண்டிருக்கார். விதவை அத்தை தான் வீட்டைக் கவனிக்கிறாள்...ஒருநாள் வாங்கோ... முன் கூட்டிச் சொன்னால் நானே வந்து அழைச்சிண்டு போறேன். அத்தை நன்றாகவே சமைப்பாள்... சாப்பிட வாங்கோ...''

''ஏன் நீ ஒருநாள், என் வீட்டுக்கு வந்து என் கை சாப்பாட்டை ருசிக்கக்கூடாதோ...'' விளையாட்டாகவே கேட்டாள்.

''வரேன் மாமி. கட்டாயம் வரேன்...'' என்றான்— அதற்கு பின் அவரவர்கள் வேலையில் அந்தச் சந்திப்பை பற்றிய நினைப்பும் தொடர்பு கொள்ள வேண்டும என்ற எண்ணமும மறந்தே போயிவ.

இப்பொழுது திடீரென்று ரங்கனது நினைவு வரவே அவள் சட்டென்று டெலிபோன் புத்தகத்தில அருகில் வைத்திருந்த முகவரி கொண்ட டைரியை எடுத்துத் தேடினாள்.

இது சமயம் ரங்கன் வீட்டில்தான இருப்பான். ஸ்டேஷனில் தேடுவதில் லாபம் இல்லை வீட்டுக்குத்தான் போன் செய்து கேட்கவேண்டும்.

''ஹலோ! மாமியா...என்ன ஆச்சர்யம்? உங்களைத் தான் சிறிது முன்பு நினைச்சுக் கொண்டேன். உங்களுக்கு வயசு நூறு...''

''நன்னா பேசக் கத்துண்டு இருக்கே ரங்கா... நான் தான் இப்போ நினைச்சேன். உடனே கூப்பிட்டேன். உனக்கு ஆயுசு நூறு'' சிரித்தாள் சாரதா.



''இல்ல மாமி. உண்மை தான். செங்கல்பட்டு கிழக்கு பகுதி மாதர் சங்கத்திலே நீங்க தலைமை வகித்து பரிசு வழங்கினதாக ஒரு செய்தியைப் படித்தேன்.''

''அது ஒரு வாரம் முன்பு நடந்த கதை. பழைய செய்தியையெல்லாமா ஒரு போலீஸ் அதிகாரி படிக்கிறது?''

''பழைய சங்கதிகளிலும் விஷயம் இருக்குமே... துப்பு துலக்க உதவுமே...''

''ரங்கா...எனக்கு ஒரு உதவி தேவை. செய்வியா...''

''சொல்லுங்க மாமி...உங்க பக்கம் ஏதாவது திருட்டு, புரட்டு நடந்ததா?...''

''இல்லை. அதைவிட மோசமான ஒரு நிகழ்ச்சி. உனக்கு ஆட்சேபணை இல்லைனா என் வீட்டுக்கு நீ உடனடியா வர முடியுமா?...

''உங்க குரலைக் கேட்டதிலே இருந்து நீங்க ரொம்ப அதிர்ந்து போயிருக்காப்பல தெரிகிறது. அதுக்கென்ன பத்து நிமிஷத்திலே வந்துடறேன் நல்ல வேளையா நீங்க குடியிருக்கிற இடம் ரொம்ப தூரமில்லை சாப்பாடு கூட முடிஞ்சாச்சு - அத்தை படுக்கப் போய்விடுவாள். அப்பா காலக்ஷேபம் ஏதோ கேட்கப் போயிருப்பார்...வர நேர மாகும். அவர் கையில் வாசல் கதவைத் திறந்து உள்ளே வர மறு சாவி இருக்கு அத்தைக்கு தூக்கம் கெடாது— என்னிடம் கூட இன்னொரு சாவி இருக்கு. இதனால் யாருக்கும் எந்த கஷ்டம் இல்லை நான் உடனடியா வரேன் கவலைப் படாதீங்க...'' என்று கூறிவிட்டு போனை வைத்தான் ரங்கன்.

முதல் முதலாக அவளது வீட்டுக்கு வரப்போகிற தோழியின் மகன் - அவனிடம் இந்த அவலச் செய்தியைச் சொல்ல வேண்டியிருக்கிறதே என்று மனம் சஞ்சலப்பட்டது. அவள் கோழையாக மற்ற சுயநலக்காரர்களைப் போல ஒதுங்கிப் போய்விடக் கூடாது. ரங்களது உதவியால் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்... என்று

எண்ணியபடி எழுந்தாள். சமையலறை அலமாரியைத் தேடினாள். இரண்டு நாளுக்கு முன் அவள் டிபன் வேளைக்கு உதவும் என்று செய்து வைத்த முறுக்குகளில் சில அப்படியே டின்னில் இருந்தன. ஸ்டீல் டப்பாவிலே பத்திரமாக தன் உபயோகத்திற்கு வைத்திருந்த ரவா லாடுகளில் இன்னும் சில மீதியிருந்தன.

இரண்டு முறுக்குகளையும் ஒரு லாடையும் எடுத்து ஒரு ஸ்டீல் தட்டில் வைத்து தயாராக முன்னரே காபி மேசைமேல் கொண்டு வைத்தாள்.

பிரிட்ஜைத் திறந்து அதில் ஒரு பக்கம் வைத்திருந்த ஆரஞ்சு ஸ்குவாஷை எடுத்து ஒரு டம்ளரில் ஐஸ் தண்ணீரை ஊற்றி, சேர்த்து ஸ்பூனால் கலக்கி அவள் எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வருவதற்கும் மோட்டார் சைக்கிள் சத்தம் ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது.

இள ரத்தம், அவள் டம்ளரை வைத்துவிட்டு நடை பக்கம் திரும்புமுன் மாடிப்படிகளை இரண்டே தாவலில் ஏறி முடித்து அழைப்பு மணியை ரங்கநாதன் அழுத்தமாக அடித்தான்.

"வாப்பா... ரங்கா..." என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். சாதாரணமானதொரு வெள்ளைச் சட்டையிலும் நீலவண்ணப் பாண்ட்டிலும் வந்திருந்த போதிலும்... போலீஸ்காரன் என்ற உணர்வில் அவளுக்குத் தெம்பு கூடிவிட்டது.

தன்னைச் சுற்றி மெட்ராஸ் ரெஜிமெண்டே காத்துக் கொண்டு நிற்பது போன்றதொரு துணிச்சலில் அவள் அவனை முன்னறையில் உட்கார வைத்து உபசரித்தாள்.

"இதெல்லாம் எதுக்கு மாமி- இப்பத்தான் சாப்பிட்டு முடிச்சேன். ரவா லாடு நீங்க செஞ்சதா... பஸ்ட்கிளாசா இருக்கே. முறுக்கு வாயிலே கரைஞ்சு போறதே..." புகழ்ந்த வண்ணம் அவன் தின்பண்டங்களைச் சாப்பிட்டான்.



"இதெல்லாம் கொடுக்கவா அவசரமா கூப்பிட்டீங்க." சிரித்துக்கொண்டே ஆரஞ்சு ரசத்தை அவன் உறிஞ்சினான்.

"முதலில் இனிப்பானவைகளைக் கொடுத்து உபசரித்து விட்டு மிகவும் கசப்பான ஒரு சங்கதி சொல்லி உன் உதவியைக் கேட்கப் போகிறேன். டம்ளரைக் காலிபண்ணு —விசயத்தை சொல்றேன்" என்றாள் சாரதா வேடிக்கையாக.

"இப்போ நான் கேட்கத் தயார்- "டம்ளரை மேஜை மேல் வைத்துவிட்டு ரங்கநாதன் லேசாகச் சிரித்தான்.

சாரதா நடந்ததனைத்தையும் வேகமாக - சுருக்கமாகக் கூறி முடித்தாள். அவன் முகம் மாறிப் போனான்.

"இது உண்மையா... இருட்டத் தொடங்கி கொஞ்ச நேரத்திலேயே நடந்தது என்றா சொல்கிறீர்கள்... இத்தனை பேர் அருகிலிருக்கும் ஒரு பரபரப்பான இடத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததென்று நீங்கள் நம்புகிறீர்களா..."

"ரங்கா, தடயங்களுடன்தான் பேசுகிறேன். இந்த புத்தகம் இந்த ஷர்ட் இரண்டையும் நான் அது நடந்த இடத்தில் கண்டு பிடித்தேன்."

"ஆனாலும் மாமி உங்களுக்கு ரொம்பத் துணிச்சல். நீங்கள் அலறல் சத்தம் கேட்டதுமே எனக்குப் போன் செய்திருக்க வேண்டும். உடனடியாக நான் போலீஸ் வானில் சில அதிகாரிகளுடன் வந்திருப்பேனே? குற்றவாளியைக் கையுங்களவுமாகப் பிடித்திருக்கலாம்."

"எனக்கேற்பட்ட கலவரத்தில் பயங்கர உணர்வில் உன்னை அழைக்கலாம் என்ற எண்ணமே தோன்றவில்லை உதவிக்கு வர இங்கு யாரும் முன்வர மாட்டார்கள் என்பதை அறிவேன். இந்த ஃபிளாட்வாசிகள் ரொம்ப சுயநலக்காரர்கள். இவர்களிடையே எனக்கு அப்படி ஒன்றும் நல்ல பெயர் கிடையாது. வீண் வம்பை

விலைக்குப் பேசும் வேலையற்ற கிழவி என்று என்னைப்
பற்றி அவர்களுக்கு ஒரு அலுப்பு. தானாகவே ஏதாவது
செய்ய முடியுமா என்று யோசித்தேன். டார்ச் விளக்கு
டன் புறப்பட்டுப் போனேன். நாமிருவரும் மறுபடி
அங்கே போய்ப்பார்க்கலாமா?'' ரங்கநாதன் எழுந்தான்.
கையில் டார்ச்சுடன் சாரதா வெளியே பூட்டிக் கொண்டு
கிளம்பினாள்.

அவள் கூறியபடி அந்தப் பகுதி இருடைந்து
கிடந்தது. கட்டப்படாத நிலையில் ஒரு அறை போன்ற
பகுதி...வெளிப்புறத்திலே அன்று அந்தப் பக்கமிருந்த
தெரு குழல் விளக்கு அணைந்து விட்டிருந்ததால் ஒரே
அந்தகாரம். மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்திருந்த
இடம் மணல் பாங்காகப் போட்டிருந்த கோட்டிலிருந்து
தெரிந்தது. அநேகமாக வண்டியை சாலைப் பக்கம்
உருட்டி நகர்த்திக் கொண்டு விரைந்திருக்கிறான் என்பது
மணல் மீது டயரின் கோடு பதிந்து கோணலாகி தெருவின்
தார் போட்ட பகுதிக்கு ஓடியிருந்ததிலிருந்து தெரிந்தது

சாரதா கூறியது முற்றிலும் உண்மைதான். யாரோ
ஒரு பெண் தெருவிலிருந்து சட்டிடத்தின் திறந்த வாயில்
வழியே உள்ளே புகுந்து மறுவழியாக வெளிவந்து அடுத்த
தெருவுக்குப்போக முயன்றிருக்கிறாள். அதை அறிந்து
கொண்டு அந்த இடத்தில் அவளை மடக்கியிருக்கிறான்
மோட்டார் சைக்கிள்காரன்.

## 3

இருவரும் மறுபடியும் வீட்டுக்குள் வந்தனர். இவர்
கள் அங்கே வந்து பரிசோதனை செய்ததை அறியாது
கட்டிடத்தை காவல் காக்க அமர்த்தப்பட்டிருந்த மேஸ்
திரி கன்னியப்பன் போதை மயக்கத்திலே உலகமே தெரி
யாது தூங்கிக் கொண்டிருந்தான்.

''பம்பாயில்தான் இந்த பயங்கரம் அதிகமாக நடக்கி
றது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது



சென்னையிலும் அதுவும் நான் குடியிருக்கும் பகுதிக்கு
அருகில் என் காதுகளில் கேட்குமளவு நடந்திருப்பதால்
என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.'' விரக்தியாக
சொன்னாள் சாரதா.

''கற்பழிப்பு என்ற குற்றம் இப்பொழுது நம் நாட்டில்
கல்கத்தா, பம்பாய், டெல்லி, சென்னை போன்ற முக்கிய
நகரங்களில் நிறையவே நடக்கின்றது. ,டெல்லியில் புள்ளி
விவரப்படி 1976ல் நாற்பத்தெட்டு கேஸ்களும் எழுபத்
தொன்பதில் அறுபதும் போலீசில் தாக்கலானதாக விவரம்
தெரிகின்றது. போலீசாரிடம் புகார் சொல்லாது அவ
மானம் காரணமாக மறைத்து விடப்படும் கேஸ்கள் எத்
தனையோ கணக்கில் வராதவைகள். பம்பாயில் புறநகர்
பகுதியிலே நாளைக்கு ஒரு கற்பழிப்பு கேஸ் போலீசிடம்
பதிவாகிறது. ஒன்று பதிவானால் பத்து மறைக்கப்பட்டு
விட்டது என்று நாம் கொள்ள வேண்டும்.''

''அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றனவே. திறமை
யுடன் போலீசார் குற்றவாளியைப் பிடித்து நீதி முன்
நிறுத்தினாலும் அவனது வக்கீலின் வாதத்தினால் அநேகம்
பேர்கள் தண்டனையினின்று தப்பி விடுகின்றனர். அப்
போது அந்தப் பெண்ணின் கதி என்னாகும் என்று
யோசித்துப் பாருங்கள். அவளது வருங்காலமே இருண்டு
போய் விடுகிறது. இந்த பயத்தினால்தான் பல பெண்கள்
தங்களுக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையை
வெளியே சொல்லிக் கொள்ள அஞ்சுகிறார்கள்.''

''மாமி! நீங்க சொல்வதிலும் நியாயம் இருக்கு. டெல்
லியில் 1972ல் நடந்த ஒரு கேஸ் ஞாபகத்துக்கு வரது.
படித்த பெண் ஒருத்தி அலுவலகத்திலே கற்பழிக்கப் பட்
டாள். அனுதாபிகள் அவளுக்கு ஒரு வேலை தேடி உதவி
னார்கள். ஆனால் நிம்மதியாக அந்த வேலையை அவளால்
செய்து கொண்டு வாழ முடியவில்லை அவள் தான் குற்ற
வாளிபோல சுற்றிலுமிருந்தவரின் கிசுகிசுப்பை சகிக்காது
அவள் முடிவில் வேலையையே விட்டு வேறு எங்கேயோ

போய் விட்டாள். நகரங்களிலேயே இப்படி என்றால் கிராமத்தில் இந்த விபத்துக்குள்ளான பெண்களின் நிலையைக் கேட்க வேண்டாம். அநேக பெண்கள் அவமானம் தாளாது தற்கொலை செய்து கொண்டு விடுகின்றனர்.

"இந்தப் பெண் அப்படி தற்கொலை செய்து கொள்ளக்கூடாது. அதை நாம் தடுக்க வேண்டும் என்ற ஒரு ஆவேச உணர்வின் உந்தலினால்தான் நான் உன்னை அழைத்தேன்."

"முதலில் அவள் யார் என்று கண்டு பிடிக்க வேண்டும். இந்தப் பெரிய நகரில் அவள் எங்கே போய் ஒளிந்து கொண்டிருக்கிறாள் என்பதை முதலில் கண்டுபிடித்தாக வேண்டும்."

"போலீஸ்காரருக்கு நான் சொல்லித் தரணுமா ரங்கா? இந்தப் புத்தகத்தைக் கொண்டுபோய் அந்த நூல் நிலையத்தில் காட்டினால் அதிலுள்ள நம்பரைப் பார்த்து விட்டு ஒரு சமயம் அதை எடுத்தவள் முகவரியைச் சொல்ல முடியும் அல்லவா?"

"புத்தகத்தை இன்று மாலை அவள் எடுத்திருக்க வேண்டும். அல்லது அவளுக்காக வேறு யாராவது எடுத்திருக்க வேண்டும். அவள் யார் வீட்டு வேலைக்காரப் பெண்ணாகவாவது இருந்தால் யஜமானிக்காக புத்தகம் எடுத்துக் கொண்டு திரும்ப வந்த வழியில் இந்த விபத்து நேர்ந்து விட்டிருந்தால்."

"ரங்கா யஜமானியானால் என்ன? வேலைக்காரியானால் என்ன? சுருங்கச் சொன்னால் அவள் விபசாரத்தை தொழிலாகக் கொண்டவளாக இருந்தால்தான் என்ன? ஒரு மனிதனுக்கு ஒரு பெண்ணை பலாத்காரம் செய்யும் உரிமை கிடையவே கிடையாது. இந்தியன் பீனல்கோட் சட்டத்தின் 375வது பிரிவின்படி கற்பழிப்பு என்பது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும். ஆயுள் தண்ட



னையிலிருந்து பத்து வருஷம் அல்லது ஐந்து வருஷம் சடுங்காவல் விதிக்கலாம் இல்லையா?"

"பேஷ்! மாமி நீங்க சட்டம் படிச்சு வச்சிருக்கீங்க."

"பம்பாயில் இருந்தபோது நான் சில பொது ஜன சேவைக் குழுவில் சேர்ந்திருந்தேன். பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளான வரதட்சணை கற்பழிப்பு இவைகளுக்காக கொடிபிடித்து ஊர்வலம் நடத்தி போராடியிருக்கிறோம். பல கருத்தரங்குகள் நடத்தியிருக்கிறோம் அதன் மூலம் தெரிந்துகொண்ட சில உண்மைகள் அவ்வளவுதான். உனக்குத்தான் தெரியுமே சித்ரா என்ற பெண்ணைப் பற்றிய கேஸ். பத்திரிகை உலகில் தடபுடல் பட்டது. அதுபோலவே மாயா தியாகியின் கேசும் மிகவும் பிரபலமானதொரு சங்கதியாகும். பம்பாயில் சில இடங்கள் வழியே பெண்கள் நடப்பது கூட ஆபத்து என்று எச்சரிக்கப்பட்டனர்.

"பாந்தரா ஈஸ்ட் எனுமிடத்தில் உள்ள ரயில்வே பாலம் மிகவும் நீளமானது. விளக்கு வெளிச்சம் குறைவு. சில இடங்களில் விளக்குகள் எரிவதேயில்லை. இந்தப் பகுதியில் பயணம் செய்யும் பெண்கள் ஆபத்தை தாமே விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். இதைப் போலவே ஜோகேஸ்வரி என்ற பகுதியில் சில இடங்களும் ஆபத்தானது" என்றாள் சாரதா.

"ஒவ்வொரு நகரத்திலும் மூலை முடுக்குகளில் இப்படி சில பயங்கரமான தனி இடங்கள் இருக்கின்றன மாமி. ஒரு உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கற்பழிக்க முன்வரும் மனிதன் நாம் கற்பனையில் நினைப்பது போல ஒரு முரடன் அல்ல. சினிமாவில் வரும் வில்லன்களைப் போலக்கூட சில சமயங்கள் இருப்பதில்லை. நம்மிடையே உலவும் ஒரு சாதாரண மனிதன் அவன் கீழ்மட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் உயர் மட்ட நீதி அதிகாரியாகவும் இருக்கலாம். திடீரென்று ஏற்படும் ஒரு இள

உணர்வு வெறியால் இந்த பயங்கரச் செயலுக்கு உட்படுகி றான். இதையே ஒரு தொழிலாக வைத்துக்கொண்டு யாரும் திரிவதில்லை. அதனால் பெண்கள் இதை ஒரு விபத் தாகத்தான் பாவிக்கவேண்டும்.

"நீயும் நானும் சொல்லிவிடலாம் ரங்கா. பாதிக்கப் பட்ட பெண்ணின் மனநிலையைச் சிந்தித்துப் பார். அவள் உணர்வுகள் எப்படிக் காயப்பட்டிருக்கும் என்று நினைத் துப்பார்."

"நன்றாக நினைத்துப் பார்க்க முடிகிறது மாமி. மோட்டார் கார்விபத்தில் பெண் காயமடைந்துவிட்டாள் ஊனமுற்றுவிட்டாள் என்று வைத்துக் கொள்வோம் அதற் காக அவளுக்கு வாழ்வே முடிந்து போய்விட்டதாகக் கருது வதா? மறுவாழ்வு கொடுக்க ஊனமுற்றோர் ஸ்தாபனங்கள் இருக்கின்றன அல்லவா? அதே போல..."

"ரங்கா நாம் இதைப்பற்றி தர்க்கிப்பதைவிட இனி என்ன செய்வது என்று சிந்திக்க வேண்டும். நான் ஒரு காரியம் செய்கிறேன். இந்த புத்தகத்தை எடுத்து வந்த நூல் நிலையத்தின் அதிபரை எனக்குத் தெரியும். இதை நேற்று மாலை யார் எடுத்தது என்று கண்டுபிடிக்க முயலு கிறேன். நீ இந்த ஷர்ட்டை எடுத்துப்போய் இதன் காலர் பின் இருக்கும் சலவைத் தொழிலாளர் குறியினால் இது யாருடையது என்று கண்டுபிடி."

"மாமி பெரிய கேஸில் என்னை மாட்டி விடுறீங்க—"

"பின்னே இப்படி நடந்திருக்கும் ஒரு விபரீதத்தைத் தொடர்ந்து துப்பறிந்து கண்டு பிடிப்பதுன்னா லேசா ..நீ மனது வைச்சா நடக்காத காரியமா? இரண்டு காவல் துறை அதிகாரிகளிடம் இதைக் கொடுத்து—அங்கு உள்ள சலவைத் தொழிலாளர்களிடமெல்லாம் காட்டி கண்டு பிடிக்க முடியாதா?..."

"முதலில் நீங்கள் நாளைக்கு என்னுடைய கவனிப்பில் உள்ள காவல் துறை நிலையத்திற்கு வந்து இங்கு நடந்த



தைப் பற்றி ஒரு புகார் தாக்கல் செய்து-இதை அதிகாரிகள் தொடர்ந்து கண்டுபிடிக்க முயல வேண்டும்...அந்தப் பகு திக்கு காவல் துறை பாதுகாப்பு அதிக அளவில் தேவைப் படுகிறது என்று விவரமாக எழுதி கையெழுத்திட்டுத் தர வேண்டும். அதுதான் முறை. அதற்குப் பின்னர் நான் தொடர்ந்து என்னால் முடிந்தவரை செயல்படுவேன்-நிச்ச யம் என்னை நம்பலாம்-" கூறிவிட்டு எழுந்தான்.

"நாளை நான் வரும்போது-இந்த பிளாஸ்டிக் பையில உள்ள சட்டையை மட்டும் உங்கள் அலுவலகத்திற்கு வந்து தடயமாகத் தருகிறேன். இந்தப் புத்தகத்தை நான் வைத் துக்கொண்டு என்னால் ஆனதை முயலப் போகிறேன். அதற்கு ஏதாவது மறுப்பு உண்டா?" சாரதா துணிவுடன் கேட்டாள்.

"பரவாயில்லை மாமி! பெரிய துப்பறியும் புலியாக மாற முயலுறீங்க."

"இந்த புத்தகத் தடயம் மூலம் அந்தப் பெண் வீட்டைக் கண்டு பிடித்துவிட்டால், அவளிடம் பேச என்னை ஒத்த ஒரு பெண்மணிதான் அணுக வேண்டும். அதனால் நான்-புத்தக விஷயத்தை நான் கவனிக்கிறேன்-ரங்கா புரிகி றதா" என்று கேட்டாள் சாரதா.

"புரிகிறது-நீங்கள் உங்கள் வழியில் கண்டுபிடிப்பு செய்து வெற்றிக்காக முயலப் போறீங்க-சட்டம் தன் வழி யில் ஆராயப் போகிறது யாருக்கு முதலில் வெற்றி கிடைத் தாலும், அதை மத்தவங்களோட பங்கிட்டுக் கொள்வோம் சரிதானே-"

"எனக்கு இதனால் பேரோ-புகழோ தேவையில்லை. ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையின் பாதிப்பிலிருந்து அவளை நான் மீட்க முயல வேண்டும். அது வெற்றியானால் மகிழ்வேன்-இரண்டாவது அவளுக் குத் தீங்கு செய்தவனுக்குத் தக்க தண்டனை கிடைக்க

வேண்டும். அப்போதுதான் மனம் ஆறுதலடையும்'' என்றாள்.

''ஓ.கே.'' என்று சித்தரங்கநாதன் புறப்பட்டான்.

மறுநாள் பிற்பகல், மண்டையைப் பிளக்கும் வெய்யிலில் குடையுடன் சாரதா தன் தோள்பையுடன், கால் செருப்பும் கண்களில் கருப்புக் கண்ணாடியுமாய்ப் புறப்பட்டாள்.

அவள் வெளிச் செல்வதைப் பார்க்கவே அந்தக் கட்டிடத்திலிருந்த செருக்கு பெருத்ததொரு வேடிக்கை-ஆவல்.

பக்கத்து பிளாட்டுகளில் ஜன்னல் திரைகள் அசைவதைப் பொருட்படுத்தாது அவள் குடையை விரித்துக் கொண்டு மெல்லச் சாலையை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

நூல் நிலையம் இரண்டு தெருக்களுக்கு அப்பால் இயங்கிக் கொண்டிருந்தது. பள்ளிக்கூட விடுமுறை நாட்களாக இருந்தால் அதற்குள் நுழைவதற்குள் அவள் மூச்சுத் திணறிப் போகும். பள்ளிக்கூடங்கள் மூட இன்னும் சில நாட்கள் இருந்தன. மண்டை வெடிக்கும் வெய்யிலில் அங்கே எப்போதும் கூட்டம் அதிகமிருக்காது என்பதை அவள் அறிவாள்.

நூல் நிலையத்தின் சொந்தக்காரர் முருகன் அப்போது தான் ஸ்டீல் டிபன்செட்டைத் திறந்து சிறு மேஜையின் மேல் வைத்துக் கொண்டு சாப்பிடக் கை கழுவி விட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். அறை முழுவதும் குப்பென்று குருமா குழம்பின் மணம்.

அவளைக் கண்டதும் இலையை விட்டு எழுந்து விட்டார் முருகன்.



'''என்னம்மா இந்த வெய்யிலிலே?'' என்றபடி பற்களெல்லாம் தெரிய முறுவலித்தார்.

''உங்க சாப்பாட்டு வேளையில் வந்து தொந்தரவு செய்துட்டேன். மன்னிச்சுக்குங்கோ. சில புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்து விட்டு வேறு சில எடுத்துக்கிட்டுப் போக வந்தேன். நீங்க சாப்பிட்டு முடியுங்கோ...'' என்றபடி தான் கொண்டு வந்த சில புத்தகங்களை அங்கிருந்த ஆட்களிடம் கொடுத்து திருப்பிவிட்டதென அவளது பெயர் அடியில் உள்ள புத்தக எண்களை அடிக்கச் சொன்னாள். ஒழுங்காக புத்தகங்களை எடுத்துப்போய் பத்திரமாக புத்தகங்களைத் திருப்பி விடும் ஒரு நல்ல வாடிக்கைக்காரி என்ற விதத்தில் அவள் மேல் முருகனுக்கு மிக்க மரியாதை. அவசரமாக உணவை முடித்துக் கொண்டு அவள் வேண்டிய சில புத்தகங்களைத் தாமே ஏணியில் ஏறி, மேல் அலமாரித் தட்டுகளிலிருந்து எடுத்துக் கொடுத்தார்.

ஆட்கள் சாப்பிடுகிற முறை இப்போது. அவர்கள் டிபன் பெட்டிகளுடன் பின்பக்கம் போனதும் நூல் நிலையத்தில் அவர்கள் இருவரும் மட்டுமே இருந்தனர்.

சட்டென்று அந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து சாரதா தன் தோள் பையிலிருந்த அந்த புத்தகத்தை எடுத்தாள். ''எங்கள் வீட்டு மாடிப்படியில் இந்த புத்தகம் கிடந்தது. இதை யார் தவற விட்டிருப்பார்கள் என்று தெரியவில்லை'' என்று புத்தகத்தை அவரிடம் நீட்டினாள் -முகத்தை சுளித்துக் கொண்டு புருவத்தை நெறித்தார் முருகன், அவருக்கு அவரது வாடிக்கைக்காரர்கள் அனைவரையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளும் பழக்கமிருந்தது. ஆமாம்-அந்தப் புத்தகத்தின் பெயரைச் சொல்லி... மிகவும் தொந்திரவு செய்து தேடச் சொல்லி-யார் வாங்கிக் கொண்டு போனது—? தலையைச் சொறிந்தார். அன்றைக்கு முதல்நாள் மாலைதான்-அந்தப் பெண்ணுக்காக

அந்த நூற்றுக் கணக்கான புத்தக வரிசையில் அதைத் தேடியது நன்றாகவே ஞாபகத்துக்கு வந்தது.

"இந்த இருங்கோ—" என்றபடி அவர் முதல்நாள் காலையிலிருந்து புத்தகங்களின் எண்களைப் பதிவு செய்த பல வாடிக்கைக்காரர்களின் பெயர் கொண்ட நோட்டுப் புத்தகங்களின் ஏடுகளை வேகமாக புரட்டினார்—அன்று இரவல் தந்த புத்தகத்தின் எண்ணிக்கைகள்—எண்கள் என் பதைக் குறித்து வைத்திருந்த ஒரு நோட்டுப் புத்தகத்துடன் புறப்பட்டார். அந்தப் புத்தகத்தின் எண்—முதல்நாள் மாலை இரவல் கொடுத்ததற்கான புத்தக வரிசையாயிருந்தது. சில வாடிக்கைக்காரர்களுக்கு கொடுக்கும் பொழுது—அவர் புத்தக எண்ணின் அருகே சிவப்பு பேனாவால் நால் நிலைப் புத்தகத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கும் எண்ணைச் குறித்து சுத்திலும் ஒரு வளையம்போட்டு வைப்பது வழக்கம். அவர்கள் எல்லோரும் வேலில் புத்தகத்தை திருப்பித் தராது—நண்பர்களுக்கும் தோழிகளுக்கும் இரவல் கொடுத்து—நாளை நினைவூட்டுகிற தொல்லை தரும் வாடிக்கையாளர் என்ற குறிப்பு.

முருகன் புத்தகத்திலிருந்த சிவப்பு வளையத்தைப் பார்த்துவிட்டு லேசாகச் சிரித்தார்.

"இந்தம்மா ரொம்ப பேஜார்ப் பேர்வழி. பெரிய மனுஷர் வீட்டுப் பெண்தான்—புத்தகத்தை எடுத்துப் போனால் சுலபத்தில் திருப்புவது இல்லை.

"ஒருவாட்டி நான் ரொம்பவே கண்டிச்சுட்டேன்—கொஞ்சநாள் லைப்ரரி வராதிருந்து இப்பத்தான் திரும்ப வர ஆரம்பிச்சிருக்க—இருங்க சொல்றேன்" என்றபடி மேலே நோட்டுப் புத்தகத்தில் ஒரு பக்கத்தை விரித்தார். "இவங்ககிட்டேயிருந்து இன்னும் பல புத்தகங்கள் திரும்ப வில்லை—இதோ பாருங்க—இப்படி என் வியாபாரம் நடந்தா



நான் எப்படியம்மா பொழைக்கிறது—" என்றபடி அந்தப் பக்கத்தை அவன் முன் நீட்டினார்.

தேவகி—எண் எழுபது ராபர்ட்ஸன் அவின்யூ நுங்கம்பாக்கம் என்ற முகவரியை மனப்பாடம் செய்து கொண்டான் சாரதி.

"மிஸ்டர் முருகன் உங்களுக்கு மறுப்பு இல்லையானா—ரெண்டு நாளில் இதைப் படிச்சுட்டு நான் திருப்பி தந்துடறேன்" என்றான்.

"என்னப்பா நீங்க கூட இது மாதிரி புத்தகங்கள் படிக்க ஆரம்பிச்சுட்டீங்க—" பகபகவென்று முருகன் சிரித்தபடி அனுமதித்தார்.

புத்தகங்களுக்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி விட்டு கண்டெடுத்த அந்தப் புத்தகத்தை பத்திரமாக பையில் போட்டுக்கொண்டு ஒரு ஆட்டோவைப் பிடித்து அந்த முகவரிக்குப் புறப்பட்டான்.

வாசலில் கூர்க்கா, தோட்டத்தில் அல்சேஷியன் என்ற காவல் தர்பாருடன் விளங்கிய மிகப் புதிய பாணியில் கட்டிய வீடு அது. முன்பக்கம் கண்ணைக் கவர்ந்த தோட்டத்தையும் பசுமை பாய் விரித்த புல்வெளியையும் பார்த்து ஒரு கணம் திகைத்துப் போனான்.

"இத்தனை பணக்கார வீட்டுப் பெண்ணா அந்த விபத்துக்கு உள்ளானவள்?"

கூர்க்காவிடம் இந்தியில் பேசினான். தேவகி அம்மாளை அவசியம் பார்க்க வேண்டும். உத்திரவு வாங்கி வா என்று குழைவாகக் கேட்டுக்கொண்டான். அல்சேஷியனின் ஆக்ரோஷமான குரைப்பை அதட்டி அடக்கிவிட்டு நகத்தைக் கடித்தபடி—தலைமுடி முதுகில் புரள ஒரு மாக்ஸியில் பதினெட்டு வயதிருக்கும் ஒரு பருவப் பெண் வெளியே வந்தாள். கேட் அருகே நின்ற வயதான அம்மாளை...கூர்க்காவிடம் சொல்லி விரட்டியடிக்க அவளுக்கு மனம் இல்லை.

யாராக இருக்கும்—? எதற்காக வந்திருக்காங்க... அறியும் ஆவலை அடக்கமாட்டாது அவள் துள்ளிக் குதித்தபடி கேட்டருகே வந்தாள்.

கூர்க்காவிடம் அல்சேஷியனைப் பிடித்து தூணில் கட்டச் சொல்லி உத்தரவிட்டுவிட்டு "யார் அம்மா நீங்க ...இந்த வெய்யல் வேலையில்" என்று பவ்யமாகக் கேட்டாள்.

"உங்க பேர்தானே தேவகி? முருகன் லைப்ரரியிலிருந்து புத்தகம் எடுக்கப் போயிருந்தேன் போர்த்திய வலை என்ற புத்தகத்தை ஒரே நாளில் நீங்க திரும்பத் தருவதாக நேத்து எடுத்து வந்தீங்களாம். அதை நீங்க எனக்கு இரவலா ஒரு நாள் தரமுடியுமா? முருகன் கைப்பட கடிதம்கூட வாங்கிட்டு வந்திருக்கேன்.." என்றாள் துணிவுடன்.

தேவகியின் முகம் சிவந்து போனது—கண்களில் கோபம் தெரிந்தது. அந்த முருகன் உங்களை அந்தப் புத்தகத்துக்காகவா இவ்வளவு தூரம் அனுப்பி வச்சார் ஐயாம் ஸாரி மேடம்—அந்தப் புத்தகம் இப்போது என் கிட்ட இல்லை—முருகன் ரொம்ப அவசரப்பட்டா நீங்க அதை என் சிநேகிதி லாவண்யா கிட்டேயிருந்துதான் வாங்கிக்கணும். நேத்து சாயங்காலம் இங்க வந்திருந்தப்ப அதைப் படிச்சுட்டுத் தரதா எடுத்திட்டுப் போனா- அவள் முகவரியைச் சொல்றேன்—போய் வாங்கிக்கோங்க - சாம்பசிவம் தெரு, எண் ஆறு, தேனாம்பேட்டை - அவ்வளவுதானே" கேட்டபடி மிடுக்குடன் உள்ளே திரும்பிச் சென்று விட்டாள்.

அப்படியானால், அந்த விபத்துக்குள்ளானவள் இவள் அல்லவா? சாம்பசிவன் தெருவில் வசிக்கும் இவளது தோழி லாவண்யாவா? அதிசயித்தபடி தயாராக நிறுத்தி வைத்திருந்த அதே ஆட்டோவில் திரும்பினாள்

வெய்யிலில் விழுந்தடித்துக் கொண்டு தகவல் சேகரிக்க புறப்பட்டதன் விளைவு அவளுக்கு தாங்க முடியாத



தலைவலி. எனவே, அவள் நேரே தன் ஃபிளாட்டிற்கு திரும்பி விட்டாள்.

லாவண்யா விவகாரத்தை கொஞ்சம் வெய்யில் தணிந்த பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் கதவை சாத்திக்கொண்டு உள்ளே வந்தவள்—களைப்பு தாங்க முடியாது—தோற்பை, குடை எல்லாவற்றையும் மேஜைமேல் விசிறிப் போட்டுவிட்டு, வெளியே எடுத்துச் சென்ற இஸ்திரி போட்டப் புடவையைப் பற்றிக் கூட கவலைப்படாது-அப்படியே சுருண்டு படுக்கை மீது சரிந்து கொண்டாள்.

சிறிது பொழுது அவளையுமறியாது நன்றாகவே தூங்கி விட்டாள்.

திடுக்கிட்டு கண் விழித்துக்கொண்டு படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தபோது மாலை மங்கி நன்றாகவே இருட்டிவிட்டிருந்ததை அறிந்தாள். இந்த சமயம் முன் பின் தெரியாத சாம்பசிவம் தெருவைத் தேடிக்கொண்டு போவது அவசியமா என்ற கவலையில் மறுநாள் காலை அந்த வேலையைச் சவனிக்கலாம் என்று ஒத்திப்போட்டு விட்டு எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு பூஜையறை விளக்கை ஏற்றினாள்.

கடற்கரையின் மணல் மீது அவர்கள் இருவரும் அமர்ந்திருந்தனர். இந்த வானம் நீலக்கடலுடன் ஒன்றிக்கொண்டிருப்பதைப் பார்த்து வேடிக்கையாக அவள் சிரித்தாள். இப்பொழுது அவள் எதற்கும்-எந்தச் சின்ன விஷயத்திற்கும் சிரித்தாள். அவளையும் மீறி மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் களுக்கென்று சிரிக்கும் பழக்கம் வந்து விட்டிருந்தது. காதலித்தவனையே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம் ...அதுவும் இன்னும் சில நாட்களில் அந்த மாதத்தின் முடிவிலேயே முகூர்த்தநாள் நிச்சயிக்கப்பட்டாகி விட்டது. அம்மாவுடன் புடவைக் கடைகளுக்கு அலைந்து மனதுக்குப்

பிடித்ததை வாங்கியாகி விட்டது. அம்மா தன் பங்குக்கு அவள் ஆசைப்பட்ட நவரத்ன நெக்லஸூம் தோடும் மோதிரமும் எப்படியோ இருந்த பணத்தைப் போட்டு புரட்டி வாங்கித் தந்து விட்டாள்.

வரதட்சிணை—சீர் எதுவும் இல்லாத கல்யாணம்—காதலித்தவனை கைப்பிடிக்கும் பாக்யம். ஒரு பெரிய நிறுவனத்திலே உயர் மட்டத்து அதிகாரியாக வேலை பார்த்து வந்தான் கல்யாணராமன். கூர் மூக்கும் பளபளத்த கண்களும் மீசையுமாக...அவள் கண்களுக்கு அவன் ஒரு மன்மதனாகத்தான் தெரிந்தான். கை நிறைய சம்பாதிக்கிறான். கல்யாணமான அக்காவைத் தவிர வீட்டுக்கு ஒரே பிள்ளை. சொந்த வீடு- ஸ்கூட்டர் இத்யாதி தகுதிகளுடன் வாழ்கிறவன். வெகு விரைவில் உத்யோக உயர்வு அவனை எதிர் நோக்கி இருந்தது அப்போது கம்பெனியே கார்- தொலைபேசி எல்லாம் தந்து சம்பளமும் அதிகமாகத் தரப் போகிறது. வலது காலை எடுத்து அவள் வைக்கப் போகிற யோகம்...அவளுக்கு இவையெல்லாம் கிட்டப் போகின்றன என்று அவளை அவன் பரிகசித்துக் கொண்டிருந்தான்.

விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறவன் என்றாலும்... கல்யாணராமன் குடும்பம் கொஞ்சம் கட்டுப்பெட்டி.

''பல்லை இளிச்சுண்டு அந்தப் பெண்ணைத் தெருத் தெருவா உன் ஸ்கூட்டரில் வெச்சு ஊர்வலம் அழைச்சிண்டு போகாதே...அப்பா பார்த்தா ரொம்பவே கோவிச்சுப்பார். ஏற்கனவே அவருக்கு இந்தக் காதல் விவகாரம் கொஞ்சமும் பிடிக்கவில்லை'' என்று அம்மா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

ஜாதி—சமயப் பிரச்சனை ஏதுமில்லாத காதல் விவகாரம். சொல்லப் போனால் கொஞ்ச தூரத்து உறவு முறைகூட. அப்படியிருந்தும் அம்மாவுக்கு லாவண்யாவை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. பெண்ணுக்கென்ன மூக்கும் விழிகளுமாக... தேய்ச்சு வச்ச குத்து விளக்குப்போல



நன்னாத்தான் இருந்தா - நம்ம கல்யாணத்தைவிட நிறம் கூட அதிகம் இதுமட்டும் போருமா இந்தப் பையன்வரதட்சணை வாங்க மாட்டேன்- அவளைத்தான் பண்ணிப்பேன். இல்லாட்டா பிரும்மச்சாரியா நிற்பேன் ரொம்ப சாதாரணமா கல்யாணம் செய்து கொடுத்தா போதும்... கூறை...தாலி எல்லாம் நாம்தான் போடணும். அதுதான் முறைன்னு ரொம்பவே... அலட்டிவிட்டிருக்கிறான்...என்ற கோபம். பக்கத்து வீட்டு தொலைபேசியில் அன்று காலை ...எதிர் வீட்டு தொலைபேசி எண்ணுக்கு... சம்பந்தியம்மாளை அழைத்தாள் கல்யாணராமனின் தாயார்.

''தாலியையும் கூறைப்புடவையையும் எடுத்துண்டு ராகு காலம் கழிச்சு வரேன். உங்க குல தெய்வத்தின் பாதத்திலே வச்சு பூஜைபண்ணி, எடுத்து திருப்பிக் கொடுங்கோ ...நாங்க ஏற்கனவே எங்க வீட்டு பகவதி அம்மன் பாதத்திலே வச்சு பிரார்த்திச்சுண்டாச்சு. ஆயிரம் காலத்து பயிர் பாருங்க...அதனால் கடவுள் அனுகிரகத்தை வேண்டி ஆரம்பிக்க வேண்டிய காரியம்'' பட படவென்று சொல்லி முடித்தாள்.

பெரிய இடத்திலிருந்து நிறைய வரதட்சணையுடன் சீர் வரிசைகளுடன் வர இருந்த பல வரன்களையும் தட்டி விட்டு இந்தப் பிள்ளை இவளைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று ஒரே பிடிவாதம் செய்கிறானே என்ற ஆத்திரம் அவளுக்கு...சம்பந்தியம்மாளிடம் தொலைபேசியிலே பேசும் போதே கசப்பைக் கொட்டியிருந்தாள்.

அன்று காலையே லாவண்யாவின் தாயாரும் அவளை எச்சரித்து விட்டிருந்தாள்.

''லாவணி படிச்ச பொண் என்றாலும் நீ இன்னும் பச்சைக் குழந்தையா இருக்கே...உன் மாமியார்க்காரிக்கு ...உன்னை இப்பவே ஆரம்பிச்சு பிடிக்கலை. தங்கள் அந்தஸ்துக்கு ஏற்ற இடமில்லைனு உன்னைப்பற்றி ரொம்ப இளப்பம்- அதனாலே சொல்லிட்டேன். கல்யாணராமனை நீ இருட்டுந்தனமா சந்திச்சு கடற்கரையிலே உட்கார்ந்து

பேசறதை கொஞ்சம் நிறுத்திக்கோ அப்பாவுக்கு இந்த சங்கதி எப்படியோ தெரிஞ்சு போச்சு-யாரோ அவ ருடைய சிநேகிதன் எங்களிரண்டு பேரையும் சில நாளுக்கு முன் பார்த்தானாம். அப்பாகிட்ட வத்தி வச்சுட்டு போயிட்டான். உங்கப்பா சங்கதிதான் தெரியுமே உடனே மானம் போயிட்டாப்பல குன்னிப்போய் உட்கார்ந்துட் டார். இதென்ன நம்ப காலமா-கல்யாணமாகிக்கூட ஒரு வருஷம் வரை நான் உங்கப்பா முன்னாலே ஒரு வார்த்தை பேச முடியாது கதவு பின்னாலே நின்று ஜாடை காட் டிண்டு இருந்தேன். அது அந்தக் காலம். இந்தக் காலத்து பெண்கள் அது மாதிரியெல்லாம் பூச்சாண்டி பிடிக்க மாட்டா...சிறுசுகள் பேசி சிரிக்கட்டும் தப்பு தண்டாவிலே இறங்காம...தங்கள் வருங்காலத்தைப் பத்தி பேசறதிலே என்ன தவறுன்னு விவாதிச்சே. இருந்தாலும் நீ இன்னி யோட சிநேகிதி வீட்டுக்கு போறதையும் - அவனோட ஸ்கூட்டரில் சுத்தறதையும் நிறுத்திக்கோ - பார்க்கறவா ளுக்கு நன்னாப்படாது இப்பவே நெருங்கிப் பழக ஆரம் பிச்சா...பிறகு கல்யாணமானாலும் நெருக்கம் சப்புனு போயிடும்...'' அம்மா வெகுவாக உபதேசித்திருந்தாள்.

''லாவணி நாம முதல் முதல் சந்திச்சதைப் பத்தி நீ எப்பவாவது நினைக்கிறதுண்டா?''

கல்யாணராமன் மணலை வாரித் தூவிக்கொண்டே கேட்டான்.

''நிறைய தடவை நினைக்கிறதுண்டு—அப்போ நீங்க அந்த அடையார் வீட்டை கட்டிக்கொண்டிருந்த சமயம். பக்கத்து தெருவிலே ஒரு ஓட்டு வீட்டிலேதானே—எங்க ளைப் போல-ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பக்காரங் களா வாழ்ந்துண்டு இருந்தேன். இப்போ பங்களாவாசி யாகப் போயிட்டேன.''

''நீயும் சீக்கிரம் அதன் யஜமானியாகப் போறே. அதைவிடு...நான் அவசரமாக என் ஸ்கூட்டரை நோக்கி நடந்துண்டு இருந்தப்போ அசைப்பிலே உன் மேலே இடிச்



சுட்டேன்...அவ்வளவுதான் நீ கண்ணகிபோல ஒரே ஆவேசத்தோடு என்னைப் பார்த்து என்ன சொன்னே.''

''படுவா ராஸ்கல்னு திட்டிட்டேன்''...தலையைக் குனிந்து கொண்டு மணலில் கோலம் போட்டாள்.

''மன்னிப்புக் கேட்டுக்கொண்டபோது என்னை நிமிர்ந்து பார்த்தியே அப்பவே நான் உன் அடிமையாகி விட்டேன்.''

''உங்க மூஞ்சியை நிமிர்ந்து பார்த்ததும் ஏண்டா அப் படி கன்னா பின்னான்னு வைதுட்டோம்னு என் மனம் ரொம்ப சங்கடப்பட்டது.''

''பரவாயில்லைன்னு நீ சிரிச்சப்போ...நான் மயங்கிப் போய் போவார் வருவோரைக்கூட கவனிக்காமல் உன் னையே பார்த்துண்டு இருந்தேன்.''

''என் வீட்டுக்கு ஓடிப்போய் வராந்தாவில் ஏறிக் கொண்டு...கம்பி கேட்டு வழியா உங்களையே நானும் தான் பார்த்துண்டு நின்னேன்...அப்புறம் நீங்க ரொம்ப துணிச்சலா எனக்கு காதல் கடிதம் எழுதி உங்க அன்பை தெரிவிச்சிருந்தேள்—ஆமாம் உங்களுக்கு என் பேர் எப்படி தெரிஞ்சது.''

''நீ வீட்டுக்கு வேகமா நடந்து போறப்போ...யாரோ ஒரு சின்ன பையன் லாவணி...லாவணின்னு உன்னைக் கூப்பிட்டது கேட்டது...''

''என் தம்பி...ரெட்டவால்...பெயரைச் சொல்லி தெரு வில் கூப்பிடாதே யாராவது போக்கிரி காதில் பட்டுடப் போறதுன்னு எத்தனையோ தடவை சொல்லியிருந்தும் கேட்கிறதில்லை அவன்.''

''இந்தப் போக்கிரி காதில் பட்டது நல்லதா போச்சு- உன் வீட்டு வாசல் எண்ணையும் குறிச்சுக்கொண்டு துணிச் சலாதான் கடிதம் எழுதினேன்.

''நான் கல்யாணமாகாத பொண்ணுன்னு எப்படி கண்டுபிடிச்சேன்னு எனக்கு இன்னமும் ஆச்சர்யம்!...''

''உன் கண்கள் சொல்லின...உன் மேலே எனக்கும் ஆசைதான் அப்படின்னு முதல் பார்வையே சொல்லிடுத்து-கல்யாணமானவளா இருந்தா பிற புருஷனை அப்படி துணிச்சலா பார்த்துண்டு கேட்டு கிட்டயே நிற்பாளா!...''

''ஆமாம்! ரொம்பத்தான் பரிகாசம் பண்றேன். உங்க கடிதாசியை குளிக்கிற அறைக்குள்ளே படிச்சுட்டு-அதுக்கு பதில் போட என் சிநேகிதி விட்டுக்குப்போய்-அவள் ஆலோசனையோட எழுதி-அவா வீட்டு வேலையாள் மூலம் தபாலில் சேர்க்கப் பட்ட பாடு...அதுக்குப் பிறகு அவனோட சினிமாவுக்குப் போவதாகச் சொல்லி விட்டு உங்களை மூலை முடுக்கெல்லாம் சந்தித்து பேசினபோது நான் பட்ட அவஸ்தை-பயம்...திகில் அப்பப்பா.''

''இப்பகூட பயந்துதானே''-விளையாட்டாக அவளது விரல்களை அவன் பற்றியபோது மேனி புல்லரித்துப் போனாள் லாவண்யா.

''எத்தனை பிறவியெடுத்தாலும்-நம்மை எதுவும் பிரிக்க முடியாது என்கிற ஆழமான ஒரு நம்பிக்கையாலே ...இப்போ பயம் கொஞ்சம் அடங்கிப் போயிருக்கு... அம்மாதான் அடிக்கடி என் ஆசைக்கு லகான் போடறா.''

''என் அம்மாவும் அதில் குறைச்சல் இல்லை. ஜாடையாக பல தடவை புத்தி சொல்லிவிட்டாள் கூறைப்புடவை என் செலக்ஷன், அது பிடிக்கிறதான்னுபார்த்து நாளைக்கு -அல்லது மறுநாள் நாம் சந்திக்கும்போது சொல்லணும்.

''அம்மா சின்ன சரிகை போட்டது போரும்னாள். நான் உள்ளே சரிகைப் புள்ளி வச்சதா பார்த்து விலை கூட இருந்தால் பரவாயில்லை. வாழ்க்கையில் வரும் ஒரு மகிழ்ச்சிகரமான நாளில் உடையும் அபாரமாக இருக்கணும்னு பிடிவாதம் செய்தேன்.



''இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் நான் எண்ணி கடை மேஜை மேல் வைத்தபோது அம்மா கொஞ்சம் அதிர்ந்து போய்விட்டாள்.''

''இந்தப் பிள்ளைக்கு காதல் பித்து ரொம்பவே தலைக் கேறிப் போச்சுன்னு கொஞ்சம் கலவரப்பட்டு விட்டாள்.''

''அம்மா இஷ்டப்படியே நீங்க சாதாரண சரிகையில் வாங்கியிருக்கலாம். இனப்படி கட்டற புடவையில்லையே.''

''அப்படியில்லை. கல்யாணம்னு ஏற்பட்டதும்...கூறை புடவையில் ஏன் கருமித்தனம் செய்யணும். அதுதானே ரொம்ப முக்கியமான ஆடை. கால முழுதும் உன்னை அந்தப் புடவையில் மாலையும் கழுத்துமாக உன் அப்பாமடியில உட்கார்ந்திருக்கும் உன் கழுத்திலே திருமாங்கல்யத்தை அணிவித்து, மூணு முடிச்சுப் போடும் அந்தக் காலம் மனதிலே அப்படியே பதிஞ்சு கொள்ளுமே. அது ஒரு அலங்காரமான-இன்பமான காட்சியாக இருக்க வேண்டும் என்கிற ஆதங்கத்தில்தான் வாங்கினேன். புடவையைப் பார்த்துட்டு-அபிப்ராயம் சொல்லி மறுக்கக் கூடாது'' திடுக்கிட்டு லாவண்யா எழுந்தாள்.

''இந்தாங்கோ. மீதி பேச்சை நாளைக்கு வச்சுக்கலாம். வழக்கம் போல் அந்த் மூலையில் என்னை இறக்கிட்டு போயிடுங்க. இன்னிக்கு ரொம்ப நாழியாயிட்டுது. அம்மா என்னைக் கட்டாயம் கோவிச்சுப்பா...'' என்றாள்.

கடற்கரை சாலையில் அவன் பின்னால் ஸ்கூட்டரில் அவன் தோள்மீது இடித்தபடி...பயணப்பட்ட அவளை... அவன்...வழக்கம்போல அந்த மூலையில் இறக்கிவிட்டு அடையார் செல்லும் சாலையில் வேகமாக வண்டியை ஓட்டிக் கொண்டு மறைந்து போனான்.

## 4

அம்மா கேட்டால் பதில் சொல்ல வேண்டி அவள் அந்தப் புத்தகத்தை சிநேகிதி தேவகியிடமிருந்து எடுத்து வந்திருந்தாள். அது வெறும் சாக்கு...அன்று அவள் பகல் பொழுதே வெளியே புறப்பட்டுப் போனதின் நோக்கம்—நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் அவனுக்காகக் காத்திருந்தாள். அவனை ஒரு நாள் பார்க்காவிட்டால் கூட மனம் தாளாது போன்றதொரு தவிப்பு. இந்தம்மாவுக்கு என்ன தெரியும் - அவர்களது கல்யாணமோ பெரியோர் பெண் பார்த்து...நிச்சயிக்கப்பட்ட அந்தக் காலத்து கல்யாணம்.

அவளது கல்யாணம் காதல் கல்யாணம். அவளைப் போன்ற அதிர்ஷ்டம் சட்டென்று யாருக்கும் கிடைத்து விட முடியாது.

கல்யாணராமன் எத்தனை அழகாக இருக்கிறார்? எத்தனை இன்பமாகப் பேசுகிறார். தேன்நிலவுக்கு...காஷ்மீர் அழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிறாரே... காஷ்மீரில்... படகு வீட்டில்... கனவுகள் பல கண்டபடி அவள்...போனபோது உஷ் என்று விசில் சத்தம் கேட்டு ஒரு கணம் அதிர்ந்து போய்த் திரும்பினாள்.

அதே வேலையற்ற தடியன்தான். சபாரி ஸூட்டிலும் ...சில்க் ஜிப்பாவிலும், லக்னோ குர்த்தாவிலும் ஒரு நாள் ஹோண்டா மோட்டார் சைக்கிள் - ஒரு நாள் கருப்பு அம்பாஸிடர்...இன்னொரு நாள் வெள்ளை பியட் என்று விதவித வாகனத்திலே கருப்பு கண்ணாடிக் கட்டமுகனாக, அந்த வெற்றிலை பாக்குக் கடை, சோடா விற்கும் கடையருகே நின்றபடி அவளைப் பார்த்த போதெல்லாம் கண் அடிக்கும் துஷ்டன்.

அவனது பணக்காரத்தனத்தைக் காட்டி அவளை மயக்கித் தன் வலையில் வீழ்த்தத் துடித்த அயோக்கியன்.



"என்ன பார்க்காதது போல போய்க் கொண்டிருக்கே ...காரில் ஏறிக்கோ... கொண்டு போய் விட்டுடறேன்..." ஒரு நாள் வலிய அவள் அருகே காரை நிறுத்தி வம்பு செய்த தடியன்.

இந்த சங்கதியை அவள் அம்மாவிடம் சொல்லவில்லை. சொன்னால் வெளியே போகக் கூடாது என்று வீட்டில் அடைத்துப் போட்டு விடுவாள்.

கல்யாணராமனிடம் சொன்னால் ஆத்திரப்பட்டுக் கொண்டு அந்த வாலிபனை அடிக்கப் போய் அவர்கள் திருமணம் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் கலாட்டாவாகி விட்டால்...இதுதான் சாக்கு என்று அவளது வருங்கால மாமியார் கல்யாணத்தை நிறுத்தி அந்த கலாட்டாவுக்குக் காரணம் அவள்தான் என்ற பழியையும் சுமத்தி விடலாம் என்ற பல காரணங்களால் அவள் அந்த தடியனைப் பற்றி யாருக்கும் சொல்லவேயில்லை.

மஞ்சள் வண்ண ஸ்போர்ட்ஸ் ஷர்ட்டில் மினுக்கிக் கொண்டு அவன் கைகளைக் கட்டியபடி பாதையோரத்திலே நிற்பதைக் கண்டாள்

"ஹலோ ஸ்வீட்டி..." என்றபடி அவன் தன் மோட்டார் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான் அன்று தெருவில்கூட மனித நடமாட்டம் மிகக் குறைவாக இருந்தது. ஒரு விளக்கு எரியாது அறுந்துவிட்டதில் அந்தப் பக்கம் இருள் வேறு. அவள் சிலசமயம் அவசரத்திற்கு உபயோகிக்கும் குறுக்கு வழி அது. முற்றுப் பெறாத அந்தக் கட்டிடத்தில் ஒரு சந்து இருந்தது. அதன் வழியே புகுந்தால் ஒரு அறை—அதன் வெளிவாயில் வழியாக...ஒரே எட்டில்...அடுத்த தெருவை விரைவில் அடைந்து விட முடியும்...அதற்குப் பின்னர்... கொஞ்ச தூரத்தில் அவர்கள் வசித்த தெருவின் திருப்பம் வந்துவிடும்.

அந்த யோசனையுடன் அவன் அந்த தடியனைத் திரும்பி வெறுப்புடன் வெறித்துவிட்டு வேகமாக இருளில் மறைந்து சந்துக்குள் புகுந்தான்.

மோட்டார் சைக்கிள் சத்தம் அருகில் கேட்டதை உணர்ந்து இதயம் படபடத்தது. தட்டுத்தடுமாறியபடி— சந்தைத் தாண்டி அறைக்குள் அவள் வந்தபோது பின்புறமாக ஒரே எட்டில் தாவி வந்த அவன் அவள் வாயில் துணிப்பந்தொன்றை அடைக்க முயலுவதை உணர்ந்து, ஓவென்று கூச்சலிட்டு-திமிறியபடி தன் கையிலிருந்த புத்தகத்தை தூர விட்டெறிந்து விட்டு அவனை நகத்தில் பிராண்டிக் கத்தினாள்-கதறினாள் அந்தப் பாவியின் உடம்பில் எத்தனை வலு? - ஒரே தட்டில் அவளைக் கீழே வீழ்த்தி விட்டு... அவளை அணுகியபோது தரையில் புரண்டு அவள் 'உதவி உதவிக்கு வாங்கோ...' என்று உரக்கக் கத்தினாள். இரும்பு போன்ற கரத்தால் வாயை இறுக்க மூடி.. அவன் அவளை ஒரு சில விநாடிகளில் நாசப்படுத்தி விட்டான்.

யாரது-என்ற ஒரு பெண் குரலைக் கேட்டதும் சட்டென்று எழுந்து அவன் போட்ட பனியனுடன் வேகமாக ஓடி...மோட்டார் சைக்கிளில் விரைய-தூரத்தே டார்ச் வெளிச்சம் வருவதை உணர்ந்து அவமானத்தில் துடித்து துவண்டு போன லாவண்யா அங்கிருந்து வேகமாக எழுந்து ஓடினாள். யாரது! அது யாரது-என்று அந்தம்மாள் நெருங்குமுன்-மறுவழியே பாய்ந்து ஓடினாள்...ஓடினாள் ஓடினாள்...

படபடவென்று கதவு தட்டப்படும் ஓசை கேட்டு, அம்மா கதவைத் திறந்தாள். மிகவும் சிக்கனமாக சேர்த்த பணத்தில் ஒரு பழைய கருப்பு வெள்ளை டி.வி பெட்டியை அப்பா சில நாட்களுக்கு முன்தான் வாங்கியிருந்தார். அதில் நடந்து கொண்டிருந்த ஹிந்தி படத்தை மொழி தெரியாவிடினும் பார்த்து மகிழ்ந்தபடி அமர்ந்திருந்த அம்மாதான் அவளைப் பார்த்ததும் ஆடிப் போனாள்.



''இந்தாங்கோ அந்த டி.வி.யை 'அணைச்சுட்டு இப்படி வாங்கோ ' என்று குரல் கொடுத்த அம்மா சட்டென்று வாயில் கதவை அடைத்தாள். நல்ல வேளை அவள் தம்பி சிறு எதிர் வீட்டில் கலர் டி.வி.யில் படம் பார்க்க போய் விட்டிருந்தான்.

''லாவண்யா என்ன ஆச்சு? ஏன் இப்படி தலை கலைஞ்சிருக்கு'' படபடத்து பெண்ணை ஏற இறங்க கலவரத்துடன் பார்த்தாள். முதுகு முழுவதிலும் ஒரே தூசி. ரவிக்கை ஒரு பக்கம் கிழிந்து தொங்க அவளது தோற்றத்தைக் கண்டதுமே அம்மாவுக்கு அடிவயிற்றில் புளி கரைத்த சங்கடம்.

''என்னம்மா ஏன் இப்படி வந்திருக்கே கீழே விழுந்துட்டியா'' அப்பா எப்பொழுதும்போல கபடமின்றி மிகவும் சாவதானமாக கேட்டபோது லாவண்யாவால் தாங்க முடியவில்லை. ஓவென்று அழுதாள் ''நாசமாகிப் போய் வந்திருக்கேன் அம்மா'' விம்மி விம்மி அழுதாள்.

அப்பொழுதுதான் அப்பாவுக்கு விஷயம் விளங்கியது. ''யார் அது கல்யாணராமனா'' கோபத்துடன் கேட்டார்.

''இல்லை அப்பா. தினமும் என்னைப் பார்த்து கண்ணடிச்ச ஒரு தடியன் பின்னாலேயே வந்து-கத்தினேன் கதறினேன் விடலை நான், நாசமாகிட்டேன். இனி மேலே நான் எதுக்காக உயிரோட இருக்கணும். அவருக்கு தெரியறதுக்கு முன்னாலே நான் விஷத்தைக் குடிச்சிட்டு ...அம்மா அம்மா என்னை உன் கையால் நெறிச்சுக் கொன்னுடும்மா! இனிமேலே வாழத் தகுதியில்லாத பாவி அம்மா, உங்க பேச்சைக் கேட்காததுக்கு தண்டனை கிடைச்சுடுத்து அம்மா'' அவள் தாங்கமாட்டாத் துக்கத்தில் புலம்பினாள். குமுறி அழுதாள். அம்மா கண்களில் தாரையாகக் கண்ணீர் கொட்டியது.

தோட்டத்திலே வளர்ந்து நிற்கும் கீரைத் தண்டை ஒரு

19124

காளைமாடு வந்து கடித்து விழுங்கி மீதி பாதியை விட்டுப் போனதுபோல அழகாக பறந்து கொண்டிருந்த சிட்டுக் குருவியின் இறக்கைகளை எவனோ பாதி பிடித்து அதைத் துடிக்கத் துடிக்க மண்மீது வீசிவிட்டுப் போனதைப் போல அவலப்படுத்திவிட்ட மகளை மார்புடன் கட்டிக்கொண்டு அந்த ரணத்தின் வேதனை தாங்க முடியாது அம்மாவும் கூட விம்மி அழுதாள். மேல் துண்டினால் அப்பா கண்களைத் துடைத்துக் கொண்டார். தொண்டையைச் சொறிந்து கொண்டார். தமக்குள் ஏற்பட்ட பயங்கர அதிர்ச்சியை உதறி ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

"குழந்தையை முதல்லே குளியலறைக்கு அழைச்சிண்டு போய் நன்னா ஸ்நானம் பண்ணவச்சு வேறு உடுத்தி அழைச்சுண்டு வா. பிறகு நிதானமாக பேசலாம்."

"ஸ்நானம் பண்ணினாபோல தீட்டு போய்விடுமா?" விம்மியபடி அழுத மகளைப் பார்க்க சகிக்காது அப்பா முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார். தலைமுழுகி விட்டு வேறு உடை அணிந்து கொண்டு ஊஞ்சல் மீது வந்து உட்கார்ந்த பெண் அருகில் அப்பா வந்து அமர்ந்து கொண்டார். "அவன் யார்னு தெரியுமா அம்மா."

"யார் என்று தெரியாது. யாரோ பெரிய மனுஷன் வீட்டுத் தடியன். ஒன்னு செய்வோம் நாம். இப்படி ஒரு விபரீதம் நடந்ததுன்னு யாருக்கும் தெரிய வேண்டாம். முகூர்த்தத்துக்கு தேதி வச்சாச்சு. கூரைப் புடவையும் தாலியும் உன் மாமியார் கார்த்தால கொடுத்தனுப்பியிருக்கா. சுவாமி பாதத்திலே வச்சு பூஜை பண்ணினோம். எங்கள் பூஜையைத் தான் ஆண்டவன் கூட அசட்டை பண்ணிட்டார்" அப்பா பேச முடியாது அழுகையில் திணறினார்.

அம்மா ஓரளவு துணிவை இப்போது பெற்று விட்டிருந்தாள். "இந்தாங்கோ நீங்களே மனம் ஒடிஞ்சு போனா



குழந்தை இதை எப்படி தனியா தாங்கிப்பா. நம்ம மூணு பேருக்கும் இந்த நாலு சுவத்துக்கும் மட்டுமே இந்த சங்கதி தெரியட்டும் கண்ணால பார்க்காததை மண்ணால் போட்டு மூடிடுவோம். ஏதாவது கொஞ்சம் சூடா சாப்பிட்டுட்டு டாக்டர் எனக்கு தூக்கம் வரத் தந்திருக்கிற ஒரு காம் போஸ் மாத்திரை தரேன். சாப்பிட்டுட்டு தூங்கு. நாளை காலை இந்த விபரீதத்தின் பயங்கரம் குறைஞ்சு போகும். நாளைக்கு கார்த்தால நீ கூரைப் புடவையைப் பார்த்தால் போதும்" என்றாள். தாயார்.

"எனக்கு சாப்பாடு வேண்டாம் மருந்து எதுவும் வேண்டாம். சாவுதான் வேணும். நான் ஏன் கூரைப் புடவையைப் பார்க்கணும். செத்துப்போன என் உடலுக்கு அதை வேணுமானால் கல்யாணராமன் போத்திடட்டும் அம்மா?" மீண்டும் குலுங்கி அழுதாள் அவள். அன்று இரவு அவர்கள் வீட்டில் யாரோ இறந்துவிட்டது போன்ற துயரம். வெளியே சொல்லிக் கொள்ள முடியாத துக்கம். வருங்காலத்தைப் பற்றிய பிரச்சனையின் இறுக்கத்திலே யாருமே உறங்காத ஒரு பயங்கர இரவாக அது கழிந்து கொண்டிருந்தது.

மறுநாள் காலை அலுவலகத்திலே கல்யாணராமனுக்கு இருப்பே கொள்ளவில்லை. புடவையைப் பார்த்து விட்டு தன் அபிப்ராயத்தை எதிர்வீட்டு போன் மூலமாக தெரிவிப்பதாகச் சொன்ன போன் தகவல் வராமல் வேலை ஓடாது. போன் மூலம் அவர்கள் வீட்டின் எதிரில் உள்ளவர்கள் வீட்டு எண்ணுக்கு தொடர்புகொண்டான், எதிர் வீட்டாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அப்பாதான் வந்து போனை எடுத்தார்.

' கூரைப் புடவையைப் பார்த்து எனக்கு தன் அபிப்ராயத்தைச் சொல்வதாக சொல்லியிருந்தாள் லாவண்யா! அதனாலே அவளோடு பேச விரும்பினேன்."

''அவளுக்கு உடம்புக்கு சரியில்லை. சாய்ச்சலோடு படுத்திருக்கா. அதனாலே நான் வந்தேன். புடவை அவளுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு'' கரகரத்த குரலை கட்டுப் படுத்திக் கொண்டு பதிலளித்தார்.

''காய்ச்சலா நான் வந்து பார்க்கலாமா?'' ஆவலுடன் வினவினான் கல்யாணராமன்.

''ஒரு விதமான ஃப்புழு ஜுரமாம் ஒட்டுவாரொட்டி. எல்லாரும் ஜாக்கிரதையாக இருக்கணும்னு டாக்டர் எச்சரிச்சிருக்கார். இங்கே வந்து உனக்கும் காய்ச்சல் ஒட்டிக் கொண்டா கல்யாணம் நெருங்கற சமயத்திலே வேண்டாம் நாலுநாளில் சரியா போயிடும், பிறகு வந்து பார்த்துக்கோங்க.'' போனை வைத்துவிட்டு எதிர்வீட்டு அம்மாவுக்கு கும்பிடு போட்டுவிட்டு நகர்ந்தார் அப்பா.

காய்ச்சலா ஒருவிதமான ஃப்புளு ஜுரமாமே இன்னும் நாலு நாள் பார்க்காமல் எப்படித்தான் இருக்கப் போகிறேனோ...தன் அலுவலக அறைக்குள் யோசனையுடன் முன்னும் பின்னும் உலாவினான் கல்யாணராமன்.

அப்பா போன் பேசி முடித்து விட்டு வீட்டுக்கு வந்து கதவைத் தாளிட்டு முடிக்கவில்லை. அதற்குள் வாயில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது

அம்மா அவருக்கு ஜாடை காட்டி அப்பால் நகரச் சொல்லிவிட்டு கலவரத்துடன் தானே ஓடிச்சென்று திறந்தாள்.

வெளியேயிருந்த அந்த வயதான அம்மா இப்போ எதற்காகக் காத்திருக்கிறாள்? சோப்பு, பவுடர், ஷாம்பூ விற்பவர்கள் இளம் பெண்களாகத்தான் இருப்பார்கள். தலை பட்டையாக நரைத்துவிட்டிருக்கும் இந்தக் கிழவி ஏதாவது கோவில் கும்பாபிசேகத்துக்கு பணம் திரட்டுகிறேன் ஏழை பசங்களுக்கு புத்தகம் வாங்கித் தர பணம்



திரட்டுகிறேன் என்று ஏதாவது கதை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறாளோ? ''என்ன வேணும் உங்களுக்கு'' சற்று கோபமான குரலில் அதட்டிக் கேட்டாள். ''உள்ளே வந்து பேச விரும்புகிறேன். உங்கள் பெண் லாவண்யாவைப்பற்றின சங்கதி'' அடிக்குரலில் சாரதா சொன்னதும் கணவனும் மனைவியும் திகிலுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அவளை உள்ளே வரச்சொல்லி உடனே வீட்டுக் கதவை மூடிக் கொண்டனர்.

''லாவண்யாவிடம் உங்களுக்கு என்ன வேணும்? நீங்கள் யார்'' அம்மா கோபமும் தடுமாற்றமுமாகக் கேட்டாள்.

''நேத்தி முன் ராத்திரி ஏழரை மணிக்கு உங்கள் பெண் லாவண்யா நான் குடியிருக்கும் ஃப்ளாட்டுக்கிட்டே முடிவு பெறாமலிருக்கும் கட்டிடத்துக்கருகில் இந்த புத்தகத்தை போட்டுவிட்டுப் போனாள். அதைத் திருப்பிக்கொடுக்க வந்திருக்கேன்'' என்று சாரதா நிதானமாகத் துணிவாகப் பேசினாள் ''நீங்க ஏதோ தவறான இடத்துக்கு வந்திருக்கீங்க. இந்தப் புத்தகத்தை என் பெண் ஒண்ணும் போட்டுட்டு வரலை...வீணாக எங்களைக் குழப்பாதிங்க போய்ட்டு வரேளா...?'' அம்மா ஆத்திரத்துடன் பதிலளித்தாள். அவள் கண்களில் நீர் புரண்டது.

''இந்தப் புத்தகத்தை உங்கள் பெண் தன் சிநேகிதி தேவகியிடமிருந்து வாங்கி வந்தாள்...தேவகிதான் உங்க வீட்டு முகவரியை எனக்குக் கொடுத்தாள். நடந்த சங்கதி எனக்குத் தெரியும். போலீசுக்கு புகார் பண்ணிட்டு வந்திருக்கிறேன்.'' அப்பாவும் அம்மாவும் ஒருவரையொருவர் அர்த்த பாவத்துடன் பார்த்துக் கொண்டனர்.

''ஏம்மா, நாங்க பட்ட அவமானம் போதாதுன்னு உங்களால் ஆன கைங்கர்யமா இது? இதை போலீசில் தாக்கல் செய்து பிரபலப்படுத்துமாறு நாங்கள் உங்களுக்கு என்ன

நீங்கு செய்தோம்?'' அப்பா குரல் உடைந்து கண்களில் நீர் பெருகியது.

''இப்படி விபத்து நேரும் சமயங்களில் பெண்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை உதவிக்கு கூப்பிட்டு லாவண்யா அலறியபோது நான் டார்ச்சுடன் ஓடினேன். ஆனால் அதற்குள் அந்த அவலம் நிகழ்ந்து விட்டது. இருவரும் இருளில் மறைந்துவிட்டனர். நான் போலீசைத் தருவித்த இடத்தை சோதனை போட்ட போது இந்தப் புத்தகம் கிடைத்தது. அவன் யார் என்று கண்டுபிடிக்க, வேண்டிய தடயமும் எங்கள் வசம் அகப்பட்டது. உங்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் வந்திருக்கேன்.''

உட்காரக் கூடச் சொல்லாது அவளை நிற்க வைத்த படியே அவர்கள் பேசினார்கள். சாரதா அதைப்பற்றி அக் கறைப்படவில்லை. ''எங்கள் தலைவிதி நடக்கக் கூடாதது நடந்துவிட்டது அம்மா.. உங்களை கையெடுத்துக் கும்பிட றேன். இதை இப்படியே விட்டுடுங்க. நீங்க வேறு முயற் சியில் இறங்கினால் நாங்க ரொம்ப அவமானப்பட்டுப் போவோம். லாவண்யாவுக்கு கல்யாணம் நடக்க இருக்கு. மாப்பிள்ளை வீட்டவர்கள் காதில் பட்டால்...'' மேலே பேச முடியாது தழுதழுத்தார் தந்தை.

''யாருக்குக் கல்யாணம்?'' வெறுப்பில் வெடித்தபடி உள்ளேயிருந்து வந்த பெண்ணை காலோடு தலைவரை சாரதா உற்றுப் பார்த்தாள். வெளிறடைந்து போன முகம், அழுது சிவந்து உப்பிய கண்கள், ஏக்கம் கலந்த பார்வை— கழுத்தில் லேசாக நகங்களால் பிராண்டிய கோடுகள். இருபது வயதிற்குட்பட்ட இளம் பெண். இத்தனை அவ லட்சணத்தில் அவளைப் பார்க்க அழகாயிருக்கும் பெண். இந்த பயங்கரமான விபத்திற்குள்ளான அபலை இவள் தான் என்று தன்னுள் தீர்மானித்தவளாக சாரதா அவளை அனுதாபத்துடன் உற்றுப் பார்த்தாள்.

''என்னப்பா உளறிண்டு...போலீஸ் சும்மா இருக்கப் போவதில்லை. விஷயம் அம்பலத்துக்கு வந்துவிடும்...



அதுக்கப்புறம் அவர் வீட்டிலே ஒத்துப்பாளா?... உண் மையை இப்போ அமுக்கிட்டு பின்னால் தெரிஞ்சா...அவர் கிட்டே பொய் சொல்லமாட்டேன். அப்பா எனக்கு கல் யாணம் தேவையில்லைனு அப்பவே சொல்லிட்டேன்...'' படபடவென்றுபேசிவிட்டு ஊஞ்சல்மீது குப்புறப் படுத்துக் கொண்டு குமுறி அழுதாள்.

அருகில் ஓடிச்சென்று அணைத்துக் கொண்டு ஆறுதல் சொல்ல சாரதா மனம் துடியாகத் துடித்தது.

''அம்மா உங்க கால்லே விழுந்து கேட்டுக்கிறோம்... இந்த விவகாரத்தை இத்தோட விட்டுடுங்க...நீங்க எங்கே வசிக்கிறேள்...யார் என்கிற விவரத்தைக்கூட நாங்க தெரிஞ்சுக்க ஆசைப்படலை. அப்படி இருக்கும்போது எங்க பெண்ணுக்கு நேர்ந்த கஷ்டத்தை அம்பலப்படுத்த நீங்க முயற்சி பண்றது முறையா—தர்மமா—என் பெண் ணோட வருங்காலமே ... வீணாயிடுமே ... நினைச்சுப் பாருங்க'' லாவண்யாவின் தாய் விக்கி விக்கி...அழத் தொடங்கினாள்.

''உங்களையெல்லாம் சங்கடப்படுத்த நான் இங்கே வரலை-உங்கள் பெண்ணுக்கு ஏற்பட்ட நிலை எத்த னையோ பேருக்கு ஏற்படலாம். இது பெருகிண்டே போனால் குற்றம் செய்தவன் தண்டனையடையாது சமூ கத்தில் நல்லவனாக உலாவுவான். குற்றமிழைக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கிடைக்காது...சமூகத்தின் தவறான பார்வையில் சங்கடப்பட்டு வாட நேருகிறது. இதைத் தவிர்க்க வேண்டியது நமது கடமை.''

''இதையெல்லாம் மேடைமேல் பிரசங்கம் செய்தால் நன்றாக இருக்கும். நீங்க அனாவசியமா காலை வேளை யில் வந்து கலாட்டா பண்றேள். தயவு செய்து போய் விடுங்கோ...இந்தப் பெண் மீது உங்களுக்கு என் அளவு இரக்கம் இருந்தால் இந்த சங்கதியைப்பத்தி மூச்சுவிட

மாட்டேன்...அவள் வாழ வேண்டிய பெண் அம்மா...உங்களை நன்றியோடு நமஸ்கரிக்கிறேன். விவகாரத்தை இப்படியே விட்டுடுங்கோ.''

''இதை ஒளிச்சு மறைச்சு வச்சு...நீங்க கல்யாணத்தை முடிச்சிங்கன்னு வைச்சுக்குவோம்...ஒரு நாள் அந்த பையனுக்கு விஷயம் தெரிஞ்சுட்டா?...''

''அந்த பிரச்சனை எங்களுடையது. அதற்கு நீங்க கவலைப்பட வேண்டாம்'' ஊஞ்சலில் படுத்திருந்த லாவண்யா வெடுக்கென்று எழுந்தாள். ''இல்லை இந்த பிரச்சனை என்னுடையது...இப்பவே நான் சிதா பிளாஸ்டிக் பிராடெக்ட்ஸ் கம்பெனிக்கு போன் பண்ணி...சீஃப் அக்கௌண்டெண்ட் கல்யாணராமனோட பேசணும்னு செல்லி—அவரை இங்கே கூப்பிட்டு ... உண்மையைச் சொல்லிடப் போறேன் அப்பா...'' விக்கி அழுதாள் அவள்.

''பைத்தியம்...நீ பேசாம இரு...நாங்க பாத்துக்கிறோம். அம்மா நீங்க வெளியிலே போறேளா—ஏற்கனவே நாங்க ரொம்ப நொந்து போயிருக்கோம். நீங்க வேற வந்து எங்களை சித்திரவதை செய்யாதீங்க. தயவு செய்து இதை மறந்திடுங்கோ. ஆயிரத்தோராவது தடவையாக கேட்டுக்கிறேன்...ஒரு பெண்ணை வாழ விடுங்க...'' என்று அப்பா கோபமும் துயரமுமாகப் பேச...சாரதா...கையில் பிடித்துக் கொண்டிருந்த புத்தகத்தை தோள் பையில் போட்டுக் கொண்டு அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து...வெளியே வந்தாள்.

அந்தப் பெண் என்ன சொன்னாள்? சீதா பிளாஸ்டிக் பிராடெக்ட்ஸ் . கம்பெனியின் .. சீஃப் அக்கௌண்டெண்ட் ...கல்யாணராமனா?... உடனடியாக அவள் கவனிக்க வேண்டிய விஷயம்...அந்தக் கல்யாணராமனைச் சந்தித்துப் பேசுவதுதான்... வீட்டுக்குப் போனதும்...முதல் வேளையாக... அவனைத் தொலைபேசியில் .. அழைத்து பேச வேண்டும்... என்று எண்ணியபடி நடந்தாள்.



''யார்? மிஸ்டர் கல்யாண ராமனையா கேட்கிறீங்க'' அந்த அலுவலகத்தின் ரிஸப்ஷனிஸ்ட்டு தேனாகக் குழைந்தாள்.

''ஆமாம்...அவருடைய சொந்தக்காரம்மா நான்... அவரோட ஒரு முக்கிய விஷயம் பேசணும்...''

''ஸாரி மேடம்... அவர் இப்போ இங்கே இல்லை. கம்பெனி காரியமா டெல்லிக்கு மூணு நாள் வேலையாகப் போயிருக்கார்... வர வெள்ளிக்கிழமை காலை போன் பண்ணிப் பாருங்க...''ரிஸப்ஷனிலிருந்த பெண் டக்கென்று தொலைபேசியை வைத்துவிட்டாள்.

முகத்தில் பூத்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு எழுந்தாள் சாரதா...

இன்னும் மூன்று நாட்கள் அவள் காத்திருக்க வேண்டும் ...இந்த ரங்கனிடமிருந்தும் தகவல் ஏதும் வரவில்லை... அந்த பாதகனை அவன் தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை போலிருக்கு... மனம் சோர்ந்தவளாக சமையலறைக்குள் புகுந்தாள்.

காலை அவள் புறப்படுமுன் வேலைக்காரி எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு கிளம்பி விட்டிருந்தாள். அவள் அன்றாடம் சாப்பிட்டுவிட்டுப் போகும் காப்பி—பலகாரத்தை மறக்காது கேட்டு வாங்கி முடித்துக் கொண்டு போய்விட்டிருந்தாள். தனக்காக இரண்டு தோசைகளைத் தட்டில் எடுத்து மூடி வைத்துவிட்டு... வெறும் காப்பியுடன்தான் சாரதா வெளியே கிளம்பியிருந்தாள் பசி இப்போது வயிற்றைச் சுருட்டியது. பால் வேளை சமையல் காரியம் வேறு பூதமாக முன் நின்று கொண்டிருந்தது. தோசை மீது சிறிது மிளகாய்ப் பொடியைப் போட்டு எண்ணை வார்த்து ஒரு டம்ளர் தண்ணீருடன் தட்டை மேஜை மீது வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள் தனியாக மூன்று வேளையும்...பிசாசு போல உட்கார்ந்து உணவை உட்கொள்ளுகிறோமே என்கிற வேதனை சாரதாவுக்கு உண்டு.

அதை ஓரளவு தவிர்க்க அவள் வேலைக்காரிக்கு காப்பி பலகாரம் கொடுத்து உபசரிக்கும்போது அவளையும் தரையில் ஒரு பக்கம் உட்காரச் சொல்லி சாப்பிட உபசரித்து விட்டு...தானும் மேஜையருகே உட்கார்ந்து சாப்பிட்டபடி ஊர்க் கதைகளைப் பேசுவது வழக்கம். ஒரு வேளையாவது இன்னொருவருடன் சேர்ந்து சாப்பிடுகிறோமே என்று அவளுக்கு ஆறுதல்...இன்று அந்த சிறு பாக்கியமும் இல்லாது வெற்றுத் தனிமையில் ஆறி விராட்டியாக விறைத்துப் போன தோசையை விண்டு வாயில் போட்டுக் கொண்ட போது இவளுக்கு சாப்பிடப் பிடிக்கவில்லை. அந்தப் பெண் லாவண்யாவின் வெளிறடைந்த முகம் கண் முன் வந்து மனதைக் கலக்கியது.

கற்பு நிலையென்று சொல்ல வந்தார். இரு கட்சிக்கும் அதை பொதுவில் வைப்போம்... என்று கூறிவிட்டுச் சென்ற பாரதி நூற்றாண்டு கொண்டாடி முடித்தாகி விட்டது.

இன்னமும்...கற்பு விஷயத்தில் ஆண்களுக்கு ஒரு நீதி —பெண்ணுக்கு ஒரு நீதி. லாவண்யா இப்போது கற்பை இழந்த பெண்ணாக சமூகத்தில் கருதப்படுவாள்... அதிலே பங்கு கொண்ட அந்த துஷ்டன் அவனது கற்பு மட்டும் அப்படியே அப்பழுக்கின்றி...தூயதாக இருக்குமோ?...

ரோகிணியை வானவெளிக்கு அனுப்பும்வரை விஞ்ஞானத்தில் முன்னேறி விட்டிருக்கும் நாம்—பெண்கள் விஷயத்தில் இன்னமும் பின்தங்கிய கொள்கையுடன் தானிருக்கிறோம்...

ஒரு பெண்ணை அவளது விருப்பத்தை அறியாது பலவந்தப்படுத்தும்போது...கற்பை இழப்பவன் ஆண்தான்... அவளுக்கு அப்போது ஏற்பட்டிருக்கும் அவலம் ஒரு விபத்து உடலுக்கும் உள்ளத்து உணர்வுகளுக்கும் ஏற்படும் ஒரு பயங்கரக் காயம்... அவ்வளவுதான். இனி சமூகம் இப்படித் தான் இந்த விஷயங்களை நோக்க வேண்டும்.



வரதட்சிணை கொடுமையையே கைவிடத்தோணாத சமூகம்...இதை...விபத்து என்று ஏற்றுக்கொண்டு அந்தப் பெண்ணுக்கு.. நல்வாழ்வு கொடுக்க முன் வருமா...

இந்த வகையில்...கல்யாணராமன் எப்படிப்பட்டவன் என்பதைக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவனும்...இதைப்பற்றி... எல்லோரையும் போல ஒரு பட்சமாக எண்ணினால் அவனைப் போன்ற வாலிபனை... கல்யாணம் செய்து கொள்ள லாவண்யா முன் வந்ததே தவறாகும்...

இன்னும் மூன்றுநாள் கழித்துதானே... அவனைப் பார்க்க முடியும். அட கடவுளே ஆமாம் இந்த விஷயம் ஏன் இப்படி நம் சொந்த சங்கதியைப்போல மனதை நெருடுகிறது...இந்த உணர்வுக்குத்தான் மனச்சாட்சி என்று பெயரோ.

யாரோ ஒரு பெண்ணுக்கு நேர்ந்துவிட்ட அவலம்— அது கேள்வி முறையில்லாத நீதி கிடைக்காத ஒரு உண்மையாக- இருட்டில் தொலைந்து போகக்கூடாது - அதை தேடிக் கண்டுபிடிப்பது உன் கடமை என்று - உள்ளேயிருந்து யாரோ குரல் கொடுப்பது போன்ற பிரமை - அது தான் மனசா...ஒரு விதவைப் பெண் வயதானவள், அவளுக்குள்ள மனசு...இந்த சமூகத்துக்கு ஏன் இல்லை -சாரதா திடீரென்று கண் கலங்கிப் போனாள்.

## 5

ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த லோகேஸ்வரி மான்ஷன் என்ற அந்த கட்டிடத்தின் ஆறாவது தளத்தில் வீட்டை விட்டு இறங்கி வராந்தாவில் நடந்தான் ரங்கநாதன். இடது புறம் திரும்பியதும் முகத்தில் அறைவது போல பொன் எழுத்துக்களில் கண்ணாடியில் எழுதப்பட்டிருந்த கடையின் பெயர் வால்மீகி அண்ட் கோ— கண்

களில் பட்டது... கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு முகம் தெரிந்த சன்மைகாவுக்கு மேலே முல்லைச் சிரிப்புடன் நின்ற ரிஸப்ஷனிஸ்ட்டிடம் வந்தான்.

காக்கி சட்டையைக் கண்டதும் அந்தப் பெண் விறைப்பாகினால் வழக்கமான வியாபாரச் சிரிப்பு முகத்திலே மறைந்து போனது "என்ன ஸார் வேண்டும்?" எச்சிலை விழுங்கிக் கொண்டாள். "இந்த கம்பெனியின் டைரக்டர் திரு குமாரசாமியை நான் பார்க்கணும். முக்கிய விஷயம் —ஸப் இன்ஸ்பெக்டர்... ரங்கநாதன் வந்திருப்பதாகச் சொல்லவும்..." என்றான் மிடுக்காக.

இண்டர்காமில் அவள் பேசினாள்—சிறிது நேரத்திலே உள்ளே வரும்படி அனுமதி கிடைத்தது.

ஏ. சி. அறையின் கனமான கதவைத் தள்ளிக் கொண்டு அவன் உள்ளே நுழைந்தான். சில்லென்று அறையின் குளுமை உடம்புக்கு இந்த வெய்யிலில் இதமாகத் தானிருந்தது.

"உட்காருங்கள் ஸார்...தாகத்துக்குச் சில்லுனு ஏதாவது ஜூஸ் சாப்பிடக் கொண்டு வரச் சொல்லட்டுமா..." சிரித்தபடி உபசரித்தார் சுழல் நாற்காலியில் பிதுங்கிக் கொண்டிருந்த இரட்டை நாடி தலையில் நரை ஓடிய வெள்ளை ஸபாரி சூட்டுக்காரர்.

"நான் என் வேலை சம்பந்தமா வந்திருக்கேன்...அப்போது நான் காப்பி...ஜூஸ் இதுகளை விசாரிப்பு செய்யுமிடத்தில் ஏற்பதில்லை—மன்னிக்கவும்."

இரட்டை நாடி ஆசாமி உஷாரானார்...முகத்தை மறைத்த கருப்புக் கண்ணாடியை சட்டென்று சுழற்றி வைத்து விட்டு.. கன்னத்திலே திடீரென்று பூத்துக் கொண்ட வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார்.

"உங்களுக்கு விஜயகுமார்னு ஒரு பிள்ளை இருக்கிறான் இல்லையா"—



ஆமாம்... அவனுக்கு என்ன ஆயிற்று பரபரப்படைந்தார் குமாரசாமி. "இது அவனுடைய ஷர்ட்டுதானே? சலவைக் குறி மூலம் எங்கள் இலாகா ஆட்கள் கண்டு பிடித்தார்கள்" சொல்லியபடியே தன் இடது கையில் சுமந்து கொண்டு வந்த சிறிய தோல்பையைத் திறந்து பிளாஸ்டிக் உறைக்குள் பத்திரமாக வைத்திருந்த மஞ்சள் வண்ணச் சட்டையை எடுத்து மேஜைமேல் போட்டான்.

குமாரசாமி புருவங்களை நெறித்தார்.

"உண்மையை சொல்றேன் ஸார்? என் பையன் ஆபீசில் இல்லை. எனக்கு உதவியாக வேலைக்கு வரும்போது மட்டும் வெள்ளை ஷர்ட் ஸூட்டுன்னு கொஞ்சம் தர்பாராக வருவான் வெளியே சுத்தரப்போ கண்டபடி அலங்காரம் செய்துண்டு போவான். இந்தக் காலத்து பசங்க என்னென்னமோ துணிகளை உடுத்திக்கிறாங்க. அவன் என்ன உடை போட்டுக்கிறான்னு நான் கவனிச்சதேயில்லை சார்..."

"இந்த சலவைக் குறி உங்கள் வீட்டுத் துணிகளை வெளுக்கும் சலவைத் தொழிலாளியிடமிருந்து கண்டு பிடித்தது. இந்தச் சட்டையை உங்கள் மகன் அணிந்து கொண்டிருந்த ஒரு தடவை அந்தத் தொழிலாளி துணி எடுக்க உங்க வீட்டுக்கு வந்தப்போவே கவனிச்சதாக சொல்கிறார்."

"இருக்கலாம்...சலவைத் தொழிலாளி சொல்வது உண்மையாக இருக்கலாம். இப்போது இந்த ஷர்ட் உங்ககையில் எப்படி வந்தது? என் மகன் ஏதாவது விபத்திலே" பேச முடியாது தவித்தார் அந்தப் பெரிய மனிதர். "உங்க பிள்ளை தான் ஒரு விபத்தை உண்டாக்கி விட்டு மறைந்து கொண்டு இருக்கார்...அவரை நான் பார்த்து பேசணும்..."

"என்ன விபத்து." பதறினார் தந்தை...

"ஒரு ஹிட் அண்ட் ரன் கேஸ்னு வச்சுக்கோங்களேன்"

''அடிபட்டவனுக்கு ரொம்ப காயமோ?''

''ஓரளவுக்குக் காயம் ...உங்க மகனை கூப்பிட்டு விசாரித்தால் தெரியும்.''

''மன்னிக்கவும். அவன் எங்களது ஹைதராபாத் பிராஞ்சை கவனித்து வர நேத்துதான் புறப்பட்டுப் போனான்...வர நாலு நாளாகும். ஒரு சமயம் சனிக்கிழமை காலை வந்துடுவான். ஸார்...இந்த கேசுக்கு எங்கள் வக்கீலும் நானும் மட்டும் இருந்தால் போதாதா... அடிபட்ட பையனது பெற்றோரோட நான் ஒரு சமரசம் செய்தால் முடியும்...அவங்களை யார்னு தெரிஞ்சா இப்பவே உங்களோடு கிளம்பி...கேஸை வாபஸ் செய்து வைக்க முடியும். ஆஸ்பத்திரி செலவுக்கும்...காம்பன்சேஷன் ஏதாவது ஒரு கணிசமான தொகையைத் தந்து ...நாங்க இரு பக்கத்தாரும் ஒரு சமரசத்துக்கு வரமுடியும் ...வீண் கோர்டு வம்பு வழக்குன்னு அலைவானேன் ஸார்...''

''ரொம்ப சுலபமாக சொல்லிட்டீங்க போலீஸ் காரங்க இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கணும்னு நினைக்கிறீங்க இல்லையா?' சிரித்தான் ரங்கநாதன்.

''டிராபிக் அபென்ஸ்களில் இரண்டு பக்கமும் ஒரு சமரசத்துக்கு வர முடியும்? கொஞ்சம் உதவுங்க ஸார்.''

குமாரசாமி குரலில் குழைவு தொனித்தது. பிள்ளை என்றதும் மனிதர் எப்படிப் பதறிப் போனார்? அப்படித்தானே அந்தப் பெண்ணின் பெற்றோர்களும் மனம் பதறித் துடித்துப் போயிருப்பார்கள் பாவம்! தன்னுள் எண்ணிக் கொண்டான் ரங்கநாதன்.

விடை பெற்றுக்கொண்டு எழுந்தான்.

''உங்கள் நேரத்தை வீணாக்கியதற்கு மன்னிக்கவும். உங்கள் மகன் ஊரிலிருந்து வந்ததும் மறுபடி சந்திக்கிறேன்.''



''உங்களுக்கு அந்த சிரமம் வேண்டாம். ஸ்டேஷன் தொலைபேசி எண்ணை எழுதிக்கொடுத்து உங்க பேரையும் எழுதித் தந்துவிட்டால் அவன் வந்ததும் நானே தொடர்பு கொள்கிறேன்.. ஆமாம் அந்த விபத்து என்னிக்கு நடந்ததுன்னு சொன்னேன்?...''

''கடந்த பத்தாந்தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழரை மணி இருக்கும். வேணுகோபால் சாலையின் மூன்றாவது திருப்பத்துக்கு அருகே ... எங்கள் ஸ்டேஷன் தொலைபேசி எண் என் பெயர் எல்லாம் இதில் குறிப்பிட்டிருக்கிறேன்...'' என்றபடி ஒரு துண்டு கடிதத்தை அவர் மேஜைமேல் வைத்துவிட்டு நன்றி என்று விடைபெற்றுக் கொண்டான்.

குமாரசாமி அந்தத் தேதியையும் நேரத்தையும் தமது மனதில் கவனம்செய்து கொள்வதை உணர்ந்தான். அந்த நேரத்தில் அந்த நாளில் அவன் ஊரில் இல்லை என்றதொரு சாதுரியத்தை அவர் உருவாக்கக் கூடும் என்பதை எண்ணியபடியே வெளியே வந்தான்.

ரிஸப்ஷனைத் தாண்டி வரவேற்பறை. அவற்றிலே தொங்கிய சில புகைப்படங்கள் அவனது கவனத்தைக் கவர்ந்தன. அருகில் நெருங்கி அவன் உற்றுப் பார்த்த போது அலுவலகப் பையன் ஓடி வந்தான். அவனது மைத்துனன் சமீபத்தில் காவல்துறை பயிற்சிக்கு சேர்ந்திருக்கிறான் என்பதைப்பற்றி அவனுக்கு மெத்தவும் பெருமை வருஷாந்திர விழா கொண்டாடும்போது எடுத்த சில படங்கள் இவைகள். ''இதுதான் இந்த ஆண்டு விழா போது எடுத்தது...ஒன்றை வளைய வந்து சுட்டிக் காட்டினான். நிற்பவர், நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர், தரையில் சம்மணம்போட்டு உட்கார்ந்திருப்பவர் என்று மூன்று வகையில் அலுவலக ஊழியர் அனைவரும் அதில் இருந்தனர். கீழே இடது கோடியில்தான் இருப்பதை ஒரு வழியாக அவன் காட்டினான் எல்லோருடைய பெயர்களும் வரிசையாகக்கீழே கொடுக்கப்பட்டிருந்தன. மேலே அந்தக்

கம்பெனியின் பெயரும் ஆண்டு விழாவின் வருடமும் தாப் பட்டிருந்தது. நாற்காலியில் நட்ட நடுவில் குமாரசாமி உட்கார்ந்திருந்தார் அவர் பக்கத்திலே வெள்ளை சட்டையும் கோட்டின் முகப்பில் ரோஜா மலருமாக புன் முறுவலுடன் உட்கார்ந்திருந்த வாலிபன் பெயரைப் படித் தான் கே. விஜயகுமார் என்று காணப்பட்டது. "இவர் தான் எங்க சின்னமுதலாளி இன்னமும் கல்யாணமாகலே... ரொம்ப இடம் வந்துகிட்டிருக்கு... யாருக்கு குடுப்பனையோ' என்று தலையைச் சொறிந்தான் அலு வலகப் பையன். புகைப்படத்தின் ஓரத்தில் குறிப்பிட் டிருந்த இடம், எடுத்த ஸ்டுடியோவின் பெயரைத் தன்னுள் பதிவு செய்துகொண்டே 'கல்யாணத்துக்கு நானும் வரு வேன்...' என்று சிரித்தபடி வெளியேறினான்.

அடுத்ததாக அவன் நேரத்தை வீணாக்காது... நேராக அந்த ஸ்டுடியோவைச் சென்றடைந்தான்.

"போலீஸ்காரர் எதுக்கு வந்திருக்கிறாராம்..." கடைப்பையன்மீது எரிந்து விழுந்து கொண்டு பின்பக்க மிருந்து வந்த முதலாளி... ரங்கநாதனுக்கு பெரிய கும்பிடு போட்டு... காதுவரை பற்கள் தெரியச் சிரித்தார்.

"வாங்கோ... இந்தப் பக்கம் எங்களைத் தேடிக்கிட்டு நீங்கள்ளாம் வரதுனாலேயே சட்டுனு ஒரு ஜில்லிப்பு ஏற்பட்டுடுது" சிரித்தார்.

"ஒண்ணுமில்லை. ஒரு சிறு உதவி, சமீபத்தில் நீங்கள்தான் வால்மீகி அண் கோ கடை ஆண்டு விழா போட்டோ எடுத்திருக்கீங்க. அதில் எனக்கு ஒரு காப்பி எடுத்துத் தர வேண்டும்."

"அவங்க உத்திரவு இல்லாம..." என்று கடைக்காரர் மறுப்பு தெரிவிக்குமுன் ரங்கநாதன் பட்டென்று சொன் னான். "ஒரு போலீஸ் கேஸ் சம்பந்தமாக அந்தப் புகைப் படம் தேவை—உங்களுக்கு இதனால் எந்த தொந்திரவும் ஏற்படாது நான் கவனிச்சுப்பேன். கவலைப்பட வேண் டாம்."



அரை மனதுடன் தலையை ஆட்டினார் மனிதன்.

அடுத்தநாள் மாலை... அவர் அந்த குருப் போட்டோ வைக் காட்டியபோது... ரங்கநாதன் திருப்தியடைந்தான். அந்தப் படத்திலே விஜயகுமாரின் முகம் நன்றாகத் தெளி வாகவே தெரிந்தது.

படத்திற்குண்டான கட்டணத்தைச் செலுத்தி நன்றி தெரிவித்துவிட்டுக் கிளம்பினான்.

நேரே சாரதாவின் வீட்டுவாயில் அழைப்பு மணியை அழுத்தினான். "உங்களுக்கு ஒரு குட் நியூஸ். அந்த அயோக்கியனைக் கண்டுபிடித்துவிட்டேன் மாமி... அவ னுடைய போட்டோ கூட கையில் இருக்கு இதைப் பார்த்து அந்தப் பெண் அடையாளம் காட்டவேண்டும். பிறகு கேஸ் மளமளவென்று தொடர ஆரம்பிக்கும்" மகிழ்ச்சியுடன் கூறியபடி தலைத் தொப்பியைக் கழற்றி மேஜைமேல் வைத்துவிட்டு முன்னறை ஆசனமொன்றில் அமர்நது கொண்டான்.

"அந்தப் பெண்ணை நான் கண்டுபிடித்து விட்டேன் ...அவளது பெற்றோரைச் சந்தித்து பேசிவிட்டேன். நமது கேஸ் அத்தனை சுலபமாக முடியப் போகிற தில்லை...

"அந்தப் பெண் தன் பெற்றோரின் போதனையால் ஒரு சமயம் அவனைப் போட்டோவில் அடையாளம் காட்ட மறுக்கலாம்- தனக்கு ஏற்பட்ட விபத்திலே ரொம்பவும் கலங்கிப்போய்- துயரத்தில் துடித்துக் கொண் டிருக்கிறாள். இன்னும் இரண்டு நாளில்... அவள் தன்னை சமாளித்துக் கொண்டு பெற்றோர்கள் சொல்படி நடக்க லாம் இல்லையா?"

''இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருவரையும் நாமிருவரும் தனித்தனியே முயன்று கண்டுபிடித்து விட்டிருக்கிறோம். அடுத்த முயற்சிகளைத் தொடருவோம். இந்த வெற்றியைக் கொண்டாட ஜில்லுனு குடிக்க எனக்கு ஏதாவது மோர்... எலுமிச்சம்பழ ஸர்பத் கொடுக்க மாட்டேளா மாமி...'' வேடிக்கையாகக் கேட்டான் ரங்கநாதன்.

''காலையில்தான் கொஞ்சம் பாதாம்கீர் செய்தேன். பிரிஜ்ஜில் வச்சிருக்கேன்.''

''என்ன விசேஷம்.''

''என் கணவரின் பிறந்த நாள். அவர் கூடவே இன்னும் இருப்பதுபோல அந்த ஒரு நாளை நான் தொடர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறேன். பாதாம்கீரை முதலில் ஸ்வாமி படத்துமுன் வச்சு நைவேத்யம் பண்ணிட்டு... குளிரட்டும்னு... பிரிஜ்ஜில் வைத்தேன் நீ சொன்னால் நம்பமாட்டாய். ஒரு சமயம் நீ இன்னிக்கு வரலாம்... ஏதாவது செய்தி எடுத்துண்டு வரக்கூடும். அப்போ வெய்யிலுக்கு ஜில்லுனு சாப்பிடத் தரணும்னு உன்னை நினைச்சுத்தான் வச்சேன்.''

''மாமி ரொம்பவும் என் தலையில் ஐஸ் வைக்கிறீங்க.''

''அதனால் எனக்கு ஏதாவது லாபம் உண்டா சொல்'' என்றபடி சிரித்துக்கொண்டே இரண்டு டம்ளரில் பாதாம்கீரை நிறைத்துக்கொண்டு வந்து ஒன்றை அவனிடம் நீட்டிவிட்டு மற்றதை தன் கையில் பிடித்தபடி எதிர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

பாதாம்கீரை சின்ன அளவிலே உறிஞ்சி ருசித்தபடி இருவரும் தாங்கள் அதுவரை செய்து விட்டிருக்கும் காரியங்களைப் பரிமாறிக் கொண்டனர்.



''அடுத்து நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' ரங்கநாதன் கேட்டான்.

''அடுத்தபடியாக வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்குமேல் கல்யாணராமனை தொலைபேசியில் கூப்பிட்டு லாவண்யா விஷயமாக அவனிடம் முக்கியமான ஒன்று பேச வேண்டும் என்று வீட்டுக்கு அழைக்கப் போகிறேன். இந்த விவகாரத்தில் நமக்கு அந்த நீலனுடைய ஒத்துழைப்பும் தேவை.

''உண்மைதான். நீங்க சொல்கிற விவரப்படி கல்யாணம் நடக்க இருக்கிறதினால் அவனுக்கு உண்மை தெரிவது முக்கியம்.''

''இப்போ மூடி மறைச்சுட்டு பின்னால் விஷயம் வெளி வந்தால் அந்தப் பெண்ணுக்கு வேதனையைவிட வாழாவெட்டியாகி விடும் வேதனை ரொம்ப பெரிதாச்சே அதனால் உண்மையை அறிஞ்சதும் அவனுக்கு எப்படிப் பட்ட மனமாறுதல் ஏற்படுகிறதுன்னு நான் கவனிக்கப் போறேன். அனுதாபப்படாது- அவனுக்கு அருவருப்பு ஏற்பட்டால் நாம் கேசை வேறு திசையில் .அணுகணும் இல்லையா...''

''அதுவும் உண்மைதான் நான் படத்துடன்... வெள்ளிக்கிழமை காலை அவர்கள் வீட்டுக்குப் போகலாம்னு நினைக்கிறேன். ஏற்கனவே அவர்கள் எல்லோரும் ரொம்ப நொந்து போயிருக்காங்க. ஒருநாள் இரண்டு நாள் இடைவெளிவிட்டு மேலே தொடரலாம் என்பது என் அபிப்பிராயம். சனிக்கிழமை காலை அந்த விஜயகுமாரை சந்திக்கணும். அதனால் அதற்கு ஒருநாள் முன்னதாக லாவண்யாவின் பெற்றோர்களைப் பார்த்து பேசினால் போதும்...''

''சரி. அப்படியே செய்வோம்...'' என்று இருவரும் ஒத்துக்கொண்டதும் சிறிது நேரம்... மற்ற விஷயங்

களைப் பற்றிப் பேசிவிட்டு— அவள் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினாள். கதவைச் சாத்திக்கொண்டு வந்து உட்கார்ந்தாள் சாரதா.

படத்தில் பார்த்த வாலிபன் பார்க்க கவர்ச்சிகரமானவனாக இருந்தான். ஒரு பிரபல நிறுவனத் தலைவரின் ஒரே அருமை மகன். கண்யமான குடும்பத்திலிருந்து வருகிறவன்தான்—கம்பெனியில் கூட உயர் மட்டத்து அதிகாரியாக வேலை பார்க்கிறவன். சூழலில் வந்து நிற்கும் பெண்களில் அவனை பார்த்து தேர்ந்தெடுத்து சீர்—வரதட்சணை என்ற விபரங்களுடன் தன் அந்தஸ்த்துக்குத் தக்க இடத்தில் கல்யாணம் செய்து கொள்ள வாய்ப்புகள் இருந்தன. அப்படியிருந்தும் அவன் மட்டமான காரியத்தைச் செய்திருக்கிறான். கச்சிதமாக கவர்ச்சியாக போட்டோவில் தெரிந்த அவனுள் அப்படி ஒரு கோர மிருகம் ஒளிந்து கொண்டிருந்ததே. ரங்கநாதன் கூறியது முற்றிலும் உண்மை. கற்பழிப்பு எனும் கோரத்தைச் செய்கிறவன், நாம் நினைக்கிறபடி ஒரு முரடனல்ல. சில சமயம் மேல் மட்டத்துவாசியான படித்தவனாகக்கூட இருப்பான்— உண்மை. பெருமூச்செறிந்தாள்.

வெள்ளிக்கிழமை காலை அலுவலகம் கிளம்பிக்கொண்டிருந்த கல்யாணராமனுக்கு கட்டில் கூடக் காபியும் குழம்பும் பரிமாறிவிட்டு மின்விசிறியை வேகமாக சுழல விட்ட அம்மா பொருமிக் கொண்டிருந்தாள். "ஆனாலும் உனக்கு வரப் போற மாமியாருக்கு கொஞ்சமும் நாகரிகமோ மரியாதையோ தெரியவில்லை. கூறைப் புடவை திருமாங்கல்யம் இரண்டையும் சுவாமிகிட்டே வெச்சு பூஜை பண்ணி உடனடியா எடுத்துண்டு வந்து கொடுத்துட்டு போங்கோன்னு சொல்லியிருந்தேன். இரண்டு நாள் கழிச்சு பட்ட பகலில் தான் சித்த கண் அசர்ர வேளை பார்த்து வந்து கதவைத் தட்டினான். பேயறைஞ்சாப்பல



மூஞ்சியை வச்சிண்டு ஒரு கடுதாசி பொட்டலமா புடவையை சுத்தி எடுத்துண்டு பஸ்ஸில் புறப்பட்டு வந்து நின்னான்."

"புடவை திருமாங்கல்யம் பூஜையில் வைத்து உடனே கையில் கிடைக்க வந்து சேர்ந்து விட்டதில்லையா அது போதும்" சாரதத்தின் ஆறுதலை உறைக்க அம்மாவின் முணுமுணுப்பு காதுகளை நெருட அவன் வேகமாக காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கிளம்பினான். நந்து நாட்களுக்கு மேலாகிறது அவன் லாவண்யாவிடம் பேசி, அந்தத் தாபம் மனதை அனலாக எரித்துக் கொண்டிருந்தது.

"வரேம்மா" என்று விடைபெற்றுக்கொண்டு ஸ்கூட்டரில் புறப்பட்டு விட்டான்.

அலுவலக அறையில் அவன் வந்து உட்கார்ந்து பிரீப்கேசை மேஜைமேல் வைத்துவிட்டு தான் வெளியூரிலிருந்து கொண்டு வந்த முக்கிய பைல்களை டைரக்டர் பார்வைக்காக பெட்டியிலிருந்து எடுத்து மேஜைமேல் அடுக்கினான்.

பம்பாயிலிருந்தபோதே ஒரு போன் போட்டு எதிர் வீட்டுக்காரர் தொலைபேசி மூலம் லாவண்யா அப்பாவை அழைத்து அவள் உடம்பு இப்போது எப்படி இருக்கிறது என்று விசாரிக்க மனம் துடிப்பாகத்தான் துடித்தது. எதிர் வீட்டுக்காரர்களுக்கு போன் செய்வது மரியாதைக் குறைவாகவிருக்கும். இதென்ன பெரிய தொல்லை என்று அலுத்துக் கொண்டால் ஆபத்து சமயத்திற்கு உதவுவதைக் கூட நிறுத்தி விடுவார்கள். இன்னும் கொஞ்ச நாட்கள்தானே, லாவண்யா தம் வீட்டுக்கே வந்து விடப்போகிறாள் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது மேஜை மேலிருந்த வெள்ளை நிற டெலிபோன் ஒலித்தது.

மானேஜிங் டைரக்டரின் கரகரப்பான குரல் மறு பக்கம் ஒலித்தது ''கொஞ்சம் என் ரூமுக்கு வர முடியுமா மிஸ்டர் கல்யாணராமன்?''

''இதோ வரேன் ஸார்''- எழுந்து பதில் சொல்லிய படி போனை வைத்துவிட்டு கட்டு ஃபைலுடன் விரைந்தான்.

'ஃபைல்களைப் பிறகு பார்த்துக்கலாம் நீ அப்படி உட்கார்'' டைரக்டர் முகத்திலே சிரிப்பு தாண்டவமாடியது.

பட்டும் படாமலும் அவர் எதிரே கிடந்த மெத்தென்றதொரு நாற்காலியில் மெள்ள உட்கார்ந்தான்.

''உனக்கு ஒரு சந்தோஷமான செய்தி சொல்லப் போகிறேன். பங்களூர், கல்கத்தா மற்ற பிராஞ்சுகளுக்கும் நீ ஆடிட்டிங் பண்ணப் போறே அதனாலே உனக்குடிபுடி பைனான்ஸ் மானேஜர் பதவி உயர்வும், அதுக்குண்டான சம்பள உயர்வும், மற்ற பெனிபிட்ஸ் எல்லாம் தரதாக நேற்று நடந்த கூட்டத்திலே முடிவாகிவிட்டது. என் பாராட்டுதல்கள்.'' என்றபடி தமது கையைப் பற்றி குலுக்கினார்.

''தாங்க்யூ ஸார்.'' நன்றிப் பெருக்கில் தடுமாறினான்.

''வீட்டு வாடகை எக்ஸெட்டிரா, எக்ஸெட்டிரா உண்டு தெரியுமில்லையா.''

தலையை உற்சாகமாக ஆட்டினான். அடையாறிலிருந்த வீடு அப்பாவின் சம்பாத்தியத்தில் கட்டியது வாடகைக்கு விட்டால் ஆயிரத்து ஐநூறு வரும் என்று அம்மா அடிக்கடி ஓலமிட்டுக் கொண்டிருந்தாள். கம்பெனி தரும் வாடகையை தனக்கும் லாவண்யாவுக்கும் வசிக்க அந்த வீட்டில் இடம் தருவதற்காக என்று அப்பாவிடம் வாங்கிக் கொடுத்துவிட்டால் அம்மா லாவண்யாவை அப்படி இனி அரிச்சு கொட்டமாட்டாள். புதிதாக வீட்டுக்கு மருமகளாக வரும் லாவண்யாவுக்கும் தினமும் மாமியாரிடம்



மொத்துப்பட வேண்டிய நிர்பந்தமிருக்காது. பலவும் நொடியில் எண்ணி மகிழ்ச்சியுடன் முறுவலித்தான்.

''நன்றி ஸார்'' என்று கூறிவிட்டு மெல்ல எழுந்திருந்து நின்றான். ''கார் வசதிகூட உண்டு. ஜே.டி.எம். உபயோகித்த பியட்டை உனக்குத் தரப் போகிறோம். போன வருஷம்தான் வாங்கினது. பஸ்ட் கிளாஸ் கண்டிஷனில் இருக்கு, ஓ.கே.'' என்று தலையை உற்சாகமாக ஆட்டினார் முதலாளி. இத்தனையும் கிடைக்கும்போது அதற்கு சொட்டை சொள்ளை சொல்ல இயலுமா என்ன? என்று எண்ணியபடி, ''உங்கள் இஷ்டம் ஸார்; எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொண்டு என் கடமைகளை நான் செய்யக் காத்திருக்கேன். நன்றி, வேறு?'' தயங்கினான்.

''வேறு இப்ப ஏதுமில்லை. உன் கல்யாணச் சாப்பாட்டைத்தான் எதிர்பார்த்துண்டு இருக்கோம். உனக்கு வரப் போறவ ரொம்பவே அதிர்ஷ்டக்காரி வலது காலை எடுத்து வைக்கிறதுக்கு முன்னாலேயே நிச்சயம்னு ஆனவுடனேயே உனக்கு பிரமோஷன் எல்லாம் கிடைச்சுடுத்து. நீங்க ரெண்டு பேரும் நீடுழி காலமாக வாழணும்னு முன் கூட்டியே என் வாழ்த்துக்கள். இந்த ஃபைல்களை ஆற அமர கவனிச்சுட்டு பிறகு சந்தேகமிருந்தா உன்கிட்ட கேட்கிறேன். நீ போய் மத்த வேலைகளை கவனிக்கலாம்'' விடை கொடுத்தார்.

தன் அறைக்குள் வந்து அமர்ந்தவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இந்த மகிழ்ச்சியை அவன் கட்டாயம் லாவண்யாவுடன் பகிர்ந்து கொண்டாக வேண்டும். இனி மேல் கடற்கரையில் ஸ்கூட்டரில் நீ பவனி வர வேண்டாம். பக்கத்தில் ஜம்முனு காரில் உட்கார்ந்து வரலாம் என்று சொல்லி சம்பள உயர்வு வந்திருக்கு. உனக்கு என்ன பரிசு நான் வாங்கித்தரணும்னு எதிர் பார்க்கிறே என்று அவளு

டைய கூர் மூக்கை மெல்லக் கிள்ளி அவள் முகத்தை கோபத்திலும் வெட்கத்திலும் சிவக்க வைக்க வேண்டும் டெலிபோன் மீண்டும் கிணுகிணுத்தது. இப்போது பச்சை வண்ண டெலிபோன்தான். யாரோ வெளியிலிருந்து அவனை அழைக்கிறார்கள். ஒரு சமயம் லாவண்யாவாக இருக்குமோ? ஜுரம் குறைந்து தலைக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டு விட்டேன். சாயங்காலம் உங்களைச் சந்திக்கிறேன் என்கிற சந்தோஷ சங்கதியைச் சொல்லவா, இடையில் ஆயிரம் ஆசையான கற்பனைகளுடன் தொலை பேசியைத் தூக்கினான்.

மறுபுறத்தில் மிகவும் பரிச்சயமில்லாத குரல் கேட்டது.

''மிஸ்டர் கல்யாணராமன், உங்களுடன் நான் பேச விரும்புறேன். பெயர் சாரதா.''

''என்ன பேசணும்னு கூப்பிட்டீங்க?'' கல்யாண ராமன் வியப்புடன் சுவற்றை வெறித்தான்.

''லாவண்யா பத்தி ஒரு முக்கியமான சங்கதியைப் பேசணும். தொலைபேசியில் சொல்ல விரும்பலை. உங் களுக்கு மறுப்பு இல்லேன்னா என் வீட்டு முகவரியைச் சொல்றேன். எப்போ வரமுடியும்னு தெரிவிச்சா சௌகர் யமாக இருக்கும்.'' திடுக்கிட்டுப் போனான் ''இந்த சாரதாவுக்கும்... லாவண்யாவுக்கும் என்ன சம்பந்தம்?... ஏதாவது விஷம விளையாட்டாக இருக்குமோ?' லாவண் யாவுக்கு என்ன ஆச்சு. காய்ச்சல் ரொம்ப கடுமையாகி விட்டதா?...'' அவனது நெஞ்சு படபடவென்று துடித்தது.

''இல்லை; அதைவிட ரொம்ப கஷ்டம் ஏற்பட்டிருக்கு ...நேரில்தான் பேச முடியும்.''

''சாரதா அம்மா—நீங்க யார்னு எனக்கு முன்னே பின்னே தெரியாது. இப்படி ஒரு தகவல் சொல்லி என்னை பயமுறுத்துவதின் நோக்கம்?'' குரலில் கடுமையை வர வழைத்துக்கொண்டு அதட்டினான்.



''நான் ஒரு சமூக சேவகி...அவ்வளவுதான் என் அந் தஸ்து. ஒரு பெண்ணுக்கு...இன்னொரு பெண் எப்பொழு தும் உதவி செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் உடைய வள். உங்களை பயமுறுத்தவோ சங்கடப்படுத்தவோ நான் கூப்பிடலை; நீங்க மறுக்காமல் வந்தீங்கன்னா உங்களுக்கு பயன் உண்டு. லாவண்யாவுக்கும் பயன் உண்டு.''

கல்யாணராமனால் எந்த விதமும் ஊகிக்க முடியாத ஒரு விசித்திர வேண்டுகோள். 'சரி, மாலை வேலை முடிந் ததும் சரியாக நாலரை மணிக்குக் கிளம்பி வந்து விடுவேன் ...ஐ ஹோப்...இட்டிஸ் நத்திங் ஸீரியஸ்' என்றபடி அவன் சொன்ன முகவரியையும் தொலைபேசி எண்ணையும் குறித்துக் கொண்டான்.

அதற்குப் பின் அவனுக்கு வேலை ஓடவேயில்லை. சற்று முன் டைரக்டர் சொன்ன அந்த சங்கதியின் மகிழ்ச்சி பூராவும்- சப்பென்று அடக்கிப் போன மாதிரி உணர்வில் தொய்ந்து - கடமைக்காகத் தன் பணிகளை கவனித்துக் கொண்டிருந்தான்.

பகல் உணவு நேரத்தின்போது அறைக்குள்ளே இருப் புக் கொள்ளாது வெளிவந்து- கீழே இறங்கி அருகிலிருந்த கடைத் தெருவை வெய்யிலில் சுற்றி வந்தான். மறுபடி பகல் பொழுது வேலையை கவனிக்க வந்த போது அம்மா பகல் டிபனுக்காக கட்டிக் கொடுத்த உப்புமா கொண்ட டிபனும், அன்புடன் பையன் கொண்டு வந்த தண்ணீர் டம்ளரும் மேஜை மேல் அப்படியே இருந்தன.

வயிற்றை நிறைத்த ஒரு திகில் உணர்வில் அவனுக்கு பசியிருக்கவில்லை தண்ணீரைக் குடித்துவிட்டு-டப்பாவி லிருந்த உப்புமாவை அப்படியே அது அடங்கியிருந்த இலை சுருளோடு எடுத்து-அலுவலக பையனை அழைத்து சாப்பிடச் சொல்லி கொடுத்தான். டப்பாவைத் தானே கழுவித் துடைத்து...ஃபிரிப்கேஸுக்குள் போட்டுக்கொண் டான். அப்போது பார்த்தான்-பம்பாயில் லாவண்யாவுக்

காக அவன் வாங்கி வந்த பவுடர் டப்பாவும் செண்ட் பாட்டிலும்-ஒரு அழகான பொட்டலமாக பரிசுத் தாளில் அந்தப் பட்டு ஃபிரிப்கேசில் ஒரு பக்கத்தில் அடக்கமாக வைக்கப்பட்டிருந்தன.

எத்தனை ஆவலுடன் அவளைச் சந்திக்க அவன் காத்திருக்கிறான்? அவன் ஆவலில் மண்ணை அள்ளிப் போடுவது போல்-சாரதா என்ற அம்மாள் அவனை ஏன் இப்படி திகிலில் தவிக்கவைக்க வேண்டும் ஆத்திரத்தால் பற்களைக் கடித்தபடி-பகல் பொழுது வேலையில் தன்னை மிகவும் சிரமப்படுத்தி ஈடுபடுத்திக் கொண்டான்.

அன்று பொழுது அவனுக்கு நத்தையாக நகர்வது போல...மிகவும் கனத்தது. நாலரை மணியென்று கடிகாரம் அறிவித்ததும் அலுவலக ஊழியர்களுக்கு எச்சரிக்கை தெரிவிக்கும்...மணி-கணகணவென்று ஒலித்தது காதைப் பிளந்தது.

எப்போ வீட்டுக்குக் கிளம்பலாம் என்று காத்திருப்பவர்கள் போல ஊழியர்கள் அனைவரும் பரபரத்தனர். முகத்தை கழுவி முடியை சுத்தமாக வாரி விட்டுக்கொண்டு சட்டையை சரிப்படுத்திக்கொண்டு...கோட்டை அணிந்து கொண்டான். நெஞ்சை இறுக்கிய டையை சற்று தளர்த்தி விட்டுக்கொண்டு...தன் உணர்வுகளை தானே சமாதானப் படுத்திக் கொண்டவன்...லிப்டிலிருந்து இறங்கி...தன் ஸ்கூட்டர் வைத்திருந்த இடத்திற்குப் போனான். ஃபிரிப் கேசை காலடியில் வைத்துக் கொண்டு சட்டைப் பையிலிருந்த முகவரியை மறுபடியும் எடுத்து தன்னுள் வாசித்து விட்டு...கிளம்பினான்.

## 6

**வா**யில் அழைப்பு மணியின் ஒலியை எதிர்பார்த்தபடி காலை பத்திரிகையிலிருந்த விளம்பரங்களைப்படித்தபடி பொழுதைக் கழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்



சாரதா. டிங்-டாங் என்று வாயில் அழைப்பு மணி மண்டையிலடித்தாற்போல ஒலித்ததும்...திடுக்கிட்டு எழுந்தவள்... கதவில் பதித்திருந்த கண்ணாடிக் கண் வழியே பார்த்தாள்.

கையில் ஃபிரிப்கேசுடன்...கோட், டை அலங்காரத்தில் நின்ற இளைஞனைக் கண்டதும்...துணிவுடன கதவைத் திறந்தாள்.. திருமதி...சாரதா...வீடு...என்று அவன் முடிக்குமுன்...''மிஸ்டர் கல்யாணராமன் தானே...வாங்கோ... வந்து இப்படி உட்காருங்களேன்'' உபசரித்தாள்.

பட்டையாக தலை நரைத்துப்போய் வயதின் தளர்ச்சி உடலிலும் நடையிலும்தெரியும் இந்தகிழவிக்கு நம்மிடம் பேச அப்படி முக்கியமான சங்கதி என்னதாயிருக்கும்...என்று எண்ணியவனாக அவன் முன்னறையில் அவள் காட்டிய ஆசனத்தில் உட்கார்ந்தான்.

பார்க்க லட்சணமான பையன். பெரிய வேலையில் இருக்கிறான். நன்றாக சம்பாதிப்பான்...இன்னும் பலபடி வேலையில் உயரும் வாய்ப்புகள் இருக்கின்றன... லாவண்யா போன்ற...நடுத்தர வகுப்புக்கும் சற்று மட்டமான...குடும்பத்துப் பெண்ணுக்கு கிடைக்க முடியாத வரன்...இவன்...இந்தக் கல்யாணம் இந்த விபத்தினால்... முறிவடைந்து போகவிடக் கூடாது பகவானே...சாரதா தன் மனதில் குல தெய்வத்தைப் பல தடவைக் கும்பிட்டபின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''நேரே ஆபிசிலிருந்து வரேள் இல்லையா...அதனால் முதல்லே கொஞ்சம் காப்பி சாப்பிட்டுட்டு பேசலாம்.''

''எனக்கு அதெல்லாம் தேவையில்லை. விஷயத்தை சுருக்கமாக சொன்னால்போதும்-'' என்றான் கல்யாணராமன், தன் கலவரத்தை அடக்கிக் கொண்டு.

''உங்களுக்காக நான் காப்பி சாப்பிடாமல் காத்துண்டு இருந்தேன். எனக்காக முதலில் ஒரு வாயாவது சாப்பி

டுங்கோ.'' பிடிவாதமாக சாரதா எழுந்து உள்ளே பிளாஸ்க்கில் தயாராக ஊற்றி வைத்திருந்த காப்பியை இரு டம்பளரில் ஊற்றி எடுத்து வந்தாள்-வேண்டா வெறுப்பாக கல்யாணராமன் பருகினான்... ''எனக்கு ஒரு சந்தேகம். மிஸ்டர் கல்யாணராமன் உங்கள் அந்தஸ்த்துக்கும் லாவண்யாவின் குடும்ப அந்தஸ்த்திற்கும் ரொம்ப இடைவெளி இருக்கு... இந்த கலயாணம் உங்கள் பெற்றோர்கள் பார்த்து நிச்சயித்ததா அல்லது'' மெல்லிய புன்முறுவலுடன் அவனைப் பார்த்தாள்.

இதைக் கேட்கவா இந்தம்மா அவனை இங்கே வரவழைத்தாள்... ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

''இல்லை... நானும் லாவண்யாயும் எதிர்பாராதவிதமாக சந்தித்தோம். ஒருவர்மேல் மற்றவருக்கு விருப்பம் ஏற்பட்டது. இதைக்காதல் கல்யாணம்னு வச்சுக்கோங்க ஏன் கேட்கறீங்க?...''

''லாவண்யாவை நீங்க மிக ஆழமாகக் காதலிக்கிறீங்களான்னு உங்க மனதை நீங்களே கேட்டு முடிவுசெய்கிற நேரம் இப்போ வந்திருக்கு...''

''புரியும்படி சொல்லுங்கோ... போனில் குழப்பனீங்க-இப்போ நேரே ரொம்ப பயமுறுத்தரேள்'' என்றான் அவன்.

''நீங்க உண்மையாக அவளை காதலித்தால்தான் நான் சொல்லப்போகும் அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள இயலும்...''

''எப்படிப்பட்ட அதிர்ச்சியான சங்கதியானாலும்பரவாயில்லை-துணிவோடு சொல்லுங்கள்-எனக்கு எதையும் தாங்கும் இதயம் இருக்கு... அவளை நான் அத்தனை ஆழமாக நேசிக்கிறேன். எத்தனை பிறவி எடுத்தாலும் அவளையேதான் மீண்டும்—மீண்டும் காதலித்து கல்யாணம் செய்



துக்கணும்னுகூட மனதிலே ஒரு விசித்திரமான ஆசை. பயப்படாமல் சொல்லுங்கள்...'' என்றான்.

''மிஸ்டர் கல்யாணராமன்... வயதில் எனக்கு நீங்க பிள்ளைக்கு சமமானவன்-அதனால் அந்த உரிமையில் சொல்கிறேன்-வாய் கூசுகிறது. ஆனால் உங்களுக்கு தெரிஞ்சிருக்க வேண்டியது நியாயம். கடந்த பத்தாம் தேதி ஞாயிற்றுக் கிழமை இரவு சுமார் ஏழரை மணிக்கு ...எங்கள் வீட்டுக்கு பின்னால் தெரியும் முழுதும் கட்டப்படாத நிலையில் இருக்கும் இப்புதுக் கட்டிடத்தின் ஒரு இருளடைந்த பகுதியில்... லாவண்யா ஒரு முரடனால் கற்பழிக்கப்பட்டு விட்டாள்.''

மூக்கும் உதடுகளும் துடிக்க-முகத்தில் வியர்வை பூத்து நிற்க-நெஞ்சு படபடக்க... கைகளும் காலும் மரத்துப் போனதொரு அதிர்ச்சியில் அவன் அப்படியே உறைந்து போய் விட்டான்.

''உண்மையாகவா சொல்றீங்க...'' மெல்லிய குரலில் கேட்டான். இருதயமே இரண்டு சுக்கலாக வெடித்து விட்டது போன்ற வேதனை—வயிற்றுக்குள் எரிமலை வெடித்தது போன்றதொரு ஆத்திரம் நெருப்பாகக் கனன்றது.

''உங்களுக்கு இது எப்படித் தெரியும்னு கேக்கிறேளா...'' என்று ஆரம்பித்த சாரதா சுருக்கமாக நடந்த அனைத்தையும் விவரித்தாள். ''லாவண்யா மிகவும் மனம் உடைந்து போயிருக்கிறாள்- அவளுக்கு உங்கள் முகத்தைப் பார்க்கக்கூட மனம் இல்லை... அவளது பெற்றோர்கள் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள்... நீங்கள் தான் இதற்கு ஒரு முடிவு தேடவேண்டும்'' என்று முடித்தாள்.

திடீரென்று தலையைக் குனிந்து கொண்டு தன் இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்ட கல்யாணராமன் ...பச்சிளங் குழந்தையைப் போல விம்மி... விம்மி அழுதான்.

கண் இமைகளைச் சுட்ட கண்ணீரை சமாளித்துக் கொண்டு சாரதா எழுந்து அவன் அருகே சென்று மெல்லத் தோளைத் தொட்டாள்.

''மிஸ்டர் கல்யாணராமன்- நீங்கதான் இப்போ தைரியமா இருக்கணும்.''

"என் லாவண்யா... அன்று மலர்ந்த ஒரு பூப்போல - உடலும் உள்ளமும் அழகான பெண்ணாச்சே'' அவன் பேசமுடியாது விசுவினான்.

''அந்த மலரின். அழகு இப்போதும் குறைந்துவிட வில்லை அதிர்ச்சி...பலவீனமடைந்திருக்கிறது... இது ஒரு விபத்து இல்லையா கல்யாணராமன்.''

''லாவண்யாவை இதற்காக நான் குறை சொல்ல மாட்டேன்...என் உயிருக்கும் இனியவள் மேல் நான் இதற்காக வெறுப்படைய மாட்டேன்...அம்மா! சத்தியமா சொல்றேன்...அவள் என்னை நினைத்து துடிதுடிச்சு கதறியிருப்பாளோன்னு நினைச்சு -அவளுக்கா இப்படி ஒரு விபத்து ஏற்படணும்னு துக்கம் தாங்காம அழுதிட்டேன் —மன்னிச்சுக்கோங்க. இப்பவே எனக்கு அவளைப் பார்க்கணும். ஆறுதல் சொல்லணும் கவலைப் படாதே... நீ என் வரைக்கும் களங்கப்பட்டவள் இல்லை...கல்யாணம் என்பது இரண்டு ஆன்மாக்களின் சந்திப்பு - வெறும் உடல் உணர்வில் இணையும் ஒரு உறவல்ல...பயப்படாதே...யார் எதிர்த்தாலும் சரி...எவர்கள் தூஷணையாகப் பேசினாலும் சரி...நமது கல்யாணம் நடந்தே தீரும் -உன்னைக் காலமுச்சூடும் வச்சு உனக்கு எந்தத் தீங்கும் வராம - நான் காப்பாத்துவேன்னு சொல்லி -சத்யம் பண்ணித்தரணும்னு ஆவலா இருக்கு அம்மா-'' தழுதழுத்தான்.

சாரதாவின் கண்களை மீறிக் கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் ஓடின. பாகாய் மனம் கரைந்து போனாள் இப்படிப்பட்ட நல்லதொரு மனிதனும் இருக்கிறான் -



வயதில் இளைஞன் என்றாலும் மனதில் எத்தனை பெரியவனாக இருக்கிறான்?

உள்ளம் மிக நெகிழ்ந்து போனவளாய் அவன் கையை எடுத்து அன்புடன் தன் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

''நீங்க ரொம்ப உயர்ந்த மனிதர்—இதை அவளுக்கேற்பட்ட களங்கமாகக் கருதாம ஒரு விபத்துனு ஏத்துக் கொண்டு அவளுக்கு வாழ்வு தர நினைக்கிறீங்க நீங்க மனிதன் இல்லை—தெய்வம்'' என்றாள் உணர்ச்சி மிகுந்த குரலில்.

''அம்மா இவ்வளவும் சொன்ன நீங்க அந்தப் பாவி யார்னு சொலலலையே அவனைச் சந்திச்சு—அவன் கழுத்தை நெறிச்சு என் லாவண்யாவுக்கு இழைத்த தீங்குக்கு பழிவாங்க என் மனம் துடிக்கிறதே' பரபரப்பாகப் பேசினான்.

''அப்படி நீங்க பழிவாங்கி—ஒரு கொலைகாரனாக மாறினால் யாருக்கு லாபம்- லாவண்யாவின் வாழ்க்கை இன்னும் சீரழிந்து போகும். சட்டம் அவனுக்குத் தண்டனை வழங்கட்டும்னுதான் போலீஸ் அதிகாரி ரங்கநாதன் உதவியைத் தேடியிருக்கேன்...அவன் யார்னு அவர் கண்டுபிடிச்சுட்டார்.''

"கண்டுபிடிச்சுட்டாரா. எனக்கும் சொல்லுங்கம்மா...''

''உங்களுக்கு இதைச்சொன்ன நான் - அந்த துரோகியின் பெயரைச் சொல்லாமல் இருக்கமாட்டேன்- நீங்கள் இன்று பேசாம வீட்டிலேபோய் கொஞ்சம் அமைதியா இருக்க முயலுங்க. தூக்கம் வராட்டா ஏதாவது தூக்க மாத்திரை போட்டுண்டு தூங்குங்கோ. நாளைக்கு நான் ரங்கநாதனைக் கலந்து ஆலோசிச்சு—நாம் மூன்று பேரும் என்ன செய்யலாம்னு முடிவு எடுப்போம் ''

''லாவண்யாவைப் பார்க்கணும்-பேசணும்னு என் மனது அலறுகிறதே''

''இப்போ நீங்கள் அவனைப் பார்க்காது இருப்பது இரண்டு பேருக்குமே நல்லது.. இன்னும் இரண்டு நாள் பொறுத்துக் கொள்ளுங்கள் எல்லாம் நல்லபடியாக முடியும். கூடியவரை இந்த விபத்துக்கு விளம்பரம் தராது ...அதே சமயம் அந்த அயோக்கியனை எப்படித் தண்டிக்கிறதுன்னும் நாம் சிந்திக்கணும்...

''என்னா, அவன் மிகவும் பெரியபணக்காரர் மகன்—வக்கீல்வச்சு வாதாடி.. தனக்கு இதில் சம்பந்தமேயில்லை என்று தப்பித்துக் கொள்வான்..''

''அவனைத் தப்பவிடக்கூடாது அம்மா... அப்படித் தப்பினால்...''

''மிஸ்டர் கல்யாணராமன் பொறுமையா இருங்கோ ...நீதியின் கைகள் ரொம்ப நீளமானவை - யாரும் தப்புவதில்லை; பார்க்கலாம்...'' என்றாள். கல்யாணராமன் எழுந்து நின்றான். திடீரென்று ஆவேசம் வந்தது போன்று உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தாங்க முடியாது...''அம்மா நீங்க யாரோ...நான் யாரோ...லாவண்யா உங்களுக்கு எந்த விதத்திலும் சொந்தமுமில்லை பந்தமுமில்லை அப்படியிருக்கும்போது...இத்தனை கருணையோட எங்களை வாழ வைக்க பல முயற்சிகளில் இறங்கி இருக்கேளே...உங்களை நான் என் தாயாராக பாவிக்கிறேன்...'' என்று தழுதழுத்தபடி...அவளது கால்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான்.

சாரதா மெத்தவும் மனம் உருகிப் போய் குனிந்து அவனை மெல்ல எழும்படி தோள்களைத் தொட்டு உசுப்பினாள்.

''எல்லாரும் எல்லாருக்கும் உறவினர்கள் என்கிற கொள்கை எனக்கு. அதனாலே...உங்களுக்கு வந்த இந்த கொடுமையை நான் எனக்கிழைக்கப்பட்ட அநீதியாக



நினைத்தேன் அப்பா...இதுக்கு தீர்வு காணப் புறப்பட்டேன். இந்த அம்மா சொல்வதைக் கேட்பாயா?''

''கேட்கிறேன் அம்மா?'' கல்யாணராமன்...கும்பிட்டபடி நின்றான்.

''இப்போ போய் இதையெல்லாம் உதறிவிட்டு... நல்லா ஓய்வெடுத்துக்கோ. மறுபடி நாம் சந்தித்து ஆவன செய்வோம்...இப்படி நடந்துட்டதேன்னு மனதை நொறுங்க விடுவதில் லாபமில்லை...இப்படி நடந்தாலும் நம்மால் தாங்கிக்க முடியும்னு தலை நிமிர்ந்து நிற்பது தான் ஆண் பிள்ளையான உனக்கழகு...சரியா...''

''சரிம்மா...வரேன்'' விடை பெற்றுக்கொண்டு... மனம் தளர்ந்து மெல்ல படிகளில் இறங்கி... கீழே ஸ்கூட்டர் வைத்திருந்த இடத்தை நாடினான்.

வாயிற் கம்பி கேட்டில் பொருத்தப்பட்டிருந்த அழைப்பு மணியை லாண்டிரி பையன் வந்து அழுத்தினதும் அரண்டு போனார் லாவண்யாவின் தந்தை. காய்கறி கூடைக்காரி கம்பிக் கதவைப் பிடித்து ஆட்டி சத்தமிடுவது கேட்டு காதுகளைத் துளைப்பது போல அம்மா வெதறிப் போனாள்.

பள்ளிச் சிறுவன் லாவண்யாவின் தம்பியை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும் கேட்டை மூடி உள்ளே பூட்டு போட்டுக்கொண்டு வீட்டுக்குள் அடைந்து கொண்டதும் அவர்களுக்கு வெளியுலகத் தொடர்பே தேவை இல்லை என்பது போன்றதொரு மருட்சி. எங்கேயாவது கண் காணாத இடத்தில் எல்லோருமே மறைந்துவிடமாட்டோமா என்றதொரு ஏக்கம். வரப்போகும் கல்யாணத்தை எப்படி முடித்துத் தலைநிமிரப் போகிறோம் என்ற மாபெரும் கவலை. உறங்கினோமா சாப்பிட்டோமா என்று விவரம் அறிய முடியாத குழப்பமான நிலையில் அவளது பெற்றோர்கள் தவித்துக் கொண்டிருந்தனர்.

அழைப்பு மணி அழுத்தமாக அன்று காலை ஒலித்ததும் சாய்வு நாற்காலியில் காலைப் பத்திரிக்கையுடன் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த அப்பா திடுக்கிட்டு எழுந்தார், காலையிலிருந்து தண்ணீர் அடித்து அண்டா குண்டாக்களில் நிரப்பி வைத்துவிட்டு... சிவந்துபோன கைகளை சோப்பு நீரில் விட்டபடி துணிகளை எரிச்சலுடன் துவைத்துக் கொண்டிருந்தாள் பின் பக்கத்தில் அம்மா...

சட்டென்று சோப்பு நுரை படிந்த கையைக் கழுவி புடவைத் தலைப்பில் துடைத்துக்கொண்டு...தாழ்வாரத்திற்கு ஓடி வந்தாள் பயத்துடன்.

ஒரு சமயம் கல்யாணராமன்தான் வந்து விட்டானோ? இந்தப் பெண் அவனைக் கண்டதும்... ஏதாவது உளறித் தொலைக்கப் போகிறது... என்ற பயத்திலே அவள் பதறிப் போனாள்... அப்பா எழுந்து கதவைத் திறந்தார் வெளியே சம்பி கேட்டுக்கு அப்பால் நின்ற காவல்துறை அதிகாரியைக் கண்டதும் உடல் சக்கையாகிப் போனார்.

சில நாட்களுக்கு முன் வந்துபோன அந்தக் கிழவி... இப்போது இவரை ஏவி விட்டிருக்கிறாளா...? மனம் கொதிக்க பூட்டைத் திறந்து கேட்டை அகலமாக நகர்த்தினார்.

''இந்தப் பகுதியைச் சேர்ந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வருகிறேன். உங்களிடம் ஒரு முக்கிய விஷயம் பேசணும்...'' என்றபடி ரங்கநாதன் அவரையும் தாண்டிக் கொண்டு உள்ளே வந்தான். நடையில் நின்றபடி அவன் தன் கால் ஷூக்களைக் கழற்ற குனிந்தபோது ''பரவாயில்லை அப்படியே உள்ளே வாருங்கள்'' என்று அனுமதி தந்தார்.

வாயிற் கதவை அடைத்துவிட்டு அம்மா ஒரு பிரம்பு நாற்காலியை தாழ்வாரத்தில் கொண்டுவந்து போட்டாள். உட்காருங்கள்... என்று உபசரித்தபடி சாய்வு



நாற்காலியில் தொப்பென்று அமர்ந்து கொண்டார் அப்பா. அதற்குள் அவருக்குப் பாதி உயிர் போய்விட்ட பிரமை.

''உங்களது நேரத்தை நான் வீண் செய்ய விரும்பவில்லை. உங்கள் மகள் லாவண்யாவை நீங்கள் கூப்பிடுங்கள். அவளிடம் இதைக் காட்டி நான் அடையாளம் கண்டு கொள்ள வந்திருக்கிறேன்...'' என்றான் ரங்கநாதன் தன் கையிலிருந்த ஃபிரிப்கேசைக் காட்டி...

கீழ் உதட்டை அம்மா அழுத்தமாகக் கடித்துக் கொண்டாள். ''இப்போ அவளை ஏன் போலீசில் இழுக்கணும். நாங்கபாட்டில் சிவனேன்னு இருக்க விரும்பும் போது...'' கோபமாகக் கேட்டாள். ரங்கநாதன் சற்றுக் கடுமையான குரலில் அதட்டலாகவே பேசினான். ''தப்பு ஒன்று நடந்திருக்கிறது. உங்கள் மகளுக்கு இழைக்கப்பட்ட குற்றத்திற்கு நீதி காண முயலுகிறோம். நீங்கள் அதற்கு ஒத்துழைக்காது போனால் நான் வேறு வழியாக —உங்களை அணுக முடியும்.''

கழுத்திலே வழிந்த வியர்வையை அப்பா துண்டால் துடைத்துக் கொண்டார்.

''பெண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு... இந்த சமயத்திலே வந்து இவைகள் தேவையான்னு கேட்கிறான்'' தடுமாறினார்.

''இதோ பாருங்க ஸார்! நான் இந்தக் குறிப்பிட்ட கேஸை ரொம்ப மனிதாபிமான நிலையில்தான் ஆராய்ந்து கொண்டு வருகிறேன். உங்கள் மகளுக்கு இதனால் எந்த விதமான அவக்கேடும் பழிச்சொல்லும் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறேன். அதுக்கு நான் உத்திரவாதம் அளிக்க முடியும். நீங்க மூன்று பேரும் தடைசொல்லாமல் என்னுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கவேண்டும்.

இதுக்குமேல் எனக்கு என்ன சொல்வதுன்னு தெரியலை ஸார்...'' என்றான் விரக்தியாக ரங்கநாதன.

அப்பா...அம்மாவின் முகத்தைப் பார்த்தார்.

கழுத்துவரை சங்கடம் வந்து நிற்கிறது. அதிலிருந்து எப்படி தப்ப முடியும்... என்றது அவர் பார்வை...

''லாவண்யாவைக் கூப்பிட்டுக்கொண்டு வா...'' என்றபடி அவர் எழுந்து ஒரு மர ஸ்டூலை கொண்டு வந்து சுவர் ஓரமாகப் போட்டார் லாவண்யா உள்ளேயிருந்து கூடத்தைத் தாண்டி தாழ்வாரத்திற்கு வந்தாள்.

வெளிச்சத்திலே அவளை ஏற இறங்கப் பார்த்தான் ரங்கநாதன். இருபது வயது இளம்பெண்—வெய்யிலில் வாடிப்போன கீரைத் தண்டுபோல...கலைந்த கூந்தலும் ...அழுக்காகி விட்டிருந்ததொரு பழைய வாயில் சேலையுமாக ஒரு பரிதாப கோலத்திலே—சோகம் கப்பிய முகத்துடன் வந்து நின்றதைக் கண்டு அவன் மனம் மிக்க சங்கடப்பட்டது.

இந்த மாதிரியான விபத்துக்களைப் பற்றி—விபத்திற்குட்பட்ட பெண்ணைத் திரும்பத்-திரும்பக் கேட்டு மனப்புண்ணை மேலும் கிள்ளி விடுவது மகாபாவம்தான் என்று அவனது மனசாட்சி இடித்தது.

கள்ளங்கபடம் தெரியாதவள் போலக் காணப்பட்ட அந்த சின்னஞ்சிறு பெண்ணை அவலப்படுத்தி- கொடுமை மிக்கதொரு காரியத்தை செய்துவிட்ட அந்த துரோகியைச் சும்மா விடக்கூடாது... என்று ஒரு பக்கம் மனம் நெருப்பாக எரிந்தது.

''இப்படி உட்காரம்மா-'' மிகவும் கனிவான குரலில் உபசரித்தான். விருப்பு வெறுப்பு அற்ற ஒரு நிலையில் எதிலும் பங்கு கொள்ளாதவள் போல- எங்கேயோ



யாருக்கோ என்னவோ நடந்து விட்டதுஎன்று நினைக்கிற பாவனையில்-பிரமை பிடித்தவள் போல லாவண்யா ஸ்டூல் மீது உட்கார்ந்து கொண்டாள்.

''இதோ பாரும்மா... உன் மனம் நோகறாப்பல நா எதுவும் கேட்க மாட்டேன. பத்தாந்தேதி ஞாயிற்றுக்கிழமை நீ தேவகி விட்டிலிருந்து புத்தகத்தை வாங்கிண்டு வந்தபோது - இருட்டி போய்விட்டதல்லவா...''

ஒருகணம் ரங்கநாதனை அவள் யோசனையுடன் பார்த்தாள்...திடீரென்று அவளது கண்கள் கலங்கிப் போயின.

''எனக்காக நிச்சயிக்கப்பட்டிருக்கிற கல்யாணராமனை நான் சந்தித்து கடற்கரையில் பேசிவிட்டு திரும்பினேன். நாழியாகிவிட்டதென்று அந்த வழியாகக் குறுக்கே நடந்து எங்க தெருவுக்கு வர-அவசரப்பட்டேன்-'' மெல்லிய குரலில் தரையைப் பார்த்தபடி சொன்னாள்-இமைகளை மீறிப் பொங்கிய கண்ணீரை விரலால் சுண்டிவிட்டுக் கொண்டாள்.

''மிஸ்டர் கல்யாணராமனை சந்திக்கிறது இது முதல் தடவையல்ல. எதேச்சையாக சந்தித்து இருவரும் ரொம்ப விரும்பியதாலேதானே இந்தக் கல்யாணமே நிச்சயமானது. இதெல்லாம் எங்களுக்குத் தெரியும்.''

''என் தாயார்கூட எச்சரித்திருந்தாங்க-கல்யாணம் நிச்சயமாகி விட்டதென்றாலும்-கண்ட இடத்தில் நின்று பேசுவது நன்றாக இருக்காதுன்னு சொல்லியிருந்தாங்க-அம்மா பேச்சைக் கேட்காம செய்த அசட்டுக் காரியத்துக்குத் தான் தக்க தண்டனை கிடைச்சுட்டதே-''

''அவனை உனக்குத் தெரியுமா அம்மா...''

பதிலளிக்க மனமின்றி தெரியாது என்று தலையை அசைத்தாள் லாவண்யா.

''இதற்குமுன் பார்த்ததேயில்லையா?''

மறுபடியும் கண்களில் பொங்கிய கண்ணீரை அவள் தன் புடவை முந்தானையால் துடைத்துக் கொண்டாள் -தன் கண்களிலும் நீர் புரளுவதை அவள் காணக்கூடாது என்று அம்மா முகத்தை வேறு பக்கத்தில் திருப்பிக் கொண்டாள்- அப்பா தன் துயரத்தை அடக்க இருமினார்- "கொஞ்ச நாட்களாகவே அவன் நான் வரும் வழியில் நின்றுகொண்டு பாதையோரமாகத் தன் மோட்டார் சைக்கிளையோ அல்லது தன் காரையோ விட்டுக் கொண்டு வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான்.

"அழகான பொண்ணே, தனியே நடந்து ஏன் போரே -காரில் ஏறிக்கோ; கொண்டு விடறேன்" என்று கூட ஒரு தடவை என்னைத் தொந்தரவு பண்ணினான். போடா ராஸ்கல்-என்று திட்டிவிட்டு நான் நகர்ந்திருக்கேன்."

"அன்று உன் வருகைக்காக அவன் முன்கூட்டியே அந்த இருட்டின் பக்கத்தில் காத்திருந்திருக்கிறான் இல்லையா-"

தலை அசைத்தாள் லாவண்யா. துயரம் தாங்காது விம்மினாள்.

"இப்பத்தான் நீ தைரியமா இருக்கணும் இப்படி மனதைத் தளரவிடக்கூடாது இந்த மஞ்சள் சட்டையைப் பார்த்தால் உனக்கு ஏதாவது அடையாளம் தெரிகிறதா..."

"அன்னிக்கு அவன் இதைப் போட்டுக் கொண்டிருந்தான். கொஞ்ச தூரத்தில் வரும்போதே என்னை சைக்கிளில் தொடர ஆரம்பிச்சான்-நான் வேகமாக ஓடி அந்தக் கட்டிடத்தின் நுழைவாயில் வழியாக ஒரு சந்துக்குள் புகுந்து இந்தப்பக்கம் வர ஓடினேன்-பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. சட்டென என் கையை அவன் பிடிப்பதைக் கண்டு கத்தினேன்-இந்த சட்டையை உருண்டையாக உருட்டி என் வாயில் அடைக்கப் பார்த்தான். நான் முரண்டு பண்ணி தப்பிவிட்டேன்"



"சரி, சட்டை அந்தக் கிராதகனுடையதுன்னு தெரிஞ்சு போச்சு. இந்தப் படத்தைப் பார்த்து அவனை அடையாளம் காட்ட முடியுமா?" ஃபிரிப் கேசில் ஒரு பழுப்பு வண்ண காகித உறையிலிருந்த அந்த குரூப் போட்டோவை எடுத்தான்.

கையில் வாங்கிப் பார்த்த லாவண்யாவின் உதடுகள் துடித்தன. இவன்...இவனே தான் என்று தன் தந்தைக்குப் பக்கம் அமர்ந்திருந்த விஜய்குமாரைச் சுட்டிக் காட்டிவிட்டு தாங்க முடியாது விக்கி அழத் தொடங்கினாள். சட்டென்று ரங்கநாதன் புகைப்படத்தை அவளிடமிருந்து வாங்கிக்கொண்டான்...தாயார் ஓடிவந்து தன் மகளை மார்புடன் அணைத்துக் கொண்டாள். இருதயம் வெடித்துவிடும்படி அவள் விம்முவதைக் காண ரங்கநாதனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது

"லாவண்யா அம்மா, கொஞ்சம் தைர்யத்தை வரவழைச்சுக்கோங்க. இப்பத்தான் நான் உங்ககிட்ட என்ன உதவியை எதிர்பார்க்கிறேன்னு சொல்லப் போறேன்..." என்றான் மிகவும் குழைவாக.

"அதான் அவன் தடயங்களை எல்லாம் அடையாளம் காட்டிக் கொடுத்திட்டாளே...இதுக்கு மேலே அவனை நீங்க கோர்ட்டுக்கு இழுத்துக் கஷ்டப்படுத்தினால் எங்க குடும்பமே ஏதாவது விஷத்தைத் தின்னுட்டு போக வேண்டியதுதான்" அம்மா...விக்கினாள்.

"அதான் முதல்லேயே உங்களுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கேனே அம்மா ஏன் பயப்படுகிறீர்கள்?... இந்தக் கயவன் மேலே இன்னொரு குற்றம் பதிவாகியிருக்கு ...அதைத் தொடர்ந்து ஆராய்ந்து நீதிக்கு முன் நிறுத்தி அவனுக்கு தண்டனை வாங்கித் தர நான் ரொம்ப ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கேன். உங்கள் பெண்ணுக்கு

செய்த தீமைக்கு-வேறு வழியிலாவது அவன் சில ஆண்டுகள் சிறையில் அவதிப்படணும் என்பது என் அவா...''

''அப்போ எதுக்கு இனி எங்கள் உதவி...லாவண்யா இனிமேல் என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிறேள்?'' அப்பா மெல்லக் கேட்டார்.

''அவன் செய்து கொண்டிருக்கும் குற்றம் போலீசுக்குத் தெரியாது என்று அவன் நம்பிக்கொண்டிருக்கிறான் அது வேறு வகைக் குற்றம்...அதைப் பற்றி இரண்டு நாளுக்கு முன் அவன் மேல் புகார் பதிவாகியிருக்கிறது—உடனடியாக முந்தா நாள் நான் அவனைப் பார்க்க வீட்டிற்குப் போயிருந்தேன்—நான் எதிர்பார்த்ததுதான்.

''பத்தாந்தேதி அவன் எங்கேயிருந்தான் என்று கேட்டேன். ஆசாமி விழிச்சுக்கொண்டுவிட்டான் — அவன தகப்பனாருக்கு குற்றம் என்னவென்ற உண்மை விவரத்தை நான் சொல்லவில்லை. பணத்தைப்போட்டு மறைத்து விடலாம் என்று அவர் நம்பிக் கொண்டு சட்டென்று ஜோடனை செய்து வைத்திருந்தார்-பத்தாம் தேதி அன்று அவன் எங்கேயிருந்தான் என்று மறுபடி கேட்டேன்... அப்பாவின் போதனைப்படி பளிச்சென்று சொன்னான்-அன்று காலைதான் அவன் காஞ்சிபுரம் போயிருந்ததாகவும் -அவனது மாமன் வீட்டில் தங்கியிருந்ததாகவும் சொன்னான்-மாமனது தொலைபேசி எண் கொடுத்து விசாரித்துக் கொள்ளச் சொன்னான் மாமாவும் அவனுக்காகத் தலையை ஆட்டினார்...வெளியே வரும்போது அவன் கேட் வரை என்னைத் தொடர்ந்து வந்தான்- அப்போது அவனை கீழ் குரலில் எச்சரித்தேன். ''உன்னை அந்தப் பெண் அடையாளம் காட்டுவதாகச் சொல்லியிருக்கிறாள் ...அவளை வருகிற திங்கள் அன்று உன் அலுவலகத்துக்கு அழைச்சிட்டு வரப்போறேன் என்றேன்...ஆசாமி அலண்டு போய்விட்டான்.''



''நீங்கள் சொல்வதெல்லாம் சரி...அவனை மறுபடி லாவண்யா எதற்குப் பார்க்கணும்?''

''குற்றவாளி ஒருவனுக்கு எப்பொழுதுமே ஒரு வக்கிரப் புத்தி உண்டு...தான் குற்றம் புரிந்த இடத்திற்கு மீண்டும் ஒருமுறை பல காரணங்களை ஒட்டி வருவான் என்பது நாங்கள் பல கேஸ்களின் மூலம் கண்ட உண்மை இந்தப் பெண் இந்த வழியாகத்தானே போகிறவள்- அவளை மடக்கி போலீசில் ஏதாவது சொன்னால்...ஆளை வச்சு அடிச்சுக் கொன்னுடுவேன்னு பயமுறுத்த...பணம் கொடுத்து சமாதானப்படுத்த...கல்யாண ஆசை காட்டி பேச எத்தனையோ ஜாலங்களைக் கையாள அவன் முயலலாம்னு நினைச்சேன். எங்கள் நிலைய அலுவலர் ஒருவரை சாதா உடையில் அந்தப் பகுதியில் கண்காணிக்க சொல்லியிருந்தேன். இரண்டு நாளா ஆசாமி ..ஒரு பெட்டிக் கடை அருகே நின்றபடி லாவண்யா வரவுக்குத் தயாராக நின்று கொண்டிருந்தானாம்.

''அதனால் இன்று மாலையே அவனைப் பிடிக்க ஒரு திட்டம்-லாவண்யா இன்று தினமும் அந்த வழியே நடப்பது போல...கையில் ஏதாவது ஒரு பொருளுடன் அந்தப் பக்கமாக நடக்கவேண்டும்...''

''ஐய்யய்யோ ..மறுபடி அவன் ஏதாவது மூர்க்கத்தனம் செய்யவா...''

''அவளைக் கண்டதும் அவன் பின்தொடர்வான்... தயாராக நாங்க நாலு பேர் அந்தக் கட்டிடத்தின் இருளில் மறைஞ்சிண்டு இருப்போம்...அவன் அவளைப் பயமுறுத்தவோ-பணம் கொடுப்பதாகவோ பேச நெருங்கும் போதே நாங்கள் உஷாராகிவிடுவோம்-ஒரு பெண்ணை ஈவ் டீஸிங் செய்தான்னு சாதாரண குற்றத்துக்காக அவனைப் பிடிப்பது போல பார்த்துக் கொண்டு போய்விடுவோம்.. பிறகு அவன் மேலிருக்கும் அந்த வேறு குற்றம் சங்கிலியாகத் தொடரும். லாவண்யாவுக்கு எந்த

விதமான ஆபத்தும் நேராது. கவலைப்படவே தேவையில்லை...''

''என்னவோ ஸார்...நாங்க உங்களை ரொம்ப நம்பறோம்...லாவண்யாவை இதற்கு ஒப்பும்படி செய்கிறோம். அவளது வாழ்வு நாசமாகாம பார்த்துக்கோங்க-அவ்வளவுதான்...'' என்றார் தந்தை.

''போலீஸ் அதிகாரி சொல்றபடி நான் கேட்கிறேன் அப்படிஅந்தப் பாவிக்கு தண்டனை வாங்கித் தந்தால் தான் என் மனம் கொஞ்சம் ஆறும்'' என்றான் அவன். அவன் பேச்சில் ஆத்திரமும் கோபமும் தொனித்தன-அவன் முகத்தில் ஒரு ஆவேசக் கனை-கண்களில் சினம் நெருப்பாகக் கொழுந்து விட்டெரிந்தது.

''இன்று மாலை ஐந்து மணி அளவில் வருவேன், லாவண்யாவைத் தயாராக இருக்கும்படி சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

அப்பா கேட்டைப் பூட்டிவிட்டு கதவை அடைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

''அம்மா எனக்கு ரொம்ப பசிக்கிறது-சாதம் போடறியா?'' என்று லாவண்யா...அந்த சில தினங்களுக்குப் பின் மிகவும் சகஜமாகப் பேசியதைக் கேட்ட தாய்க்கு... மனதில் ஏற்பட்ட நிம்மதி சொல்லில் அடங்காது.

''சாப்பிட்டதும் உனக்கு உதவியாக துணிகளை கூட தோய்ச்சுப் போடறேன். சில நாளா உங்களை பல விதத்திலும் நான் துன்பப்படுத்திவிட்டிருக்கேன்னு வருத்தமா இருக்கு...''

''அசடு...அதைவிட்டுத் தள்ளு-எனக்குக் கூடப் பசிக்கிறது. சாப்பாட்டு நேரம்...என்னா!...நீங்களும் வந்து கூடத்தில் உட்காருங்கோ. எல்லாருக்கும் தட்டுப்போடறேன்'' அம்மா தெம்பான குரலில் பேசினாள்.



''ஆமாம்-கார்த்தாலே புடலங்காய் வாங்கினியே அதை என்ன பண்ணினே...வதக்கலா...கூட்டா...''

''காரசாரமா கூட்டு பண்ணியிருக்கேன்...லாவண்யாவுக்காக மிளகு ரசம் வச்சிருக்கேன்...எல்லோருக்கும் பிடிச்ச உருளைக் கிழங்கு பொடிமாஸ்'' எல்லோரும் கூடத்திலே தட்டுகள் முன் அமர அம்மா பரிமாறிவிட்டு உட்கார்ந்தாள்.

மறுபடியும் வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

அப்பா சென்று கதவைத் திறந்தார். கேட்டுக்கு வெளியே வருங்கால மாப்பிள்ளை கல்யாணராமன் நின்று கொண்டிருந்தான். முகத்திலே புன்னகையை வரவழைத்துக்கொண்டு ''வாங்கோ.. வாங்கோ...இன்னிக்கு ஆபீசுக்கு போகலையா..'' என்றபடி... உபசாரங்களுடன் வரவேற்றார் அவள் தந்தை.. வாசலில் அவனது குரலைக் கேட்டதுமே...கையும் காலும் ஒடுங்க லாவண்யா அம்மாவைப் பீதியுடன் பார்த்தாள்.

அம்மா அவளை அமைதியாக இருக்கச் சொல்லி ஜாடை செய்தாள்.

கல்யாணராமன் உள்ளே வந்தான்-நடையில் கால் ஷூக்களை கழற்றி வைத்துவிட்டு..குறட்டோரத்திலிருந்த செம்புநீரில் கைகளைக் கழுவிக்கொண்டு வந்தான்

''வாசல்லியே-கூட்டின் வாசனை மூக்கைத் தூக்கித்து தேங்காய் அரைச்சு வச்ச கூட்டா..'' கேட்டபடி லாவண்யாவை கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டான்-''மாப்பிள்ளைக்கும் ஒரு தட்டை வை...'' என்று அப்பா உற்சாகத்துடன் உபசரித்தார்.

''இன்னிக்கு ஆபீசுக்குக் கொஞ்சம் லேட்டா வருவேன்னு நேத்து சொல்லியிருந்தேன்—இப்பத்தான் சாப்பிட்டுட்டு கிளம்பறேன். லாவண்யாவின் உடம்பு எப்படி இருக்குன்னு ஒரு வார்த்தை கேட்டுட்டு அப்படியே நேரே பார்த்துட்டு, போகலாம்னு வந்தேன் மாமி...ஒரு டம்ளர்

இந்த மிளகு ரசத்தைக் கொடுங்கோ போரும்...'' சொல்லிக் கொண்டே ஊஞ்சல் மீது அமர்ந்தான். அம்மா ஒரு வெள்ளி டம்ளரில்...மிளகு ரசத்தை நிரப்பி அவன் அருகே கொண்டுவந்து வைத்தாள்.

''கூரைப்புடவை—எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு -உங்க செலக்ஷனாமே? ரொம்ப விலைபோட்டு வாங்கியிருக்கேள்-லாவண்யாவுக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு...'

''உங்களுக்குப் போன் பண்ணி சொல்ல ஆசைப் பட்டா-அடிக்கடி பிறத்தியார் வீட்டு போனை உபயோகிக்கிறது அத்தனை நன்னா இருக்காது பாருங்க...'' -அம்மா படபட வென்று பேசினாள். ''லாவண்யாவுக்கு பிடிச்சிருந்தால் எனக்கு பரம திருப்தி...பணம் கொஞ்சம் கூடக் குறைய இருந்தால் என்ன...ஆயுசு முழுவதும் சுப காரியங்களின் போது கட்டிக்க வேண்டிய புடவையாச்சே ...எங்க பேரன் காலம்வரை...நன்னா உறுதியா இருக்கணும்-பல தடவை தோய்ப்பதைத் தாங்கிக்கணும். ஒரு நல்ல உரமான பட்டாகப் பார்த்து-நிறைய சரிகை போட்டதாக நானும் ஆசைப்பட்டுத்தான் வாங்கினேன்...எங்க ரெண்டுபேருக்கும் சில விஷயங்களில் ஒரேவிதமான ரசனை...'' வேடிக்கையாகப் பேசி சிரித்தபடி ரசத்தைக் குடித்தான்.

அவர்கள் அனைவரும் சாப்பிடும்வரை அவன் அகலவில்லை...கையை அலம்பிக்கொண்டு...லாவண்யா வந்த போது அவளை ஜாடைகாட்டி அழைத்தான்.

''உனக்காக நான் இவைகளை பம்பாயில் வாங்கினேன்-ரெண்டு மூணு நாளா வேலை அழுத்தத்திலே... நேரில் வர முடியவில்லை-கொடுக்க முடியலை...என் அன்புப் பரிசு...இன்னொரு சங்கதி உனக்குத் தெரியுமா!... எனக்கு வேலை உயர்வு ஏற்பட்டிருக்கு-சம்பள உயர்வும் கிடைக்கப்போறது. நீ எங்க வீட்டுக்கு சீக்கிரம் வரப் போற யோகம் கார்வசதியும் கிடைக்கப் போறது.''



''லாவண்யா அதிர்ஷ்டக்காரி மாப்பிள்ளை-உங்களைப் போல ஒரு நல்ல பிள்ளையாண்டான் எங்களுக்கு மாப்பிள்ளையா கிடைச்சிருக்கிறதொரு பாக்கியம் நாங்கள் அந்த பகவதி அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்யணும்...எல்லாம் அவள் கிருபை'' ...அப்பா குரல் தழுதழுக்க வருங்கால மாப்பிள்ளையின் கையைப் பற்றிக் கொண்டு பேசினார்.

''தாங்க்யூ!'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு...அவன் கொடுத்த பரிசு பொட்டலத்துடன் உள்ளே ஓடிவிட்டாள் லாவண்யா...அவளது மனதில் அதே சமயம் ஏற்பட்ட இன்பம்-துயரம்—ஏக்கம் என்ற பல்வேறு உணர்ச்சிப் போராட்டத்திலே...அவளுக்கு அழுகை வந்தது. அந்தப் பரிசுப் பொட்டலத்தை அணைத்தபடி கண்ணீர் உகுத்தாள்.

அம்மா சொற்படியே அவள் அன்று மாலை நடந்து கொண்டாள். குளித்துவிட்டு கஞ்சி மொடமொடப்பில் இஸ்த்திரி போட்டு மடித்து வைத்திருந்த ஆரஞ்சு வண்ணவாயில் சேலையை எடுத்து ஏற்ற ரவிக்கையுடன் உடுத்திக் கொண்டாள். அம்மா ஒரு சரம் கனகாம்பரம் பூவை வாரிப் பின்னலிட்ட அவளது கூந்தலில் சூட்டினாள் நெற்றியில் பளிச்சென்று குங்குமமும்-உதட்டிலே லேசாக சாயமும் பட்டும்படாத மென்மையாக முகத்திலே பவுடருமாக அவள் பார்க்க மிகவும் அழகாக இருந்தாள்.

இந்த அழகுதான் அவளுக்கு ஆபத்தாகி விட்டது... போகட்டும் பகவதி அம்மன் அருளால் மாப்பிள்ளை நல்ல படி வந்து பேசிவிட்டுப் போனாரே; அதுவே போதும்... அம்மா...தன்னுள் நினைத்துக் கொண்டாள்.

''ஜாக்கிரதை அம்மா...போலீஸ் பாதுகாப்பு இருக்கு ...அப்படியும் மனம் ரொம்ப பதைக்கிறது...''

அப்பா மகளின் கன்னத்தைத் வருடினார்.

கையில் ஒரு நோட் புத்தகத்தை எடுத்துக்கொண்டு அவள் தயாராகினாள். மனதில் மட்டும் ஒரு உறுத்தல்.

காலை வந்து கபடமேயில்லாது பேசிவிட்டுப்போன கல்யாணராமனிடம் இந்த சங்கதியை மறைச்சு வைப்பது தர்மமா?

அவள்மீது உயிரையே வைத்துக் கொண்டிருக்கும் அந்த உத்தமருக்கு உண்மையைச் சொல்லி விட்டால்...

அப்பா அம்மா எதிரில் அதைச் சொல்ல தைர்யமில்லாமல் கோழையாக இருந்து விட்டாள்.

கல்யாணத்திற்கு முன்பு சொல்லிவிட வேண்டும்...பின்னர் அவர் இஷ்டம். இந்த விபத்தைப் பற்றி அவருக்கு தெரிந்தும் மறைப்பது மகாபாவம்.

கட்டாயம் நாளைக்கு எங்கேயாவது ஒரு போனில் அவரை அழைத்து-கடற்கரையிலோ கடைத் தெருவிலோ சந்திக்கச் செய்து நடந்ததைச் சொல்லிவிட வேண்டும். அத்தனை ரகசியத்தையும் மனத்துள் அடக்கிக்கொண்டு அக்னிமுன் அவரது கையைப்பிடித்தால் அவள் மனம் தாங்காது வெடித்து...மண மேடையிலே அவள் பிணமாகிப் போய்விடுவாள். அப்பா அம்மா இருவரும் உலகத்துக்கு அஞ்சுகிறார்கள். ஊராருக்குப் பயப்படுகிறார்கள். அவள் தன் மனசாட்சிக்குப் பயப்படுகிறாள்.

''எதையும் திரை போட்டு மறைச்சுடலாம். மனசாட்சியை யாரும் எதனாலும் மறைக்க முடியாதே.''

''என்னம்மா தயாரா?'' கேட்டபடி சொல்லிய நேரத்தில் ரங்கநாதன் அங்கே வந்தான். ''இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு கிளம்பலாம். பெட்டிக் கடையருகே அவன் எதிர்புறத்தில் தன் காரை நிறுத்திவிட்டு...கடை வாசல் முன்னாலிருக்கும் டெலிபோன் கம்பத்தின் மீது சாஞ்சுண்டு நிற்கிறான் என்று எங்கள் ஆள் செய்தி சொல்லியனுப்பினான் பொழுது நன்னா அமரத்தொடங்கினதும் உன்னை என் வானில் ஏத்திண்டுபோய் கொஞ்ச தூரத்தில் சாலையில் இறக்கி விடறேன்...நான் ஒரு பக்கமாக வானில் அவனைக் கண்காணித்தபடி இருப்பேன். என் ஆட்கள் அந்த கட்டிடத்திற்குள்ளே...இங்குமங்கும் காவலாக சாதா உடையில் இருக்காங்க; பயப்பட வேண்டாம். நீ மெல்ல நடந்து அந்த கடைப் பக்கம் போனதும் திரும்பி அவனைப் பார்த்தபடி நட...பயப்படாதே...நீயே இப்போ அவன் பக்கம் மாறிவிட்டதாகக்கூட அவன் நினைக்கலாம்.''



வயிற்றைப் புரட்டிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அவள் இருட்டத் தொடங்கியதும்...சாலையில் இறக்கி விட்ட இடத்திலிருந்து நிதானமாக இடதுபுறமாக நடைபாதையோரமாக நடந்து வந்து கொண்டிருந்தாள். பெட்டிக்கடை அருகே வந்தபோது அவள் நெஞ்சு படபடவென்று பயத்திலும் கோபத்திலும் துடித்தது. அவன் பக்கம் திரும்பினாள். அந்தப் பாவி ஒரு சிகரெட்டைப் புகைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

சட்டென்று சாலையின் குறுக்கே வேகமாக...போக்குவரத்தை கவனித்தபடி கடந்து...கட்டிடத்தின் நுழைவாயில் பக்கம் வந்தாள். பின்னால் சிகரெட்டின் மணம் குப்பென்று வீசியதுமே அவளுக்குப் புரிந்துவிட்டது. அவளை பின் தொடருகிறான்...பாவி மறுபடியும் அவளை வதைக்கலாம் என்ற ஆசை...அவன் கெட்ட எண்ணத்திலே இடி விழ...மனதில் சபித்தபடி கையும் காலும் பதற...அவள் இருளில் மூழ்கிவிட்டிருந்த அந்தப் பகுதிக்குள் மிகவும் பயத்துடன் நுழைந்தாள்.

''ஏய்! ஓடாதே நில்லு உன்கிட்டே பேசணும்...'' பின் வந்த அவன் அடிக்குரலில் அதட்டினான்.

''என்னோட பேச என்னடா இருக்கு பிளடி ஃபூல்'' என்று அவள் கிரீச்சிட்டாள்.

''சத்தம் போடாதே, மென்னியைத் திருகிடுவேன். போலீசில் ஏதாவது சொன்னியா-போலீஸ் அது இதுன்னு போனியோ உன்னைப் பெத்தவ...உன்னை நாளைக்கு உசுரோட காண மாட்டா...வாயை மூடிண்டு பேசாம

''அது ஒரு ஸஸ்பென்ஸ்...'' என்று அவன் முடிக்குமுன் டிங்டாங் என்று அழைப்பு மணி சப்தித்தது. கையில் பிடித்த தொப்பியுடன் ரங்கநாதன்...உள்ளே வந்தான். அவன் பின்னால் வந்த கல்யாணராமனைக் கண்டு ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள் லாவண்யா...

''மாமி சொன்ன ஸஸ்பென்ஸ்...இவரா...அப்படின்னா?''...

அவள் எண்ணங்கள் மின்னலடித்தன.

''என்னப்பா ஆச்சு?'' என்று ஒட்டு மொத்தமாக மர்மமாக கேட்டாள் சாரதா.

''போக்குவரத்து சட்டங்களை மீறி...பச்சை விளக்கு எரியுமுன் ஒரு பெரிய சந்திப்பிலே அவன் வண்டியை குறுக்கே ஓட்டிக் கொண்டு எங்களை ஏமாற்றப் பார்த்தான். ஆனால் அவன் ஏமாந்து போனான். ஒரு லாரியோட கார் மோதி ரொம்ப படுகாயத்தோட...மூர்ச்சையாகி விட்டான். அதான் இத்தனை நாழியாச்சு...போக்குவரத்து இலாகா அதிகாரிகளை அழைச்சு கேஸை அவர்கள் வசம் ஒப்புவிச்சுட்டு...வரத்துக்குள்ளே நேரமாச்சு மன்னிக்கணும் மாமி...''

''ரொம்ப பலத்த அடி. பிழைப்பது கஷ்டம்னு...உடனடியாக அங்கே அவனை கவனிக்க ஓடி வந்த டாக்டர் சொன்னார்.''

''ஆண்டவனே பார்த்து தண்டனை கொடுத்துட்டார் போலிருக்கு.''

''மரணம் யாருக்கும் ஒரு தண்டனை இல்லை மாமி'' கல்யாணராமன் சொன்னபோது எல்லோரும் அவன் பக்கம் திரும்பினார்கள்.

''சரி அவன் பிழைச்சுக்கட்டும். இந்த பலத்த அடியில் ஏதாவது ஊனம் ஏற்பட்டால் அது அவனுக்கு ஒரு பாடமாக அமையட்டும். இப்போ இதைமறந்து நாமெல்லாம்



கொஞ்சம் தாகத்துக்கு சாப்பிடலாமா'' சாரதா அவர்களை அழைத்தாள்.

''இந்த மாமியை உங்களுக்கு எப்படித் தெரியும்? அப்படின்னா உங்களுக்கு எல்லாம் தெரியுமா?...'' என்று கேட்டபடி அருகில் நின்ற லாவண்யாவை அன்போடு பார்த்தான் கல்யாணராமன்.

''தெரியும். தெரிஞ்சது போல நான் காட்டிக்கலை. இங்கு இருக்கும் நம் நாலவருக்கு மட்டும் தெரிஞ்ச சங்கதி...''

''சாரதா மாமிக்கு இதை வெளியே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.. ரங்கநாதன் அவர்கள் மனிதாபிமானத்தோடு இந்தக் கேஸை அணுகிய உத்தமர். அப்படியே இது அவர் மனதுக்குள் புதைந்துபோய்விடும். நீ இதை சில நாட்களில் மறந்துவிட முயலணும் நான் இந்த விஷயத்தை உடனடியாக மறந்து விட்டேன்.''

''தெரிஞ்சும் என்னைக் கல்யாணம் பண்ணிக்க நீங்க ஒத்துக்கொண்டிருக்கேளா...?'' அவள் குரல் தழுதழுத்தது.

''பைத்தியம்...ஏதாவது ஒரு விபத்திலே என் கை கால் போயிருந்தா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க மறுத்திருப்பியா?''

''மாட்டேன்...எத்தனை பிறவியெடுத்தாலும் நீங்க தான் எனக்குக் கணவனா வரணும்னு மனம் பிடிவாதம் செய்கிறது...'' கண்களில் நீர் வழிய...தடுமாறினாள்.

''அதே போலத்தான் நானும், தெரிஞ்சுக்கோ...''

''நீங்க சாதாரண மனிதன் இல்லை...கல்யாணம்...தெய்வம் எனக்கு மறுவாழ்வு கொடுக்க முன்வந்த மாபெரும் தெய்வம் உங்க காலில் விழுந்து நன்றி சொல்ல ஆசைப்படறேன்''-அவள் குனிந்தபொழுது கை நீட்டி அவளைத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டான். அவளது கண்ணீரைத் தன் கையால் சேலையால் துடைத்தான்.

191265

''நானும் நீயும் வாழ்க்கையில் சரி சமமானவர்கள்—நான் உனக்குத் துணைவன்—நீ எனக்கு ஆதாரவாக இருந்து கை கொடுத்து உதவும் துணை—மனிதன் மனிதனா வாழணும். தெய்வமாகிவிட்டால் ரொம்ப ஆபத்து...'' என்று சிரித்தபடி அவளை தன் மார்புடன் அணைத்துக் கொண்டான்.

''கல்யாணம்...ஐ லவ் யூ...கல்யாணம், வாழ்நாள் முழுதும் நான் உங்களது மேன்மையான மனைவியாக இருந்து'' ஆனந்தத்தில் விசும்ப அவளது தலை முடியை அவன் அன்போடு கோதிக் கொடுத்து அவளுக்கு ஆறுதல் சொல்வதை காணாதவர்போல ரங்கநாதனும் சாரதாவும் மறுபக்கம் திரும்பி மேஜையருகே வந்து உட்கார்ந்து கொண்டனர்.

''பேசிக்கிறதுக்குத்தான் வாழ்நாள் முழுவதும் பொழுது நீண்டு இருக்கே. இப்படி எங்களோட கொஞ்சம் பேசியபடி இந்த இனிப்பை சாப்பிடுவாங்கோ...'' என்று சாரதா அழைக்க...ரங்கநாதன் உரத்து சிரிக்க... மற்றவர்கள் கூடக் கலந்துகொண்டபோது...அந்த சிறு விளையாட்டுச் சிரிப்பில் கலகலத்துப் போனது...

அங்கு ஆனந்தம் கூத்தாடியது. வருங்காலம் அவர்களிருவருக்கும் நம்பிக்கையுடன் வெளிச்சமாகத் தெரிந்தது.

# விடிவெள்ளி

அன்று ஞாயிற்றுக்கிழமை.

ரத்னா அம்மாள் போட்ட நிபந்தனைப்படி அவள் தன் வருகையைத் தொலைபேசி மூலம் முதல் நாளே தெரிவித்து விட்டுக் கிளம்பியிருந்தாள்.

சங்கரி நகரத்திலிருந்த பிரபலமான உரக் கணக்கு வழக்குப் பகுதியில் தலைமைக் கணக்கருக்கு உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தாள். பதினெட்டு வயதிலேயே வேலைக்குப் போக ஆரம்பித்தவள். இரு நூறு ரூபாய் சம்பளத்திற்கு வேலையில் அமர்ந்தவள்—அயரா உழைப்பால் நல்ல பெயரை வாங்கிக்கொண்டதுடன், பணியிலும் உயர்த்தப்பட்டு தலைமைக்கணக்கர் ஓய்வு அடைந்தவுடன் அந்த இடத்தில் அமரும் வாய்ப்பையும் பெற்றிருந்தாள். அத்துடன் அவள் சம்பளமும் எட்டு நூறு ரூபாயை எட்டிவிட்டிருந்தது.

அப்பாவுக்கு ஓய்வு ஊதியமும் வங்கியில் சேமித்ததிலிருந்து கொஞ்சம் வட்டியும் கிட்டின. இரண்டையும் நிரவிக்கொண்டு வீட்டு வாடகையிலிருந்து எல்லா செலவுகளையும் அவர்கள் இருவரும் சமாளித்துக் கொண்டு வந்தனர். ஆனால், திடீரென்று அப்பாவின் உடல்நிலை மோசமாகி விட்டபோதுதான், சிகிச்சைக்காக ஏற்பட்ட செலவில் அவர்களது சேமிப்பில் ஓட்டை காணத் தொடங்கியது. பற்றாக்குறையினால் அவள் அவதிப்பட நேர்ந்தது. ஆனாலும் அவள் மிகவும் உறுதியான மனம் படைத்தவள். எத்தனை சிரமம் ஏற்பட்டாலும் அண்ணன்மார்களை உதவிக்கு அணுகுவதில்லை என்று தன்னுள்ளே ஒரு தீர்மானத்தை ஏற்றிருந்தாள். அம்மா விட்டுப்போன சில நகைகள் இருந்தன. அவற்றை விற்று அப்பாவை அவளால்

கடைசிவரை வைத்துக் காப்பாற்ற இயலும் என்ற நம்பிக்கை. ஆனால் விடியுமுன்பே எழுந்து தினமும் அப்பாவை கவனித்துவிட்டு சமைத்து தானும் சிற்றுண்டி கட்டி எடுத்துக் கொண்டு அப்பாவுக்கு தனியான பத்திய உணவையும் தயாரித்து வைத்துவிட்டு, தான் திரும்பி வரும்வரை அவரைக் கவனித்துக் கொள்ள நம்பகமான தங்கள் வீட்டு வேலைக்காரியை முழு வேலைக்கும் கூடுதலான சம்பளத்தில் ஏற்பாடு செய்துவிட்டுப் போய்வந்த போதிலும், இனம் காணாத ஒரு கலவரம் அவளுள் இருந்தது. என்றாவது ஒருநாள் அவள் வீடு திரும்புமுன் அப்பாவின் மூச்சு நின்றுவிட்டால்?

எழுதப் படிக்கத் தெரியாத அந்த வேலைக்காரிக்கு அவர் மாரடைப்பால் தவிக்கும்போது முதலுதவி செய்ய ஏதும் தெரியாது. சட்டென்று வைத்தியரை அழைக்க வேண்டுமென்ற யோசனை தோன்றாது போய்விட்டால் ...திடீரென்று வேலை நடுவே-கவலை ஏற்படும். கண்களில் நீர் பனிக்கும். நெஞ்சைத் துன்பம் வருடும்.

அவளுக்கு உலகிலே சொந்தம் பந்தம் என்று சொல்லிக் கொள்ள இருப்பவர் அப்பா ஒருவர்தான். அவருக்குப் பின்?

வேலைக்காரி மங்களம் மிகவும் நல்லவள். அவள் திரும்பி வரும்வரை வீட்டைவிட்டு நகராது அங்கேயே இருந்து கிழவரை கவனித்துக் கொள்வதாக வாக்களித்திருந்தாள். மாதக் கடைசிநாள் அன்று அவள் போகத்தவறினால் அவள் தன் தங்கை குழந்தை மோகனைக் காண இயலாது. ரத்னா அம்மாளுக்கு தன் ஒரே மகன் செய்து கொண்ட காதல் கல்யாணம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. மகனுக்காக தங்களது மதிப்புக்கு மிகவும் குறைந்த இடத்திலிருந்து வந்த பெண்ணை அவள் மருமகளாக ஏற்றுக் கொண்டிருந்தாள். ஆனால், அதற்காக அவளது உறவுப் படையை அவள் ஏற்று உபசரிக்க விரும்பவேயில்லை. தப்பித் தவறி அவர்களில் யாரேனும் வந்து மீனாவைக்



காண விரும்பிக் கேட்டால், வாசலிலேயே வைத்து வேலைக்காரனிடம் காப்பியை கொடுத்து அனுப்பி, மருமகளை சில நிமிடம் அவர்களுடன் பேசவிட்டு பின் அவளை உள்ளே வரச் சொல்லி கதவை சாத்திக் கொள்ளும் கல் மனக்காரி-அகம்பாவம் பிடித்தவள், பணத் திமிரில் ஏழை எளியவர்களைத் துரும்பாக மதிப்பவள்

அவள் வீட்டுக்கு மாதம் ஒருமுறை போய்வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே என்று சங்கரிக்கு உள்ளூர மனக்கசப்புதான். தலைவாசலை காவல் செய்த கூர்க்காவிடம் முன்னமையே ரத்னா சொல்லிவைத்திருப்பாள்-அவள் சொல்ல மறந்து போனதால் அந்த ஏமகாதகன் அவளை உள்ளே விடமாட்டான். உள்ளே போய் வருவதும் அத்தனை சுலபம் அல்ல. தோட்டத்தைக் காவல் செய்த மூன்று அல்சேசியன் நாய்கள் அவள் மீது பாய்ந்து குதறிக் கொன்றுவிடும். அவற்றை கவனித்துக்கொண்ட வேலைக்காரனுக்கும் அவளது வருகை தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த நாய்களை அவன் சங்கிலிகளால் பிணைத்து அவள் போகும்வரை கட்டி வைத்திருப்பான்.

அதற்குப்பின் வாயில் வராந்தாவிலே அவள் தன் செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு, குழந்தைக்கு வாங்கி வந்த பிஸ்கட் பொட்டலத்துடன் மிகவும் ஆடம்பரமான அந்த வரவேற்பு அறையில் ஓர் இருக்கையில் முன் மேல் அமர்ந்தபடி உட்கார்ந்திருக்க வேண்டும். காஷ்மீரத் தடுப்பின் பின்னால் இருந்து ஒரு வேலைக்காரி எட்டிப் பார்ப்பாள் பின்னர் சிறிது நேரத்தில் சமையல் ஆள் ஒருவர் வெள்ளித் தம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து வைப்பார். அவசரமாக அவள் பருகியதும் அதைத் திருப்பி பத்திரமாக உள்ளே அவர் எடுத்துப் போனபின் மாடிப்படிகளில் காலடி ஓசை கேட்கும்.

"பெரியம்மா வந்திருக்காங்களா?" மழலையில் தொனிக்கும் அந்தக் குரலைக் கேட்டதும், உடல் இன்பத்திலே சிலிர்த்துப் போகும். நெஞ்சிலே ஒரு படபடப்பு ஏற்பட, அவள் எழுந்து நிற்பாள். ரத்த பாசத்தின் நிகர் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளங்கையும் உடலும் வியர்த்துக் கொட்டுவதை உணர்வாள்.

ரத்னா அம்மாள் தன் வாட்டசாட்டமான உடலில் ஒரு காஞ்சிபுரம் பட்டு சேலையை சுற்றிக்கொண்டு, நரை ஓடிய தலைமுடியை இறுக்கமாகக் கொண்டை போட்டுக்கொண்டு, நெற்றியில் திருநீறும் கழுத்திலே ஒற்றைவடத் தங்க சங்கிலியும் மினுக்க மெல்ல இறங்கி வருவாள். "குழந்தை இப்பத்தான் எழுந்தான். குளிப்பாட்டி, உடை அணிவித்து, உணவளித்துக் கொண்டு வந்திருக்கேன். ரொம்ப தூக்கி அவனைக் குலுக்கி கொஞ்சாதே.. பத்து நிமிடத்தில் டியூஷன் வாத்தியார் வந்திடுவார்..."

'மூன்று வயதுக் குழந்தைக்கு டியூஷன் எதற்கு?' கேட்க நாக்கு துடிக்கும். பணக்காரர்கள் தங்களது வசதிகளை எப்படி வேண்டுமானாலும் பெருக்கிக் கொள்ளலாமே பிரகலாதன் தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே கதை கேட்டுத் தெரிந்து கொண்டதாக புராண வரலாறு இருக்கிறதே. அதனாலோ என்னவோ அந்த சின்னஞ்சிறு பிஞ்சிற்கு பள்ளிக்கூடம் என்பது என்ன என்று விளையாட்டுக்குக்கூடப் புரியுமுன் அவசரப்பட்டுக் கொண்டு அறிவைத் திணிக்க முயலுகிறார்களோ? என்ன மதியீனம்! எண்ணியபடி, ஓடிவரும் குழந்தையை ஆடையுடன் அள்ளிக் கன்னத்தில் முத்தமிட்டுக் கண்கலங்கிப் போவாள்.

அழகான—அறிவான பிள்ளையாகத் தன் மகன் ஆரோக்கியமாக வளரும் அற்புதத்தைப் பார்க்க முடியாது மறைந்துபோன தங்கையின் ஞாபகம் வந்து நெஞ்சை அடைக்கும்.



"குழந்தையைக் கீழே விடு. பெட்டி போட்டு உடுத்திய உடையைக் கலைக்காதே."

கன்னத்திலும் தலையிலும் முத்தமிட்டால் போதும். "முத்தமிடாதே! நோய்க்கிருமிகள் உன்னிடமிருந்து குழந்தைக்கு ஒட்டிக் கொள்ளும்" ஒரு டாக்டரைப் போல ரத்னா உத்திரவிடும் போது அவள் பதைத்துப் போவாள்.

"குழந்தையை எப்படி வளர்ப்பது என்பது எனக்குத் தெரியும். நான் ஓரளவு படித்தவள்தான்" என்று பட்டென்று பதில் சொல்ல மனம் விரும்பும். ஆனால் அத்துடன் அந்த அம்மாள் குழந்தையை வந்து மாதந்தோறும் அவள் பார்க்கும் வாய்ப்பையும் வெட்டி விடுவாளே?

பஸ் நிலையத்திலே பலவும் எண்ணிக்கொண்டு நின்றவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

பூந்தமல்லிக்குப் போகவேண்டிய அந்த பஸ் வந்து சேர்ந்தது. கல்யாண நாள். கூட்டத்தில் பஸ் பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது. எப்படியோ ஏறி பெண்கள் உட்காரும் பகுதியில் வாரைப் பிடித்துக்கொண்டு நின்றாள்

போன தடவை அவள் வாங்கிப் போன பிஸ்கட்டை குழந்தை மோகன் விரலால் கூடத் தொட அனுமதிக்கப்படவில்லை. நாளேட்டில் சுற்றப்பட்டிருந்த பொட்டலத்தை அவள் கைநீட்டியதும் உள்ளேயிருந்து வந்த வேலைக்காரியை எடுத்துப்போக உத்திரவிட்டாள் ரத்னா. ஒரு சமயம் அந்த பிஸ்கட்டுகளை வேலைக்காரி சாப்பிட்டாளோ அல்லது கன்றுகுட்டிகள் போல தோட்டத்தில் திரிந்த அந்த அல்சேசன்கள் சாப்பிட்டனவோ, தெரியாது.

"இனிமேல் இப்படி பிஸ்கட் சாக்லெட் இதுகளை வாங்கிட்டு வராதே இதெல்லாம் இங்கே நாங்கள் நிறைய வாங்கித் தருகிறோம். கண்டதைச் சாப்பிட்டால் குழந்தை உடம்பு கெட்டுவிடும்" கொஞ்சம் கோபமான குரலில் அதட்டினாள் ரத்னா.

அவமானத்தில் துவண்டு போனாள் சங்கரி.

ரத்னா அவர்களைப் பற்றி ரொம்பவும் துச்சமாகத்தான் இன்னமும் நினைத்துக்கொண்டு இருக்கிறாளோ?

மீனாவின் மறைவுக்குப்பின், அவள் மகன் துயரவசப்பட்டு, வேலைமீதுகூட நாட்டமின்றி இங்குமங்கும் சுற்றுலா போய்க் கொண்டிருந்ததும், பின்னர் அவனை மிகவும் கெஞ்சி மறுபடி வேலையைத் தொடங்க அவள் கேட்டுக் கொண்டதும், இன்னமும் மனைவியை இழந்த பண்டாரம் போல வாழ்க்கையில் எந்தப் பிடிப்பும் இல்லாது வளைய வருவதும் பலருக்குத் தெரிந்த கதை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட ரத்னா அம்மாள் இப்படித் தன் பண கர்வத்தை வெளிப்படுத்திக் கொள்ளவேண்டாம்.

இந்த முறை அவள் கடையிலிருந்து பிஸ்கட் பொட்டலத்தை வாங்கவில்லை. சனிக்கிழமை பிற்பகல் வேலை முடிந்ததும் அவள் அண்ணாசாலையில் இருந்த பெரிய புத்தகக்கடைக்குள் புகுந்தாள். தன் நிலைமைக்கு மீறியதுதான்-ஆனாலும், முதல தடவை வாங்கும் புத்தகம் ரத்னாவின் பார்வைக்கு விலை பெற்றதாக இருக்கவேண்டும். அதிலுள்ள படங்களைக் கண்டு குழந்தை மகிழ்ச்சியடைய வேண்டும். எழுபத்தைந்து ரூபாய்க்கு அந்த அழகான கதைப் புத்தகத்தை வாங்கினாள். குழந்தை மோகனுக்கு பெரியம்மாவின் பரிசு என்று முன்பக்கத்தில் எழுதிக் கையெழுத்தும், தேதியும் போட்டு, வண்ணக காகிதத்தில் சுற்றி பத்திரமாக எடுத்துககொண்டு கிளம்பியிருந்தாள்.

பூந்தமல்லிக்குப்போய் சேர்வதற்குக் குறைந்தது ஒரு மணி நேரம் பிடிக்கும். பிறகு அவள் சிறிது தூரம் நடக்க வேண்டும். புத்தகத்தை எடுத்து வந்ததில் வழக்கமாகக் கையுடன் அவள் கொண்டு வரும் குடையை மறந்துவிட்டாள். காலை வேளை என்ற போதிலும் சூரியன் ரத்னா அம்மாளைப் போல சுளீர் என்று வீசிக் கொண்டி



ருந்தது அவளுக்கு அப்படி வயது ஒன்றும் கூடுதலாகி விடவில்லை. இன்னும் சில நாளில்தான் அவளது 28-வது பிறந்த நாள் வர இருந்தது. அதற்குள் அதிக உழைப்பினாலோ, மனதை இறுக்கிய உணர்வுகளின் குழப்பத்தாலோ அவளுக்கு மூச்சு இறைத்தது.

கைக்கெடிகாரத்தை உற்றுப் பார்த்தாள். நெஞ்சு வேகமாகத் துடித்தது ரத்னா அம்மாள் நேர அனுசரிப்பில் ரொம்ப கண்டிப்பானவள். ஒரு தடவை அவள் வழக்கமாகப் பிடிக்கும் பஸ் தவறிப் போய்விட ஒரு மணிநேரம் தாமதமாக அங்கே போக நேர்ந்தது. எத்தனை கெஞ்சியும் வாயிலில் நின்ற கூர்க்கா அவளை உள்ளேவிட மறுத்து விட்டான். வேறு வழியின்றி அருகிலிருந்த கடை ஒன்றிலிருந்து அவள் ரத்னா அம்மாளைத் தொலைபேசியில் கூப்பிட்டு, நேரமாகிவிட்ட விவரத்தைச் சொன்னாள்.

''நீ என்ன செய்வியோ எனக்குத் தெரியாது. நான் சொன்ன நேரத்திற்கு வந்தால் குழந்தையைப் பார்க்க முடியும். உங்களுக்கெல்லாம் நேரம் காலத்தைப் பற்றி எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. மோகனை நான் அப்படி வளர்க்க விரும்பலை. ஒரு அலுவலகத்திலே வேலை செய்கிற உனக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. இதுக்கு மேலே வந்தால் உள்ளே வந்து குழந்தையைப் பார்க்க முடியாது. அவன் இப்போ தூங்க வேண்டிய வேளை. அடுத்த மாசம் முன்னேற்பாடு செய்துவிட்டு வா.''

கடைக்காரருக்கு தொலைபேசிக்கு உண்டான சில்லரையைக் கொடுத்துவிட்டு, தெருவில் வந்தவளுக்குத் தாங்க முடியாது அழுகை வந்துவிட்டது. கையுடன் கொண்டு வந்த பிஸ்கட் பொட்டலத்தை அங்கே குப்பைத் தொட்டியைக் கிளறிக் கொண்டிருந்த ஓர் ஏழைச் சிறுவனுக்குக் கொடுத்து விட்டு வீடு திரும்பினாள்.

உண்மையை அவள் நோயாளித் தந்தையிடம் சொல்ல இயலவில்லை. ''குழந்தை மோகன் இப்போ எப்படியிருக்கான்? தாத்தா உன்னை பார்க்க ரொம்ப ஆசைப் பட்டார்னு சொல்லிட்டு வந்தியா? ஏம்மா அந்த ரத்னா அம்மாகிட்டேயாவது மாப்பிள்ளை கிட்டேயாவது எப்படியாவது பேசி, ஒரே ஒரு தடவை நான் என் பேரனைப் பார்க்க அனுமதி வாங்கிட்டு வர முடியாதா? நாமென்ன அவங்க வீட்டுக் குழந்தையைக் களவாடிக் கொண்டா போயிடுவோம்? ஏம்மா, மீனா போல சாயல் ஏதாச்சும் இருக்கா-அவள் போன அன்னிக்கு குழந்தையைப் பார்த்தது-சதா என் கண்ணிலேயே அவள் நிற்கிறாள்'' அப்பா துயரத்தில் தழுதழுத்தார். அவரது வயதையும், தள்ளாமையையும், நோயையும் பார்த்து மனம் பரிதவித்த மகள் பொய் புனைந்து பேச வேண்டியிருந்தது.

''மீனா போலவே கண்கள் அப்பா...துருதுருன்னு குழந்தை எப்படி ஒரு இடத்திலும் நிக்காம ஓடி விளையாடறான், தெரியுமா? ரத்னா அம்மாகிட்டே பேசினேன். அதுக்கென்ன ஒருவாட்டி அவரை அழைச்சிட்டு வாயேன்னு சொன்னாங்க-உங்கள் உடம்புக்கு ஆட்டோவில் போவதோ, பஸ்ஸில் போவதோ சரிப்பட்டு வராதே அப்பா.''

''போனால் போகட்டும்னு ஒருநாள் நாம டாக்சியிலே போயிட்டு வருவோம் அம்மா. இன்னிக்கெல்லாம் இருந்தா டாக்சிக்காரர் ஐம்பதோ-நூறோ கேட்பார். கொடுத்துடுவோம். ஒரு மாசம் எனக்கு ராத்திரிக்கு நீ கொடுக்கிற ஹார்லிக்சை நிறுத்திடு. காலையிலே சாப்பிடற விடமின் மாத்திரைகளை நிறுத்திட்டா, டாக்சி செலவை சரிக்கட்டிக்கலாமே'' அப்பா கெஞ்சிக் கேட்டபோது அவள் கண்களில் நீர் புரண்டுவிட்டது.

'அப்பா! நீங்கள் உண்மை தெரியாமல் இருக்கும்வரை உங்களுக்கும் நல்லது...எனக்கும் நல்லது. நானே குழந்தையைப் பார்க்காம திரும்பி வந்திருக்கேன். ரத்னா அம்



மாள் ஒரு பெண்மணி இல்லை...கருணையே இல்லாத ஒரு புலி. மோகன் நம்ப வீட்டுக் குழந்தைதான். ஆனால் தாயில்லாத பிள்ளையான அவனுக்கு அவங்கதான் பாதுகாப்பாளர் எப்பவாவது பார்க்க அனுமதிக்கிறாங்களே அதுவே பெரியகாரியம். உங்களை வீட்டுக்கு கூட்டிவர அனுமதி தரமாட்டாங்க. மாப்பிள்ளையைக் கேட்டு நான் உத்திரவு வாங்கவும் முடியாது. மாப்பிள்ளையை நான் மீனாவின் இறுதி சடங்கின் போதுதான் ஒரு தடவை பார்க்க முடிந்தது. இந்த மூன்று ஆண்டில் அவரை நான் ஒரு தடவைக்கூடப் பார்த்ததில்லை. வீட்டில் இருக்கிறாரோ இல்லையோன்னு கூடத் தெரியாது. அப்பா! மீனாவின் புக்ககம் பெரிய பணக்கார இடம்தான். ஆனால் அது ஒரு பயங்கரச் சிறைச்சாலை. இந்த கொஞ்ச காலம் கூட நம் மீனா அங்கே அவங்களோட எப்படித்தான் வாழ்ந்தாளோ? ஏம்பா ஒருதடவை நீங்கள் ஒரு வெயில் வேளையில் அவளைப் பார்க்கப் போனபோது அந்த நாய்கள் கடிக்க வந்தனவே; அவற்றைப் பிடித்து வேலையாள் கட்டின பிறகு வெட்கத்தைவிட்டு அவங்க வீட்டு வராந்தாவிலே மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்தீங்களே. பிறகு மீனா வந்து உங்களோட ஒரு பத்து நிமிடம் பேசினாளே ...அதற்குப் பிறகு அவள் செத்துப் போனதுக்குத்தானே சேதி வந்தது. அப்பா! அதெல்லாம் மறந்து போச்சா?' படபடவென்று கேட்க மனம் படாத பாடுபட்டது.

நோயாளிக் கிழவருடன் தர்க்கம் ஏன்? மேலும் இப்போது அப்பாவுக்கு ஞாபக மறதி அதிகமாகிக்கொண்டு வருகிறது. அவரை ஏன் குழப்பணும்? என்று அன்று அவள் ஏதேதோ சொல்லி, நடந்ததை மறைத்து விட்டாள்.

நெற்றியில் படிந்த வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு தலை வாயில் அருகே வந்தாள். தாளை நீக்கி கூர்க்கா, அவள் உள்ளே செல்ல அனுமதித்தான். சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த நாய்கள் அவள் வருவதைக் கண்டு ஆத்திரத்துடன் குரைத்தன.

வராந்தாவில் செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு அவள் மெல்ல முன்னறைக்குள் வந்து இருக்கை ஒன்றில் அமர்ந்தாள். சுவரில் தொங்கிய கடிகாரம் பத்துமணி என்பதைக் காட்டியதும் அப்பாடா என்ற நிம்மதி அவளுக்கு. சொன்ன நேரத்தில் அவள் அங்கு வந்து விட்டிருந்தாள்.

வழக்கப்போல வேலைக்காரி முன்னறையை சாப்பாட்டறையில் இருந்து பிரித்த கதவின் ஓரத்திற்கு வந்து எட்டிப் பார்த்தாள். சமையல் ஆள் சூடான காப்பியைக் கொண்டு வந்து அவள் முன்னே வைத்தார்.

வேகமாகப் பருகிவிட்டு கைக்குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டு அவள் ஆவலுடன் மாடிப்படிகளைப் பார்த்தாள். காலடி ஓசை கேட்டது. ஆனால், ரத்னா அம்மாள் மட்டும் தனியே இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

எழுந்து வணக்கம் தெரிவித்தாள் சங்கரி.

''உங்கள் வீட்டில் தொலைபேசி இல்லாததால் என்னால் செய்தியைச் சொல்ல முடியவில்லை. மோகனுக்கு நேற்று இரவில் இருந்து காய்ச்சல். சளியும் காய்ச்சலுந்தான்—பயப்பட தேவையில்லைனு டாக்டர் சொல்லியிருக்கார். அவன் படுக்கையிலேயே இருக்கணும்னு டாக்டரின் உத்திரவு. அதனால் இந்த முறை நீ அவனைப் பார்க்க முடியாது.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சங்கரி ''நீங்கள் சரின்னா, நான் மாடியில் போய் அவனைப் பார்த்துட்டு...''

அவள் முடிக்குமுன் ரத்னா குறுக்கிட்டாள் ''எங்கள் வீட்டிற்குள் உன்னை இவ்வளவு தூரம் நான் அனுமதிக்கிறதே அதிகம். என் மகன் உத்திரவு தந்திருப்பதால் இதை நான் செய்கிறேன். என் வீட்டிற்குள் நான் அந்நியர்களை



அனுமதிப்பதில்லை. மீனாவுக்குப் பிறகு நீங்கள் எனக்கு அந்நியர்கள் தானே?''

சாட்டையால் அடித்தது போன்ற அந்த வார்த்தைகள் தந்த வேதனையை விழுங்கிக் கொண்டாள், சங்கரி. ''இந்தப் புத்தகத்தை குழந்தைக்கு வாங்கிட்டு வந்தேன்...'' கையிலிருந்த பரிசுப் பொருளை அவளிடம் நீட்டினாள்.

அசட்டையாக அதை வாங்கிப் பிரித்த ரத்னா அம்மாள், வண்ணத்தாளைச் சுருட்டி அருகிலிருந்த குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு உதட்டைச் சுழித்தாள்.

''இதே புத்தகத்தை என் தோழி தேவகி முந்தா நாள் அவனுக்குப் பரிசாக கொண்டுவந்து தந்துவிட்டிருக்கா. ஒரே மாதிரியான கதைப் புத்தகங்கள் ரெண்டு அவனுக் தேவையில்லை. இதை நீ வேறு யாருக்காவது கொடுக்கலாம்.'' என்றபடி புத்தகத்தை அவளிடம் திருப்பிக் கொடுத்தாள்.

அவ்வளவுதான். நீ போகலாம் என்ற அவளது கடுமையான பார்வையை வெகுநேரம் சந்திக்க மனம் கூசியது.

''வருகிறேன். அடுத்த மாதமாவது குழந்தையைப் பார்க்க வாய்ப்பு ஏற்படும்னு நினைக்கிறேன்'' என்று முனகி விட்டு வெளியே வந்தாள்.

நெடுஞ்சாலையில் பஸ்சுக்காகக் காத்துக்கொண்டு நின்ற அவளுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

மீனாவுக்கும், அப்பாவுக்குமாக அவள் எத்தனை முறை இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொள்வது? ரத்னா அம்மாவின் திமிர் அடங்க ஆண்டவன் வழி செய்ய மாட்டாரா? அப்பாவுக்குப் புத்தகத்தைப் பற்றி என்ன சொல்வது? கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வெட்கத்துடன் தன்னைச் சுற்றிலும் பார்த்தபடி நின்றாள்.

## 2

அன்று இரவு அவன் வெகு நேரம் உறங்கவில்லை. கூடத்துக் கயிற்றுக் கட்டிலின்மீது அப்பா புரண்டு படுப்பதை விடிவிளக்கின் மங்கிய ஒளியில் கவனித்தான்.

அவர் மனதிலும் அமைதியிருக்கவில்லை.

தமக்கு உடம்புக்கு முடியாமை ஏற்பட்டு, வேலையினின்று ஓய்வடைந்தார். மகனுடன் தன்னந்தனியே அந்த வீட்டில் வசிக்க நேர்ந்த பின்னர், அப்பா மிகவும் மாறிப் போய்விட்டிருந்தார்.

தொடர்ந்து ஏற்பட்ட துயரம் அவரை, இன்னமும் ஒரேயடியாக மாற்றிவிட்டது. நரைத்த தலையும் தாடி மீசையும், அழுக்கு சட்டையும் வேட்டியுமாக ஆளே அடையாளம் தெரியாத அளவுக்கு மாறி விட்டிருந்தார்.

அவர்கள் மிகவும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அப்பாவுக்கும் அவனது தாய்க்கும் வீட்டையும் சூழ்நிலையையும் தம்மையும் சுத்தமாக பளிச்சென்று வைத்துக் கொள்வதில் மிகவும் ஆர்வம். அப்பா வேலைக்குப் போகும்போது, தும்பைப் பூப்போல வெள்ளை சட்டையும், காக்கி பாண்டுமாகத்தான் இளம் புவது வழக்கம். அம்மா இரும்பு தோசைக்கரண்டியைக் கூட தேய்த்துப் பளபளவென்று வைத்திருப்பாள். குழந்தைகளும் அந்த நல்ல பழக்கத்தை அனுசரிக்க வேண்டுமென்று பாடுபட்டவள்.

அண்ணன்கள் தங்களது மனைவிகளுடன் எப்படி குடித்தனம் செய்கிறார்களோ... ஆனால், அவன் தன் தாயின் மறைவுக்குப்பின் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தவனாக இருந்த போதிலும் வீட்டை மிகவும் சுத்தமாகத்தான் வைத்திருந்தான். ஆனால் அப்பா... அவர் ஏன் இப்படி மாறிப் போனார். தோற்றத்தில் மட்டுமல்ல— உணர்ச்சியிலும் வெகுவாக மாறிப்போயிருந்தார். சதா பித்து பிடித்தவர் போல, சொன்னதையே சொல்லிக்



கொண்டு, வெற்றிலை பாக்கை மென்று, முற்றத்திலே காறித் துப்பிக்கொண்டு... அதற்குமேல் அவனால் சிந்திக்க முடியவில்லை. நாக்கு வரண்டுபோன உணர்வில் எழுந்து உட்கார்ந்தான். ஓசைப் படாது, மெல்ல நடந்து தாழ்வாரத்தில் தூண் ஓரமாக வைத்திருந்த கூஜாவிலிருந்து தண்ணீரை ஊற்றி சாப்பிடப் போனவன் அவசரத்தில் டம்ளரைக் கீழே உருளவிட்டு விட்டான். "யாரது!" என்று அலறியபடி அப்பா எழுந்து உட்கார்ந்தார். "நான்தான் அப்பா தாகமாயிருந்தது-" என்றபடி அவன் வேகமாகத் தண்ணீரைக் குடித்தான்.

"எனக்கும் ஒரு டம்ளர் தண்ணி கொண்டுவந்து தாம்மா. தொண்டையெல்லாம் வறண்டு போச்சு" என்றார் அவர்.

தண்ணீர் நிரம்பிய டம்ளரை அவரிடம் நீட்டியபோது அப்பா மெலிந்த குரலில் பேசினார்.

"எனக்கும் தூக்கம் வரலை-உனக்கும் வரலை என் பேச்சைக் கேட்பியா அம்மா?" தழுதழுத்தபடி தண்ணீரைக் குடித்து விட்டு டம்ளரை வைத்தார்.

"அப்பா, எப்பவாவது நான் உங்க பேச்சை மீறியிருக்கேனா? சொல்லுங்க கேட்கிறேன்."

"பிள்ளைகள் பெத்தும், எனக்கு சுகமில்லை தங்கள் கடமைகளை மறந்து ரெண்டு பேரும் நிம்மதியா வாழ்கிறாங்கள். அவங்க பணம் அனுப்பி உதவாட்டாலும் நான் தனி மனுசனா இருந்தா, கஞ்சியோ கூழோ சாப்பிட்டு பிழைச்சுக்குவேன். வயசுப் பெண் நீ. எத்தனையோ வாழ வேண்டியவ. நோயாளித் தகப்பனை வச்சுக்கொண்டு எத்தனை நாள் வேலைக்குப் போவே அம்மா?..."

"என்னை என்ன செய்யச் சொல்றீங்க?"

"என் சிநேகிதன் வடிவேலுகிட்ட சொல்லியிருக்கேன் ஏதாவது ஒரு இடம் பார்த்து சொன்னா, நமக்குத் தகுதியா இருந்தா முடிச்சுட்டா என் கடமை தீர்த்திடுமே."

''இந்த நிலையில் உங்களைவிட்டு நான் கல்யாணம் செய்து கொண்டு போகணுமா அப்பா. உங்க வரும்படியிலே இந்த வீட்டை எப்படி நிர்வகிச்சு சமாளிப்பீங்க? உங்களுக்கு உடம்புக்கு வந்தா கவனிக்கிறவங்க யார் அப்பா...?''

''அதுக்காக மெழுகுவர்த்தியா நீ உன்னை தேச்சுக்கணுமா அம்மா...முதியோர் இல்லம் ஒண்ணு ஆண்களுக்கு திறந்து வச்சிருக்காங்களே. அங்கே போய் சேர்ந்துட்டா பிறகு தொல்லையில்லையே...''

கண்களில் நீர் பனிக்க, தொண்டையை துயர் அமுக்க சங்கரி அப்பாவின் கட்டில் அருகே மண்டியிட்டபடி அமர்ந்து கொண்டாள். தண்ணீர் காணாது பிசுக்கேறி விட்ட அவரது கிராப்பு முடியை விரல்களால் மெல்லக் கோதினாள்.

''நான் இருக்கும் வரை நீங்க அங்கே எங்கும் போகப் போறதில்லை. பெண் என்று பிறந்துட்டா எல்லாருமே கல்யாணம் செய்துக்கணும்னு அவசியமா? ஒரு சிலர் தங்கள் குடும்பத்துக்காகவும், சமூகத்துக்காகவும் தங்களை அர்ப்பணிச்சிக்கிறது தப்பா? இந்தக் காலத்திலே என்னைப் போல வேலைக்குப் போற பெண்கள் பலர் கல்யாணமாகாது இருக்காங்க. பலர் கல்யாண வயசைத் தாண்டி விட்டிருக்காங்க.''

''அதுக்குத்தான் நான் பயப்படறேன். உன் இளமைக் காலம் தாண்டிவிட்ட பிறகு நான் போனதும் நீ அனாதையா நிற்பாயே அம்மா.''

''என் வேலை என்கிட்ட இருக்கிற வரை நான் அனாதையில்லேப்பா!''

''கல்யாணம் செய்து கொண்டவனும், கட்டை பிரம்மச்சாரியும் தம் கடைசி காலத்திலே ரொம்பவே நொந்து கொள்கிறான்னு வேடிக்கையா ஷேக்ஸ்பியர் கூடச் சொல்லியிருக்கார் அம்மா!''



''கல்யாணம் செய்துகிட்டவன் நினைக்கிறான்—இந்த குடும்பப் பந்தமில்லாது இருந்தால், நான் கடைசி காலத்திலே நிம்மதியா இருந்திருப்பேனென்னு பிரம்மச்சாரி நினைக்கிறான். ஐயோ சரியான வயசிலே கல்யாணம் செய்து கொண்டிருந்தா இந்த கிழ வயசிலே ஒரு வாய் தண்ணி எடுத்துக் கொடுக்க ஒரு மனைவியோ, பிள்ளையோ, பெண்ணோ இருப்பாங்களேன்னு நினைச்சு வேதனைப் படறான்.''

''அப்பா நட்ட நடுநிசியிலே நாம ரெண்டு பேரும் ஷேக்ஸ்பியரை அலச வேண்டியது அவசியமா?'' குபுக்கென்று சிரித்தாள். ஆனாலும் மனம் சுமையாகக் கனத்தது.

''என்னைப்பத்தி நீ கவலைப்படறாப்பல உன்னைப் பத்தி நான் ரொம்ப கவலைப்படறேன். ஒரு வார்த்தை நீ சரின்னு சொல்லு. வடிவேலுகிட்ட சொல்லி...''

''அப்பா இந்த வயதில் எனக்கு ஏற்ற கணவன் கிடைப்பது கொஞ்சம் சிரமம் இல்லையா?...''

''நாலு இடத்திலே விசாரிக்கட்டும், பிறகு நாம பத்திரிகையில் மணமகன் தேவை எங்கிற பகுதியிலே விளம்பரப்படுத்திப் பார்ப்போம். ஏம்மா இன்னொன்று கேட்க விரும்பறேன்.''

''கேளுங்க அப்பா'' இன்னும் கொஞ்சம் நெருக்க வந்து உட்கார்ந்தாள். அப்பாவின் உடையினின்று எழுந்த மக்கல் வாசனை மூக்கைத் தாக்கியது.

''உங்க அலுவலகத்திலோ—வெளியிலோ உனக்கு யாரையாவது பிடிச்சிருந்தா வெளிப்படையா சொல்லிடு. உன் தங்கை கல்யாணம் நம்மை மிகவும் அலட்டிவிட்டது இல்லையா? அந்த ரத்னா அம்மா என் வேலைக்கே வெடி வைக்க முயற்சி செய்தாங்களே—அதுபோல சிக்கல்களில் நீ மாட்டிக்க வேண்டாம். நம்ம தகுதிக்கு சரிப்பட்ட வாலிபனா இருந்தா...''

"அப்பா, அப்படிப்பட்ட வாலிபர்கள் கூட வரதட்சணைன்னு கொஞ்சம் கனிசமா எதிர்பார்ப்பாங்களே. காதல் வந்தாகூட அது ஒரு பக்கம்னு ஒதுக்கிட்டு. அவங்க அம்மா சொன்னபடி காசுக்குத்தானே பிரதானம் கொடுப்பாங்க. தங்கச்சி சங்கதியிலே மாப்பிள்ளை ஒரே பிடியாக இருந்தார் கல்யாணம் நடந்தது. ஆனால் அதுக்கு நாம குடுத்து வைக்கலை. அவள் போயிட்டா."

"அவனைப் பத்திய சங்கதியை விடும்மா. உன்னைப் பத்தி இப்போ பேசறேன்."

"அப்பா உங்களுக்கு ஓய்வு அவசியம். படுத்துக்கோங்க. மீதியை நாளைக்கு நேரம் இருக்கும்போது பேசிக்கலாம்" ஆறுதலாகக் கூறிவிட்டு, அவரைப்படுக்க சொல்லி வற்புறுத்தி கட்டிலில் சாயவைத்துவிட்டு, தன் அறைக்குள் வந்து தரையில் விரித்துக் கிடந்த பாயின் மீது உட்கார்ந்தாள். 'அதுக்கு நேரமில்லாம போயிட்டா என்ன செய்யிறது...' அப்பா முணுமுணுத்தது துல்லியமாகக் கேட்டது.

அப்பா கேட்ட கேள்விக்கு அவள் உண்மையைச் சொல்லவில்லை என்ற குற்ற உணர்வுடன் அவள் படுத்தாள். மறுபடியும் உறக்கமின்றி சிந்தனை அலைபாய்ந்தது.

அப்பா கேட்ட கேள்விக்கு நேரடியாக அவள் என்ன பதில் சொல்வாள்...தங்கை கணவன் குமாரனை அவள் பார்த்த முதல் நாளிலிருந்து காதலிக்கிறாள் என்பதைச் சொல்ல முடியுமா...அந்த சந்திப்பு நடந்ததே ஒரு விநோதமான சம்பவமாயிற்றே...

தங்கை மீனாவை அப்பாவும் அம்மாவும் தங்களது கண்களாக நேசித்தனர்.

கல்யாணமாகும்வரை அண்ணன்களுக்கும் அவள் ஒரு செல்லப் பெண்ணாக வீட்டில் வளர்ந்தாள்.



தன் குடும்பத்தினர் மீது மட்டற்ற பாசம் வைத்திருந்த சங்கரி, தாய்மை உணர்வோடு தங்கையை நேசித்தாள்.

"மீனா கேட்டான்னு வாங்கிட்டு வந்தேன். நமக்கு தினமும் ஒரு சாக்லெட் கட்டி வாங்கி சாப்பிட கட்டாது தான் அம்மா. அவதானே வீட்டில் இப்ப சத்தியா ஒரு குழந்தை. அதனாலே போகட்டும்னு வாங்கிட்டு வந்தேன். சம்பளம் கிடைச்ச நாள், ஏதாவது நம்ப மீனாவுக்கு வாங்கணும்னு தோணித்து" என்று பல சமாதானங்களுடன் அவள் ஒரு சாக்லெட் கட்டியுடன் வீட்டுக்குள் வருவது வழக்கம் அக்கா! என்று பச்சைக்குழந்தையாகக் கொஞ்சிக் கொண்டு அவள் கன்னத்திலே முத்தமிட்டு கையிலிருந்த சாக்லெட் துண்டத்தைப் பறித்துக் கொண்டு புழக்கடைக்கு ஓடிவிடுவாள்.

"நீ ஒருத்தியே அத்தனையையும் தின்னா நியாயமா? ஆளுக்கு ஒருதுளி ஒடிச்சுத் தரக்கூடாதா?" அம்மா கோபித்தால் சங்கரிதான் அவளுக்கு வாதாட முன் வந்துவிடுவாள்.

"ஒருத்தர் சாப்பிடவே அது போதாது-அதுல பங்கு வேறயா அம்மா...விடுங்க அவளை. நம் வீட்டிலிருக்கும் வரைதானே இந்த ஆர்ப்பாட்டமெல்லாம்" என்று சிரிப்பாள்.

பச்சைக் குழந்தையாக வீட்டில் எல்லோரிடமும் கொஞ்சி வழிந்த மீனாவும் ஒரு பட்டதாரிதான் அக்காவின் ஆலோசனைப்படி தட்டெழுத்து-சுருக்கெழுத்து முதலியவற்றில் பயிற்சி பெற்றிருந்தாள். என்னதான் அழகு இருந்தாலும், பட்டம் இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இந்தக் காலத்தில் தொழிற்கல்வி அவசியம் என்பது அவளது கருத்து

"கல்யாணத்துக்கு நிக்கிற பெண்-இது வேறே ஏன் வீண் செலவு செய்து இதையெல்லாம் கத்துக் குடுக்கணும்" அம்மா சலித்துக் கொள்வாள்.

''ஒவ்வொரு பெண்ணும் ஆபத்து சமயத்தில் தன்னை காத்துக் கொள்ள ஏதாவது ஒரு தொழிற்கல்வியில் பயிற்சி பெற்றிருக்கணும். சமையல் தெரிவதும் பாடத் தெரிவதும் —ஒரு பெண்ணின் கல்யாணத்துக்கு எத்தனை அவசியமோ அதுபோல தொழிற்கல்வியும் இப்போ அவசியமாகிவிட்டது'' அம்மாவுடன் சங்கரி விவாதித்தாள்.

வீட்டிலே சும்மா தங்கியிருந்தால் மீனாவின் குறும்புச் செயல்கள் அதிகமாகிவிடும் என்று பத்திரிகையில் வந்த அந்த விளம்பரத்துக்கு விண்ணப்பித்துக் கொள்ள முடிவு செய்தாள் அக்கா சங்கரி.

பிரபலமான அந்த நிறுவனத்தின் அலுவலகத்திற்கு அழகும், தொலைபேசியை இயக்கும் திறனும் உள்ள ஒரு பெண் தேவைப்பட்டது. தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் தெரிந்தவளாக இருந்தால் சிறப்பாக இருக்கும்.

எத்தனையோ விளம்பரத்துக்கு விண்ணப்பித்துக் கொள்கிறோம். எல்லா இடத்திலிருந்தும் பதில் வருவதில்லை என்று அசட்டையாக இருந்தபோது, அந்த நிறுவனத்திலிருந்து பதில் வந்தது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

நேர்முகத் தேர்வுக்கு உடனடியாக வரும்படி அழைப்பு கிட்டியிருந்தது. மீனாவுக்கு தனியே போக பயம். அக்காவைத் துணையாக வர அழைத்தாள்.

ஒருநாள் தன் வேலைக்கு விடுப்புப் போட்டுவிட்டு அவள் தங்கையுடன் அந்த அலுவலகத்திற்குப் போயிருந்தாள்.

எத்தனை பெரிய வரிசை. நகரத்தில் உள்ள அத்தனை பட்டதாரிப் பெண்களும் அந்த வேலைக்கு மனு செய்து கொண்டு விட்டது போல கூட்டம் நிரம்பி வழிந்தது. நல்லவேளை தன்னுடைய புது மல்மல் சேலையை உடுத்திக் கொண்டு லேசான ஒப்பனையில் தன் தங்கையை அவள் கூட்டிக்கொண்டு வந்திருந்தாள். அழகான பெண்



தேவை என்று அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்ததாலோ என்னவோ அங்கு கூடியிருந்த அத்தனை பெண்களும் பார்க்கப் பளிச்சென்று நன்றாகவே இருந்தனர். இத்தனை பேரில் மீனாவுக்கு எங்கே இடம் கிடைக்கப் போகிறது என்று மனம் தொய்ந்து போனாள்.

உள்ளே வர அழைப்பு வந்ததாக அலுவலகப்பையன் கூறியபோது சட்டென்று எழுந்து தங்கைக்கு பதில் அவள் உள்ளே சென்றாள். குளிர்சாதன அறையின் குளுகுளு அந்த வெயிலுக்கு மிகவும் இதமாக இருந்தது. கால் புதையும் கம்பளம் பாதங்களை அனுசரணையுடன் தழுவியது.

சன்மேகாவில் பளபளத்த மேஜைமீது சிவப்பு— நீலம் வெள்ளை என்ற வண்ணத்திலே தொலைபேசிகளுடன் சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவனைக் கண்டு பிரமித்துப் போனாள்.

''மிஸ் மீனா என்னும் விண்ணப்பதாரி நீங்கதானே?'' அவன் கேட்டபோது விழித்துக் கொண்டாள். சுருண்ட முடியும், பளிச்சிட்ட பல் வரிசையுமாக கச்சிதமான உடையில், எத்தனை கம்பீரமாக அவன் தெரிந்தான். எட்டாத கொம்புக்கு ஆசைப்படக் கூடாதுதான். ஆனால் யாரும் எட்டாத கொம்பு என்று ஆரம்பத்தில் எண்ணிப் புறக்கணிப்பதில்லையே அவன் அந்த நிறுவனத்தின் தலைவன்—அதன் சொந்தக்காரன் கோடிக்கணக்கான சொத்துக்கு அதிபதி. அவனைக் கண்டு மயங்கிப்போய் நிற்பதில் பயன்?

''உங்களைத்தான் கேட்கிறேன். உங்க பெயர்தானே மிஸ் மீனா'' அவன் குரல் ஓங்கி ஒலித்தபோது அவள் பயந்து போனாள் முத்தாக நெற்றியில் துளிர்த்த வியர்வைப் பொடியைத் துடைத்துக் கொண்டாள். ''இல்லை

சார். என் தங்கை பெயர் மீனா. அவள் உள்ளே வர பயப்படுவதால்...'' மென்று விழுங்கினான்.

''எம்மா விளம்பரம் கொடுத்துட்டு நாங்க வீணாகப் பொழுதைக் கழிக்க உட்கார்ந்திருக்கோம்னு நினைச்சிங்களா அல்லது வேறு நோக்கத்தோடு விளம்பரம் செய்ததாக எண்ணிக் கொண்டீங்களா...''

''மன்னிச்சுடுங்க சார். அவள் பட்டதாரி. நீங்க கேட்ட அனுபவங்கள் உள்ளவள். ஆனால், தொலைபேசியை இயக்கத் தெரியாது. அதனாலே பயந்துபோய் என்னை முன்னால் அனுப்பிச்சு அது அவசியமாக இருந்தால், கத்துக்க முயலுவதாக சொல்லச் சொன்னாள். இப்படி உங்கள் விதிகளை மீறி அவளுக்காக நான் தூது வந்திருப்பது பற்றி மன்னிக்கணும்.''

''சரி, பரவாயில்லை. அந்த மிஸ் மீனாவைக் கூப்பிட முடியுமா?'' வெளியே ஓடி வந்து தன் தங்கையுடன் மறுபடி அந்த அறைக்குள் நுழைந்தான்.

தன் சான்றிதழ்கள்—பட்டப்படிப்பு சான்றிதழின் காப்பி இத்யாதிகளை மீனா மேஜைமீது வைத்துவிட்டு நடுக்கத்துடன் நின்றாள். அவன் அவைகளைப் பார்க்காது, மீனாவையே வைத்த கண் வாங்காது பார்த்ததைக் கண்டு சங்கரியின் மனம் படபடத்தது.

அத்தனை பெயர்களில் மீனாதான் அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். தொலைபேசியை இயக்க வேண்டிய தொல்லையை அவன் அவளுக்குத் தரவில்லை. ஒரு கணக்கராக மாதம் ஐநூறு ரூபாய் சம்பளத்திலே அவளை ஏற்றுக் கொண்டான்.

அக்கா—தங்கை என்றாலும் அவள் மனதிலே ஒரு குறுகுறுப்பு ஏற்படத்தான் செய்தது!

சில வருடங்கள் வேலை செய்த பிறகுதான் சங்கரி இந்த சம்பளத்தை எட்டிப்பிடிக்க முடிந்தது.



எடுத்த எடுப்பிலே தங்கைக்கு அத்தனை சம்பளமா? இதன் பின்னணியில் வேறு ஏதாவது சிக்கல் இருக்குமா? சில இடங்களில் இப்படி அழகான பெண்களை வேலைக்கு வைத்துக்கொண்டு அவர்களைப் பின்னால் வேறு பல அலுவல்களில் ஈடுபடுத்தி விடுவதாகப் படித்திருக்கிறாளே ...சுரீர் என்ற அந்த நினைவுகள் நெஞ்சைத் தாக்க அவள் வெளியே சொல்லிக் கொள்ள முடியாது புழுங்கினாள்.

மீனா வேலைக்குப் போய் வந்தாள். ஆனால் அவளிடம் காணப்பட்ட மாறுதல் பெற்றோர்கள் கண்களில் படவில்லை. கூர்மையாக அவளையே கவனித்துக் கொண்டிருந்த சங்கரிக்குத் தெரிந்து விட்டது.

ஐந்து மணிக்கு வேலை முடிந்ததும் ஐந்து பதினைந்துக்கு வரும் பஸ்ஸைப் பிடித்தாலும், அவள் ஆறரை மணிக்கு வீட்டுக்கு வந்து விடலாம். ஆரம்பத்தில் அப்படித்தான் வந்தாள் மீனா. ஆனால், நாளடைவில் அவள் நேரம் கழித்தே வீட்டிற்கு வரத் தொடங்கினாள். சில சமயம் அவள் வீட்டுக்குள் வரும்போது கூந்தலில் மல்லிகைப்பூ இருக்கும். முகத்திலே அலாதியான மகிழ்ச்சியின் அடையாளம் தெரியும்.

தோழிகளின் அனுபவங்களைக் கேட்டு—பத்திரிகையில் பல படித்து சங்கரி ஓரளவு உலகத்தைத் தெரிந்து கொண்டிருந்தாள். மீனாவின் போக்கு அவளுக்கு ஒரு பயத்தை உண்டாக்கியது. சும்மா வீட்டோடு இருந்த பெண்ணை வேலைக்குப் போகச் சொன்னது தவறு. வேலைக்குப் போய்வரப் பெண்களுக்குத் தனியானதொரு மன இடம் வேண்டும். மீனாவைப் போன்ற பயந்த சுபாவமுடைய பெண்கள், கற்பனையில் மிதப்பவர்கள்—உணர்ச்சி வசப்பட்டு ஏமாந்து விடும் கோழைகள் வேலைக்குப் போவது தவறு. தங்கையின் சம்பாத்தியத்தால் வீட்டின் பற்றாக்குறை நிறையும் என்று நினைத்து அவள்

ஆரம்பித்த காரியம்-அவளை எங்கே கொண்டுவிடப் போகிறதோ? பலவாறு கவலைப்பட்டு கொண்டிருந்த சங்கரி, கண்டுபிடிப்பு செய்ய அரை நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு மீனா வேலை செய்த அலுவலகம் அருகே பஸ் நிலையத்தில் கால் கடுக்க நின்று கொண்டிருந்தாள். அங்கிருந்து அந்த நிறுவனத்தின் வாயில் தெரிந்தது. மீனா படிகளில் இறங்கி முன் பக்கத்து தோட்டத்திற்குள் வருவதும் தெரிந்தது. புத்தம் புது பென்ஸ் காரை ஓட்டிக் கொண்டு சுகுமாரன் தோட்டத்து நடைப்பாதையில் நின்று கதவைத் திறந்துவிட்டான். சட்டென்று ஆவலுடன் மீனா தாவி வண்டிக்குள் முன் இருக்கையில் அவன் பக்கத்தில் ஏறிக்கொண்டதைக் கண்டு, வியர்த்து விருவிருத்துப் போனாள் சங்கரி.

இப்போது நேரம் கழித்து வரும் காரணம் அவளுக்குத் தெரிந்துவிட்டது. எல்லை மீறிவிடுமுன் அவள் அதற்கு அணைபோட வேண்டுமே? பெற்றோர்களுக்குத் தெரிந்தால்-மனம் உடைந்து போவார்கள். இது சங்கரியால் ஏற்பட்ட தொல்லை. துன்பம் என்று பழிவேறு அவளுக்கு ஏற்படும். அண்ணன்மார்கள் காதில் பட்டால், கல்யாணத்துக்கு முன்வந்து உதவாவிட்டாலும், கண்டபடி பேசி ஆர்ப்பாட்டங்கள் செய்வார்களே? அவசரமாக ஒரு ஆட்டோவைப் பிடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். மாலை நேரம் மங்கி, இருள் பரவத் தொடங்கியது. தெரு விளக்குகள் எரியத் தொடங்கின. வாசல் பக்கம் எட்டிப் பார்த்து அவளுக்குக் கழுத்து வலிக்கத் தொடங்கியது.

மணி ஏழரையாகியது. மீனாவை இன்னமும் காணவில்லை. இந்தப் பெண் ஏன் நேரமாகியும் வரவில்லை—அம்மாவின் சந்தேகத்திற்கு பதில் சொல்ல முடியாத சங்கடம். மணி எட்டை எட்டிக் கொண்டிருந்த சமயம் மீனா ஏதோ ஒரு பாட்டை முனகியபடி தோள் பையுடன்



உள்ளே நுழைந்தாள். குப்பென்று அவள் மீது வெளிநாட்டு செண்டின் மணம் கமழ்ந்தது. தலையில் மல்லிகைப் பூவும்-கண்களில் மகிழ்ச்சியுமாக அவள் உள்ளே வந்தாள்.

''இத்தனை நாழி எங்கே போயிருந்தே?'' அம்மா கேட்டதற்கு கூசாது ஒரு பொய்யை பட்டென்று மீனா சொன்னாள். ''என் சிநேகிதி நீலா வீட்டுக்குப் போய்ட்டு வந்தேன் அம்மா. அவள் சிங்கப்பூருக்குப் போய்விட்டு வந்தாளாம். எனக்கு ஒரு வெளிநாட்டு செண்ட் பரிசா வாங்கிட்டு வந்தாள். இதைப் பாருங்க'' என்றபடி தன் தோள்பையிலிருந்து அந்த பெரிய செண்ட் பாட்டிலை எடுத்து மேசைமேல் வைத்தாள்.

மருக்கொழுந்து தைலத்தை ஒரு ரூபாய்க்கு வாங்கிப் பூசிக்கொண்டு வளர்ந்தவள் அம்மா. வாசனைப் பொடியை ஒரு பொட்டலம் வாங்கித் தேய்த்துக் குளித்துவிட்டு அந்த வாசனையில் கிறங்கிப் போய்விடும் பத்தாம் பசலி.

நகரத்து சிலதெருக்களில் நுழைந்து இந்த வெளிநாட்டு சரக்குகளை வாங்க வேட்டையாடும் நாகரீக கூட்டத்தைச் சேர்ந்தவள் இல்லை. சங்கரியின் அலுவலகத்தில் வேலை பார்த்த மீனாவுக்கு வெளிநாட்டு சரக்குகள் மீது அபார மோகம் அவள் மூலம் சோப்பு-சீப்பு செண்ட் இத்யாதிகளின் விலை என்ன என்று தெரியும் முன்னூறு ரூபாய் பெறும் அந்த செண்டை அவள் தோழி நீலா அவளுக்குப் பரிசாகத் தந்துவிட்டாள் என்பதை அம்மாவால் வேண்டுமானால் நம்ப முடியும்-ஆனால், அவள் நம்ப முடியாதே ஆனாலும் பெற்றோர்கள் முன்னால் போட்டு உடைக்க மனமின்றி ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு இருந்தாள்.

மறுநாள் காலை இருவரும் அலுவலகம் புறப்பட்ட போது சாலைக்குள் நுழைந்ததுமே கேட்டாள் அவள்.

''ஐந்து பைசா கடனாகக் கொடுத்து உதவமாட்டாள் உன் தோழி நீலா. படு கருமி. அவளா அந்த செண்ட் பாட்டிலை உனக்கு இனாமாகத் தந்தா—''

''ஏன் கொடுக்கக்கூடாது திடீர்னு இப்போ அவளுக்கு தாராள மனம் வந்துட்டது.''

''என்ன சொன்னே? உன்னை நேரில் உங்க நிறுவனத்தின் அதிபர் காரில் பார்த்தேன் என்றால்...'' கோபத்தை அடக்க முடியாது. சாலையில் மற்றவர்கள் பார்ப்பார்கள் என்ற எண்ணமில்லாது படீர் என்று கன்னத்தில் அறைந்து விட்டாள்.

''நீ என் அக்காவாக இருக்கலாம்-வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கலாம்-இப்படி நடுத்தெருவில் கன்னத்தில் அடிக்க உனக்கு உரிமை கிடையாது நான் வயதில் மேஜராகி விட்டவள், தெரிஞ்சுக்கோ...'' உரத்த குரலில் அலறிவிட்டு, நாலு பேர் பார்த்து என்ன சங்கதி என்று தங்களுக்குள்ளே கேட்குமளவு கத்திவிட்டு, ஒரு டாக்சியைப் பிடித்துக் கொண்டு போய்விட்டாள் மீனா.

முற்றத்திலே ஒரு பூனை குதித்து மியாவ் என்றாலும் பயத்தில் அலறிவிடும் இந்தப் பெண்ணுக்கு காதல் எத்தனை துணிச்சலைக் கொடுத்துவிட்டது? அன்று அவளுக்கு வேலை மேலேயே நாட்டம் இருக்கவில்லை. பகல் உணவுக்குப் பின் அவள் தலைமைக் கணக்கரிடம் விடுப்பு கேட்டு வாங்கிக் கொண்டு நேரே சுகுமாரனின் நிறுவனத்து அலுவலகத்திற்குப் போனாள்.

''மானேஜிங் டைரக்டரை அவசரமாகப் பார்க்கணும்?'' என்று வந்து நின்றவளை மீனா கவனிக்கவில்லை. அவளும் பார்க்கவில்லை. பின்னர்தான் தெரிந்தது. அவள் அந்த அலுவலகத்தில் வேறு ஒரு பகுதியில் தனி அறையில் உட்கார்ந்து வேலை பார்க்கும் சலுகைகளைப் பெற்றிருந்தாள் என்று.



சுகுமாரனின் குளிர்சாதன அறைக்குள்ளே நுழைந்து நேருக்கு நேர் அவனைப் பார்த்தபோது மனதிலே ஒரு உறுத்தல் ஏற்பட்டது. அழகிலே அவள் தங்கைக்கு எந்த விதத்திலும் குறைந்தவள் இல்லை சிறிது மட்டுமே நிறத்தில் மட்டும்—வயதால் சற்று முதிர்ச்சியடைந்த முகத்தோற்றம். திறமையில் அவளுக்கு ஈடு அவர்கள் வீட்டு ஆண் பிள்ளைகளைக்கூட சொல்ல முடியாது. அப்படியிருந்தும் முதலாக அவள் அந்த நேர்முக சந்திப்பின் போது அவனைப் பார்த்து பேசியும், சுகுமாரன் மனதை மீனாதானே ஈர்த்துக்கொண்டு விட்டிருக்கிறாள்.

லேசாக ஒரு சிறு பொறாமை கூட அவளுக்கு ஏற்பட்டது. ஆனால், இந்த மாதிரியான சிநேகிதம் அவளுக்கு ஒத்து வராது. ஒரு ஆண், ஒரு பெண்ணை விரும்பினால் அது கல்யாணம் என்கிற பந்தத்தினால் சிறப்படைய வேண்டுமென்ற கருத்து கொண்டவள்.

''எஸ்... என்ன வேணும்'' என்று தலையை நிமிர்த்தி சுகுமாரன் கேட்டான்.

''உங்களுக்கு என்னை ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன்...'' ஏளனமாக ஆரம்பித்தாள்.

''உட்காருங்கள். மீனாவின் அக்கா சங்கரிதானே? ஏதாவது சாப்பிடுகிறீங்களா? காப்பியா... குளிர் பானமா?...''

கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு அவன் காட்டிய இருக்கையில் அமர்ந்தாள். குளிர்சாதனத்தை மீறி உடம்பு சூடாகி கொதித்தது.

''எங்க அப்பா வந்து விசாரிக்க வேண்டிய சங்கதி—நான் விசாரிக்க வேண்டி வந்துவிட்டது. என்னா நான்தான் அவளை இங்கே வேலைக்கு அமரும்படி கட்டாயப் படுத்தினேன்.''

''அதில் தவறு ஒன்றுமில்லையே?''

''மிஸ்டர் சுகுமாரன்...நீங்க என் தங்கையோட ரொம்ப நெருங்கிப் பழகறீங்க...அவள் உலகம் தெரியாது வளர்ந்தவள்.''

''ஒப்புக் கொள்றேன். அவகிட்ட ரொம்ப நெருங்கிப் பழகுகிறேன். சொல்லப்போனால் நான் அவளை விரும்பறேன்...''

சங்கரியின் நெஞ்சு படபடத்தது எல்லை மீறிய கோபத்தில் அவளுக்குப் பேச்சு தடுமாறியது!

''என் தங்கையை நான் நாளையிலிருந்து வேலைக்கு அனுப்பப் போவதில்லை போதும் அவள் வேலை செய்தது'' என்றாள்.

''நானும் உங்களைப் போலவே நினைக்கிறேன். அவள் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாளையிலிருந்து அவள் வேலைக்கு வரவேண்டாம்னு நானே சொல்லி விட்டேன். ஆனாலும் நீங்க கோபத்தில் அவளைக் கன்னம் வீங்கும்படி அடிச்சது எனக்குப் பிடிக்கலை. இனி அவளை யாரும் அடிக்க முடியாது— அதிகாரம் செய்ய முடியாது.''

''நீங்க யார் இந்த சட்டங்களைப் போட. ஊரான் வீட்டுப் பெண்ணுக்கு வேலி போட உங்களுக்கு என்ன உரிமை?'' கோபத்துடன் கேட்ட அவளைப் பார்த்து அவன் கடகடவென்று சிரித்தான்.

''நானும் மீனாவும் ரகசியமாகப் பதிவுத் திருமணம் செய்து கொண்டுவிட்டோம். இனி பகிரங்கமாக என் தகுதிக்காக ஒரு விமரிசையான கல்யாணத்தை செய்ய அம்மாவிடம் உத்திரவு வாங்கப் போகிறேன். இதுக்கு பெருத்த எதிர்ப்பு சொல்வாங்கனு தெரிஞ்சுதான் ரகசியமாக முதலில் பதிவுத் திருமணம். பிறகு சம்பிரதாயக் கல்யாணம் செய்யவும் நான் திட்டமிட்டேன்.



''மீனா சில தினங்களுக்கு முன்பே என் மனைவியாகிவிட்டாள் அவளை அடிக்கவோ மிரட்டவோ உங்களுக்கு அதிகாரம் இல்லை அது இருக்கட்டும் இப்போ இந்த நல்ல சங்கதியைக் கேட்ட நீங்கள் அதைக் கொண்டாடும் வகையில் காப்பியோ, ஒரு குளிர் பானமோ என்னோட சாப்பிடக் கூடாதா?...பையனைக் கொண்டுவரச் சொல்லவா?'' கேட்டதும் சங்கரி இருக்கையிலிருந்து எழுந்து நின்றாள்.

உண்மையில் மீனாவை இத்தனை பெரிய இடத்து வாலிபன் மணந்து கொண்டு விட்டாரா?... இது உண்மையா? சில சினிமாக்களில் வருகிற கதை போல, மீனாவுக்கு இப்படி ஒரு யோகமா? ''என்ன கிளம்பிட்டீங்களா —உங்க தங்கையைக் கூப்பிடட்டுமா? பேசிவிட்டு போங்க. அவசரமா?''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். பார்த்தவுடன் தன் மனதிலே பதிந்து கொண்ட அந்த சந்திர உருவம், அவளது தங்கைக்கு சொந்தமாகிவிட்டதே...

## 3

அதற்குப்பின் சங்கரி யந்திர கதியில் வேலைக்குப் போய் வந்தாள். அப்பாவும் அவளிடம் கல்யாணத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை. ஒருநாள் அவளை பஸ் நிலையத்திலிருந்து திரும்பும் வழியில் அவள் அப்பாவின் நண்பர் வடிவேலு என்ற கல்யாணத் தரகர் எதேச்சையாக சந்தித்தார்

''உங்க வீட்டுக்கு வந்து உடனடியாக இதைச் சொல்லணும்னு நினைச்சேன். வழியில் உன்னைப் பார்த்துட்

டது நல்லதாச்சு. எதுக்கும் உன் சம்மதத்தைக் கேட்டு கிட்டு மேலே தொடரலாம் இல்லையா? இப்படி பாதை யோரம் கொஞ்சம் நிக்க முடியுமா?...''

உள்ளூரப் பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள். அவளுக்கு வடிவேலுவைப் பிடிக்காதது என்ற காரணம் ஒருபுறமிருக்க, வீட்டுக்குப் போய் அவசரமாகக் குளித்துவிட்டு அவள் அப்பாவுக்கு பத்திய உணவு தயாரித்து தந்துவிட்டு கையோடு கொண்டு வந்த பைலைப் பார்த்து முக்கிய சங்கதிகளை சேகரிக்க வேண்டிய வேலை தலைக்குமேல் கிடந்தது. மணலைக் கயிறாகத் திரிக்கும் இந்த மனிதனுடன் வீணாகப் பேச வேண்டியது அவசியமா? தாடை இறுக பாதையோரம் சற்று நின்றாள்.

''ஒரு நல்ல இடம் வந்திருக்கு. பெண்ணை அவருக்கு பிடிச்சுடும். உனக்கு படிப்பில் குறையா? அழகில் குறையா? அவரை உனக்குப் பிடிக்கணும். வயது நாற்பத்தஞ்சுதான்—இரண்டாம் தாரம். மூத்த மனைவி விட்டுப் போன ஒரு பிள்ளையும், பெண்ணும் இருக்காங்க. பையன் கல்லூரியில் சேர்ந்திருக்கான். பெண் பத்தாவது படிக்குது. அவர் பெரிய அலுவலகத்து உயர்பட்ட அதிகாரி. மூத்தவள் விட்டுப் போன நகைநட்டு இருக்கு. சொந்த வீடு. கார்-இத்யாதி இருக்கு. வசதியான இடம். உன்னைப் பார்க்க ஒருநாள் ஏற்பாடு செய்ய றேன்'' படபடவென்று பேசிக்கொண்டிருந்தபோது, அவள் எரிச்சலுடன் குறுக்கிட்டாள் ''தேவையில்லை சார். நான் கல்யாணம் பண்ணிக்கிறதாக உத்தேச மில்லை.''

''அப்பா ஏதோ சொன்னாரே?...''

''அவருக்கு நோய் வந்த பிறகு ஏதேதோ உளருகி றார். அவர் பேச்சை பெரிசா எடுத்துட்டு நீங்க அலைய வேண்டாம். இப்போ நீங்க அப்பாவை பார்க்க வர்றதில்



ஒரு பயனும் இல்லை. மருந்துகளைச் சாப்பிட்டுட்டு அவர் மயக்கமாக தூங்க ஆரம்பிச்சுடுவார்'' நறுக்கென்று பேசி விட்டு நகர்ந்தாள்.

எவனோ முன்பின் தெரியாத ஒருவனுக்கு இரண்டா வது மனைவியாகக் கழுத்தை நீட்டி அவனது முதல் மனைவி விட்டுப்போன குழந்தைகளை பராமரிக்க ஒப்புக் கொள்வதில் அவளுக்கு வீண் பிரச்சினைதான். இத்தனையும் எதற்கு? சமூகத்தில் அவளும் கல்யாண மானவள் என்று ஒரு மஞ்சள் கயிறை கழுத்தில் சுற்றிக் கொள்ள.

ஒரு பிடி சோற்றுக்கும், ஒரு சேலைக்கும் அவள் எத்தனை சிரமங்களை மனைவி என்கிற நிலையில் அடைய வேண்டியிருக்கும்? தேவையில்லை அந்தப் பதவி தேவையில்லை—அந்த சிரமங்களும் தேவையில்லை. அவளை அவளால் காப்பாற்றிக்கொள்ள இயலும். இனி வருங்காலத்தில் பெண்கள் அப்படித் தனியே வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் துணிந்து தனியே வாழ முற்பட்டால் சமுதாயம் தன் குறுகிய கொள்கைகளை மாற்றிக்கொள்ளும். ஒரு காலத்தில் கலப்புத் திருமணங்களைக் கேட்டு கலகலத்த இந்த சமூகம் இப்போது அவைகளை வரவேற்கும் பாவ னையில் பார்க்கிறதே அவளுக்குக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைதான். ஆனால் எவனையாவது ஒருவ னைக் கட்டிக்கொண்டு வாழவேண்டும் என்ற நிர்பந்தம் தேவையில்லை. புலி பசித்தால் புல்லைத் தின்பதில்லை. தகுந்தவன் கிடைக்காவிட்டால் தனியாக வாழ தைரிய மிருக்கிறதே.

வீட்டுக்கு வந்தவள் வடிவேலுவை சந்தித்தது பற்றி சொல்லவேயில்லை. அன்று இரவு நடுநிசி வேளையில் அப்பா நெஞ்சுவலியுடன் எழுந்து உட்கார்ந்தார்.

''கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடுப்பியா...மார்பை என்னவோ அடைக்கிறதே?'' தவியாகத் தவித்தார்.

தண்ணீரையும் கொஞ்சம் சோடா உப்பையும் கலக்கிக் கொடுத்தாள் அதுதான் அவள் அறிந்த வைத்தியம்.

முகத்தில் துளிர்த்த வியர்வையும், இடது கையில் வலியும் மாரை ஏதோ அடைக்கும் உணர்வுமாக மூச்சு முட்ட அவர் பட்ட வேதனையை சகிக்க முடியாது அவள் விரைந்து வாயிற்கதவைத் திறந்துகொண்டு அச்சமின்றி அருகிலிருந்த ரிக்ஷா நிலையத்திற்கு ஓடினாள்.

எப்பொழுதாவது அவள் அவசரத்திற்கு ரிக்ஷாவை உபயோகிப்பது உண்டு.

''கந்தசாமி எழுந்திருப்பா!'' என்று அங்கு மரத்தடியில் தன் ரிக்ஷாவிலே உறங்கிக் கொண்டிருந்தவனை எழுப்பி ஏறிகொண்டாள். அடுத்த தெருவிலிருந்த டாக்டர் தர்மலிங்கம் உண்மையிலேயே தர்மவான். இரவில் எந்த நேரத்திலும் யார் அழைத்தாலும் அலுத்துக் கொள்ள மாட்டார். தமது ஸ்கூட்டரில் அவர் விரைந்து வந்தார்.

அவளது தந்தையை பரிசோதித்த டாக்டர் அவளிடம் ரகசியமாகக் கூறினார். ''வலிக்கு ஏதாவது ஊசி போட்டு விட்டு காலையில் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அவரை அகற்றுவதுகூட யோசிக்க வேண்டிய கட்டம்'' என்று கையை விரித்தார்.

விடியற்காலை ''சங்கரி...சங்கரி'' என்று மருந்து போதையை மீறி அப்பா அவளை அழைத்தார். அருகில் ஓடி உட்கார்ந்து கொண்டாள்.

''உன்னை விட்டுட்டு போகிற காலம் வந்துட்டதும்மா...''



''அப்படியெல்லாம் பேசாதிங்க அப்பா'' அழுகையில் திணறினாள். ''கடமையைச் செய்யாம போறேனேன்னு தான் வருத்தம்.'' என்றவர் பின்னர் பேசவில்லை.

''அப்பா...அப்பா...'' என்று பரபரப்புடன் அவர் முகத்தை திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

அப்பா அவளுக்கு பதிலளிக்க முடியாது போய்விட்டிருந்தார். தன்னந்தனியே அவள் அந்த பேரிடியை எப்படித்தான் தாங்கிக் கொள்வாள் என்று துயரமும் பயமுமாக நடுங்கிப் போனாள். ஆனால், இப்படி எதிர் பாராத விபத்துகள் ஏற்படும் சமயம் மிகவும் கோழையாக இருப்பவர்களும் பலசாலிகளாக— துணிவுள்ளவர்களாக மாறி விடுகிறார்கள்.

மரணம் என்பது அவள் புதிதாக பார்க்கும் அனுபவமல்ல. தங்கை—அம்மா இருவரும் தந்த அதிர்ச்சியில் அவள் மனம் அப்பாவைப்பற்றி எதிர்ப்பார்ப்புடன்தான் இருந்தது அதற்குப் பின் அவளுக்கு எத்தனை வேலைகள். மூச்சுவிட முடியாது ஒன்றன்பின் ஒன்றாக எத்தனை காரியங்களை அவளே தனியாக நின்று தெரு மனிதர்கள் உதவியுடன் செய்து முடிக்க வேண்டியிருந்தது. நல்ல வேளை—அவள் தொலைபேசியில் கூப்பிட்டு தெரிவித்ததற்கு இணங்க அவள் சகோதரர்களில் ஒருவன் ஐதராபாத்துக்கு மாற்றலாகி விட்டிருந்தவன் உடனடியாக மனைவி, மக்களுடன் நகரத்திற்கு பறந்து வந்து சேர்ந்தான். வெளிநாட்டிலிருந்தவனால் அனுதாபச் செய்தி மட்டுமே அனுப்ப முடிந்தது. பின்னர் செலவுக்கு பணம் அனுப்புவதாக அதில் தெரிவித்திருந்தான்.

ஐதராபாத்துக்கு சமீபத்தில்தான் சின்ன மகனுக்கு வேலை மாற்றலாகி விட்டிருந்தது. வேலை உயர்வு ஏற்பட்டிருந்ததால் அவன் தன் அலுவலகக் காரியங்களை அவசியம் கவனிக்க வேண்டியிருந்தது. அப்பாவுக்குக் கொள்ளி

போட்டு கரையேற்றிவிட்டு மற்ற காரியங்களை சுருக்க
மாக செய்து முடித்துவிட்டு பத்தாம் நாளே அவன் புறப்
பட்டுப் போய்விட்டான். ஒப்புக்காகக்கூட அவன் மனைவி
அவளைத் தங்களுடன் வந்து வசிக்க கூப்பிடவில்லை.
அப்படி அழைத்தாலும் சங்கரி தன் வேலையைவிட்டு
அவர்களுடன் தங்கி தன் சுதந்திர வாழ்க்கையை
பாழாக்கிக் கொள்ள விரும்பவில்லை.

அக்கம் பக்கத்தவர்கள் பேசுவார்களே என்பதைப்
பற்றியும் அவள் சிறிது கவலைப்பட்டாள் ஆனால் இனி
தன்னந்தனியாக அவள் அதே வீட்டில் வசிப்பது தவிர
வேறு வழி? மறுபடியும் அவள் வேலைக்குப் புறப்பட்டாள்.

அன்று அவள் வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பு
முன் அவசரத்திற்குத் தேவைப்படும் என்று ஒரு பிஸ்கட்
பொட்டலத்தை வாங்க அருகிலிருந்த சிறப்பு அங்காடிக்
குள் நுழைந்தாள் தான் வாங்கிய பொருளுக்கு பணத்தைக்
கொடுத்துவிட்டு கவுண்டரிலிருந்து திரும்பிய சுகுமாரன்
அவளைப் பார்க்கவில்லை ஆனால், அவள் பார்த்து
விட்டாள்.

அவளது நெஞ்சு கோபத்திலும் இனங்காணாத ஒரு
இன்பத்திலும் துடிதுடித்தது தன் தந்தை மரண மடைந்து
விட்டார் என்ற செய்தியை அவள் தொலைபேசி மூலம்
அவனது அலுவலகத்து ரிசப்ஷனிஸ்ட்டிடம் சொன்ன
போது அவன் வீட்டைவிட்டு இன்னமும் வந்து சேர
வில்லை என்ற தகவல் கிடைத்தது வீட்டுக்கு போன்
செய்தபோது ரத்னா அம்மாள்தான் பேசினாள். மக
னுக்குச் சொல்வதாகச் சொன்னாள். ஆனால், சம்பந்தி
யம்மாளோ, மருமகனோ அவளது தந்தையின்
இறுதிக் கடனுக்கு வரவில்லை பலநாள் ஆகியும் ஒரு
ஆறுதல் கடிதம்கூட போடவில்லை.



விர் என்று அவன் தன் பென்ஸ் காரில் புறப்பட்டு,
போகும்வரை திகைப்புடன் நின்று பார்த்துவிட்டு. வேத
னையுடன் தனக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு புறப்
பட்டாள்.

அப்பா இல்லாது வெறுமையாகிவிட்ட வீட்டிற்குள்
கனத்த மனதுடன் அவள் இரவு பொழுதைக் கழிக்க
வேண்டுமே என்ற ஒரு திகில் அடி மனதில் புரண்டது.

அந்த துயர சம்பவத்தின்போது அக்கம் பக்கத்தவர்
கள் உதவி செய்தார்கள். அவள் வேலை செய்த இடத்தில்
மானேஜர்கூட அனுதாபம் தெரிவித்து விடுப்பு நாட்கள்
வேண்டியதை மறுக்காது தந்து உதவினார். தலைமை
கணக்கரிலிருந்து ஆபீஸ் பையன் வரை எல்லோரும் அவ
ளுக்காகப் பரிதாபப்பட்டனர். ஆனால், எத்தனை
நாளைக்கு பிறரின் அனுதாபத்தில் அவள் வாழ இயலும்.
ஒரு சில நாட்களில் அவரவர்கள் அவரவர்களின் வேலை
யில் ஈடுபட்டதும் சங்கரி எனும் பெண் தன்னந்தனியாக
ஒரு சிறு வீட்டில் வாழ்கிறவள் என்ற நினைவு அவர்களிட
மிருந்து மறைந்துபோனது இயல்பே.

அப்பாவின் மறைவுக்குப் பிறகு சங்கரியும் சற்று
மாறிப் போயிருந்தாள் வேலையிலிருந்து லாடம் கட்டிய
குதிரை போல அவள் வேகமாக வீட்டுக்கு வரத் தேவை
யிருக்கவில்லை. ஒரு வேளை காலையில் சமைத்ததைத்
தின்றுவிட்டு, அதையே பகல் டிபனாக எடுத்துக் கொண்டு
புறப்பட்டு விட்டதால் இரவு நேரங்களில் அவள் சமைப்
பதையே நிறுத்திக்கொண்டு விட்டிருந்தாள். இரண்டு
துண்டு ரொட்டி அல்லது சில பிஸ்கட்டுகள் ஒரு தம்ளர்
தண்ணீர் என்று இரவு உணவை தயாரிப்பதை சிக்கன
மாக்கிக் கொண்டுவிட்டிருந்தாள். குளித்து மாற்றுடை
அணிந்து கொண்டு, அப்பாவின் படத்தருகே விடிவிளக்கை
ஏற்றி விட்டு தன் இரவு ஆகாரத்தை முடித்துக்கொண்டு,

கையோடு கொண்டு வரும் பைல்களைப் பார்ப்பாள். ஏதாவது கதைப் புத்தகம் படிப்பாள். வானொலி நிகழ்ச்சிகளை சிறிது நேரம் கேட்பாள். எல்லாவற்றையும் மீறி துயரம் நெஞ்சை அடைத்தால் ஒரு மூச்சு அழுவாள். பின்னர் களைப்புடன் உறங்கிப்போவாள்.

அப்பா மறைந்து இரண்டு மாதத்திற்கு மேலாகி விட்டது. அந்த தனியான வாழ்க்கையும் அவளுக்குப் பழக்கமாகிவிட்டது. பூட்டிய கதவைத் திறந்து நடை விளக்கைப் போட்டாள். பின்னர் கதவைத் தாளிட்டுக் கொண்டு அவசரமாக பச்சைத் தண்ணீரில் குளியலை முடித்துக் கொண்டாள். மாற்றுடையில் கூடத்திற்கு வந்து விளக்கைப் போட்டபோது வாயிற்கதவு இடிபட்டது. இந்த வேளையில் அவள் வாயில் கதவைத் தட்டுவது யாராக இருக்கும்?

முதல் நாள் மாலைதான் வடிவேலு வந்து அரை மணிக்கு மேல் தொண - தொணத்துவிட்டுப் போனார். அவள் தயிருக்காக மச்சப்படுத்தி வைத்திருந்த பாலைப் போட்டு காப்பி கலக்கி கொடுத்த பிறகுதான் ஆசாமி நகர்ந்தார்.

மறுபடியும் அவர் வந்து தொலைந்து விட்டாரா? அப்படி வந்தால் கட்டாயம் அவரிடம் சொல்லிவிட வேண்டும். அப்பாவின் நண்பர் என்று உங்களை ரொம்ப மதிக்கிறேன் சார். என்னைப்பற்றி நீங்க மனச்சங்கடப் படுவதை அறிவேன். வேலையிலிருந்து தொங்கித் துணியாக நான் வரும் சமயம் நீங்க வந்தா என்னால பேசமுடியாது சார். ஞாயிற்றுக் கிழமை காலை வேளைகளில் வாங்கோ. எனக்கும் உட்கார்ந்து பேச ஓய்வு இருக்கும்.

மனிதருக்கு மண்டையில் மசாலாவா இருக்கு அவளுடைய சவுகரியங்களைக் கேட்காமலேயே வந்து கொண்டு-மறுபடியும் வாசல் கதவு இடிபட்டது.



தன்னந்தனியாக இருக்கிறாள். சட்டென்று திறக்கவும் அச்சமாக இருந்தது.

''யாரது!'' அதட்டினாள். வெளியேயிருந்து வந்த குரல் பக்கத்து வீட்டவர்கள் தங்கள் வீட்டு தொலைக் காட்சி பெட்டியை உரக்க ஒலிக்க திருகிவிட்டிருந்ததில், சரியாகக் காதில் படவில்லை. இருக்கட்டும் யார் வந்து அவர்கள் வீட்டில் உள்ள செல்வத்தை அள்ளிக்கொண்டு போய்விடப் போகிறார்கள்? மிகவும் அசட்டையாகக் கதவைத் திறந்தாள்.

தூக்கிவாரிப்போட்டது. மனம் படபடத்தது.

வெளியே குமாரன் நின்று கொண்டிருந்தான். அவனது பென்ஸ் வாசலில் தெரு ஓரத்தை தொட்டபடி நின்றது ''நான் உள்ளே வரலாமா?'' அவன் கேட்டபோது அவளால் மறுக்க முடியவில்லை,

கூடத்திலிருந்த பிரம்பு நாற்காலியில் குவிந்து கிடந்த புத்தகங்களை அப்புறப்படுத்தி அவனை அமரச்சொல்லி உபசரித்தாள். வாசல் கதவை மூட விரும்பாது திறந்த நிலையிலேயே விட்டு வைத்தாள்.

''உன்னை என்பதா, உங்களைன்னு அழைப்பதான்னு குழப்பமாக இருக்கு'' மெலிதாக முறுவலித்தான், குமாரன்.

''வயது-தகுதி இரண்டிலும் உங்களைவிட நான் குறைந்தவன். உன்னைன்னு ஒருமையிலே கூப்பிடலாம்.''

'என் மாமனார் இறந்துபோன சங்கதியை நான் முந்தா நாள் தான் தெரிஞ்சு கொண்டேன்னா உனக்கு அதிசயமாக இருக்கலாம். மாதத்தின் கடைசி நாள் அல்லது முதல் தேதி நீ குழந்தை மோகனைப் பார்க்க வருகிற

சங்கதி எனக்குத் தெரியும். போன மாதமும் இந்த மாதமும் நீ வரலைன்னு குழந்தை என்கிட்ட யதார்த்தமா சொன்னபோது எனக்கு ஆச்சரியமாயிட்டது. அம்மாவைக் கேட்டேன். அப்பன் இறந்துட்ட துக்கத்திலிருக்கான்னு சுருக்கமாகச் சொன்னாங்க. பிறகுதான் எனக்கு சங்கதியே தெரிஞ்சது.''

''அநுவகை ரிஸப்ஷனிஸ்ட்கிட்டே சொல்லியிருந்தேனே?''

''அங்கேயும் ஒரு தடங்கல். தன் சகோதரிக்காக இரண்டு நாள் வேலையைச் செய்ய ஒப்புக்கொண்ட அந்தப் பெண் சுத்த மக்கு. எனக்கு வந்த பல தொலைபேசித் தகவல்களைச் சொல்ல மறந்துபோனாள். அநுவகைத்தையே குழப்பத்தில் ஆழ்த்திவிட்டாள்.''

''அடுத்தநாள்–அல்லது மறுநாள் கூடவா உங்களுக்கு சங்கதி தெரியாது?''

''உனக்கு இதைச் சொன்னால் நீ நம்புவாயோ என்னவோ. அநுவகம் வந்ததும், என் அந்தரங்க தொலைபேசியில் வியாபார சங்கதிக்காக ஒருவர் என்னை டெல்லியிலிருந்து அழைத்தார். அன்று இரவே நான் டெல்லிக்குப் பறந்துவிட்டேன். வர இரண்டு வாரமாகியது. அம்மாவும் சொல்லலை–அநுவகத்திலும் யாரும் தெரிவிக்கலை.''

''அப்பா என்ன ஒரு சினிமா நடிகரா அல்லது அரசியல்வாதியா? அவரது மரணத்தைப் பற்றி பத்திரிகையிலாவது பார்க்க முடிந்திருக்கும் அளவுக்கு நாங்கள் என்ன பிரபலமான வியாபாரிகளா?''

''சங்கரி...நீ ரொம்ப மனம் கசந்து பேசறே. கேள்விப்பட்டவுடன் உன்னை இன்று எப்படியாவது பார்த்து



அநுதாபம் தெரிவிக்கணும்னு நேரே வந்திருக்கேனே. ஒரு தடவை வந்தேன். வாசல் கதவு பூட்டியிருந்தது. கடற்கரையில்போய் கொஞ்ச நேரம் இருந்துட்டு மறுபடி பார்க்கலாம்னு வந்திருக்கேன்.''

''தாங்க்ஸ்.''

''தன்னந்தனியாகவா இந்த வீட்டில் இருக்கே?...''

''எல்லோரும் போயிட்டதாலே தனியாகிவிட்டேன். அதுக்கு பயந்தா சாத்தியப்படுமா? தனியாத்தான் இருக்கேன்.''

குமாரன் அவளை நிமிர்ந்து பரிதாபத்துடன் பார்த்தான். ''இன்னும் நீ சாப்பிடலை போலிருக்கு. நான் அதற்கு இடைஞ்சலா வந்திருக்கேனா?..''

''இரவு வேளையில் நான் சாப்பிடறதில்லை. ஏதோ கிடைத்ததை சாப்பிடறது. உங்களுக்குக்கூட ஒரு கோப்பை காப்பி தர முடியவில்லை. வந்ததும் காப்பி போட்டு சாப்பிட்டுவிட்டு மீதி பாலை உறை குத்திவிட்டேன்.''

''பரவாயில்லை... நான் ஒன்னு கேட்டால் மறுக்க மாட்டாயே.''

''அது கேள்வியைப் பொறுத்து இருக்கு.''

''நானும் சாப்பிடலை. இரவு வேளையில் நான்கூட சாப்பிட வீட்டுக்குப் போறதில்லை. குழந்தை மோகன் இல்லாட்டா வீட்டுக்கே போகாம நானும் வெளியிலே தனியா திரிஞ்சுகிட்டு இருந்திருப்பேன். அவன் ஒருவன் தான் என்னை வீட்டுக்குப் போகும்படி இழுக்கிறான்'' துயரத்தில் உடைந்த குரலில் பேசிவிட்டு அவளைப் பார்த்தான்.

மவுனமாக இருந்தான் சங்கரி.

"உனக்கு உன் தங்கை, தாய், அப்பா போன துக்கம். எனக்கு தாரத்தை இழந்துவிட்ட துயரம். இதில் யாருடையது அதிகம் யாருடையது குறைவுன்னு பேதம் பிரிக்க முடியாது. யார் கிட்டேயாவது பேசிக்கொண்டு இருக்கணும் போல எனக்கு தோணுது. உன்கிட்டே பேசினா மனதுக்கு ஆறுதலா இருக்கும்போல ஒரு எண்ணம் ஏற்பட்டது. நீ தப்பா நினைச்சுக்காட்டா என்னோட காரில் வர முடியுமா? நாம ரெண்டு பேரும் ஏதாவது ஒரு ஓட்டலில் இரவு சாப்பாட்டை முடித்துக் கொள்ளலாமே..."

பதிலளிக்காது அவனை வெறித்துப் பார்த்தாள்.

"சங்கரி! நான் வேறு எந்த தப்பான நோக்கத்தோடும் உன்னை அழைக்கலை. துயரத்தில் இடிந்து போன நாம ரெண்டு பேரும் ஏதோ பேசி, கொஞ்சம் மன ஆறுதலை பெறலாமே என்ற எண்ணந்தான். மேலும் நீ எனக்கு உறவுக்காரிதானே, அழைத்துச் சென்று உனக்கு உணவளித்து ஆறுதல் சொல்வது தப்பா... யாருமில்லாம அனாதையா இருக்கிற உனக்கு கொஞ்ச நேரம் துணையாக இருப்பது தவறுன்னு யாராவது சொல்லட்டும்—அதுக்கு நான் பதில் சொல்லிக்கிறேன்."

"உங்களோட வெளியே கிளம்பிவர எனக்கு தகுதியில்லையே. இந்த எளிய ஆடையில் உங்களோடு நான் வந்தால் பார்ப்பவங்க என்ன நினைப்பாங்க?"

"நான் பிறரது அபிப்ராயங்களுக்காக வாழ்ந்ததால் எல்லாம் போச்சு. அதுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருந்தால் நீ என்னை இப்படி தாடி மீசையோடு பார்க்க முடியுமா? மழுமழுன்னு தாடையையும் கன்னத்தையும் மழித்துக்கொண்டு— நாளைக்கு ஒரு அலங்காரத்தில் அலுவலகம் போய்க்கொண்டிருந்தவன் நான் எப்படி மாறிவிட்டிருக்கேன், பார்த்தியா? மறுப்பு சொல்லாதே



கிளம்பு. ராத்திரி வேளையில் சாப்பிடாம நீ படுத்து தூங்கறேங்கிறதை கேட்க வேதனையா இருக்கு."

"ராத்திரிக்கு நீங்க வீட்டிலேயே சாப்பிடறதில்லை என்கிறதை கேட்க வேதனையா இருக்கு மிஸ்டர்..."

"என்னை நீயும் குமார்னு பெயர்வைத்தே கூப்பிடலாம். புறப்படு...சன்னல்களை நான் அடைக்கிறேன். பின் கதவு சாத்தி தாளிடப்பட்டிருக்கான்னு நீ சோதிச்சு பார்" உத்திரவிட்டான்.

ஒரு பக்கம் பயம்—ஒரு பக்கம் மகிழ்ச்சி, உணர்வுகளின் உந்தலை புறக்கணிக்க முடியாது அவள் புறப்பட்டாள். புரண்டு விட்டிருந்த முடியை ஒதுக்கிக்கொண்டு லேசாக முகத்தில் பவுடரை ஒத்தி சரிப்படுத்திக் கொண்டு கிளம்பினாள். அவளது கைப்பையில் அதிக பணம் இருக்கவில்லை. ஆனாலும் அவள் கவலைப்படவில்லை. சாப்பிட அவளை அவன்தானே அழைத்துச் செல்கிறான்? செலவு அவனுடையதுதானே?

அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலினுள் புகுந்து காரை நிறுத்துமிடத்தில் இறக்கிவிட்டு, அவளை இறங்கச் சொல்லி உபசரித்தான். கஞ்சி போட்டு பெட்டி போட்ட நூல் சேலைதான். ஆனாலும், அவளுக்கு அங்கே உள்ளே பெரிய வரவேற்பறையில் நடமாடிய அலங்காரமான ஆண்களையும் பெண்களையும் கண்டு கொஞ்சம் அவமானமாக இருந்தது.

இந்த தாடிக்காரன் யாரோ ஒரு பிச்சைக்காரியுடன் சாப்பிட வந்துவிட்டான் என்று அவர்கள் நினைப்பார்களோ? அவள் நாணிக் குறுகுமுன் அங்கு தங்கியிருந்த ஒரு சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் ஒரு சிறு சுற்றுலாவை முடித்துக்கொண்டு கும்பலாக கூச்சலிட்டு பேசிய வண்ணம் உள்ளே நுழைந்தனர்.

சாயம்போன பாண்டும், அழுக்கு பனியனும், வாராது எழும்பி நின்ற கோப்பு முடியுமாக சில வாலிபர் கள்; கல்லூரியில் தெரிந்த சில பெண்களை, சாதாரணமான பட்டுச்சேலையில் சில வயதான பெண்கள் என்ற ஒரு கூட் டத்தைப் பார்த்ததும் திகைப்படைந்தாள்.

''பாவுபாஜியும், டோஸ்ட் பன்னும் சாப்பிடலாமா சாதம், குழம்பு இதெல்லாம் கொண்ட தாலி சாப்பாடா?'' கேட்டான் அவன்.

''நீங்க எது சாப்பிட விரும்பினாலும் நானும் அதையே சாப்பிடறேன்'' என்றபோது அவர்களை படியேறி மங்கலாக விளக்கொளியில் காஷ்மீர சித்திர வேலைப்பாடு கொண்ட தட்டிகளால் அடைப்பு செய்த ஒரு பகுதியை அடைந்தனர்.

ஒரு ஓரமாக நிறமும் வெளிச்சமும் மாறி லேசாகப் படிந்த ஒரு மேசை அருகே எதிர் எதிராக அமர்ந்தனர். ஓடி வந்து நின்ற சர்வரிடம் வேண்டியதை சொல்லிவிட்டு அவன் அவளையே வெறித்துப் பார்த்தான்.

ஒரு கிண்ணத்தில் சோளா கலந்த உருளைக்கிழங்கும் ஒரு தட்டில் வெண்ணையில் வாட்டிய பன்னும் எடுத்து வர இப்படி ருசியா இருக்கும்? அவளுக்கு அதிசயமாகத் தான் இருந்தது. அருகருகே உட்கார்ந்திருந்த அனைவரும் சாப்பாட்டைப்பற்றி கவலைப்படாது, பல சங்கதிகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

''மணிக்கணக்கா இங்கே உட்கார்ந்து ஒரு வியாபாரத் தின் முடிவையே முடிச்சுடலாம். நாங்கள்ளாம் சில சமயம் எங்க வாடிக்கைகாரர்களோட ஓட்டலிலேயே சாப்பாட்டையும் வியாபாரத்தையும் சேர்த்து வச்சுக் கிறது'' சிரித்தான்.

''இப்போ நாம ரெண்டு பேரும் இங்கே வந்திருக் கிறது?'' அவள் வேண்டுமென்றே கேட்டாள்.



''ஒருவரை யொருவர் புரிஞ்சுக்கிறதுக்குனு வச்சுக்கோ, ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்றதுக்கு. என் குழந் தையை பாசத்தோட பார்த்து அவளுக்கு உன் அன்பை தெரிவிக்கிறதுக்கு நன்றி பாராட்டன்னு வச்சுக்கிட்டாலும் சரி'' சிரித்தான்.

இரண்டு பிஸ்கட்டையும், தண்ணீரையும் சாப்பிட்டு விட்டு உறங்கியும் பழக்கத்திலிருந்தவளுக்கு, ஓட்டல் சர்வர் கொண்டு வந்து வைத்த அத்தனை மசாலா கறியை யும், வெண்ணையில் மணந்த பன்னையும் தின்று முடிக்க முடியவில்லை. திணறிப் போனாள்.

''காப்பி கொண்டு வரச் சொல்லியிருக்கேன்-அதுக் குள்ளே வயிறு ரொம்பிவிட்டதுன்னு சொல்லாதே'' முறுவலித்தான் அவன் மெல்ல...நாள் முழுவதும் அங்கே இருக்கப்போகிறவன் போல அவன் நிதானமாக சாப்பிட்டது அவளுக்கு அதிசயமாகவே இருந்தது. அவளது வாழ்க்கையில் நிதானம் என்பதே இதுவரை இருந்ததில்லை. காலையில் எழுந்ததிலிருந்து வீட்டை கவனித்து, சமைத்ததை வெந்ததும் வேகாததுமாக விழுங்கி விட்டு, பஸ் பிடிக்க ஓட்ட-அலுவலகத்தில் நிற்கப் பொழுதில்லாமல், தலைமை கணக்கர் அறைக்கும், தன் இருக்கைக்கும் இடையே நடந்து அலுத்துப் போய், காலை யில் கட்டிக் கொண்டு வந்த தயிர் சாதம் பகலில் புளித்து விட்டதை பாராட்டாது, ஒரே வாயில் சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு வந்து விழும் வரை ஓட்டமான வாழ்க்கை.

முதல் முதலாக அவள் உட்கார்ந்து நிதானமாக சாப்பிட்டாள். தனக்கு பிடித்தவன் அருகாமையில் அமர்ந்து சாப்பிடுகிறோம் என்ற உற்சாகத்தில் மெல்ல அவனைப் போல நிதானமாக சாப்பிட்டாள். இப்படி ஒரு வாழ்க்கையை ஒரு சிலர் அனுபவிக்க கொடுத்து

வைத்திருக்கிறார்களே என எண்ணி தனக்குள் வியந்து கொண்டான்.

எட்டு மணி அளவில் வந்து அங்கே உட்கார்ந்தனர். மணி ஒன்பதரையை எட்டிக் கொண்டிருந்தது. இப்பொழுதுதான் காப்பியை சாப்பிட்டுவிட்டு மெல்ல நாப்கின்னால் வாயைத் துடைத்துக் கொண்ட சுகுமாரன். "ஐஸ்கிரீம் கொண்டுவரச் சொல்லியிருக்கேன்" என்ற போது சங்கரி திடுக்கிட்டுப் போனாள்.

"சாப்பிட முடியாதுன்னு மறுக்காதே. நாமரெண்டு பேரும் இனிப்புகளை சாப்பிட்டு கொண்டாடும் நேரம் இது அல்லன்னு தெரியும். ஐஸ்கிரீமுக்கும் சொல்விட்டேன். அது வந்தா நாம வேண்டாம்னு திருப்பி அனுப்ப முடியாதே. அதனால் சாப்பிட்டு முடிப்போம்" என்றான்.

பத்து மணிக்குமேல்தான் அவன் வீட்டுக்குத் திரும்ப முடிந்தது. முதல் முதலாக ஒரு ஆணுடன் தனியே இரவில் வெளியேபோய் வந்த அனுபவத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி கலந்த குற்ற உணர்வுடன் அவள் படுக்கப் போனாள். உறக்கம் வந்தால்தானே?

மனைவியின் தமக்கை என்று அனுதாபப்பட்டு அன்பு காட்டி உபசரித்தான் என்று அவள் அந்த அனுபவத்தை ஒதுக்க முயன்றபோது மறுநாளும் சுகுமாரன் வந்து கதவைத் தட்டினான்.

"சங்கரி உனக்கு மறுப்பு இதலேன்னா, இன்னிக்கும் வெளியேபோய் சாப்பிடலாம்" என்று அவன் அழைத்த போது அவளால் மறுக்க முடியவில்லை.

ரத்னா அம்மாளுடன் அந்த சனிக்கிழமை தொலைபேசியில் அவள் தொடர்பு கொண்டபோது அந்தம்மாள் மிகவும் கடுமையாகத்தான் பதிலளித்தாள் "அப்பா செத்த துக்கத்திலிருக்கிறவ நீ. குழந்தையைப் பார்க்கவோ...என்னைப் பார்க்கவோ இப்ப வரதை நான் விரும்பலை." மிகவும் கண்டிப்பாக சொல்லிவிட்டாள்.



"எப்ப வரலாம்னு சொன்னா..." சங்கரி கேட்டு முடிக்குமுன் பதில் பட்டென்று மறுபக்கத்திலிருந்து வந்தது.

"உங்கப்பாவுக்கு வருஷத் திவசம் முடிஞ்ச பிறகு பார்க்க வேணும்னா யோசிச்சு அனுமதிப்பேன்."

இதுவரை மூன்று தடவைகள் அவன் அவளைப் பாராது மூன்று மாத காலம் ஓடிவிட்டது. சுகுமாரைப் பார்த்தால் குழந்தையைப் பாராது மனதில் ஏற்படும் அந்த தாபம் தணியும் போன்ற பிரமிப்பில் அவள் அவனுடன் புறப்பட்டாள்

இம்முறை அவர்கள் வேறு ஒரு ஓட்டலுக்குச் சாப்பிடச் சென்றார்கள். அது அத்தனை பிரபலமான ஓட்டல் இல்லை. ஆனால், சாப்பாடு மிகவும் சுவையாக இருக்கும் என்ற காரணத்திற்காக அவளை அங்கு அழைத்துச் சென்றிருந்தான்.

அங்கேயும் மாடியிலிருந்த இருட்டும் வெளிச்சமும் கலந்த ஒரு பெரிய சாப்பாட்டறையின் சன்னல் ஓரமிருந்த இருக்கையில் அமர்ந்தனர். சன்னல் வழியே நகரம் இரவின் வெளிச்சத்திலே குளித்துக் கொண்டிருந்ததை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள், சங்கரி. "பிரைட் ரைஸ் அண்ட் கர்ரி சாப்பிடலாமா?" கேட்டபோது திரும்பிப் பார்த்தாள். மங்கிய ஒளியில் அவன் அவளை மிகவும் அதிசயமாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து பதறிப் போனாள். நெஞ்சு வேகமாகத் துடித்தது.

"உங்களுக்குப் பிடிச்சதை நான் சாப்பிடறேன். எது வேணுமானாலும் கொண்டு வரச் சொல்லுங்கோ" என்றாள்.

அந்த ஓட்டலில் அன்று அவர்கள் வெகுநேரம் சாப்பிட்டுக் கொண்டு இருக்கவில்லை. சீக்கிரமே அவளை வீட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டான்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை. காலை காப்பி பலகாரத்தை முடித்துக்கொண்டு அவள் தன் பைல்களுடன் உட்கார்ந்தபோது வந்து கதவைத் தட்டினான் சுகுமாரன்.

''இன்னிக்கு நாம பகல் சாப்பாட்டுக்கு வெளியே எங்கேயாவது போகலாமா?''

''நான் விடியற்காலையிலேயே சமைச்சுவச்சுட்டேன். போனால் சாப்பாடு வீணாகிடும். அப்படி பொருள்களை வீணாக்க எனக்கு கட்டுப்படியாகாதே''

''சரி. உன் வீட்டு சாப்பாட்டை எனக்கும் போட்டால் நான் இங்கேயே சாப்பிடறேன். ஒரே ஒருத்தருக்கு மட்டும் சமைச்சிருக்கேன்னு மறுத்துடுவியா...?'' பற்கள் பளிச்சிட சிரித்தபடி அவன் தானே சுவாதீனமாக வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். ''என்ன சமைச்சிருக்கே-முன் கூட்டியே தெரிஞ்சுக்கலாமா?...''

சுகுமாரனுடன் பேசவும் அவளுக்கு ஆசையாகத்தான் இருந்தது. அதே சமயம் தெருவை அடைத்த காருடன் அவன் அங்கே தினமும் வருவதைப் பற்றி சிறிதளவு அச்சமாக இருந்தது.

''என்ன யோசிக்கிறே? வெறும் மோரும் சாதமும் தான் இருக்குன்னு எப்படி சொல்றதுன்னு பயப்படுகிறியா? பரவாயில்லை. நீ சாப்பிடறதை இன்று நான் சாப்பிடத் தீர்மானிச்சுட்டேன்.''

''கத்தரிக்காய் சாம்பாரும், வாழைத்தண்டு பொரியலும் செய்திருக்கேன். தயிர் இருக்கு கிச்சலிக்காய் ஊறுகாய் கொஞ்சம் பாட்டலில் இருக்கு. கொஞ்ச



நேரம் நீங்க இந்த நாளேட்டைப் படிச்சிட்டு இருங்கோ. புழக்கடையிலே இருக்கும் வாழைமரத்திலிருந்து ஒரு இலை அறுத்துகிட்டு வரேன். அலுமினிய டப்பாவிலே நாலு அப்பளம் இருக்கு. அதை பொரிச்சுட்டால் போதுமில்லையா?...''

''அடா! கேட்கும்போதே வாயூறிப் போகுதே. நீ சொன்னபடி நான் படிச்சுக் கொண்டிருக்கேன் ஆனால் இன்னிக்கு நமக்கு வீட்டு சாப்பாடு...ஓ.கே.' அவன் நின்று சிரித்தான்.

''ஆமாம், இப்படி ருசியாக சமைக்க நீ எப்படி கத்துக் கொண்டே?'' கேட்டபடி இலையைவிட்டு எழுந்தான். கையில் மீதமாக விரல்களில் ஒட்டிக்கொண்டிருந்த தயிரை அவன் சிறுபிள்ளை போல நக்கிக்கொண்டு நிற்க அவள் மகிழ்ச்சியுடன் சொம்பில் நீர் முகந்து வந்து அவன் கரத்தின் மீது ஊற்றினாள்.

''உங்கள் வீட்டைப் போல சாப்பாட்டு மேசை இங்கே கிடையாது கை கழுவப் பீங்கான் வசதி கிடையாது. பாவம், சம்மணம் கொட்டி உட்கார்ந்து சாப்பிடும்போது முட்டி வலித்திருக்கும்'' சிரித்தாள் அவள். சில நாட்கள் அவனுடன் சிறிது நெருக்கமாகப் பழகியதனால் அவளது இறுக்கமான உணர்வின் கனம் குறைந்துவிட்டது போன்று மனம் லேசாகிவிட்டிருந்தது. தந்தையின் மரணத்திற்குப் பின் அவள் இப்போதுதான் மனம்விட்டு சிரிக்க முடிந்தது.

''எனக்கு வாழைத்தண்டு பொரியல் பிடிக்காது. ஆனால், நீ கடலைப்பருப்பும் தேங்காயும் போட்டு சமைத்திருக்கும் விதம் ரொம்ப ருசியைக் கூட்டியதால் நிறையவே சாப்பிட்டு விட்டேன்,'' வேடிக்கையாக பேசியபடி நாற்காலியில் அமர்ந்தான்.

யாராவது தவறாக எண்ணக்கூடும் என்று அவன் வாயிற் கதவை அகலத் திறந்து வைத்திருந்தான். எச்சில் இலைகளை எடுத்து இடத்தை சுத்தப்படுத்தி விட்டு முற்றத்து குறட்டின் மீது தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்தான்.

சாப்பிட்டவுடன் சில நிமிடங்களிலேயே அவன் எழுந்து போய்விட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாதே? "நான் வெற்றிலை பாக்கு போடும் பழக்கம் கிடையாது. உங்களுக்குத் தேவைப்பட்டால் அருகிலிருக்கும் கடையிலிருந்து வாங்கி வருகிறேன்."

"எனக்கு எந்த விதமான பழக்கமும் கிடையாதுன்னா உனக்கு அதிசயமாக இருக்கும்."

"அப்படியா? உங்களை ஒத்த உயர்மட்டத்து ஆசாமிகள் சிகரெட்டு குடிப்பதையாவது பழக்கத்தில் வச்சிருப்பாங்களே."

"என்னைப்பத்தி சொல்லிக்க ஏராளம் இருக்கு. அதை நிம்மதியா உன்போல உட்கார்ந்து கேட்கிறவங்க கிட்டத்தான் சொல்லணும்" திடீரென்று அவன் குரல் கரகரத்தது. "சரி நேரமாச்சு உனக்கு வேலையிருக்கும்-வரேன்" என்று கிளம்பினான்.

வெகுநேரம் அவன் பிடித்திருந்த பைல் ஒன்றின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அதில் தெரிந்த காகிதத்தில் கண்ட எழுத்துக்கள் எம்பிக்குதித்தன. மனம் விர் என்று வாசலில் இருந்து புறப்பட்ட காரின் பின்னால் ஓடியது.

அவனிடம் நிம்மதியாக ஏராளமான சங்கதிகள் சொல்லணும்னாரே? அவை என்னவாம்?—அவர் குரல் ஏன் திடீரென்று கம்மியது? மனைவியின் இழப்பினால் பாதிக்கப்பட்டவர் என்பது தெரிந்த சங்கதி. ஆனால் அதற்கு மேலும் ஏதோ ஒரு துயரம் அவரை வாட்டுகிறதே. அது என்னவாக இருக்கும்?

# 4

ஒரு வார காலம் அவன் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான். ஆனால், அந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டு சென்ற குமாரன் பின்னர் வரவில்லை.

வீட்டுக்கு வந்ததும், குளியல் இத்யாதிக்குப்பின் அவன் பிஸ்கட் இரண்டை தட்டில் வைத்துக்கொண்டு நடையில் உட்கார்ந்தபடி வாசலில் இருந்த சிறு வராந்தாவை அடைத்த கம்பி கேட்டின் வழியே தெருவைப் பார்த்து ஏமாந்து கொண்டிருந்தான்.

எங்கேயாவது கார் செல்லும் ஓசை கேட்டால் தூக்கி வாரிப் போடும். நெஞ்சு படபடக்கும். ஆவலை அடக்க முடியாது எழுந்து எட்டிப் பார்ப்பான்.

அந்த திங்கட்கிழமை அவனுக்கு வேலை அதிகமாகவேயிருந்தது. தலைமைக் கணக்கருக்கு தேவைப்பட்ட தகவல்களைத் தேடி குறிப்பெடுத்துக் கொடுக்கவும், மானேஜர் கொண்டுவரச்சொன்ன பைல்களை விரைவில் எடுத்துச் சென்று உதவுவதுமாக மிகவும் அலைய நேரிட்டது. பகல் நேர உணவின்போதுகூட அவனுக்கு கொண்டு வந்த தயிர் சாத பொட்டலத்தை அவிழ்க்க முடியவில்லை. தன் மேசை மீது வைக்கப்பட்டிருந்த கடிதக் குவியல்களைப் பார்த்து பெருமூச்சு விட்ட வண்ணம் தண்ணீரை மட்டும் பருகிவிட்டு, அவைகளை வகை பிரித்துக் கொண்டிருந்தான்.

அதிகப்படியான வேலை செய்ய மறுத்து அவன் மெல்ல நழுவிக்கொள்ள முடியும். ஆனால், இன்னும் சில மாதங்களில் தலைமைக் கணக்கர் வேலையிலிருந்து ஓய்வடைய இருந்தார். அடுத்தபடியாக அவனுக்கு அந்தப் பதவி கிடைத்தால் சம்பளமும் சலுகையும் கூடுதலாக இருக்குமே என்ற ஆசைதான் அவனை அப்படி அலைபாயச் செய்தது.

அதனால் அன்று அவள் வீட்டுக்குள் புகுந்தபோது மிகவும் களைப்பாக இருந்தாள். குளியலுக்குப்பின் காலையில் எடுத்துப் போன தயிர் சாதப் பொட்டலத்தை அவிழ்த்தபோது புளிப்பு நாற்றம் முகத்திலடித்து வயிற்றைப் புரட்டியது. புழக்கடை குப்பைக் கூடைக்குள் அதைப் போட்டுவிட்டு, கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்தாள். இன்று அவள் விரும்பாவிடினும் ஏதாவது சமைத்துதான் ஆகவேண்டும். பசி குடலைத் தின்றது

சாதம், சாம்பார் பொரியல் என்று அந்த வேளையில் விமரிசையாக எதுவும் சமைக்க நேரமில்லை. சாதமும், மிளகு ரசமும் வைத்து ஒரு வாய் சாப்பிட்டால்தான் உடல் அயற்சி அடங்கும் என்று எண்ணியபடி குக்கரை எடுத்தாள்.

வாயிற்கதவு தட்டும் ஓசை கேட்டதும் அதை அப்படியே மேசைமீது வைத்துவிட்டு விரைந்தாள்.

சுகுமார்தான் வந்திருந்தான்...இந்த ஒருவார காலத்தில் அவன் மிகவும் வித்யாசமாகக் காணப்பட்டான். முகத்தின் முக்கால் பாகத்தை அடைத்துக்கொண்டிருந்த அந்த தாடி மீசைகள் இல்லாது வெள்ளை சட்டை-பாண்டில் அவன் கச்சிதமாகக் களை பொருந்தியவனாகக் காணப்பட்டான். "அடையாளம் தெரியலையா -அப்படி மலைச்சுருக்கிறியே...உள்ளே வரலாமில்லையா?" கேட்டபடி அவளைத் தாண்டிக்கொண்டு உள்ளே வந்தான்.

கூடத்து தரைமீது ஒரு ஸ்டீல் தட்டில் அரிசியும், ஒரு கிண்ணத்திலே பருப்பும் இருப்பதைக் கண்டான். "இப்பதான் சமைக்க ஆரம்பிச்சியா...என்னத்துக்கு உனக்கு தொந்திரவு? இவைகளை எடுத்து வச்சுட்டு கிளம்பு. நாம ரெண்டு பேரும் வழக்கம்போல ஓட்டலில் சாப்பிடப்



போகலாம். இன்னிக்கு இன்னொரு ஓட்டலுக்குக் கூட்டிக் கொண்டு போறேன்" என்றான்.

"உங்களுக்கு சிரமம் எதுக்கு? உட்காருங்க" என்றாள். "இத்தனை நாள் எங்கே போயிருந்தீங்க... இப்ப திடீர்னு எதுக்கு வந்தீங்க" கேட்க வாய் துடித்தது. ஆனால், கேட்க அவளுக்கு என்ன உரிமை?

"நான் ஒரு வாரம் வியாபார சம்பந்தமாக பம்பாய் போயிருந்தேன். பிறகு நேரம் இருக்கவில்லை. அத்தனை அவசரமாக என் அலுவலகத்திலிருந்தே நான் கிளம்ப நேரிட்டது. திடீர்னு மாயமாகிட்டானேன்னு நீ நினைச்சே இல்லையா?..."

"அப்படி ஒன்றுமில்லை. உங்களுக்கு எத்தனையோ வேலை இருக்குமே..."

"இத்தனை நாள் தாடி மீசையோட அலைஞ்சவன் அதுகளை எடுத்துட்டு சுத்தமா எதிரேவந்து நிக்கிறானேன்னு நீ அதிசயப்படலையா?"

"அதெல்லாம் உங்க சொந்த சங்கதி, அதில் தலைவிட நான் யார்?..."

"நீ கொடுத்த தெம்பிலேதான் நான் இப்படி மாறிவிட்டிருக்கேன். என் மனைவியின் சகோதரின்னுதான் உன்னை எனக்குத் தெரியும். ஒரு சில நாட்கள் பழகியதிலே, உன்னை நான் கொஞ்சம் புரிந்து கொண்டிருக்கிறேன். என் மனதில் மீண்டும் ஒரு உற்சாகம் ஏற்பட்டிருக்கு வாழ்க்கையிலே ஒரு பிடிப்பு வந்திருக்கு. தாடி, மீசை கோலம் எனக்கே அருவருப்பாக இருந்ததாலே அதுகளை எடுத்துட்டு, சுத்தமாக பழைய சுகுமாரனாக மாறிட்டேன். நாம கிளம்பலாமா?..." என்று கேட்டான்.

"கொஞ்சம் இருங்கோ—புடவை மாத்திட்டு வரேன். நீங்க வருவீங்கனு நான் எதிர் பார்க்கலை."

அது ஒரு சைவ உணவு ஓட்டல். நட்சத்திர அந்தஸ்து கள் இல்லையெனினும் சாப்பாடு நன்றாக இருக்குமென்று அவன் அறிவான். இந்த பக்கம் வா என்று அவளை, குளிர் சாதன வசதி கொண்ட சாப்பாட்டறைக்குள் அழைத்துச் சென்றான். அந்த சாப்பாட்டு அறையும் மங்கிய விளக் கொளியில் மூழ்கி கிடந்தது. சுவற்றோரமாகக் கிடந்த இரண்டுபேர் உட்காரும் மேசை அருகே அவளை அழைத்துச் சென்று அமரச் செய்தான்.

"தாலிச் சாப்பாடு வரவழைக்கிறேன்—சம்மதந் தானே" என்று கேட்டபொழுது அவள் தலையை அசைத்தாள்.

பையன் ஒரு பீங்கான் கோப்பையில் சூப்பும், எடுத்து சாப்பிட கரண்டியும் கொண்டுவந்து வைத்தான். பின் வர் தண்ணீர் தம்ளரை வைத்துவிட்டு, ஒரு தட்டில் சாதம், சப்பாத்தி, இவ்வனங்களில் பொரியல், கூட்டு, பச்சடி, தயிர் முதலியவற்றோடு ஒரு தட்டில் சில அப்பளங்களை யும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனான்.

"சூப்பை சாப்பிடுமுன் நான் ஒண்ணு சொல்லட் டுமா." வேடிக்கையாகக் கேட்ட அவளை நிமிர்ந்து பார்த்தான் சங்கர்.

மார்பு வெடித்துவிடும்போல துடித்தது. முதல் முதலாக அவளை அந்த நேர்முகத் தேர்விற்கு தங்கை யுடன் போயிருந்த சமயம் பார்த்தபோது ஏற்பட்ட அந்த சர்ப்பு உணர்வு மனதை மீண்டும் கவ்வுவதை உணர்ந் தான்.

"இந்தப் பச்சை வண்ணச் சேலையில் நீ இளம்பிறதும் எனக்கு உன் தங்கையைப் பார்க்கிறதுபோல ஒரு நினைப்பு



ஏற்பட்டுவிட்டது. முதல் முதலில் மீனாவை நான் அந்த வண்ணச் சேலையில்தான் பார்த்தேன்..."

உதட்டைக் கடித்துக் கொண்டாள் சங்கரி. "மன்னிச் சுக்கோங்கோ. நான் அந்த நினைவை அடியோடு மறந்து போயிட்டதாலே... உங்கள் மனதை துன்புறுத்தும் வகை யிலே... இந்த சேலையைக் கட்டிக்கொண்டு வந்துட் டேன்..."

"என் மனதை நீ துன்புறுத்தலை... சாயலில் நீ உன் சகோதரியைப் போலவே இருக்கிறதைக் கண்டு ரொம்ப வியப்பா இருக்கு—அதே வண்ணச் சேலையில் நீ சட்டுனு அவளைப்போல தெரிஞ்சது என் வியப்பை அதிகமாக் கியது."

"அவளைவிட நான் ஏழு வயது மூத்தவள்."

"ஆனால் அறிவிலும், பரிவிலும், பண்பிலும் அவளை விட ரொம்ப அதிகமானவள்."

"என்ன சொல்றீங்க?"... கேட்டபடி சப்பாத்தியைப் பிட்டு பருப்பில் தோய்த்து, வாயில் போட்டு மெல்லக் கடித்து விழுங்கினாள். "உன்கிட்ட நிறைய பேசணும்னு சொன்னேனே. இன்னிக்கு பேசணும்போல ஆவலா இருக்கு. உனக்கு பொறுமையா கேட்க நேரம் இருக் குமா?"

"கேட்கிறேன் சொல்லுங்கோ."

"நான் வாழ்க்கையில் எப்பொழுதுமே சந்தோசமா இருந்தவன் இல்லே. வீட்டுக்கு ஒரே பிள்ளை செல்லமாகத் தான் அம்மாவும் அப்பாவும் என்னை வளர்த்தாங்க. ஆனால் அன்போடு வளர்க்கலை."

"உங்கள் பேச்சு என்னைக் குழப்புறது..." சொல்லிக் கொண்டே குழம்பை ஊற்றி சாதத்தை மெல்லக் குழைத் தான்.



19121/5
3468365

''வேடிக்கையாகத்தான் இருக்கும். ஆனால், உண்மை. அப்பாவுக்கு நாள் முழுவதும் தொழிலபற்றி கவனம். இந்தக் கூட்டம்—அந்தக் கூட்டம்னு அவர் அலைந்து கொண்டிருந்தார். நான் தூக்கத்தில் இருந்து எழுமுன், அப்பா தான் நிறுவிய கம்பெனியை கவனிக்க விரைந்து விடுவார். அவர் வரும்போது நான் தூங்கிவிட்டிருப்பேன். இப்படியே அப்பாவைப் பார்த்துப் பேச பொழுதில்லாது என் பள்ளிக்கூடப் பருவம் கழிந்தது.''

''அம்மா இருக்காங்களே—அவங்க அன்போடு உங்களை கவனிச்சிருப்பாங்களே?...''

''அதைத்தான் சொல்ல வரேன். பணக்காரர் மனைவின்னு அம்மாவுக்கு உள்ளூர கர்வம். அவங்களுக்கு பதவி மோகம் அதிகமாக இருந்தது. ஏன் இப்பகூட இருக்கு. இந்த சங்கத்தின் தலைவி—அந்த சங்கத்தின் செயலாளர்னு பல சங்கங்களில் பதவி ஏற்று பணிபுரிய வெளியே கிளம்பிடுவாங்க. பள்ளிக்கூடத்திலிருந்து வந்த எனக்கு சமையல்காரர்தான் சாப்பாடு போடுவார் வேலைக்காரிதான் என்னை தூங்கச் செய்து கதை சொல்வாள்.''

''கேட்க சங்கடமா இருக்கு. எப்படியோ நீங்க வளர்ந்து ஆளாகி ஒருபெரிய நிறுவனத்தின் பொறுப்பை ஏத்துக்கொண்டீங்களே?''

''இவைகள் கேட்பவர்களுக்கு சின்ன சங்கதி போலத் தெரியும். ஆனால், இளமைப்பருவத்து நினைவு மனதை பிற்காலத்தில் ரொம்ப பாதிக்கும் என்கிறது அனுபவிச்சவங்களுக்குத்தான் தெரியும்.''

''அதைப்பத்தி நீங்க நினைச்சு வருந்தறதிலே இப்போ என்ன லாபம்? கொஞ்ச நாளாவது உங்களுக்கு பிடிச்ச மனைவியோட வாழ்ந்தீங்களே?...''



''அதைச் சொன்னால் உன் மனதுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். நான் மீனாவை ரொம்ப நேசித்தேன். அவள் பிரிவு என்னைப் பித்தனாக்கியது எல்லாம் உண்மைதான். ஆனால், அவளை உன்னோடு ஒப்பிட்டால் ரொம்ப வித்தியாசமானவள்.''

''கொஞ்சம் குழந்தைத்தனமாக நடந்து கொண்டிருப்பாள்.''

''குழந்தைத்தனமானவள்தான். திருமணத்திற்குப் பிறகு பொறுப்பு உணர்ந்து நடக்க வேண்டாமா?...''

''அவள் உங்களிடம் எப்படி நடந்துகொண்டாள் என்பது எங்களுக்குத் தெரியாது. அவள் திருமணத்துக்குப் பின் எங்கள் வீட்டுக்கே வந்ததில்லை. அதிகம் பேசவிடாது உங்கள் அம்மா எங்களை வாசலோடு அனுப்பி விட்டதால், மீனா ஒரு மனைவி என்கிற நிலையில் எப்படியிருந்தாள்னு தெரியாதே?...''

''பச்சைக் குழந்தையைப்போல என்னிடம் அடம்பிடித்தாள். வீட்டில் அம்மாவுக்கும் அவளுக்கும் சதா ஏதாவது சண்டை கடைசிவரை அவள் என் தாயாருக்கு வேண்டாத மருமகளாகத்தான் இருந்தாள்.''

''இதெல்லாம் கேட்க என் மனதுக்கு வேதனையா இருக்கு.''

''உன்னை வேதனைப்பட வைக்க இவைகளைச்சொல்லலை. என் மனதை இருக்குகிற பாரத்தை குறைச்சுக்க சொல்றேன். அவளுக்கு திருப்தி என்பதே இல்லாத ஒரு மனநிலை...''

''எங்க வீட்டில் அவள் அப்படி இருந்ததில்லையே!''

''ஒரு சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்தவள்—அதனால் அப்படி நடந்துகொண்டாள் என்று நான்

குற்றம் சொல்ல மாட்டேன். நீ அவளுடைய சகோதரி தானே? அதே குடும்பத்தைச் சேர்ந்தவள்தானே. உன்னிடம் காணும் பொறுமையை நான் அவளிடம் பார்த்ததேயில்லை. என் தாயார் கல்யாணத்தின்போது தந்த நகைகளைத் தவிர அவளுக்கு ஏராளமாக நான் வேறு வாங்கித் தந்தேன். ஆனாலும் திருப்தியில்லாத மனநிலையில் இருந்தாள்.''

''இந்த மோதிரம் அழகாக இருக்கில்லையா என்று விலை உயர்ந்த வைர மோதிரம் ஒன்றை நான் அவள் பிறந்த நாள்போது பரிசாகத் தந்தேன் இன்னும் கொஞ்சம் பெரிசா இருந்தா நன்றாக இருக்கும் என்று முகத்தை சுளித்தாள்.''

''மீனா அப்படியெல்லாம் நடந்துகொண்டாள் என்பதைக் கேட்க வருத்தமாக இருக்கு...''

''அத்தோடு மட்டுமில்லை... அலுவலக காரியமாக கொஞ்சம் நேரம் கழித்து வந்தால் போதும். ஏன் நேரமாச்சு—எங்க போயிருந்தீங்க என்று கேள்வியால் துளைத்து விடுவாள். கொஞ்சம் பொறாமை குணம் இருந்ததால்தான் அவள் அப்படி நடந்துகொண்டாள் என்று நினைக்கிறேன்.''

''நாளடைவில் உங்களுக்கு மீனா மீது வெறுப்பு ஏற்பட்டிருக்குமே?''

''அதுதான் இல்லை. அவளை நான் நேசித்தேன். அவள் இறந்து போனது எனக்கு தாங்கொணா இழப்பாக மனதை வேதனை செய்தது கொஞ்சகாலம் என்னை மறந்து வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் இருந்தேன்.''

''உங்கள் கதையைக் கேட்க ரொம்ப வருத்தமா இருக்கு.''



''மனதைத் திறந்து சொல்லிவிட்டதில் எனக்கு இப்போ நிம்மதியா இருக்கு. உன்னை சந்தித்துப் பேசி, உன்னோடு தாராளமாகப் பழக ஏற்பட்ட இந்த அனுபவம் என்னை முற்றிலும் மாத்திட்டது. மறைந்துபோன என் மனைவியை நான் மதிக்கிறேன். ஆனால் முன் போல பித்துப் பிடிச்சவனா அலையலை.''

''ஓரளவு உங்களுக்கு மனம் மாறியது பற்றி மகிழ்ச்சி.''

''இப்போ என் கவலையெல்லாம் என் மகனைப்பற்றியதுதான். குழந்தை மோகனை நான் ரொம்ப நேசிக்கிறேன். அவனும் என் போல, அவனது பள்ளிப் பருவத்தில் தனிமையை அனுபவித்து, அதன் பாதிப்பால் பின்னர் வருந்தக்கூடாதுன்னு என் கவலை''

''நீங்க உங்கள் மகனோடு தினமும் கொஞ்ச நேரமாவது கழிக்க முயலவேண்டும்.''

''என்னதான் நான் முயன்றாலும் அவனுக்கு தாயன்பு என்பது அவசியமாயிற்றே.''

ரசத்தைக் குடித்தவளுக்கு சட்டென்று புரையேறி விட்டது, தலையைத் தட்டிக்கொண்டு இருமினாள்.

''நீங்கள் உங்கள் தகுதிக்கு தக்கவளாக இந்த முறை நன்றாகப் பார்த்து புரிந்துகொண்டு ஒரு பெண்ணை மணந்துகொண்டால், இரண்டாவது அம்மா என்றாலும் ஓரளவு அவள் மோகனைக் கவனித்துக்கொள்வாள் இல்லையா?''

''சிற்றன்னைன்னு வரவ, மோகனை நேசிக்க மறுத்து விட்டால்...''

''கல்யாணம் என்பதே ஒரு குதிரைப் பந்தயத்தைப் போலத்தானே. அதில் வெற்றியும் உண்டு. தோல்வியும் உண்டு.''

''உங்கப்பா இறந்து வெகு காலம் ஆகலை. அதுக்குள்ளே நான் உன்னிடம் பேசுவது முறையாகாது...'' என்று கூறிவிட்டு வேகமாகச் சாப்பிடத் தொடங்கினான்.

முடிவாக சர்வர் கொண்டுவந்து ஐஸ்கிரீமை வைத்த போது அவளை உற்றுப் பார்த்துவிட்டு மெல்ல சிரித்தான் சுகுமாரன் ''எதைச் சொன்னாலும்...எதைக் கேட்டாலும் ஒரு இனிப்புடன் சொல்வது மேல் நாட்டவர் பழக்கம். அதையே பெரும் நாகரீகமாக நாம் பின் பற்றி வாழ்வதால்...இந்த இனிப்போட உன்கிட்ட ஒரு சங்கதியைக் கேட்கலாமா?...''

சங்கரிக்கு ஏற்பட்ட உணர்ச்சிக் குழப்பத்தில் அவளது உள்ளங்கைகள் வியர்த்துப்போயின. உதடும் மூக்கும் துடிக்க...நெஞ்சில் ஏற்பட்ட பரபரப்பை அடக்கிக் கொண்டு, ''சொல்லுங்க'' என்றாள் மெல்லிய குரலில்.

''மோகனைப் பார்த்துக்கொள்ள - அவன் மேலே தாயன்பு செலுத்தி, அவனை ஒரு நல்ல வாலிபனாக வளர்க்க உன்னைவிடச் சிறந்தவள் இல்லைன்னு ஒரு முடிவுக்கு வந்துட்டேன். மேலும் இந்தச் சமயத்தில் உன்கிட்ட ஒரு உண்மையையும் சொல்ல விரும்புறேன். நேர்முக தேர்வுக்கு வந்தப்போ, முதலில் நீ என் கிட்ட வந்து பேசினப்போ உன் மேலே எனக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. உன் புத்திசாலித்தனம் முகத்தில் பளிச்சிடுவதைக் கண்டு வியப்படைந்தேன். உனக்கு துணிவும்-பொறுமையும் நிறையவே இருக்குமென்ற முடிவுக்கு வந்தேன். ஆனால் உன் தங்கையைப் பார்த்தப்போ மயங்கிப் போனேன். ஆண் பிள்ளைகள் சில சமயம், ஒட்டுமொத்தமாக எல்லாவித கோணத்திலும் சிந்தித்து முடிவு எடுப்பதில்லை அதைப்போல உருவத்தில் உன்னை விட ஒரு படி கவர்ச்சியாக இருந்த மீனாளைக் கண்டு மனம் தடுமாறிப் போனேன். அவளை மணந்து கொண்டேன் அவள் உயிருடன் இருந்தால் அலுப்படைந்து அவளை உதறிவிட்டு வேறு பெண்கள் பக்கம் திரும்பிவிட்டிருப்பீர்களா என்று கேட்காதே. வெற்றிலை பாக்கு போடக்கூட விரும்பாத நான், மனைவி என்ற ஒருத்தி வீட்டிலிருக்கும் போது மனதை வேறு திக்கில் பாழ் செய்து கொள்ள விருப்பமில்லாத ஒரு மனிதன்...

''இப்போ ஏன் தடுமாறுகிறீங்கன்னு கேட்காதே. உருவத்திலே உன்னிடம் அவள் சாயலைப் பார்க்கிறேன்—அவளைவிட உன்னிடம் அதிகமான நல்ல குணங்களை காண்கிறேன். எல்லாத்தையும்விட உயிருக்கு மேலாக நான் நேசிக்கிற என் மகனை நீயும் நேசிப்பதால்...''

சங்கரி அவனை நிமிர்ந்து நன்றாகவே பார்த்தாள். அவன் என்ன சொல்ல இப்படி சுற்றி வளைக்கிறான் என்பதை அவள் நன்றாகப் புரிந்துகொண்டாள். அவளைப் பொறுத்த வரை அவனைப் பார்த்த நாளிலிருந்து அவளுக்கு அவன் மேல் விருப்பம் ஏற்பட்டிருந்தது உண்மை தங்கையை அவன் திருமணம் செய்து கொண்ட போது அவள் அந்த ஆசைக்கு அணை போட்டுக்கொண்டு விட்டிருந்தாள்.

''நீங்க என்னிடம் ஏதோ எதிர்ப்பார்ப்பதாகப் புரிகிறது. அதை விளக்கமாகச் சொல்ல முடியுமா?...'' பேசி முடிப்பதற்குள் வார்த்தைகள் தடுமாறின.

''ஐஸ்கிரீமை சாப்பிடேன் சொல்கிறேன்,'' வற்புறுத்தினான். சில்லென்று அது அவளது அடிவயிற்றுக்குப் போய் விழுந்து ஒரு சிறு கலவரத்தையும் உண்டாக்கியது.

''இப்போ கேட்கப் போறேன்—என்னை நீ திருமணம் செய்துக்கமுடியுமா?''

கனவில் கூட கிட்டாத ஒரு வாய்ப்பு. எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சங்கரி. ''சுகுமார்! நீங்க

உணர்ச்சிக் குழப்பத்திலே சட்டுனு இப்படி கேட்டுட்டீங்க?...''

''ஒரு சமயம் நீ வேறு யாரையாவது காதலிப்பதாக இருந்தால், என்னை மன்னிச்சுக்கோ.''

''என்னைப் பொறுத்தவரை காதல் என்பது, நான் படிக்கும் கதைகளோடு சரி. என்னையும் ஒரு பொருட்டாக மதிச்சு-எனக்கு இப்பேர்ப்பட்ட பதவி தர முன் வந்த உங்க தாயாருக்கு பிடிக்காத மருமகளாக நான் உங்களை மணம் செய்துகொள்ள விரும்பலை. தயவு செய்து இந்த எண்ணத்தை மறந்துடுங்கோ.''

''உன் மனம் நோக ஏதாவது நான் பேசிட்டா மன்னிச்சுக்கோ.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.''

''இப்படி நான் கேட்டதால நமக்குள்ளே ஏற்பட்டிருக்கும் இந்த நட்பை நீ முறிச்சுக்குவியோன்னு கவலையா இருக்கு.''

''சுகுமார்! நீங்க ஒண்ணு தெரிஞ்சுக்கணும். இத்தனை பெரிய நிறுவனத்தின் தலைவரா இருக்கிற நீங்க உலகத்தை ஓரளவு புரிஞ்சு கொண்டிருப்பீங்க. இந்த சில நாள் நான் உங்களோட வெளியே வந்ததைப் பலர் பார்த்திருப்பாங்க. நம்மிடையே ஏற்பட்ட நட்பு தூய்மையானதுன்னு அவங்க பார்வையிலே தெரியாது. ஒரு பெண் சிரிச்சா போச்சுன்னு எண்ணும் நம் சமூகம் நமது நட்பை தவறாக எடைபோடும். இதில் பாதிக்கப்படப் போகிறவள் நான்தான்...''

''புரிஞ்சுது, சாதாரண குடும்பத்துப் பெண்-தனியாக வாழ்கிறாள் என்றாலே சிலருக்கு இளப்பமாக இருக்கும். மேலும் கதைகளைக்கட்டி உன் வாழ்க்கையை அசிங்கப் படுத்த நானாகாது.''



''தயவுசெய்து இன்றோட நாம் சந்திப்பதை நிறுத்திக் கொள்வோமா சுகுமார்?... உங்களோடு பழக வாய்ப்பு கிடைச்சது பற்றி மகிழ்ச்சி. நன்றி.''

மிடறு விழுங்கிக் கொண்டான் சுகுமாரன். ''சங்கரி! உன் விருப்பப்படியே செய்கிறேன். இனி உன்னைத் தேடி நான் வரமாட்டேன். ஆனால், ஒன்று. எப்பொழுதாவது உன்னைப் பார்க்கணும்னு ஏதோ பேசணும்னு தோணினால் வரலாமா?...''

''வரலாம்—தாராளமாக வரலாம்'' என்று கூறிவிட்டு எழுந்தாள். வீட்டு வாசலில் அவளை இறக்கி விட்டு, குட்நைட் என்று முணுமுணுத்த சுகுமாரன், அவளைத் திரும்பிப் பாராது வண்டியை ஓட்டிக் கொண்டு போனான்.

கதவைத் தாளிட்டுக்கொண்டு அதன்மேல் சாய்ந்தபடி உள்ளே குமுறிய உணர்வுகளைத் தாங்கிக்கொள்ள முடியாது அவள் விம்மியழுதாள். எப்பேர்ப்பட்ட வாய்ப்பு—அதை வேண்டாம் என்று உதறிவிட்டாளே. இனி மறுபடி அது மாதிரியான ஒரு வாழ்க்கை அவளுக்குக் கிட்டப் போகிறதில்லை.

இல்லை...இல்லை. அவள் செய்ததுதான் சரி. பணத்திற்காக ஆசைப்பட்டு தன் மகனை வலைபோட்டு பிடித்து விட்டாள் அக்காகாரி என்று ரத்னா அம்மாள் அவளைச் சாடுவாள்.

மீனாவைப் போல அவள் சதா மாமியாருடன் சண்டை போட்டுக்கொண்டு வாழ்வது சாத்தியப்படாது பணம் முக்கியமா? வாழ்க்கையில் அமைதி முக்கியமா? வெகுநேரம் அழுதாள்.

# 5

அதற்குப்பின் நாட்கள் அவளுக்கு மிகவும் கனத்து வளர்ந்தன. வேலைப் பளுவின் போது அவள் தன் தனிமையை மறந்தே போனாள். ஆனால், பஸ் நிலையத்திலிருந்து வீட்டிற்கு நடக்கும் வழியிலேயே தனிமை அவளது மனதைக் குடையத் தொடங்கிவிட்டது.

மேல் நாடுகளில் உத்தியோகம் செய்யும் பெண்கள் தனியே வசிக்கின்றனர் தாய் தந்தையர் இருந்த போதிலும் தனியே வசிப்பதை ஒரு பெருமையாகக் கருதிக் கொண்டு கிளம்பி விடுகின்றனர். ஆனால் நம் நாட்டில் இப்படி பெண்கள் தனியாக வசிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகிக்கொண்டு வந்த போதிலும், அவர்களை சமூகம் வேறு கோணத்தில்தான் பார்க்கிறது. எத்தனை துணிச்சல் இவளுக்கு தன்னந்தனியா ஒரு இளவயசுப் பொண்ணு...இல்லை இதிலே ஏதோ ஒரு சங்கதி அடங்கியிருக்கு...மிகவும் அசட்டையாக துச்சமாகப் பேசக் கூடியவர்கள் பலர் உள்ளனர்.

சமூகத்தின் கண்ணோட்டத்திலே வேறு விதமாகத் தெரிந்தது போக...தனிமையை அனுபவிக்கும் ஒரு பெண்ணுக்குத்தான் எத்தனை பெரிய தண்டனை.

வீட்டுக்குத் திரும்பியதும் பேசக்கூடத் துணையின்றி தன்னைச் சுற்றிலும் வெறித்துக்கொண்டு...இதற்குத்தான் சில கைதிகளை தனிமைச் சிறையில் போட்டு அவர்களது பிடிவாதத்தை ஒடுக்க அதிகாரிகள் முயற்சிக்கின்றனர் போலும்.

சுவரோடாவது சொல்லி அழு என்று பெரியோர்கள் சொன்னது...தனிமை என்பது மிகப் பெரிய கொடுமை என்பதற்காகத்தான். பலவாறு எண்ணிக்கொண்டு அவள் அன்று மாலை தன் வீட்டுக் கதவைத் திறந்தாள்.



வாசலில் அவள் பின்னாலேயே ஒரு டாக்ஸி வந்து நின்றது. திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

அவளது இளைய சகோதரன் ஹைதராபாத்தில் வசிக்கும் சம்பந்தன் திடுதிப்பென்று அவளைத் தேடிக் கொண்டு வந்திருந்தான்.

''வாங்கோ உள்ளே...நானும் இப்பத்தான் வந்தேன். நாற்காலியில் உட்காருங்கோ எனக்கு ஒரே பசி. முதலில் கொஞ்சம் காப்பி தயாரிக்கப்போறேன். நீங்களும் ஒரு வாய் சாப்பிடலாம். பிறகு உங்களுக்குப் பிடிச்சதை சமைச்சுப் போடறேன். டாக்ஸியை எதுக்கு நிறுத்திட்டு இருக்கீங்க...வீண் செலவு'' என்றாள்.

''போக்குவரத்து வசதிகள் கம்பெனியை சேர்ந்தது. அதைப் பத்தி கவலைப்பட வேண்டாம். நான் இங்கே காபி சாப்பிட வரலை'' காரமான குரலில் சம்பந்தன் பேசினான்.

''கம்பெனி காரியமாக வந்துருக்கீங்களா? இங்கே என்னோட ஒரு நாள் தங்கிட்டுப் போகக்கூடாதா?''

''கம்பெனி எனக்கு ஐந்து நட்சத்திர ஒட்டல் வசதி தந்திருக்கிறபோது, இங்கே வந்து கொசுக்கடியில் அவதிப்பட எனக்குத் தலைவிதியா?''

சங்கரி தன்னுள் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

கழுத்து நூல்பிரிந்த வெள்ளை சட்டையும்—காக்கிப் பாண்டுமாக, அம்மா கட்டிக் கொடுத்த தயிர் சோறு பொட்டலத்துடன் வியர்க்க விறுவிறுக்க அலுவலகத்துக்குப் போக பஸ் பிடிக்க ஓடிய அண்ணா இப்போது...? கார்—பங்களா—பயணவசதிகள் கொண்ட பெரிய அதிகாரியாகி விட்டாரே...கோட்டும் சூட்டுமான அலங்காரத்

திலே பணத்தெம்பு, பருத்த தொந்தியாக முன்னே நீட்டிக் கொண்டு இருக்கிறதே

தோள் பையை மேசைமீது வைத்துவிட்டு அவள் முற்றத்திலே இறங்கி முகத்தைக் கழுவிக் கொண்டாள்.

"அதிக நேரம் நான் இங்கே உட்கார்ந்திருக்க விரும்பலை. நாளைக் காலை ஊருக்குப் போகுமுன் இங்கே உன்னை வந்து கட்டாயம் பார்க்கணும்னு வந்தேன்."

"தாங்க்யூ!"

"உனக்குத் தானே சம்பாதிக்கிறோம்னு ரொம்ப திமிர். இல்லாட்டா இப்படி பேசுவியா—என் மூஞ்சியைப் பார்க்கத்தான் உனக்குத் துணிவிருக்குமா?"

"நானே சம்பாதித்து என்னை காப்பாத்திக்க முடியறதேன்னு பெருமைப்படறேன். உங்க முகத்தைப் பார்த்து பயப்பட நான் என்ன தவறு செஞ்சேன்?"

"என்னையா கேட்கிறே? உன் மனதை தொட்டுப் பார்த்துக்கோ. அந்தப் பயல் பணத்திலே புரளுகிறோம் என்கிற மமதையில் அப்பா செத்ததுக்குக்கூட வரலை. அப்படிப்பட்டவனுக்கு இந்த வீட்டுக்கு வர என்ன யோக்கியதை?"

"மீனாவின் கணவன்—நம்ப வீட்டு மருமகன் என்கிற உறவிலே அனுதாபம் தெரிவிக்க வந்தார்."

"அது உண்மையா இருந்தா எனக்கும் கடிதாசி போட்டு தெரிவிச்சிருக்கணும்..."

"நான் கிட்டத்திலே ஒரே ஊரிலே இருக்கிறதாலும் அப்பா என்னோட தம் கடைசி காலத்தில் இருந்ததாலும் என்னிடம் தெரிவிக்க வேண்டியது முக்கியம்னு நினைச்சார்."



"சப்பைக்கட்டு பேசாதே. அங்கே ஹைதராபாத்தே சிரிக்குது. பூனை கண்ணை மூடினால் பூலோகமே இருண்டு போச்சுன்னு நினைக்குமாம்—அதுபோல நீ தப்பு காரியம் செய்தா யாரும் கண்டுக்க மாட்டாங்களா... இந்தத் தெரு மனுசன்கள் யாரும் பார்க்கலையா - அவனுகளில் எவனாவது மத்தவனுக்குச் சொல்ல...மெல்ல அது ஊரில் பரவி விடாதா? விதவிதமான ஓட்டலுக்குச் சென்று அவனோட நீ சாப்பிட்டு கூத்தடிச்சதை என் நண்பர்கள் யாராவது பார்த்திருக்க மாட்டாங்கன்னா நினைக்கிறே?"

"அது என் சொந்த விஷயம். அதைப்பத்தி பேசவா வந்தீங்க?"

"நம்ப குடும்பத்தை பத்தின விவகாரம். என் தங்கை ஒருவனோட ஊர் சுத்தறான்னா அதை காதில் கேட்டு நான் சும்மாவா இருக்க முடியும்?"

"அவர் நம்ப மீனாவின் கணவர். நமக்குச் சொந்தக்காரர் அனுதாபப்பட்டு என்னை வெளியே அழைச்சிட்டுப் போனார். பசிக்கு சோறு போட்டார். இது ஒரு பெரிய தவறா? அப்படி தவறுன்னு நினைச்சா நாளைக்கே நான் வேலையை விட்டுட்டு உங்களோட ஊருக்கு வந்துடறேன். என்னை கால முழுவதும் வச்சு காப்பாத்துங்க."

"நீ வேலை பார்க்கிறவ—உன்னை வச்சு காப்பாத்திறது என் கடமையில்லை."

"சோறு போட கடமையில்லை—ஆனால் எவனோ சொன்னதைக் கேட்டு அதட்டி மிரட்ட உங்களுக்கு உரிமை எப்படி வந்தது?"

"நீ ரொம்ப அதிகம் பேசறே-என் ஆத்திரத்தை கிளப்பறே இது கணேசன் காதில் பட்டால்..."

''வெளிநாட்டிலிருந்து விமானத்திலே பறந்து ஓடி வந்து விடுவாரா? பெத்த அப்பனுக்கு கொள்ளி போட வரலை-ஏதோ செலவுக்கு பணம் அனுப்பறதாக தந்தி யடிச்சிருந்தாரே-மாதம் மூணு ஆகப் போறது. அவரது டிராப்ட் வந்து சேரலை. இப்போ சகோதரியைக் கண்டிக்க உடனே வந்துடப் போறாரா? இதோ பாருங்க அண்ணா, இது என் சொந்த விஷயம்?'

''நம்ம குடும்பத்துப் பிரச்சினை...''

''அப்பா உயிரோட இருக்கும்போது ஏற்படாத பிரச்சினை இல்லையா? பெத்த அப்பனை வச்சு பாதுகாக்க பொறுப்பில்லை-கூடப் பிறந்தவனுக்கு கால காலத்திலே கல்யாணம் செய்து கொடுக்க பொறுப்பில்லே-அவளை அம்போன்னு விட்டுட்டு போகத் தெரிஞ்சவனுக்கு அவளைப்பத்தி இமீர்னு என் கவலை? யாராவது சங்கரி உங்க தங்கையான்னு கேட்டா தைரியமா இல்லேன்னு சொல்லுங்க. அங்கேயே பேச்சு அடங்கிப் போகும்.''

''அவனுடைய வைப்பா இருக்கப் போறோம் பணம் காசு கிடைக்கும். பங்களா கட்டிக் கொடுப்பான்னு திமிர் அந்த திட்டத்தின் அடிப்படையில் அண்ணனைத் தூக்கி எரியறே-இருக்கட்டும் நான் வரேன்'' கோபமாகக் கத்திவிட்டு அவன் விர் என்று வெளியேறினான்.

''சுகுமாரன் என்னை தன் மனைவியாக சட்டப்படி மணந்து கொள்ள முன்வந்தார். கார், பங்களா, காசு, பணம்-நகைகள் இத்யாதிகளுடன் நான் வாழ முடியும் இந்த ஓட்டு குடிசையில் இருந்துகொண்டு உங்களது உதாசீனப் பேச்சைக் கேட்கத் தேவையிருந்திருக்காது. ஆனால் எனக்கு உங்களைப் போல பணம் காசு முக்கியமல்ல-சில கொள்கைகள் முக்கியம் அண்ணா! தெரிஞ்



சுக்கோங்க...?' என்று கத்தவேண்டும் போன்ற ஆவேசம் எழுந்தது.

கதவைச் சாத்திவிட்டு முற்றத்து குறட்டில் உட்கார்ந்தாள். உடல் வெடவெட வென்று நடுங்கியது. கண்கள் கலங்கின. மார்பு வெடித்து விடும்போல துன்பத்தில் கனத்தது.

ஒரு பெண் தனியாக வாழ நேரிட்டால்-உறவினர்களே முட்டுக்கட்டையாக இருக்கிறார்களே...

ஒரு ஆணுடன் ஒரு படித்த பெண் பேசிப் பழகினால் அது பால் உணர்வு சம்பந்தப்பட்ட நட்பாகவா இருக்க வேண்டும்?

துன்பப்பட்ட இரு மனிதப்பிறவிகள் தங்களது ரெமங்களைப் பேசி அலசி தீர்வு காணும், ஒரு புனிதமான நட்பாக இருக்கக் கூடாதா?

அண்ணன் அகராதியில் அப்படிப்பட்டதற்கு இடமில்லை பங்களா - கார் - பதவி வந்தென்ன? அந்த குறுகிய தெருவில் வளர்ந்து ஆளானவரின் புத்தியும் குறுகித்தான் இருக்கிறது.

கோபத்தில் அவள் சாப்பிடவில்லை. படுத்து விட்டாள். ஆனால், இது ஒரு பிரச்சினை இதற்குத் தீர்வு காணும் வரை அவளுக்கு நிம்மதி இருக்காது என்ற முடிவும் மனதில் எழுந்தது.

சில நாட்களுக்குப்பின் பெரியவனிடம் இருந்து வெளிநாட்டு தபால் உறை ஒன்று வந்திருந்தது.

வேலையில் இருந்து திரும்பி வந்தவள் கதவைத் திறக்கு முன் தரையில் கிடந்த அதை வியப்புடன் எடுத்துப் பிரித்தாள்.

பெரியவர் வெகு சாலக்காரர். மனது புண்படும்படியாக எதுவும் சொல்லமாட்டார். ஆனால், சொல்ல வந்த சங்கதியை பிட்டு வைப்பதில் திறமைசாலி. கேட்பவர்களுக்கு அவரது பேச்சுதான் நியாயமாகப்படும். அப்படித்தான் அப்பாவைக் கைக்குள் போட்டுக் கொண்டார்.

வெளிநாட்டுக்குப் போய் அவன் சம்பாதிச்சால் நம்ப குடும்பத்துக்கு நல்லது. பாவம், அவன் வெகுளி. போகட்டும் என்று அப்பா முழு மனதுடன் விடை கொடுத்தார்.

அந்த வெகுளி, அப்பாவின் இறுதி காரியத்துக்கு பத்து பைசா தரவில்லை. இப்போது ஏன் இந்தக் கடிதம்? டிராப்ட் அனுப்பி இருக்கிறாரா? படித்தாள்.

"அன்புள்ள சங்கரிக்கு, கடிதம் எழுத பொழுதில்லாமல் நான் வேலையில் மூழ்கிக் கிடக்கிறேன். அவசரமாக இதை எழுத நேர்ந்ததால் சுருக்கமாக சொல்லி முடித்து விடுகிறேன். தம்பி சம்பந்தன் எனக்கு சில திடுக்கிடும் தகவல்களை தெரிவித்திருந்தான். மீனாவுக்குப் பின் நம் வீட்டு மருமகன் சுகுமாரனுக்கும் நமக்கும் எந்தவித பந்தமும் கிடையாது. மோகன் இருக்கிறான் என்பாய் அது அடுத்தபடியான உறவாகிவிடுகிறது. மேலும் சுகுமாரனும்-அவன் தாயும் பணப் பெருமையில் வாழ்கிறவர்கள். ஏழைகளை என்ன விலை கொடுத்தும் வாங்க முடியும் என்று நினைக்கிறவர்கள். அதனால் அவனுடைய உறவை நீ முறித்துக்கொண்டு வாழ்வது நல்லது. நமது குடும்ப கவுரவத்தைக் காப்பது உன் கடமை-என்-கடமை-தம்பியின் கடமை. அருகில் இருந்தால் நான் உனக்கு ஆதரவாக இருப்பேன். என்ன செய்வது? அவரவர் விதிப்படி விலகி வாழ்கிறோம். மற்றவை பின்னர்-ஆசிகள் அண்ணன் கணேசன்."



சம்பந்தன் கத்திவிட்டதே மேல் போலத் தோன்றியது. வாழைப்பழத்தில் ஊசியாக கணேசனது கடிதத்தின் சுருக்கம் மனதைக் குத்தியது. மலை போல இரண்டு அண்ணன்மார்கள் இருந்தும் அவளை ஆதரிக்க யாருமில்லாத கொடுமை. அது போதாதுபோல அவள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரைபடுத்திட சொல்லும் ஒரு ஆணவம்.

அண்ணன் இருவரும் இப்படி நினைக்கும்போது தெரு மக்கள் அவளைப் பார்த்து என்ன அபிப்ராயம் சொல்வார்கள்?

அந்த கேள்விக்கும் அவளுக்கு ஒரு நாள் விடை கிடைத்துவிட்டது.

அவசரமாக பஸ் பிடிக்க ஓடிக் கொண்டிருந்தவள் காதில் துல்லியமாகக் கேட்டது.

"அதோ போறாளே... அவளை நன்னா பார்த்துக்கோ. பெண் கவர்ச்சியா நல்லா இருக்கா. இன்னும் முப்பது வயதை எட்டாத ஒரு இளமை."

"அவளைப் பத்தி என்ன சங்கதியாம்?"

"ரத்னா அண்ட் சன் என்கிற நிறுவனத்துக்கு சொந்தக்காரன் சுகுமார்னு இருக்கானே அந்த பணக்காரனுடைய வைப்பு."

"நான் நம்ப மாட்டேன். அப்படியிருந்தா அவள் ஏன் இந்தத் தெரு வீட்டிலே இருக்கா..."

"இப்பத்தான் ஆரம்பிச்சிருக்கு. இன்னும் கொஞ்ச நாளில் பாரு... நுங்கம்பாக்கத்திலே பங்களா— கார்னு ஆளே மாறிடுவா."

"அதட்டிக் கேட்க யாருமில்லையா?"

''அப்பனும் ஆத்தாளும் போயிட்டாங்க—அண்ணன் மார்கள் ஊரில் இல்லே. தனி ஆசாமியாயிட்டா. கொட்டமடிக்கிறா. தெருவிலே நாங்க பார்த்துட்டு சும்மா இருக்கோம்.''

''அவளைப் பார்த்து நம்ப குழந்தைகள் கெட்டுப் போகுமே? அதுக்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டாமா?''

''என் சொந்த சங்கதி—உங்களுக்கு இதில் என்ன சம்பந்தம்னு பேசுவா. சுகுமாரன் பணக்காரனாச்சே. பேசினவங்களை ஆள் வச்சு உதைச்சா... இந்தக் காலத்திலே கொலை செய்தால்கூட சாட்சியாகப் போக அவனவன் பயப்படுகிறானே.''

''இதுமாதிரி எங்க கிராமத்திலே நடந்தா இவளை பஞ்சாயத்து முன்னாடி நிறுத்தி வேசம் கட்டி விட்டுடுவோம்...போய்யா, உங்க பட்டணமும் உங்கபோக்கும்.''

சங்கரிக்கு இரத்தம் கொதித்தது. சுகுமாரன் மீது கோபம் பொங்கி வந்தது. அவளது பலவீனத்தின் மீதும் ஆத்திரம் வந்தது.

இதற்கெல்லாம் முடிவுகட்ட அவள் என்ன செய்ய வேண்டும்?

அந்த வீட்டில் தன்னுடன் கூட வசிக்க சிநேகிதிகளில் யாரையாவது கூப்பிட்டால்...?

பத்மாவை அழைத்துப்பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டு பஸ்சில் அமர்ந்தாள்.

அன்று பகல் நேரத்திலேயே அவள் தொலைபேசியில் பத்மாவை அழைத்தாள். அவளும் சங்கரியைப் போல் வேலைக்குப் போய்வரும் பெண். தற்காலிகமாக அவள் தன் தூரத்து உறவினர் வீட்டில் சாப்பாட்டுக்கும்



தங்குவதற்கும் பணம் தந்துவிட்டு வாழ்கிறவள். பெற்றோர் கிராமத்தில் இருந்தனர். தனியாக வீடு வைத்து வாழ சாத்தியப்படாத சம்பளம்.

''உன்னோடுகூட இருக்கச் சொல்றியா? வரேன். இந்த மாதக் கடைசியிலேயே வந்துடறேன்'' மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

மாதத்தின் முதல் தேதியன்று பத்மா, தன் சாமான்களுடன் வந்தபோது சங்கரி திடுக்கிட்டுப் போனாள்.

தங்கவும்—சாப்பிடவும் என்று ஒருவர் வீட்டில் வசித்த பத்மாவிடமா இத்தனை சாமான்கள்? ஒரு நாற்காலி—மேசை—பீரோ - ஆளுயரக் கண்ணாடி - கட்டில், மெத்தை, தட்டுகள் - தம்ளர்கள்... அம்மாடி... என்று அயர்ந்து போனாள்.

அவளுக்காகத் தன் அறையை ஒதுக்கிக் கொடுத்துவிட்டு, சங்கரி கூடத்திற்கு நகர வேண்டியிருந்தது.

தன் வீட்டுக் கதவை அடுத்த வீட்டுக்காரனுக்கு பெயர்த்துக் கொடுத்துவிட்டு, விடிய விடிய நாய் வராது காவல் செய்தானாம் என்கிற கதையாகிவிட்டது அத்துடன் மட்டும் இருக்கவில்லை. பத்மா சோம்பேறியாக இருந்தாள். அவளுடைய புடவை, சட்டையில் இருந்து உணவு வரை சங்கரிதான் கவனிக்க வேண்டியிருந்தது அறைக்குள் காகிதங்களைக் கிழித்துப்போட்டு அலங்கார கண்ணாடி மேசை மீது பவுடரைத் தூவிவிட்டு சாந்துப் பொட்டு சாயத்தை சுவரில் தடவி...சே! சே! இவளோட நாம் வாழ முடியாது என்ற ஒரு உச்சக்கட்டத்தில் சங்கரியின் உணர்வுகளைக் குழப்பிவிட்டாள்.

இரண்டு மாதங்களுக்குப் பின் பத்மாவை வேறு இடம் பார்த்துப் போகச் சொன்னபோது, இத்தனை நாளும் சிநேகிதியாக இருந்தவள் எப்படி திடீரென்று விரோதியா

இனாள். அவள் தொடுத்த அசிங்கமான வசை மொழிகளைக் கேட்டு அதிர்ந்து போனாள், சங்கரி.

எப்படியோ மெல்ல பத்மாவை அங்கிருந்து கிளப்பி விட்டதும் அப்பாடி என்ற நிம்மதி. ஆனால், தனியே அங்கு அவளுக்கு வசிக்கப் பிடிக்கவில்லை. அந்தக் காலத்தில் வாடகைக்கு அப்பா எடுத்த வீடு - அத்தனை சவுரியங்களுடன் வேறு இடம் கிடைப்பது அரிது. காலி செய்து கொண்டு போனால், நடுத்தெருவில்தான் நிற்க வேண்டும்?

தூரத்து உறவினரான ரங்கம்மாளுக்கு கடிதம் போட்டு வரவழைத்தாள்? ரங்கம்மாளுக்கு அறுபது வயதிற்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

அதிக வேலை செய்ய முடியாத தள்ளாமை. மருமகளுடன் வாழ சாத்தியப்படாது அடிக்கடி மகள் வீட்டில் போய் தங்கிக் கொள்ளும் சுபாவம்.

ரங்கம்மாள் எதுவும் செய்ய வேண்டாம். வயதானவள் கூட துணைக்கு இருக்கிறாள் என்று பார்ப்பவர்களுக்குத் தெரிந்தால் போதுமே.

ரங்கம்மாளுக்கு ஒரு கார்டு போட்டிருந்தாள். அவ்வளவுதான். தன் சாமான்களை ஒரு தகரப் பெட்டியில் அடுக்கிக் கொண்டு கையில் பெட்டியும், இடுப்பில் மூட்டையுமாக ஒரு நாள் காலை கிராமத்தில் இருந்து அவள் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து வந்து சேர்ந்து விட்டாள்.

கிழவி ரங்கம்மாளை வைத்துக் கொண்டு காலம் கழிப்பதும் சுலபமாக இருக்கவில்லை.

தனது உதவி பிறருக்கு தேவைப்பட்ட சங்கதி என்பதை தெரிந்து கொண்டதும், மனிதர்கள் எப்படி மாறிப்



போய் விடுகிறார்கள்? ரங்கம்மாள் நாளைக்கு ஒரு வியாதியைச் சொல்லி சங்கரியை தொண தொணத்தாள். ஒரு துரும்பைக் கூட அப்பால் எடுத்துப்போட மறுத்து நாள் முழுவதும் கயிற்றுக் கட்டிலில் சுருண்டு கொண்டு கிடந்தாள். அவளது புடவை–ரவிக்கையைத் தோய்க்கும் வேலையுடன் - சமைத்துப்போடும் பணியுடன் - அவள் கேட்டதையெல்லாம் வாங்கித் தர வேண்டிய நிர்பந்தமும் கூடியது.

''தலையை லேசாக வலிக்குது. மாத்திரை இருந்தா கொடு. என் மருமகள் ஒரு பாட்டில் மாத்திரை முன்னதாக வாங்கி வச்சுடுவா. ஏன்னா எனக்குத் தலைவலி அடிக்கடி வரும்.

''புகையிலை போடற பழக்கமுண்டு. நல்ல வாசனை புகையிலை கொஞ்சம் வாங்கி வச்சுடு.

''டாக்டர் என்னை தினமும் படுக்கப் போகுமுன் ஆர்லிக்ஸ் சாப்பிட்டுட்டு தூங்கச் சொன்னார். நீ வரும் போது இன்னிக்கு அதை மறக்காம வாங்கிட்டு வந்துடுறியா?''

அத்துடன் மட்டும் அவளது தொண தொணப்பு நிற்கவில்லை. அறியும் ஆவலில், அதிகம் தவித்த ரங்கம்மாள், களைத்து வீடு வந்த சங்கரியை நிம்மதியாக இருக்கவிடவில்லை. ''எதிர்த்த வீட்டு மனுசன் எங்கே வேலை செய்கிறாராம்?''

''தெரியாது—அவங்களோட பேசிப் பழக்கமில்லை.''

''அதிசயமா இருக்கு. அக்கம்பக்கத்தாரை தெரியாம நாம எப்படி வாழ முடியும்?''

''பட்டணத்திலே அப்படித்தான் வாழ்கிற பழக்கம்.''

''ஆமாம் உனக்கு மாசம் எத்தனை சம்பளம்? அதிலே எத்தனை சேர்த்து வச்சிருக்கே?''

''ஐநூறுக்கு மேலே கூடக் குறைய கிடைக்கும். சேர்க்க முடியலை.''

''அப்படிச் சொல்லிட்டா கல்யாணம் கட்டிக்கும் போது சீர், செனத்தின்னு எதுக்காச்சும் பணம் தேவைப் படுமே அண்ணன்மார்கள் ஏதாச்சும் கொடுத்து உதவு வாங்களா?''

''கொடுப்பாங்க பாட்டி—நேரம் வரும்போது கொடுப்பாங்க.''

''ஏமாந்துடாதே - இப்பவே கேட்டு வாங்கி வச்சுக்கோ. ஆமாம், உனக்கு வயசு என்ன?''

''இருபத்திநாலு ஆகிறது. ஏன் கேட்கிறீங்க?'' எரிச்சல்பட்டாள், சங்கரி.

''இருக்காது - அதுக்கு மேலேயே இருக்கணுமே நீ பொறந்தப்போ எங்க கிராமத்திலே மழை பெஞ்சு ஒரே வெள்ளமா இருந்துச்சு. எனக்கு நல்லா நினைப்பு இருக்கு. நீ பொறந்த சேதி கடிதாசிலே வர இரண்டு வாரமாச்சு. அப்போ எங்க சிங்காரத்துக்கு நாலு வயசு. அவனுக்கு இப்போ முப்பத்திரெண்டு ஆவுதே. அப்படின்னா உனக்கு...?''

ஐயோ! என்று கூவி தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுபோல ஒரு ஆத்திரத்தில் ஆடிப் போனாள்.

தனிமையைப் போக்கிக்கொள்ள இப்படி ஒரு விலை தர வேண்டுமா? பாட்டி அட்டை போன்ற ஆசாமியாச்சே. அவளை அப்புறப்படுத்துவது சுலபமல்லவே. என்ன செய்வது என்று கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்தபோது, ஒருநாள் கடைத் தெருவில் அந்த சிறப்பு அங்காடியில் அவள் எதிர்பாராதவிதமாக ரத்னா அம்மாளை சந்திக்க நேர்ந்தது.

# 6

ரத்னா அம்மாளுக்குத் தன் பணத்தைப் பற்றி ரொம்பவே கர்வம் உண்டு. அந்த குணத்தை அவளது சினேகிதிகள் பலர் அறிவார்கள்.

தன் கை நிறைய காசு இருப்பதால் அவள் மற்றவர்களிடமும் அத்தனை இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவள். இல்லை என்றால் அசட்டை செய்வாள்.

''என்ன மலைக்கிறே? ஒரு புடவை இரண்டாயிரத்து சொச்சம் நாலை எடுத்துக் கொண்டால் தள்ளுபடியில் எட்டாயிரம்தான் கொடுக்க வேண்டியிருக்கும். பேசாம நாலையும் எடுத்துக்கோ'' கடைக்கு கூட வந்த சினேகிதியை உசுப்புவாள் தோழியோ விலையைக் கேட்டு நடுங்கிப் போயிருப்பாள் அவளது கணவரின் சம்பளத்தில் அத்தனை விலையில் சேலை எடுக்க முடியாதே.

''அவரைக் கேட்டுகிட்டு பிறகு வாங்கலாம். போகலாமா'' என்று தோழி எழுந்திருந்தால், ரத்னாவுக்குக் கோபம் கரை புரண்டு போகும். ''காசில்லாத தரித்திரங்கள் எதுக்காக கடைகளுக்குக் கிளம்பணும்? அந்த கடையில்தான் நாங்க வீட்டுக்கு துணிமணி அத்தனையும் வாங்கற பழக்கம் கடைக்காரர் என்ன நினைச்சுக்குவார். எனக்கு மானம் சிந்திப் போச்சு'' என்று காரமாக அந்தத் தோழியைப் பற்றி இன்னொருத்தியிடம் தொலைபேசியில் துச்சமாகப் பேசுவாள். கடைத்தெருவுக்குக் காரை தானே ஓட்டிக்கொண்டு செல்வதில் அவளுக்கு அலாதி பெருமை பை நிறைய பணத்துடன், வெளிநாட்டு செண்ட் மணம் காததூரம் பரவ அவள் கடைக்குப் புறப்பட்டால், அதுவே ஒரு விழாக்கோலம் பூண்டுவிடும்.

அன்று அந்த சிறப்பு அங்காடிக்குத் தன்னுடன் ஒரு காலத்தில் பள்ளியில் படித்த சாரதாவுடன் புறப்பட்டிருந்தாள். சாரதாவுக்கு கடைத்தெருவில் வாங்க எதுவும் இருக்கவில்லை.

பல நாட்கள் ஆயிற்றே பார்க்கலாம் என்று பஸ் பிடித்து தோழியைப் பார்க்க வந்திருந்தாள். காபி, டிபன் உபசாரத்திற்குப்பின் கடைக்குப் போகலாம். காரில் ஏறு என்று ரத்னா சொன்னதைக் கேட்டு மயங்கிப் போனாள்.

முன்பின் அவள் பென்ஸ் காரில் பவனி வந்தவள் அல்ல. அந்தக் காரின் அழகும், கம்பீரமும் அவளைக் கிறங்க வைக்கவே ஏறிக் கொண்டாள். ஏதோ ஒரு சுற்றுலாப் பயணத்துக்குப் போகும் மகிழ்ச்சியில்தான் புறப்பட்டாள். ஆனால், வழியில் ரத்னா ஒரு புத்தகக்கடைக்குள் நுழைந்து விட்டாள். கையில் ஒரு அடுக்குப் புத்தகங்களை வாரி எடுத்துக் கொண்டாள்.

"ராத்திரி நேரங்களில் ஏதாச்சும் படிச்சாதான் எனக்குத் தூக்கம் வரும். புத்தகங்களுக்குப் போடற காசு வீணாவதே இல்லை. எழுநூறு ரூபாய்தானே ஆகிறது போகட்டும். ஆமாம், நீ வாங்கலையா?" என்று கேட்டபோது அதிர்ந்து போனாள்.

எழுநூறு ரூபாய் இருந்தால் வீட்டுச் செலவை அவளால் சமாளிக்க முடியுமே. ஆனால், அவள் கணவன் வீட்டுச் செலவுக்கு கணக்குப் பார்த்து ஐநூறு ரூபாய்களைத் தந்துவிட்டு மீதியை மற்ற செலவினங்களுக்காக தம்மிடம் வைத்துக்கொண்டு விடுகிறவர். பத்திரிகைகள் அனைத்தையும் வாங்கிப் படிக்க இயலாது. எதிர் வீட்டுப் பெண்ணிடம் இரவலாக வாங்கிப் பழைய பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கமுடையவள் சாரதா. பள்ளிக்கூட நாட்களிலேயே பணப் பெருமையை அதிகம் காட்டிக்



கொள்ளும் ரத்னா, இப்போது பெரிய தொழில் நிறுவனத்தின் பங்குதாரர் ஆகிவிட்ட நிலையில் எழுநூறு ரூபாய்க்கு புத்தகமும் வாங்குவாள். ஏழாயிரத்துக்கும் வாங்குவாள். சகஜம். இவளிடமிருந்து தப்ப வேண்டும். இல்லாவிட்டால் வீண் செலவில் மாட்டிவிட்டு விடுவாள்.

"ரத்னா, நான் அவசரமா வீட்டுக்குத் திரும்பணும். கடைத்தெரு வரை கொண்டு வந்து விட்டதுக்கு நன்றி. பஸ் பிடித்துப் போயிடுவேன். இன்னொரு நாள் பார்க்கிறேன்" பரபரப்புடன் அவள் விடை பெற்றுக்கொண்டு நழுவியபோது, ரத்னாவுக்கு மிக்க கோபம் ஏற்பட்டது.

'பத்தாவது படிப்போடு கல்யாணமாகிப் போனவள். வீடு-வேலை-குழந்தை கவனிப்பு என்று குடும்பத்திலே அழுந்திப் போய்விட்டிருக்கும் இவளிடம் அறிவுச் சுரங்கங்களான புத்தகங்கள் பற்றிப் பேசப் போனேனே-கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசம்பாங்க' பற்களைக் கடித்துக் கொண்டு காரில் ஏறி உட்கார்ந்தாள். தானே இயங்கும் கியர்கள் கொண்ட அந்த பென்ஸ் கார் தார் சாலையில் பறந்தது. இத்தனை வயசாகியும் தன்னால் ஒரு சின்னப் பெண் மாதிரி காரை ஓட்டிக்கொண்டு பார்ப்பவர்களைத் திகைக்க வைக்க முடிகிறது என்ற பெருமையால் அவள் சிறப்பு அங்காடி முன் அதை ஒரு பக்கத்தில் நிறுத்திப் பூட்டிவிட்டு, பணம் நிறைந்த கைப் பையுடன் இறங்கி நடந்தாள். புத்தம் புது வங்காளப் பட்டிலே தன் உடலைப் போர்த்திக்கொண்டு, அதற்கேற்ற நிறத்தில் கையில்லாத ரவிக்கையும் கழுத்திலே தங்கச் சங்கிலியையும், லேசான ஒப்பனையுடன் அவள் தனக்கு நிகர் யாருமில்லை என்ற பாவனையில் கடைக்குள் புகுந்தாள்.

கீழ்ப்பகுதியில் வாங்க வேண்டிய சாமான்களை விரைவில் வாங்கி முடித்துக்கொண்டு, பிஸ்கெட்டு—கேக் முதலியவை வைக்கப்பட்டிருந்த மாடிக்கு விரைந்தாள்.

அந்த சிறப்பு அங்காடி புதிதாக அந்தப் பகுதியில் உருவாகி இருந்தது. வாங்குவோரைத் தூண்டும் வகையில் எல்லாப் பொருள்களிலும் ஐந்து சதவீதம் தள்ளுபடி என்ற விளம்பரத்தைக்கண்டு அங்கே கூட்டம் ஏராளமாக இருந்தது அதில் நீந்திக்கொண்டு, கண்ணாடிப் பெட்டிக்குள் பெரிதாகத் தெரிந்த கேக் ஒன்றை மற்றொரு பெண் முந்திக் கொள்ளுமுன் வாங்கி முடித்தாள்.

தன்னால் அசட்டையாக இருநூறு ரூபாய்க்கு கேக் வாங்க முடியும் என்பதை நிரூபிப்பவள் போல அதற்கு கவுண்டரில் பணத்தைக் கொடுத்துவிட்டு, பார்சலைத் தூக்கிக்கொண்டு படியோரம் வந்தாள். வேலையாட்களே எல்லாம் செய்ய விரலால்கூட எதையும் தொடாது வளைய வந்து கொண்டிருந்த ரத்னாவுக்கு கேக் பார்சலைத் தூக்கிக் கொண்டு நடக்க மூச்சு வாங்கியது. ஒரு பெண்ணின் வயதை அவளது தோற்றத்தில் இருந்து கணக்கிடலாம் என்பார்கள். ஆனால், இப்பொழுது மலிந்து கிடக்கும் ஒப்பனை சாதனங்களில் ஒளிந்து கொள்ளும் பெண்ணின் வயதை சட்டென்று யாரும் கணிக்க முடியாது.

அதனால்தான் வைத்தியர்கள் ஆண்...பெண் இருபாலரின் வயதை அவர்களது இதயம் செயல்படும் விதத்தின் இருந்து கணித்துவிடலாம் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

ரத்னா அம்மாளுக்கு வயதாகி விட்டதை அவளது இதயம் அலுத்து சலித்துக்கொண்டு வற்புறுத்தியது. மூச்சுத் திணறல் தாங்காது கண்களை இருட்டிக் கொண்டு வரவே, மரத்தால் ஆன அந்த மாடிப் படிகளில் ஒரு படியைத் தாண்டி கீழே இருந்த ஒன்றில் காலை வைத்துவிட்டாள். அவ்வளவுதான்...தடதடவென்று சினிமாவில் வரும் காட்சி போல படிகளில் உருண்டாள். கேக் மேலேயிருந்த கிரீம் அனைத்தும் முகத்



திலே பூசிக்கொள்ள, ஆடை அலங்கோலமாக, அம்மா என்று அலறிக்கொண்டு கீழே தரையில் விழுந்து விட்டாள்.

அவ்வளவுதான்! கடையில் ஒரே அமர்க்களம்.

யாரது அந்த அம்மா! என்று ஒரு பெண்மணி அனுதாபத்துடன் ஓடி வந்தாள். அதற்குள் அவளைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம்...கூச்சல்...

மயங்கி இருந்த நிலையை உபயோகித்து ஒரு தொங்கு மீசை அவளருகே குனிந்தான்.

''அம்மாவுக்கு கொஞ்சம் தண்ணி தந்தா நல்லா இருக்கும்!'' என்றபடி அவன் ரத்னா அம்மா அருகில் கிடந்த அந்த உப்பிய கைப்பையை எடுக்க முனைந்த போது, கூட்டத்தைப் பிளந்துகொண்டு சங்கரி வந்து விட்டாள்.

''நகருங்க எல்லாரும். அவங்க என் அத்தை'' என்று அதட்டினாள். சட்டென்று கைப்பையை முதலில் எடுத்துக் கொண்டாள். அதற்குள் கடையின் முதலாளி அருகில் ஓடி வந்தார்.

சில தினங்களுக்கு முன்புதான் ஆரம்பிக்கப்பட்ட கடை. யாரோ பணக்கார அம்மா கீழே விழுந்து மயக்கமாக கிடப்பதையும், அந்த நிலையில் ஜேப்படித் திருடர்கள் சாமான் வாங்க வந்தவர்களைப் போல நடித்து, உதவி செய்வதாகச் சொல்லி கழுத்துச் சங்கிலியை உருவிக்கொண்டு போனால்? கடைக்கு அது ஒரு விபரீத விளம்பரமாகிவிடுமே? ''எல்லாரும் நகருங்க, நாங்க கவனிச்சுக்கிறோம்'' என்று கூட்டத்தை விலக்கினார்.

''யாரம்மா நீங்க?'' சங்கரியைப் பார்த்து அதட்டினார்.

''நான் இவங்களுக்கு உறவுக்காரி. ஒரு வழியில் இவங்க என் அத்தை அதனால் நான் உடனடியாக இவங்க மகனை இங்கே வரவழைக்க விரும்பறேன். தொலைபேசியை உபயோகிக்கணும்'' என்று கேட்டாள்.

''தாராளமாக உபயோகிச்சுக்கோங்க'' என்று அவர் அனுமதி அளித்தார்.

தொலைபேசியிடம் போகுமுன் மிகவும் எச்சரிக்கையாக சங்கரி, ரத்னா அம்மாளின் கைவளைகள்-கடிகாரம், கழுத்தில் பளிச்சிட்ட சங்கிலி காதுத் தோடுகள் எல்லாவற்றையும் கடை முதலாளி எதிரில் கழற்றி ரத்னாவின் பைக்குள் போட்டு மூடிக்கொண்டாள். அலங்கோலமாகி விட்ட புடவைத் தலைப்பை இழுத்து மூடினாள். மயக்க நிலையில் முனகிய அவள் முகத்தில் யாரோ கொண்டு வந்து நீட்டிய தண்ணீரைத் தெளித்து தன் கைக்குட்டையால் துடைத்து விட்டாள்.

''கொஞ்சம் பார்த்துக்கோங்க. நான் அவர் மகனை கூப்பிடறேன்'' என்று அருகில் இருந்த ஒரு அம்மாளிடம் சொல்லிவிட்டு தொலைபேசியை நோக்கி விரைந்தாள்.

''யார்? சங்கரியா பேசறது! குரலைக் கேட்டு வெகு நாளாச்சு. நீ போட்ட தடை உத்திரவை நான் மீறலை...'' படபடவென்று மறுபக்கம் பேசியவனை மடக்கினாள்.

''ஒரு அவசர செய்தி சொல்லக் கூப்பிட்டேன் நீங்க காரில் ஒரு டிரைவருடன் கல்பனா சிறப்பு அங்காடிக்கு சீக்கிரம் வாங்க ..உங்க அம்மா மாடிப்படியில் இருந்து தடுக்கி விழுந்து காயத்தோட மயக்கமா இருக்காங்க...

''ரொம்ப பதறாதீங்க... உங்க குடும்ப டாக்டருக்கு அப்படியே போன் செய்து வரச் சொல்லிவிட்டு வந்தீங்கன்னா நல்லது.''



''இரத்தக் காயம் இல்லை. லேசா சிராய்ப்பு இங்குமங்கும் தெரிகிறது. மயக்கமா இருக்கிறதைப் பார்த்தா வலக் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கோன்னு சந்தேகமா இருக்கு - நான் டாக்டரா? தெரிஞ்சதைச் சொன்னேன். நான் கவனிச்சிக்கிறேன். வாங்க...''

தொலைபேசியை வைத்தாள்.

சிறிது பொழுதுக்குள் சுகுமாரன் ஒரு டிரைவருடன் வந்து விட்டான். அலுவலக டிரைவரிடம் சங்கரி பென்ஸ் காரின் சாவியைக் கொடுத்து வாங்கிய சாமான்களை அதில் ஏற்றி வீட்டிற்குக் கொண்டுபோகச் சொன்னாள்

''டாக்டர் சர்மா வந்துடுவார், அதுக்குள்ளே அம்மாவுக்கு ஏதாச்சும்...'' என்று அரற்றிய சுகுமாரன் அருகில் கூட்டத்தை நகர்த்திக் கொண்டு வந்து ஆறுதலாக நின்றாள்.

அதற்குப் பின் சில நிமிடங்களில் டாக்டர் சர்மா தமது பியட் காரில் வந்து இறங்கினார்.

கூட்டத்தினர் எல்லோரையும் கடைக்காரர் அப்புறப்படுத்திக் கொண்டு இருந்தார். மயக்கமாகி விட்டவளை வைத்தியர் விரைவில் பரிசோதித்தார்.

''நல்லவேளை...தொடை எலும்பின் கழுத்து முறியலை. இந்த வயதில் அதுதான் ஏற்படும். ஏதோ நாம் செய்த புண்ணியம். கால் எலும்பு உடைஞ்சிருக்குனு தெரியுது. நாராயணன் நர்சிங்ஹோமில் அனுமதிக்கணும்'' என்று கூறிவிட்டு, கடையின் தொலைபேசியை உபயோகித்தார்.

எல்லாம் சினிமாவில் நடப்பது போன்றதொரு பிரமிப்பில் கடைக்காரர் வியாபாரத்தை உதவியாளரிடம் விட்டுவிட்டு, மவுனமாக நின்றார். சில நிமிடங்களில் மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் வந்தது. படுத்த

நிலையில் மிகவும் பத்திரமாக ரத்னா வண்டிக்குள் ஏற்றப்பட்டாள். கடைக்காரரிடம் நன்றி தெரிவித்து விட்டு தயங்கினான் சுகுமாரன்.

சங்கரி தொலைபேசிக்கு உண்டான தொகையைத் தர மணிப்பர்சைத் திறந்தபோது கடைக்காரர் நாசூக்காக வாங்க மறுத்துவிட்டார்.

''இங்கே விபத்து நடந்தது பற்றி வருந்துகிறேன், அம்மாவை நல்லா கவனியுங்கோ'' என்றபடி வாசல் வரை வந்து வழியனுப்பினார்.

அவருக்கு உள்ளூர கவலை பார்த்தால் பெரிய இடத்துப் பெண்மணி போல இருக்கு - இந்த விபத்து நேர அவர் புதிதாக நிர்மாணித்த மாடிப்படிகள்தான் காரணம் என்று நீதிமன்றத்திலே ஒரு வழக்குத்தொடர்ந்தால்... அவ்வளவு தான்...திறந்த கடையை மூடிவிட்டு எங்கேயாவது தலைமறைவாகிவிட வேண்டியிருக்குமே?

நாராயணன் நர்ஸிங் ஹோமில் ரத்னாவுக்கு சிகிச்சை தடபுடல் பட்டது இரத்த பரிசோதனை—எக்ஸ்ரே என்று வைத்தியர்கள் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தனர். எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் வந்தார். தள்ளு வண்டியில் படுத்த நிலையிலே ரத்னாவை அறுவை சிகிச்சை பகுதிக்கு எடுத்துச் சென்றனர்.

அவர்கள் மறுபடி ரத்னாவை வெளிக் கொணரும் மட்டும் தன்னுடன் கூட உட்கார்ந்திருந்த சங்கரியிடம் தாழ்வான குரலில் பேசினான் சுகுமாரன்.

இந்த விபத்தைப் பத்தி அவன் வெகுவாகக் கலங்கியிருக்கிறான் என்று முகம் சொல்லியது.

''நீ மட்டும் அது சமயம் அங்கே இருந்திருக்காவிட்டால் என்ன நேர்ந்திருக்குமோ தெரியாது...'' தழுதழுத்தான்.



''எதேச்சையாக நானும் அந்தக் கடையில் சில சாமான்கள் வாங்க வந்தேன். அத்தை அவர்களைப் பார்த்தேன். அவங்க என்னைக் கவனிக்கலை, ஆனால் அவங்க மாடிப்படியில் தடுக்கி கீழே விழுந்தப்போ...ஐயோ... அம்மான்னு நானும் கத்தி விட்டேன்.''

''நீ அவங்க நகைகளை சட்டுனு கழற்றி எடுத்து பத்திரப்படுத்தி விட்டிருக்கே. உனக்கு ரொம்பவே சமயோசித புத்தி இருக்கு நானாயிருந்தா கலங்கிப் போய் பதறிக் கொண்டு சில நிமிடங்கள் அறிவை பறி கொடுத்து விட்டு தவிச்சிருப்பேன்.''

''ரொம்ப என்னைப் புகழாதீங்க...'' என்று கூறி விட்டு அறுவை சிகிச்சை அறையில் இருந்து வைத்தியர் வெளிப்பட்டதைக் கண்டு எழுந்து நின்றாள்.

''மயக்க மருந்து கொடுத்து ஒடிந்த பகுதிகளை ஒன்றோடு ஒன்று சேர இணைத்து பொருத்தி கால் மீது தொடை வரை பிளாஸ்டர் போட்டிருக்கிறோம். அதனாலே அவங்க ஆஸ்பத்திரி கவனிப்பில் மூணு வாரத்துக்குக் குறையாம இருக்கணும், மறுபடி பிளாஸ்டரை மாற்ற வேண்டியிருக்கும். பிறகு ஊன்றுகோலில் நடக்க பயிற்சி தருவோம். நல்லா குணமாக குறைஞ்சது நாலு மாசமாவது ஆகும். சரியான கவனிப்பு தேவைப்படும். வீட்டிலே கூட நாங்க சொல்கிற நடை பயிற்சி முறைகளை ஊக்குவித்து உதவ யாராவது கூட இருக்கணும். பிறகு கால் தசைகளை ஊக்குவிக்க ஒத்தடம் பிடித்துவிடல் இத்யாதி வைத்திய முறைகளை அனுசரிக்க வேண்டியிருக்கும். ஆமாம் வீட்டிலே யாராவது இருக்காங்க இல்லையா?'' மருத்துவ நிபுணர் படபடவென்று பேசிய போது சுகுமார் அருகில் இருந்த சங்கரியை பரிதாபமாகப் பார்த்தான்.

''இவங்க இருக்காங்க'' என்று சட்டென்று சொல்லி விட்டான். ''விபத்து நேர்ந்த சமயத்திலே இருந்து இவங்க

ரொம்ப கூட இருந்து உதவியிருக்காங்க... கேள்விப்பட்
டேன். உங்களுக்கு நெருங்கிய உறவினரா? நல்லது''
என்றபடி வைத்தியர் வேகமாக நடைவழியில் விரைந்
தார்.

''என்ன அப்படி சொல்லிட்டீங்க? நான் என் வீட்டுக்
குப் போகணுமே...என் வேலை இருக்கு - வீட்டிலே
எனக்கு ஒரு விருந்தாளி இருக்காங்களே? மேலும் நான்
வந்து கவனிப்பதை உங்கம்மா விரும்பமாட்டாங்களே.''
என்றாள் சங்கரி சிறிது கோபத்துடன்.

''இது உன் நண்பனின் வேண்டுகோள் என்று ஏற்றுக்
கொண்டு எனக்கு நீ உதவணும். வீட்டிலே குழந்தை
மோகன் தனியாக இருப்பான். எனக்காக நீ லீவு எடுத்துக்
கொண்டு இது சமயம் உதவினால் அதற்காக ஏற்படுகிற
நஷ்டத்தை ஈடுசெய்து விடுகிறேன்.''

''தேவையில்லை மோகனை கவனிக்க ஒப்புக்கிறேன்.
என் வீட்டில் அவனை வச்சி நான் பார்த்துக்கிறேன்.
உங்களுக்கு மறுப்பு இல்லையே?'' கேட்டாள், சங்கரி.

''கோவிச்சுக்காதே சங்கரி...என் குழந்தை சில வசதி
களை அனுபவித்து பழக்கப்பட்டவன். அங்கே வந்து
உனக்கும் இடைஞ்சலாக, தனக்கும் சவுகரியமில்லாம
இருப்பானேன்னு கவலைப்படறேன்.''

''நீங்களே அன்னிக்கு சொன்னீங்க - அத்தனை வசதி
நடுவிலும் உங்களுக்கு வளர்கிற பருவத்திலே அன்பு
கிடைக்கலேன்னு வருத்தப்பட்டீங்க. அந்தத் தாயன்பை
நான், என் எளிய வீட்டில் மோகனுக்குத் தாராளமாகத்
தர முடியும். அவனை என் வீட்டுக்கு அழைச்சிட்டுப்
போறேன். அவனது உணவுக்கோ - மற்ற சவுகரியங்
களுக்கோ நீங்க எதுவும் செலவழிக்க வேண்டாம். என்
தங்கையின் மகனுக்கு நான் ஒரு பிடி சோறு போட



முடியும்''. சொல்லிவிட்டு கலங்கிப்போன கண்களை
மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''வேலையில் இருந்து நீ லீவு எடுத்துக்கொண்டு
அவனைக் கவனிக்க வேண்டியிருக்குமே?''

''அப்படியே செய்கிறேன். வைத்தியர்கள் அனுமதித்
ததும் அவனை அழைத்துக்கொண்டு பாட்டியைப் பார்க்கச்
செய்கிறேன். பகல் முழுவதும் அவன் என்னிடம் இருக்
கட்டும் - இரவில் வேண்டுமானால் நீங்கள் வந்து கூட்டிக்
கொண்டு போகலாம். உங்கள் தாயார் மறுப்பு தெரிவிக்
காவிடில் இரவில் மருத்துவ மனையில் அவங்களுக்கு உதவி
செய்யத் தயார்'' என்றாள்.

சுகுமாரனுக்கு வேறு வழி இருக்கவில்லை. ஒப்புக்
கொண்டான்.

## 7

ரங்கம்மாளுக்கு அந்தச் சிறுவனைக் கண்டு தலை
வெடித்தது. பெரிய காரில் கொண்டு வந்து ஒரு பெட்டி
சாமான்களோடு இறக்கிவிட்டுப் போகிறானே... அந்த
மனிதன் யார்? இந்த பிள்ளை யாராக இருக்கும்? கொஞ்
சம் புகையிலையை எடுத்து வாயில் அடக்கி சுவைத்து
சாறை முற்றத்தில் துப்பிய பின்னர்தான் அவள் மூளை
பளிச்சிட்டது. சங்கரிக்கு ஒரு தங்கை இருப்பதாக ஊரில்
கேள்விப்பட்டிருந்தாள். அந்தப்பெண் பெரிய இடத்தில்
கல்யாணம் செய்துகொண்டு வாழாது வாழ்கிறாள் என்று
கிராமத்தில் சிலர் அதிசயப்பட்டனர் பிறகு அவள்
திடீரென்று செத்துப் போனதாகவும் சேதி கிடைத்தது.
ஓகோ! இப்பப் புரிகிறது... இந்தப் பயல் செத்தவளின்
மகனோ?

ஆனாலும் சங்கதிகளை நேர்முகமாகத் தெரிந்து கொள்ள மிகவும் விரும்பினாள்.

"சங்கரி இந்த பொடிப் பயல் உன் தங்கச்சி மகன் தானே?"

சங்கரிக்கு எரிச்சல் தாளமுடியவில்லை. வேலைக்குப் போய்க் கொண்டிருந்த சமயம் வீட்டுக்கு வந்தபொழுது தான் நச்சரித்தாள். இப்போது நாள் முழுவதும் இவளின் தொண தொணப்பைத் தாங்கிக்கொள்ள வேணுமே. கிழவியை மெல்ல வீட்டை விட்டுக் கிளப்பாவிடில் கேள்வி கேட்டே தலையைத் தின்று விடுவாளே?

கிராமத்திலிருந்து வந்து முகாம் போட்டுவிட்டாள். வலுவிலே கூப்பிட்டதின் பயன் அடித்துத் துரத்தினாலும் கிளம்ப மாட்டாளே, என்ன செய்வது?

"ஆமாம், பாட்டி! தங்கச்சி மாமியார் ஆஸ்பத்திரியிலே வியாதியா இருக்காங்க. குழந்தையைப் பார்த்துக்க யாருமில்லைனு அவ புருசன் இங்கே கொண்டாந்து விட்டு விட்டார். கவலையா இருக்கு."

"நான் சொல்றதைக் கேளு. அவங்க வசதி படைச்சவங்க. பால், ரொட்டி, முட்டை எல்லாத்துக்கும் கணக்குப் போட்டு கொஞ்சம் கூடுதலாகவே பணத்தை வாங்கிடு. இருக்கிறவங்க கொடுக்கட்டுமே. நீ ஏன் கவலைப்படணும்?" அவிழ்ந்து முதுகில் புரண்ட கூந்தலை தட்டி முடித்துக் கொண்டாள்.

"அதுக்குக் கவலைப்படலை பாட்டி. குழந்தையை இந்த வீட்டிலே வச்சுப் பாதுகாக்கிறது அத்தனை நல்லதில்லே..."

"இந்த வீட்டுக்கு என்ன குறைச்சல்? முத்தம் வழியா காற்று சில்லுனு வீசுது... அடிக்கிற பம்பு இருக்கு... நினைச்ச நேரம் இழுத்து தண்ணி ஊத்திக்க பின்னாலே கிணறு இருக்கு..."



வாயில் ஊறிக்கொண்டிருந்த புகையிலை சக்கையைத் துப்பிவிட்டு, வாயைக் கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்தாள், ரங்கம்மாள். பொழுது மங்கி இருள் பரவிவிட்ட நேரம். தட்டில் சோறும், பருப்பும், நெய்யும் போட்டு பிசைந்து மோகனுக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள், சங்கரி. இந்த கிழத்தைக் கிளப்ப என்ன வழி என்று மனம் கணக்கிட்டது.

அன்று இரவு மோகன் அவளுடன் இருக்கட்டும். பின்னர் மற்ற ஏற்பாடுகளை செய்யலாம் என்று சொல்லி விட்டுப் போயிருந்தான், சுகுமாரன்.

கூடத்தில் பாயை விரித்து குழந்தைக்குச் சுத்தமான தொரு தலையணையைப் போட்டு உணவுக்குப் பின் படுக்க வைத்தாள்.

"நான் சொல்றேன் கேட்டுக்கோ - ஊரார் பிள்ளையை நீ ஒண்ணும் ஊட்டி வளர்க்க வேண்டாம். இதுதான் சமயம்னு கொஞ்சம் காசைக் தட்டிக்கோ" கிழவி மறுபடியும் எச்சரித்தாள்.

"காசைத் தட்டிக்கலாம். ஆனால் ஒரு சிக்கல். இந்தக் குழந்தையை இங்கேயே வெகுநாள் வச்சுக்க முடியாது."

"ஏன் முடியாது?"

"பாட்டி! உங்ககிட்ட ஒரு சங்கதியை நான் மறைச்சு வச்சுட்டேன். இந்த வீடு வளர்கிற குழந்தைகளுக்கு நல்லதில்லே. நாம் எல்லாம் பெரியவங்க... அதனாலே அது ஒண்ணும் செய்யாது..."

"ஏது?" கிழவி பயந்த குரலில் கேட்டுவிட்டு சுவரில் படிந்திருந்த தன் நிழலையே கிலியுடன் பார்த்துக் கொண்டாள்.

"இந்த வீட்டிலே ஒரு காலத்திலே ஒரு பெண் தூக்குப் போட்டுக் கொண்டாளாம். தன் குழந்தை செத்துட்ட

துன்னு வருத்தம் தாங்காம தற்கொலை செய்து கொண்டு விட்டான்!''

''அடி பாவிப் பெண்ணே! அதை என்கிட்டே இத்தனை நாள் ஏன் சொல்லலை?''

''அந்தப் பொண்ணு ஆவி நம்பளை ஒண்ணும் செய்யாது பாட்டி...குழந்தைகளைத்தான் அது ரொம்பப் படுத்துமாம்.''

''எப்பவாவது நீ அதை இந்த வீட்டிலே பார்த்திருக்கியா?''

''அப்பா இருந்தப்போ இரண்டு வாட்டி பார்த்திருக்கேன். ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேலே ஒரு நிழல் போல வரும்'' இப்போ நீங்க வந்த பிறகு ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன்.''

''என்கிட்டே சொல்லவேயில்லையே?'' கிழவி ஆத்திரப்பட்டாள்.

''சொன்னா நீங்கள் பயந்து போயிடுவீங்களோன்னு தான் சொல்லலை...''

' நல்ல பொண்ணு நீ...காத்து—கருப்புன்னா எனக்குப் பிடிக்காது. இந்த வயசிலே அது ஒண்ணுதான் பாக்கியா?''

அன்று இரவு ரங்கம்மாளுக்குச் சாப்பாடு கசந்தது. பசிக்கவில்லை என்று கூறிவிட்டு சிறிதளவே சாப்பிட்டு விட்டுப் படுத்தாள். வெகுநேரம் உறக்கமே வரவில்லை. மெல்லக் கண் அயர்ந்தவள் கனவில் பல நிழலுருவங்கள் வரவே உளறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். என்னவோ நெஞ்சைப் பிடிப்பது போன்ற பிரமை உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்ட கிழவி நடுக்கத்தில் பின்னர் உறங்கவேயில்லை.

சங்கரி எதிர்பார்த்தது வீணாகவில்லை.



மறுநாள் காலைப்பொழுது நன்றாக விடிவதற்குள் ரங்கம்மாள் தன் பெட்டி மூட்டையைத் தயார் செய்து கொண்டுவிட்டாள்.

''உன்னை நம்பி வந்துட்டேன். ரெயிலுக்கும், செலவுக்கும் ஏதாச்சும் கொடு. எனக்கு இந்த சங்கதி முன்னாலேயே தெரிஞ்சு இருந்தா வந்திருக்கவே மாட்டேன்'' என்றாள் ஆதங்கத்துடன்.

ஐம்பது ரூபாய் பணத்துடன் அவளைப் பிடித்த சனியன் விட்டது போன்று ரங்கம்மாள் ஊருக்குத் திரும்பிப் போய் விட்டாள்.

அதற்குப்பின் சங்கரி, தன் வாழ் நாட்களிலே அது வரை உணர்ந்திராத இன்பத்தைத் தொடர்ந்து அனுபவித்தாள்.

இரவு முழுவதும் பாயில் தன் அருகே கழுத்தைக் கட்டிக்கொண்டு உறங்கிய மோகன் எழுந்ததும், முற்றத்தில் ஒரு முக்காலி மீது உட்கார வைத்து, பல்துலக்கச் செய்து, சுடுநீரை அண்டாவில் நிரப்பி, ஆசைதீர குளிப்பாட்டி மகிழ்ந்தாள்.

''இரு—பவுடரை முதுகிலே நல்லா தடவறேன். அவசரப்படாதே'' என்பாள்.

''பெரியம்மா! வேர்க்குரு வராதிருக்கத்தானே இதைத் தேய்க்கிறே...''

''போக்கிரிப் பையா, நிறைய விளம்பரங்களைப் பார்த்திருக்கேன்னு தெரியுது'' என்று கூறிவிட்டு, உப்பியிருந்த அந்த இரு கன்னங்களும் கனிய முத்தமிடுவாள்.

''அவசரப்படாதே. சட்டை- பாண்ட் போட்டு விடறேன். காலை சம்மணம் கொட்டிட்டு தரையிலே உட்கார்ந்து சாப்பிடணும்'' என்று எளிய பழக்கங்களைச் சொல்லிக் கொடுத்தாள்.

புழக்கடையில் இருந்து வாழை இலையை அறுத்து வந்து தரையில் விரித்து சூடான தோசையை வார்த்துப் போட்டு உபசரித்தாள்.

"சர்க்கரையைத் தொட்டுக்கொண்டு மெதுவா சாப்பிடணும். துணி மேலே போட்டுக்கக் கூடாது. பள்ளிக் கூடம் போகணுமே. அழுக்குப் பண்ணிக்காதே" என்று அன்போடு கண்டித்தாள்.

சுகுமாரன் காரை அனுப்பி வைப்பதாகச் சொல்லியும் அவள் ஏற்கவில்லை.

மோகனை அவள் தன் கையில் பிடித்துக்கொண்டு மெல்ல தெருவைத் தாண்டி பஸ்ஸில் ஏற்றி அவனது பள்ளிக் கூடத்தில் கொண்டு விட்டுவிட்டு, மாலையில் மறுபடி அங்கு சென்று காத்து இருந்து அவனை அழைத்து வருவதில் அவள் அடைந்த ஆனந்தம்!

பெரியம்மா! என்று புத்தகப் பெட்டியுடன் ஓடி வந்து தாவி அணைத்துக் கொள்ளும்போது நினைத்துக் கொண்டாள். கண்ணனை பெத்தவளைவிட வளர்த்த யசோதா அவன் மேல் பாசத்தைக் கொட்டினாள் என்பார்கள். அது முற்றிலும் உண்மை. 'மீனா, நீ மோகனை பெத்துவிட்டு போயிட்டே. உன் தயவால் நான் அவனது மழலையைக் கேட்டு அவனுடன் சேர்ந்து இருப்பதில் எத்தனை மகிழ்ச்சியடைகிறேன் மீனா! ஆன்மிக வடிவில் உன் மகனை ஆசி செய்யம்மா.' சில சமயங்கள் தன்னை மீறி உணர்ச்சி பொங்க அவள் தன் தங்கையை நினைத்து கண் கலங்கவும் செய்தாள்.

லீவு நாட்கள் முடிந்து போயின. நாளைக்கு வேலைக்குப் போக வேண்டுமே என்று அவள் கவலைப்பட்டுக் கொண்டே அன்று காலை எழுந்தாள்.



வாசலில் வந்து நின்ற காரைக் கண்டதும் குழந்தை "அப்பா வந்துட்டார்" என்று மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தான்.

உள்ளே வந்ததும் மகனை வாரி அள்ளிக் கொண்டான், சுகுமாரன்.

"நல்லவேளை நீங்க வந்தீங்க. நாளையில் இருந்து நான் வேலைக்குப் போகணும்..." மெலிதாகச் சிரித்தாள், சங்கரி.

"ஆமாம். வேலைக்குப் போகணும். புதிதான ஒரு வேலைக்குப் போக வேண்டியிருக்கும்" வேடிக்கையாக சுகுமாரன் கூறியதை அவள் கவனிக்கவில்லை. குழந்தையின் சட்டை துணிகளை அவசரமாகப் பெட்டிக்குள் அடுக்கி எடுத்து வந்து கூடத்தில் வைத்தாள். "இது துணிப் பெட்டி-இது புத்தகப் பெட்டி. இவன் உங்கள் மகன் காபி சாப்பிட்டுட்டு கிளம்பலாம். அவசரமில்லையே?" கேட்டாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் மோகனைப் பிரியப் போகிறோம் என்ற நினைவு அவள் மனதை வேதனைப் படுத்தியது.

"சங்கரி! அம்மா வீட்டுக்கு வந்துட்டாங்க. குழந்தையைக் கூட்டி வரும்போது உன்னையும் கூட்டி வரச் சொன்னாங்க..."

அவளால் அதை நம்பவே முடியவில்லை. "உங்கள் தாயார் உண்மையாகவா சொன்னாங்க!..." வியப்புடன் கேட்டாள்.

"குழந்தை உன்னோடு பழகி விட்டிருப்பான். வீட்டுக்கு வந்தால் அவன் உன்னைக் காணாமல் ஏங்கிப் போய்விடுவான் என்கிற கவலை வந்துவிட்டது அவங்களுக்கு. ஒரு சங்கதி தெரியுமா? என் இளம் வயதில் என்னைப் புறக்கணித்த அம்மாவுக்கு-தன் பேரனை அப்படி ஒதுக்கிட்டு

வெளியே ஓடிக்கொண்டிருக்க மனமில்லை. சொல்லப் போனா ஓரளவுக்கு தனக்குதான் அவன் சொந்தம் என்கிற பிடிவாதத்தோடகூட அவனைப் பார்த்துக்கிட்டாங்க. இப்பவும் அப்படித்தானே நினைப்பாங்க...

"நான் நன்றாக முன்போல் நடமாட சில மாதங்கள் பிடிக்கும்னு அவங்களுக்குத் தெரியும். குழந்தையைப் பார்த்துக்க உன்னைப்போல பொறுப்பானவள்—குழந்தை மேலே பாசம் உள்ளவள் யாரும் கிடைக்கமாட்டாங்க என்பதும் தெரியும்."

"குழந்தையைப் பார்த்துக்கிற பணிப் பெண்ணா என்னை வரச் சொல்றாங்க, இல்லையா?"

"தன்னால் எழுந்து அதிகம் நடமாட முடியாததினால் வீட்டையும் தன்னையும் கவனிக்கிறவளாக உன்னை வரச் சொல்றாங்க."

"என் வேலையின் கதி...?"

"சங்கரி! உன் வேலையில் இருந்து சம்பளம் இல்லாது நீ இரண்டு மாதத்துக்கு மேலே இப்போ தொடர்ந்து லீவு எடுத்துக்க முடியும் நான் அதுக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"இந்த வீடு என்ன கதியாகிறது?"

"பூட்டிவிட்டு—காவலுக்கு வேணுமானால் ஒரு ஆள் போட்டு வைக்கிறேன். சரிதானே..."

"பணம் இருந்தா என்ன வேணுமானாலும் செய்யலாம் என்கிறதை நிரூபிக்கப் பார்க்கிறீங்க..."

"அன்பு இருந்தா எந்தவிதமான தியாகமும் செய்ய முடியும் என்பதை நீ இப்போ நிரூபிக்கப் போறே... கதவை சாத்திக்கொண்டு கிளம்பு உன் சாமான்களை பிறகு வந்து நான் எடுத்து வரேன். எனக்கு நல்ல பசி. வீட்டிலே நமக்கு



சூடா ஆப்பம் செய்து போட சமையல்காரர் காத்துட்டு இருக்கார். சங்கரி! உனக்கு ஆப்பம் ரொம்ப பிடிக்கும்னு சொன்னியே!"

"சுகுமார்! ஒரு லாலிபாப் மிட்டாயைக் காட்டி மோகனை ஏமாத்தறாப்பல என்னை என்னென்னவோ சொல்லி ஏமாத்தி கூட்டிக்கொண்டு போக முயலுகிறீங்க. அங்கே எனக்கு எப்படிப்பட்ட வரவேற்பு கிடைக்குமோ? அந்த நாய்களை நினைச்சாலே குடல் புரளுகிறது" என்று சிரித்தாள்.

"உனக்கு அவைகளைக் கண்டால் ரொம்ப பயம்னு அம்மா சொன்னாங்க எல்லாத்தையும் கட்டிப் போடச் செய்துட்டு வந்து இருக்கேன். கிளம்பலாமா?" என்றான் உற்சாகத்துடன்.

அந்தப் பெரிய பங்களாவுக்குள் போய் மோகனைப் பார்த்துவிட்டு வருவதை மாதம் ஒருமுறை அவள் பெரிய தீர்த்தயாத்திரை போலச் செய்து முடித்தவள். ஆனால், அன்று காலை பென்ஸ் காரைக் கண்டதும் காவலாளி கேட்டை அகலத் திறந்துவைத்துப் பெரிய சலாம் போட்டான். எஜமான் அருகில் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்து முறுவலித்தான். 'எல்லாம் இருக்கிற இடத்தில் இருந்தால் எத்தனை சுகம்!' எண்ணியபடி காரில் இருந்து இறங்கினாள்.

எஜமான் வந்துவிட்டார் என்ற மகிழ்ச்சியாலும், யாரோ அந்நியர் வந்திருக்கிறார் என்ற கோபத்தாலும் தோட்டமே அதிர அந்த நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன.

வழக்கமான அந்த அலங்கார வரவேற்பு அறைக்குள் நுழைந்தபோது அவளை எட்டிப் பார்க்க வேலையாள் யாரும் இருக்கவில்லை. "இப்படி வா...அம்மா கீழ் அறையில்தான் படுத்து இருக்காங்க" என்று அவன்

மோகனைத் தூக்கிக்கொண்டு முன்னால் போக, பயந்தபடி அவள் பின்னால் நடந்தாள்.

படுக்கை மீது பல தலையணைகளின் உயரத்திலே காலை நீட்டியபடி படுத்திருந்த ரத்னா, அவளைக் கண்டதும் "வாம்மா... வா... இப்படி உட்கார்" என்று உபசரித்தாள்.

இது உண்மையா, கனவா? அதிர்ந்து போனாள், சங்கரி.

மண்டையில் அடிபட்டால் சிலருக்கு பின்னர் புத்தியே மாறிவிடும் என்று அப்பா சொல்லக் கேட்டிருக்கிறாள்.

ரத்னா அம்மாளுக்குக் காலில்தானே அடிப்பட்டது? ஆளே ஒரேயடியாக மாறிட்டாங்களே?

"இப்பத்தான் ஊன்றுகோலை வச்சுக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமா நடக்க ஆரம்பிச்சிருக்கேன். இன்னும் இரண்டு மாதம் போகணும்னு டாக்டர் சொல்லிட்டார். அதனாலே"... முடிக்காது நிறுத்தினாள் ரத்னா.

சங்கரி மவுனமாக அவளைப் பார்த்தாள். முன் போன்ற அச்சம் அவள் மனதில் எழவில்லை. அதற்குப் பதில் அனுதாபம் ஏற்பட்டது. இத்தனைப் பணம்—பல வசதிகள் இருந்தும் பிறர் தயவை நாடும் ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டதே— அதை உணர்ந்ததினால் ரத்னாவின் கர்வம் ஒடுங்கிப் போனதா?

"யார் செய்த புண்ணியமோ? அன்னிக்கு நீ அங்கே இருந்தே. இல்லாட்டி என் மானம் போயிருக்கும் பணம் போயிருக்கும். என் மகனுக்கு விபத்தைப்பத்தி சொல்றதுக்குள்ளே நான் செத்துப் போயிருப்பேன்" தழுதழுத்தாள்.



"நடந்ததையெல்லாம் நினைச்சு இப்போ ஏன் வருத்தப்படுறீங்க. இனிமே நடக்கப் போறதைத்தான் நாம் யோசிக்கத் திட்டமிடணும்" சங்கரி அனுதாபத்துடன் சொல்லிக் கொண்டு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். கண்களால் சைகை செய்து மகனை வெளியே போகச் செய்தாள், ரத்னாம்பாள். பிறகு தாழ்ந்த குரலில் பேசினாள்.

"உன்னை நான் ரொம்ப அவமதிச்சிருக்கேன். அதைப் பாராட்டாமெ நீ என்னை அன்னிக்கு பாதுகாத்ததை நினைச்சு ஆஸ்பத்திரியில் பல தடவை நான் அழுதேன்" கண்களில் பெருகிய நீரை ரத்னா துடைத்துக் கொண்டாள்.

"அட டா! அதைத்தான் நாம மறந்துட்டோம். இனிமேலே சிந்திக்கப் போறோம்னு சொன்னேன்..." சங்கரி அனுதாபத்துடன் பேசியதைக் கேட்டு தலையசைத்தாள்

"சங்கரி! உன்கிட்ட கேட்க வெட்கமா இருக்கு. எனக்குப் பல உறவினர்கள் இருக்காங்க—சினேகிதிகள் உண்டு. ஆனால் யாரையும் என்னால் இது சமயம் நம்ப முடியலை. நான் எழுந்து நடமாடறவரை இந்த வீட்டைப் பார்த்துக்கிட்டு என் பேரனைக் கவனிச்சுக் கொண்டு, என்னையும் பார்த்துக்குவாயாம்மா? நர்ஸ்களை அமர்த்திக்க முடியும் ஆனால், அவங்க உன்னைப் போல அன்பா நடந்துப்பாங்கன்னு என்ன நிச்சயம். கொஞ்சம் குணமாகி எழுந்து உட்கார நேர்ந்தப்போ அந்த ஆஸ்பத்திரியிலே என்னைப் பார்க்க ஏராளமானவங்க வந்தாங்க நீ இரண்டு தடவை வந்துட்டுப் போனே. ஒரு தடவை நீ வந்து போன பிறகு அந்த கடைக்காரர் வந்தார். அவர் தான் நடந்ததையெல்லாம் விவரமா சொன்னார். அன்னியிலிருந்து என் மனதில் குற்ற உணர்வு அதிகமாகிட்டது.

நம்மை ஏழைன்னு உதாசீனம் பண்ணின இவ... எல்லார் முன்னாலயும் புடவை கலைந்தது தெரியாம விழுந்து கிடக்கிறாள். வேணும் இவளுக்குன்னு நீ அது சமயம் நினைக்கலை. ஓடி வந்து என்னை எப்படி பாதுகாத்தே? அதை நினைச்சு நான் ரொம்ப மனம் நெகிழ்ந்து போயிட்டேன். சங்கரி, இப்படி கிட்டக்க வந்து உட்கார் அம்மா. என்னை மன்னிச்சுட்டேன்னு சொல்லு பார்க்கலாம்' ரத்னா அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு மெல்லக் கேட்டாள்.

இந்த விபத்து ரத்னா அம்மாளைக் கொஞ்ச காலம் நடக்க விடாது முடக்கினாலும் கல் போன்ற மனதிலே ஈரம் பிறக்கச் செய்துவிட்டதே. வியந்தபடி அவளது கரத்தை அன்புடன் பற்றிக் கொண்டாள், சங்கரி.

''இதெல்லாம் ரொம்ப பெரிய பேச்சு. அதுக்கு நான் தகுதி இல்லை. ஆனால், நீங்க கேட்டுக் கொண்ட படி நான் இங்கிருந்து உதவறேன்.''

அதற்குப்பின் அந்த வீட்டில்தான் எத்தனை மாறுதல்கள்? குழந்தை மோகன் பெரியம்மாவைச் சதா சுற்றி வளைய வந்தான். அவள் ஊட்டிய சோற்றை ஆசையுடன் சாப்பிட்டான் அவள் சொன்ன கதைகளைக் கேட்டு மகிழ்ந்தான். இரவில் அவள் அருகே படுத்துக் கொண்டு காதருகில் கிசுகிசுத்தான். ''பெரியம்மா! உங்களை எனக்கு ரொம்ப பிடிக்கிறது. ஐ லவ் யூ பெரியம்மா...'' என்று மழலையில் பேசி அவளை மகிழ்வித்தான்.

ரத்னாவைப் பார்க்க வந்த தோழிகளுக்கு மிக்க வியப்பு. யார் இந்தப் பெண்? கொத்துச் சாவியை இடுப்பில் சொருகிக்கொண்டு சமையல் அறையில் இருந்து தோட்டம் வரை மேற்பார்வை செய்கிறாளே? ரத்னா அம்மாளுக்கு உறவுக்காரியா? அல்லது இப்படிப்பட்ட



ஒரு பெண்ணைத் தேடி வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறாங்களா?

'இந்த சிரப்பை சாப்பிடுங்கோ...நேரமாச்சு. மருந்து கொடுக்கிறேன். பிறகு தூங்கிவிடணும்' என்றபடி அதட்டும் உரிமை பெற்றிருந்தாள், சங்கரி.

தன்னை அவள் அதட்டி ஒரு குழந்தையைப் போல அன்புடன் கவனித்துக்கொண்டதை ரத்னா மிகவும் ரசித்தாள். பயப்படுவதுபோல நடித்து சிரித்தாள்.

வரும்போதெல்லாம் குரைத்து பயமுறுத்திய அந்த நாய்கள் கூட சில தினங்களில் அவளிடம் பழகிவிட்டன. ரோசி என்று அழைத்ததும் ஒரே பாய்ச்சலில் அந்த பெயர் கொண்ட அல்சேசியன் அவள் மீது ஆசையுடன் விழுந்தது. அவள் கொடுத்த பிஸ்கெட்டை எம்பி ஒரே தாவலில் பறித்துக்கொண்டு தோட்டத்தைச் சுற்றிக் கும்மாளமிட்டது. வேலைக்காரர்களுக்கும் அவளை மிகவும் பிடித்து விட்டிருந்தது. சமையல்காரர் ரொம்பவும் ஆச்சரியப்பட்டார்.

''வேலைக்குப் போய்கிட்டு இருந்தவங்கன்னு கேள்விப் பட்டேன். இத்தனை நல்லா சமைக்கிறீங்களே? உங்ககிட்ட சிலதுகளை நான் கத்துக்கலாம் போலிருக்கே...'' வேடிக்கையாகக் கேட்டார்.

எல்லோரையும்விட சுகுமார் மிகவும் மன நிறைவுடன் காணப்பட்டான்.

முன்போல அவன் இரவில் நேரம் கழித்து வீட்டுக்கு வருவதைக் கட்டோடு நிறுத்தி விட்டிருந்தான்.

தாயாருடன் மேசையில் அமர்ந்து சங்கரி பரிமாற மிகவும் சுவைத்து சாப்பிட்டான். பல சங்கதிகளை அவர்களோடு பேசி சிரிக்கவும்...மோகனுடன் கொஞ்சி விளையாடவும் அவனுக்குப் பொழுது இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சுகுமார் வீட்டிலேயே தான் இருந்தான்.

காபி—பலகாரத்திற்குப் பின் கைத்தாங்கலாக மெல்ல நடந்து தனது அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டாள், ரத்னா.

அவளுக்கு கொடுக்க வேண்டிய மாத்திரைகளை ஒரு சிறு கிண்ணத்தில் போட்டு, தம்ளரில் தண்ணீருடன் அருகில் வந்து நின்ற சங்கரியைப் பார்த்து முறுவலித்தாள்.

''உன்னைப் பார்த்தால் எனக்கு சிலசமயம் மீனாவைப் பார்க்கிறாப்பல இருக்கு. சாயலில்தான் உங்க ரெண்டு பேருக்கும் நடுவே நல்ல ஒற்றுமை. ஆனால் குணத்திலே ரெண்டு பேரும் ரொம்ப வித்தியாசப்பட்டவங்க.''

இதையேதான் சுகுமார் அவளிடம் சொன்னான் என்று நினைத்தபோதே அவள் நெஞ்சம் படபடத்தது.

''ஒரு மரத்திலே புளிப்பும்—இனிப்புமான காய்கள் காய்ப்பது இல்லையா? அதுபோலன்னு வச்சுக் கோங்கோ.''

''உனக்குத்தான் எத்தனைப் பொறுமை—எத்தனை அடக்கம்—மீனா இப்படி இருந்திருந்தா அவளை நான் வெறுத்திருக்க மாட்டேன். நாளடைவில் நேசித்திருப்பேன்.''

மவுனமாக நின்றாள், சங்கரி.

''மீனா எனக்கு வேண்டாத மருமகளாகத்தான் வீட்டுக்கு வந்தா. நான் என் தகுதிகளை நினைச்சு அவளை முதலில் வெறுத்தேன். உன்னைப்போல



பொறுமையா இனிமையாகப் பழகியிருந்தா எங்களுக்குள் இருந்த மனத்தாங்கல் மறைஞ்சு போய் இருக்கும்.

''எலியும் பூனையும் போல இருந்தோம்.''

''அதைப்பத்தியும் நீங்க மறந்துடணும். போனதையெல்லாம் மறந்துட்டு நிம்மதியா இருக்கணும்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்.'' அன்புடன் கண்டித்தபடி மருந்துகளைக் கொடுத்து சாப்பிடச் சொன்னாள், சங்கரி.

''நீ சொல்றதையெல்லாம் நான் கேட்கிறேன். நான் சொல்றதை நீ கேட்பியா? ஏன்னா எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. என் மகனை நீ கட்டிக்கொண்டு மோகனை உன் குழந்தையா வளர்த்து, இந்தக் கிழவியையும் கடைசி வரை நல்லா பார்த்துப்பியா?''

திடுக்கிட்டு நிமிர்ந்தாள், சங்கரி. மூக்கும் செம்மை ஆகின. மார்பு வேகமாகத் துடித்தது.

''பணம் காசோட சுகுமாரனைக் கட்டிக்க பல இடத்தில் இருந்து வரன்கள் வந்தார்கள். ஆனால், பணத்தாலே எல்லாமே சாதிக்க முடியாது. உன்னைப் போல குணமான பெண்ணுக்கு முன்னால பணம் என்ன செய்துட முடியும். பதில் சொல்லு...''

''அவர் விருப்பத்தையும் கேட்க வேண்டாமா?''

''அவனுக்கு உன்னை ரொம்ப பிடிச்சுப் போயிருக்கு. நான் முதலில் அவனைக் கேட்டுட்டுதான் பேசறேன். எனக்கும் உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு..'' கையை நீட்டி சங்கரியின் நெற்றியில் புரண்ட கூந்தலை மெல்ல ஒதுக்கி விட்டாள், ரத்னா.

ஆரம்பத்தில் இருந்து அவளுக்கு சுகுமாரைப் பிடித்து இருந்ததே. சுகுமாரும் அவளை விரும்பி மணக்க ஆசைப் பட்டுக் கேட்டான். வலது காலை எடுத்து அந்த வீட்டிற்

குள், அவள் ரத்னாவுக்குப் பிடித்த மருமகளாகத்தான் வர ஆசைப்பட்டாள். அந்த ஆசையும் இப்போது நிறைவேறி விட்டதால் அவள் என்ன சொல்லுவாள்? மிதமிஞ்சிய மகிழ்ச்சியில் கண்களில் நீர் பனிக்க அவள் சம்மதம் என்று தலையசைத்தாள்.

''பூஜை அறையில் இருந்து குங்குமத்தை எடுத்து நெற்றியிலே வெச்சுக்கோம்மா. போ...'' என்று ரத்னா மகிழ்ச்சியுடன் உத்திரவிட்டாள்.

பூஜையறை வாசலில் சுகுமாரன் அவளுக்காக மலர்ந்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தான்.

''நான் எல்லாத்தையும் கேட்டாச்சு. பொட்டு வைக்கும் காரியத்தை நான் செய்ய விரும்பறேன். சம்மதந்தானே?'' முறுவலித்தபடி குங்குமத்தைத் தொட்டு அவளது நெற்றியில் வைத்தான்.

அப்போதுதான் பார்ப்பதுபோல இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி தங்கள் வருங்காலத்தைக் கண்களில் தேடியபடி மெய்மறந்து நின்றனர்.

அந்த வீட்டில் ஆணவம் மறைந்து அன்பு நிறைந்துவிட்டிருந்தது.

19125
3468355